Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 7-4-2014 Issued : 7-4-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, அக்டோபர் 30, 2013—தொகுதி 58—எண் 2**

**Wednesday the 30th October 2013—Volume 58—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**30–10–2013**

**உள்ளடக்கம்**

*பக்கங்கள்*


| | |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| *(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்* | 215-276 |
| *(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 17, 18 மற்றும் 19)* | 277-499 |
| **2. பாப்பான்குளத்தில் ஆதி திராவிடர் வீடுகள் இடிக்கப்பட்டது மற்றும் திருச்சியில் மாணவி பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது குறித்த முதலமைச்சரின் விளக்கம்** | 500-505 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| *டி.டி. மருத்துவக் கல்லூரி மாணவர்களை இதர அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்த்தல்* | 505,507-511 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* | 507,509-510 |
| *மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி* | 507-511 |
| **4. பேரவைமுன் வைக்கப்பட்ட அறிக்கைமீது விவாதம் கோருதல்** | 505-506 |
| **5. அறிக்கை அளித்தல்—** | |
| *அரசு உறுதிமொழிக் குழு* | 511-512 |
| **6. அறிவிப்புகள்—** | |
| *(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)* | 512 |
| *(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)* | 557 |
| *(இ) தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)* | 603 |
| *(ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு* | 614 |

பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா 512-513

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 558

**8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013—2014, விவாதமும் வாக்கெடுப்பும்—** 513-557

*திரு. ச. இராமச்சந்திரன் 513-521,525-528

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 514

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா 518-519

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 521-525

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 529-552

**9. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 558-559

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் 614-615

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2013 559-561

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 560, 561





பக்கங்கள்

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, 2013 561-598

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 561,570-578, 598

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 562-566,579-596

திரு. எம். ஆறுமுகம் 567

திரு. ஆர். ராமமூர்த்தி 567-568

திருமதி எஸ். விஜயதரணி 568-569

டாக்டர் க. கிருஷ்ணசாமி 569-570

திரு. அ. அஸ்லம் பாஷா 579-580,583,585, 586,588,590,592, 593,595,597

(இ) தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013 598-600

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 599,600

(ஈ) திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013 600-602

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 601,602

(உ) தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013 603-605

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 603,604

(ஊ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2013 605-608

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 605,607

டாக்டர் க. கிருஷ்ணசாமி 605-606

*பக்கங்கள்*

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—*தொடர்ச்சி*

*(எ)* *தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013* 608-610

*மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்* 608,609

*(ஏ)* *தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013* 610-612

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* 610-611

*(ஐ)* *தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013* 612-614

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* 612,613

**11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 615-618

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, ஐப்பசி 13, திருவள்ளுவர் ஆண்டு–2044

## 2013 அக்டோபர் 30, புதன்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்*
*உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி.”*

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர், மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 61 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**62—**

### ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***6454—திரு. பா. கணேசன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் சாலவாக்கம் ஊராட்சி ஒன்றியம் என இரண்டாகப் பிரிப்பது தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தயாரிக்கப்பட்ட செயற்குறிப்பினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குனர் அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளார். தற்போது அச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.

**திரு. பா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் நித்தம், நித்தம் வணங்கும் ஆராதனைக்குரிய தெய்வம் பொற்கால தமிழகத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க உத்திரமேரூர் தொகுதியிலுள்ள உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், தமிழகத்திலேயே 73 ஊராட்சிகளைக் கொண்ட ஒரு மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாகும். பொதுமக்களின் நலன் கருதி சாலவாக்கத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி வேண்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மக்களாட்சித் தேர்தல் நடைபெற்றதற்கான சாட்சியாக உத்திரமேரூர் கல்வெட்டுகள் அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் இருந்த உள்ளூர் அரசமைப்புகள், சோழர் ஆட்சிக் காலத்தில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகளை காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் கல்வெட்டின்மூலம் நாம் கண்டறியலாம். மக்களாட்சி அமைப்பில் கிராமக் குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியமாக குடவோலை முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராம அளவில் பொருளாதாரம் மற்றும் நிருவாகப் பொறுப்புகளை முழுமையாக சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர். கிராமக் குழுவின் உறுப்பினர் போட்டியிடுவதற்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது இங்கே குறிப்பிடத்தக்க ஒரு நல்ல அம்சமாகும். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளைச் சோழர் காலத்தில் தேர்ந்தெடுத்த அந்த உத்திரமேரூர் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. கணேசன் அவர்கள்.

**திரு. பா. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வேண்டி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர்

[2013 அக்டோபர் 30

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள 35—க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட பர்கூர் ஊராட்சியை இரண்டாகப் பிரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—05

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளானாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களானாலும் சரி, அவை பெரிதாக இருந்தால் அவற்றைப் பிரிப்பதற்கோ அல்லது சிறிதாக இருந்தால் அவற்றை இணைப்பதற்கோ முதலில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுக்கும்பட்சத்தில், பெரிய ஊராட்சிகளாக இருந்தால் பிரிப்பதற்கும், அதேபோல, பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக இருந்தால் இரண்டாகப் பிரிப்பதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அப்போது, அந்த மாவட்டத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஆகியோரை உள்ளடக்கி அந்த ஒன்றியத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டம் கூட்டப்பட்டு, விவாதம் நடைபெற்று, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மீண்டும் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர் விரும்பினால், மீண்டும் ஒரு முறை கூட்டம் கூட்டப்பட்டு, ஏற்கெனவே நடந்த அந்தக் கூட்டத்திற்கு வந்த அனைத்து நபர்களையும் அழைத்து மீண்டும் விவாதம் செய்து, அதை அரசிற்கு அனுப்பினால், அரசு மீண்டும் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் விரும்பினால், அவரும் இந்தக் கூட்டத்தை மூன்றாவது முறையாகக் கூட்டி விவாதித்து அது சரியென்கிறபட்சத்தில் அரசிற்குப் பரிந்துரை செய்யப்படும். அந்த நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்அவர்கள் மாவட்ட



2013 அக்டோபர் 30]

ஆட்சித் தலைவர்மூலம் அது அரசிற்கு வந்தால் அதை அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் வழங்கி அடிக்கல் நாட்ட அனுமதி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் மாவட்டத்தின் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் என்பது 49 ஊராட்சிகளையும், 2 மாவட்ட ஊராட்சி வார்டுகளையும், 20 ஊராட்சி ஒன்றிய வார்டுகளையும் கொண்ட ஒன்றியமாகும். திருமக்கோட்டை, சித்தமல்லி, நொச்சியூர், திருநெல்லிக்காவல் போன்ற கிராமங்களிலிருந்து கோட்டூர் யூனியன் அலுவலகத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், இரண்டு மூன்று பேருந்துகள் மூலம்தான் வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த ஊராட்சி ஒன்றியம் இரண்டு நாடாளுமன்றத் தொகுதிகளான தஞ்சைக்கும், நாகை நாடாளுமன்றத் தொகுதிக்கும் வாக்களிக்கக்கூடிய ஒரு ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. இந்த ஊராட்சி ஒன்றியம் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூர் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வாக்களிக்கக்கூடிய ஒன்றியமாகும். இரண்டு தாலுகாக்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும். ஆகவே, பொதுமக்களின் நலன் கருதியும், அதேபோல, நிருவாக வசதி கருதியும் பெருகவைந்தானைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களிடம் என்னுடைய தொகுதியின் கோரிக்கையான கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கோரிக்கை

[2013 அக்டோபர் 30

வைத்தபோது, அங்கே தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறைமூலம், அந்த ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் தீர்மானம் இயற்றி அனுப்ப வேண்டுமென்று கடிதம் வந்தது. அந்த அடிப்படையில் 19–7–2013 அன்று அந்த ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் போட்டு அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருகவைந்தானைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய ஊராட்சி ஒன்றியம் தொடங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள் ஏற்கெனவே கேட்டபோது விளக்கமாக நான் பதில் சொன்னேன். ஊராட்சி ஒன்றியம் மட்டும் தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பினால் போதாது. ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்புகின்றபட்சத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டத்தைக் கூட்டும்போது அங்கேயிருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகள், அந்த மாவட்டத்தினுடைய அரசியல் கட்சித் தலைவர்கள், குறிப்பாக மாவட்டச் செயலாளர்கள், அந்தந்தக் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கின்றவர்கள், பத்திரிகையாளர்கள், சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள், சமூக நல விரும்பிகள் இவர்களை எல்லாம் அழைத்து உட்கார வைத்து, விவாதம் செய்து எந்தெந்தப் பகுதியைச் சேர்க்க வேண்டும், எந்தெந்தப் பகுதியை விடுவிக்க வேண்டும், எந்தெந்தப் பகுதியை எந்தப் பகுதியோடு சேர்க்க வேண்டும், எத்தனை ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டும் என்கிற விவரங்களை விவாதம் செய்து அந்த விவாதம் முடிந்த பின்பு, மீண்டும் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு கூட்டம் கூட்ட வேண்டும். ஏனென்றால், அப்போது சில சூழ்நிலைகளின் காரணமாக சரியென்று சொல்லியிருப்பார்கள், ஒரு காலம் வருகின்றபோது நாம் தவறாகச் சொல்லிவிட்டோமே, இது சரியாக இருக்காது என்று நினைக்கின்றவர்கள் ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் அந்தக் கூட்டத்தைக் கூட்டி விவாதிக்கின்ற



2013 அக்டோபர் 30]

போது, ஏற்கெனவே வந்தவர்கள் அனைவரையும் வரவழைத்து அந்த விவாதத்திலும் முழுமையான முடிவெடுத்து அரசிற்கு அனுப்ப வேண்டும். அப்படி அரசிற்கு அனுப்புகின்றபோது ஊராட்சித் துறை இயக்குநர் அவர்கள் அதைப் பரிசீலிக்கின்றபோது அவருக்கு சந்தேகம் வருகின்றபட்சத்தில் அவரும் மூன்றாவது முறையாக ஒரு முறை அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு, அந்த மாவட்டத்திற்கு வந்து நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு இணைந்து அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வு சரியென்று படுகிறபட்சத்தில்தான் அரசிற்கு அந்த இயக்குநர் அனுப்புவார். அரசிற்கு வருகிறபோது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கை முறையாக, வருகின்றபட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசிற்கு நன்றி சொன்னீர்கள், புதிய கட்டடம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னீர்கள். இதைப்போலவே, பெரிய பெரிய ஒன்றியங்களையும் ஏற்கெனவே பிரித்திருக்கிறார்கள். கடந்த நிதிநிலை அறிக்கையிலே 4 மாவட்டங்களில் நிறைய ஒன்றியங்களைப் பிரித்திருக்கிறார்கள். அதைப்போலவே உறுப்பினருடைய கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, இளையாங்குடி ஒன்றியத்தில் சுமார் 55 ஊராட்சிகள் இருக்கின்றன. இளையாங்குடி ஒன்றியம் கிட்டத்தட்ட 60 கி.மீ. சுற்றளவு இருக்கின்றது. ஆகவே, கடைக்கோடியில் இருக்கின்ற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வருகின்றபோது, அந்த ஒன்றிய அலுவலகத்திற்கு வந்து ஏதாவது ஒரு காரியத்தை முடிப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு நாள் செலவாகின்றது. ஆகவே, 55

[2013 அக்டோபர் 30

ஊராட்சிகளை உள்ளடக்கிய இளையாங்குடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, சாலைக்கிராமம் என்ற இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு ஊராட்சி ஒன்றியம் உருவாக்கித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு கொண்டுவருகின்ற திட்டங்கள் ஏழை மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையிலே, மக்களுக்கு அருகில் கிடைக்கக் கூடிய வகையிலேதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, வருவாய்த் துறையை எடுத்துக்கொண்டால்கூட, 4 இலட்சம் மக்கள்தொகை உள்ள பகுதிகளில் ஒரு வருவாய்க் கோட்டம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, இப்பொழுது, அநேகமாக தமிழகத்தில்தான் 3 கி.மீ., 5 கி.மீ., 8 கி.மீ. என்று வரைமுறைப்படுத்தி அனைத்து இடங்களிலேயும் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று முறைப்படுத்தி, அந்த மாணவச் செல்வங்கள் வெகுதூரம் நடக்காமல், அருகிலேயே இருக்கின்ற பள்ளிகளுக்குச் செல்ல வேண்டுமென்று திட்டம் தீட்டி செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, 60 கி.மீ. தூரத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற ஒரு நபர் ஒன்றியத்தின் தலைமை இடத்திற்கு வர வேண்டுமென்று சொன்னால், நிச்சயமாக சிரமப்படுவார். எனவே, இதை முறைப்படுத்தி, ஏற்கெனவே நான் அவையிலே சொன்ன கருத்தின் அடிப்படையிலே, ஊராட்சி மன்றத்தில், ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்து, கூட்டம் கூட்டி, அதில் முடிவு செய்து, தீர்மானம் நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பினால்



2013 அக்டோபர் 30]

உடனடியாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பிரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், ஈரோடு ஒன்றியம் என்பது 6 ஊராட்சிகளைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியமாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. தேனி மாவட்டம், கம்பம் ஊராட்சியிலே, 5 ஊராட்சிகள் ஒரு ஒன்றியமாகச் செயல்பட்டு வருகின்றன. ஆனால் நாகை மாவட்டத்திலே, மயிலாடுதுறை ஒன்றியம், செம்பனார்கோயில் ஒன்றியம், குத்தாலம் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களிலெல்லாம் 50 ஊராட்சிகளுக்கு மேல் இருந்து வருகின்றன. ஆகவே, மக்கள் வசதிக்கும், நிருவாக வசதிக்கும் இவற்றையெல்லாம் இரண்டிரண்டாகப் பிரித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொறாமைப்படக்கூடாது. அவர்கள் அனுபவிக்கிறார்கள்; அனுபவிக்கட்டும். நமக்குத் தேவையானதை நாம் கேட்போம். கேட்பதை உடனடியாக வழங்கக்கூடிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. நிச்சயமாக உங்களுடைய கோரிக்கை, முறைப்படுத்தி வருகின்றபட்சத்தில், நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

[2013 அக்டோபர் 30

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதைப் பற்றி மிக விளக்கமாகக் கூறினார்கள். என்னுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலை ஒன்றியமானது, 39 ஊராட்சிகளை உள்ளடக்கிய, பெரிய பரப்பளவு இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியம். அங்கே, இருக்கக்கூடிய வாக்காளர்களினுடைய எண்ணிக்கை 1¼ இலட்சம் ஆகும்.

அந்தப் பகுதியிலே நிருவாக ரீதியாக, தலைமையிடத்திற்குச் சென்று வருவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்த ஒன்றியமானது இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாக அரசுக்குக் கோரிக்கை வைக்கப்பட்டது. அரசுக்கும் ஒரு முறை கருத்துரு வந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை இரண்டாகப் பிரிக்கக்கூடிய வகையிலும், உடுமலை ஒன்றியத்தைப் பிரித்து எரிசனம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஒன்றியமாக அமைத்துத் தருவதற்கும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறன்.

முற்பகல் 10—15

என்னுடைய உடுமலை ஒன்றியத்தில் செட்டில்மென்ட் பகுதிகள் 18 இருக்கின்றன. அங்கு இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்கு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு மட்டும் வாக்களிக்கக்கூடிய உரிமையிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களுக்கு அவர்களுக்கு வாக்களிக்க உரிமையில்லை. அதன் காரணமாக, அவர்களுக்கு எந்தவிதமான நலத் திட்டங்களும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. மலைப் பகுதியிலே இருக்கக்கூடிய அவர்களுக்கு வனத் துறை மூலமாக எந்தவித நன்மையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை உள்ளதால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாக்களிக்கக்கூடிய வகையிலே உள்ளாட்சியிலே சேர்த்து அவர்களுக்கு உரிய உரிமைகள் கிடைப்பதற்கு வகைசெய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தனை ஆயிரம் மக்கள் இருக்கின்றார்கள் என்ற முக்கியத்தோடு, அந்த ஊராட்சி ஒன்றியம் பரந்து விரிந்து இருக்கின்றபட்சத்திலோ அல்லது அந்த ஊராட்சி ஒன்றியம் ஒரு பகுதி சமவெளியாக, இன்னொரு பகுதி மலைப் பகுதியாக இருக்கின்றபட்சத்திலோ, நிச்சயமாக அதைப் பிரிப்பதற்குரிய நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குக் கருத்துரு வந்திருக்கிறது என்று சொன்னார். கருத்துரு வந்திருந்தால், என்னிடத்திலே வந்திருக்கும். எனவே, அப்படி இருப்பதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். மலைப் பகுதியிலே இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு வாக்களிக்க வாய்ப்பிருக்கிறது, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து மக்களுக்கும் எல்லா வகையான அடிப்படை உரிமைகளும் கிடைக்க வேண்டுமென்று உறுதியோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வாக்களிக்கின்ற உரிமை என்பதுதான் அடிப்படையான உரிமை. எனவே, அதை ஆய்வு செய்து அந்த உரிமையை நிறைவேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் 32 பஞ்சாயத்துகள் உள்ளன. பரப்பளவு அதிகமாக உள்ளதால் அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, இண்டூரை ஓர் ஒன்றியமாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த நடைமுறைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

**திரு. கா.கோ. ரமேஷ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. அதில், ஆலங்காயம் ஒன்றியத்தில், ஜவ்வாது மலையில் இருக்கின்ற புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, வெள்ளிவாசல்நாடு ஆகிய பகுதிகளிலுள்ள மலைவாழ் மக்கள் ஆலங்காயம் செல்வதற்கு, திருப்பத்தூர் வந்து, திருப்பத்தூரிலிருந்து ஆலங்காயம் சென்றுதான் அந்த பி.டி.ஓ. அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். பல்வேறு சிரமங்களுடன் 80 கிலோ மீட்டர், 90 கிலோ மீட்டர் செல்கின்ற நிலை இருக்கின்றது. இதற்குண்டான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று, திருப்பத்தூர் ஒன்றியத்தில் இருக்கின்ற வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடி தாலுகாவில் சேருகின்ற, ஆலங்காயத்தை ஒட்டியிருக்கின்ற 4 ஊராட்சிகள், தீர்மானம் நிறைவேற்றி ஆலங்காயம் ஒன்றியத்தில் சேருவதற்கு சம்மதமும் தெரிவித்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை முன்வந்து செய்து கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் பல இடங்களில் இத்தகைய பிரச்சினைகள்



இருந்துகொண்டிருக்கின்றன. பொதுவாக ஒரு பகுதியிலே இருக்கின்ற ஒன்றியத்தில், ஒரு தொகுதியில் இருக்கின்ற 3 ஊராட்சிகள் ஒரு ஒன்றியத்திலேயும், அடுத்த தொகுதியிலே இருக்கின்ற 23 ஊராட்சிகள் அந்த ஒன்றியத்திலேயும் இருக்கும். இப்படி வருகின்றபோது தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் வேறாக இருக்கலாம். ஒன்றியக் குழுத் தலைவர்கள் வேறு ஒரு பகுதியிலேயும் வரலாம். அந்த ஒன்றியக் குழுத் தலைவர் இன்னொரு பகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதியின் தலைவராக வந்துவிட்டால், இவர்கள் சென்று அவர்களுடைய கோரிக்கைகளை வைப்பதற்கு சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. இதை அனுபவ ரீதியாக அறிந்த காரணத்தினாலேதான் மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற சிறிய சிறிய பிரச்சினைகள் உள்ள ஊராட்சிகளிலே ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்குரிய உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதை முறைப்படுத்தி செயல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.

**திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சேலம் மாவட்டத்தில், ஓர் ஊராட்சி ஒன்றியம் 2 நாடாளுமன்றத் தொகுதிகளும், ஓர் ஊராட்சி ஒன்றியம் 3 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளும் உள்ளடங்கிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், நிருவாகம் பாதிக்கப்படுவதோடு, ஊராட்சி ஒன்றியத்தில் செய்யப்படுகின்ற மக்கள் பணிகள் செய்ய முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மனதில் கொண்டு பொதுவான ஒரு செயல் திட்டம் தீட்ட வேண்டும். ஏனென்றால், மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு கேட்டு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்துவது என்றால், நிச்சயமாக அது பல்வேறு காலகட்டத்தில், பல்வேறு வேலைகளில் நீண்ட நெடிய காலமாகும். ஆகவே, பொதுவான ஒரு செயல்திட்டத்தை வடிவமைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கு வரையறை செய்ததுபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், இதை அரசே

[2013 அக்டோபர் 30

செய்து தர முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக நடைமுறைகளையே மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்றத் தொகுதியை வரைமுறைப்படுத்துகின்றபோது, de-limitation செய்யும்போதும்கூட பல முறை பல்வேறு அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் உட்கார்ந்துதான் அதைப் பிரித்தார்கள். அப்படி இருக்கின்றபட்சத்தில் திடீரென்று ஒரு பகுதியைப் பிரித்து, இன்னொரு பகுதிக்கு நாம் மாற்றுகின்றபொழுது அதிருப்திகள் ஏற்படும். அந்த அதிருப்திகள் ஏற்படுகின்றபொழுது நாம் என்ன நோக்கத்திற்காக அதைப் பிரித்தோமோ அல்லது என்ன நோக்கத்திற்காக அதை இணைத்தோமோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது. எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையிலேதான் ஓர் ஒன்றியத்தைப் பிரிப்பதற்கோ அல்லது ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கோ நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கின்றபட்சத்தில் எல்லோருடைய அனுமதியையும், ஆதரவையும் பெற்று தீர்மானம் நிறைவேற்றி, இந்த நடைமுறைகளை நிறைவேற்றுகின்றபட்சத்தில்தான் அது முழுமை பெறுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுமையோடு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு, முயற்சி செய்து அவர் கருத்துருவைக் கொண்டு வருவார் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அவருடைய எண்ணத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.



2013 அக்டோபர் 30]

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மொரப்பூர் ஒன்றியத்தைப் பிரித்து, கடத்தூர் ஒன்றியமும், அதேபோல பெண்ணாகரம் ஒன்றியத்தைப் பிரித்து ஏரியூர் ஒன்றியமும் தந்த மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் அந்த மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, எனது அரூர் தொகுதிக்குட்பட்ட தீர்த்தமலை, பெரியப்பட்டு, சிட்லிங், கோட்டப்பட்டி, மாம்பாடி ஆகியவை மலைப் பகுதி கிராமங்கள் ஆகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம், அம்மாபாளையத்தை நன்கு அறிவார். ஏறக்குறைய சேலம் அம்மாபாளையத்தில் இருந்து பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு வரவேண்டும் என்று சொன்னால், 80 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டர் தூரம் வர வேண்டியுள்ளது. 416 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சித்தேரி ஊராட்சியை அரூர் ஊராட்சி ஒன்றியத்தோடு இணைத்து, மலைவாழ் மக்கள் அதிகமாக உள்ள கோட்டப்பட்டி, சிட்லிங் ஆகியவற்றை உள்ளடக்கி அந்தப் பகுதியிலுள்ள தீர்த்தமலையை ஒரு மையமாகக் கொண்டு ஓர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நியாயமானது. ஆனால், அவ்வளவு ஊராட்சிகளும் ஒன்றாக அமைவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபொழுது மொத்தம் 3 ஊராட்சிகளைத்தான் சொன்னார்கள். இந்த 3 ஊராட்சிகளுக்கு ஓர் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், நிருவாகச் செலவு கூடுதலாக வரும். அதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அடிப்படை ரீதியாக சரியாக இருந்தாலும், நிருவாக ரீதியாக சரியாக வரவில்லை என்பதை

[2013 அக்டோபர் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதியில் மொத்தம் 13 பேரூராட்சிகள் இருக்கின்றன. பசுமை வீடுகள் கட்டுகின்ற திட்டம், I.A.Y. வீடுகள் கட்டுகிற திட்டம் எல்லாம் அங்கே நிறைவேற்றப்படுவதில்லை. எனவே, சிறு, சிறு பேரூராட்சிகளாக இருக்கின்றவற்றை ஊராட்சிகளாக மாற்றுகிற திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய ஒரு சில சலுகைகளைப் பெற வேண்டும் என்பதற்காக, வளர்ந்து வருகின்ற ஒரு நகரத்தை ஊராட்சிகளாக மாற்ற வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். பேரூராட்சிகளுக்கும் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகம் செய்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த ஒரு முதலமைச்சரும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு நிதியை வழங்கவில்லை. ஒவ்வோர் ஆண்டும் 1,500 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே பேரூராட்சிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் முழுமையாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. முன்பெல்லாம் பேரூராட்சியில் குப்பை எடுப்பதற்கு ஒரு டெம்போ வாங்க வேண்டும் என்று சொன்னால் முடியாது. 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் முடியாமல் இருந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது எல்லாப் பேரூராட்சிகளுக்கும் வாகனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன, எல்லாப் பேரூராட்சிகளுக்கும் உபகரணங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன, எல்லாப் பேரூராட்சிகளிலும் சாலை வசதி மேம்படுத்தப்பட்டிருக்கிறது, எல்லாப் பேரூராட்சிகளிலும் குழல் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இப்படி அடிப்படைத் தேவைகள் முழுவதும் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. மேலும், பெரும்பாலான பகுதிகளில் பேரூராட்சிகள், நகராட்சிகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. நிறைய பேரூராட்சிகள், நகராட்சிகளாக உருவாக்கப்படக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை வந்துகொண்டிருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பின்னுக்குச் செல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி முன்னுக்குச் செல்லக்கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அதை மேம்படுத்துவதற்குரிய வாய்ப்பு என்ன இருக்கிறது என்பதை ஆய்ந்து, அதை அரசுக்குக் கருத்துருவாக வைப்பார்கள் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.

**டாக்டர் த. ஹரிதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். எனது திண்டிவனம் தொகுதியில் உள்ள மரக்காணம் ஒன்றியத்தில் 56 பஞ்சாயத்துகள் உள்ளன. அதை இரண்டாகப் பிரித்து, பிரம்மதேசத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் ஒன்றியம் உருவாக்கிட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், திண்டிவனம் நகரத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் உள்ளவர்கள்கூட 40 கிலோ மீட்டர் கடந்து அந்த ஒன்றியத்திற்குச் சென்று, தேவைப்படுகின்ற வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளதால், அதை அவசியம் பிரித்துத் தருமாறு அன்புடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 30

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே அதிக ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு மாவட்டம் விழுப்புரம் மாவட்டம். மற்ற மாவட்டங்களில் ஓர் ஊராட்சிக்கு 5 கிராமங்கள், 6 கிராமங்கள் என்றிருக்கும். கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் சுற்றளவில்கூட ஓர் ஊராட்சி இருக்கும். ஆனால், விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஆயிரத்துச் சில்லறை ஊராட்சிகள் இருந்தாலும்கூட சிறிய, சிறிய ஊராட்சிகள்; இரண்டு கிராமம், மூன்று கிராமங்கள் அடங்கிய ஊராட்சிகூட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஒன்றியத்தில் இவ்வளவு ஊராட்சிகள் இருக்கின்றன என்று மட்டும் சொன்னார்கள். அவ்வளவு ஊராட்சிகள் இருந்தாலும்கூட, இலகுவாக ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமை அலுவலகத்திற்கு வரக்கூடிய வாய்ப்புகள் அந்த மாவட்டத்திலே இருக்கின்ற காரணத்தினால், அந்த மாவட்டத்தைப் பிரிப்பதற்கு வாய்ப்பில்லை. அப்படிப் பிரிக்கின்ற நிலை வருகின்றபட்சத்தில், நான் ஏற்கெனவே சொன்னதுபோல அந்தக் கருத்துரு நடைமுறைப்படி, அரசுக்கு வருமென்று சொன்னால், அதை ஆய்வு செய்து, நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

**திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரூராட்சிகளில் அதிகமான திட்டங்கள் நடைபெறுகின்றன என்று கூறினார்கள். மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சியில்தான் அதிகமான அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டு, எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்படவில்லை. நகராட்சி, மாநகராட்சியிலே B.S.U.P. Scheme மூலம் வீடுகள் கட்டப்படுகின்றன. அதேபோல கிராம



2013 அக்டோபர் 30]

ஊராட்சிகளிலே பசுமை வீடுகள் கட்டப்படுகின்றன. பேரூராட்சிகளிலே அந்த மாதிரி திட்டங்கள் இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசம் என்ன என்று சொன்னால், ஊராட்சிகளில் வீடு கட்டுகின்றவர்களுக்குப் பட்டாக்கள் இருக்கின்றன. பரந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தால் தனித் தனி வீடுகள் கட்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பட்டா இருக்கின்றவர்களுக்கு வீடு கட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. நகராட்சிகளில் அந்த அளவுக்கு வீடு கட்டுவதற்குரிய இடங்களில்லை. அப்படி இல்லாதபட்சத்தில் அங்கே அடுக்குமாடி வீடுகள் கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகிறது. ஏற்கெனவே மைய அரசு அதற்காக நிதி ஒதுக்கிக் கொடுத்திருந்தாலும்கூட, இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையும் கவனத்தில் வைத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட சூழ்நிலையில், குறிப்பிட்ட நேரத்தில் அதற்கும் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். எனது ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலே 36 ஊராட்சிகள் இருக்கின்றன. அதை குறிப்பாகப் பார்ப்போமானால், கீழ்நாடு மற்றும் மேல்நாடு என்பது மலைவாழ் மக்களைச் சார்ந்தது. பெத்தநாயக்கன்பாளையம், ஏற்காடு மற்றும் ஆத்தூர் ஆகிய இரண்டு தொகுதிகளுக்குட்பட்டது. மலைவாழ்

[2013 அக்டோபர் 30

மக்களின் நலன் கருதி அதை இரண்டாகப் பிரித்து கருமந்துறையையோ அல்லது மற்ற பகுதியையோ தனியாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள்கூட ஏற்கெனவே ஒரு கோரிக்கை வைத்தார். மலைவாழ் மக்கள் இருக்கின்ற பகுதியைப் பிரித்து ஓர் ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னார். அதைப்போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், ஆத்தூர் பகுதியில் இருக்கின்ற அந்த மலைவாழ் மக்கள் இருக்கும் பகுதியைப் பிரித்து ஓர் ஒன்றியமாகக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படிக் கொண்டுவருவதற்குரிய அந்தப் பகுதியில் எத்தனை ஊராட்சிகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, மக்கள்தொகையைக் கணக்கில் வைத்துக்கொண்டு, அப்படி ஒரு நல்ல சூழல் வருகின்றபட்சத்தில், தேவைப்படுகின்ற நேரத்தில், அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துரு வரப்பெறுகின்றபட்சத்தில், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சிகளிலே செயல்படுகிற வீடு கட்டும் திட்டங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுகிற திட்டத்தை அறிவித்து தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அத்திட்டம்



2013 அக்டோபர் 30]

ஊராட்சிகளுக்கு மட்டும் பொருந்துகிறதே தவிர, கடற்கரை ஓரத்திலே இருக்கிற கிள்ளை, பரங்கிப்பேட்டை போன்ற பேரூராட்சிப் பகுதிகளுக்குப் பொருந்தவில்லை. எனவே, அப்படிப்பட்ட பேரூராட்சிகளுக்கும் ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ஆயிரம் கோடி ரூபாயில் ஒரு இலட்சம் வீடுகளை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். 90 ஆயிரம் வீடுகள் கடலூர் மாவட்டத்திற்கும், 10 ஆயிரம் வீடுகள் விழுப்புரம் மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டு, பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு, உடனடியாக அவர்களுக்கு வீடு கட்ட வேண்டுமென்பதற்காகவே, பிரத்யேகமாக ஒரே நேரத்தில் ஒரே மாவட்டத்திற்கு இவ்வளவு வீடுகள் கொடுத்த காரணத்தினால், பல்வேறு இடங்களில் இருக்கிற பொறியாளர்களைப் பிரித்து அதற்கென்று பிரத்யேகமாக பொறியாளர்களை அனுப்பி வைத்து, தேவையான டெக்னீஷியன்களை அனுப்பி வைத்து, விரைவாக வீடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமானது. அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**63—**

## திருநங்கைகள் நல வாரியம்

***5682—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள திருநங்கைகள் பொருளாதார சுதந்திரத்தோடு, சுயசார்புடன் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை சமுதாயத்தில் உயர்த்திக் கொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், திருநங்கைகளுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்திடும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடியும், 2012–2013 ஆம் ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடியும், நடப்பு நிதியாண்டு 2013–2014–ல் ரூபாய் 1 கோடியே 28 இலட்சத்து 28 ஆயிரமாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும், தென்காசி சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான திரு. ரா. சரத்குமார் அவர்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திருநங்கையர் நல வாரியத்தின்மூலம் அடையாள அட்டைகள் வழங்கி இதன்மூலம் இலவச வீட்டுமனைகள், இலவசத் தொகுப்பு வீடுகள், குடும்ப அட்டைகள், கல்வி உதவித் தொகை, வேலைவாய்ப்பு போன்ற உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வழங்கி வருவதன்மூலம் திருநங்கையரின் கண்ணீர் வாழ்க்கையை மாற்றிட வழிவகை செய்கிறது. இவ்வாறு பொருளாதார சுதந்திரத்துடன் சுயமாக வாழ்வதற்கும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையைப் பெறுவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

திருநங்கைகள் குடும்பத்துடன் வாழவும் முடியாமல், தனியாக வாழ குடியிருக்க வாடகை வீடுகள் பெறுவதிலும் இடையூறுகள் உள்ளன. தென்காசி தொகுதியில், தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட கீழவாலிபன்பொத்தை என்கிற இடத்தில் எஸ். சுமலதா, கே. ஆனந்தி, என். இரத்னா, கே. மகேஸ்வரி மற்றும் கோமதி ஆகிய ஐந்து திருநங்கைகளுக்கு 2012–ல் அரசு வீட்டுமனை வழங்கியுள்ளது. இவர்களுக்கு ஏதேனும் ஒரு திட்டத்தின் மூலமாக தங்களது வீட்டுமனைகளில் வீடுகள் கட்டுவதற்கு உதவி செய்யுமாறு கோரிக்கை மனு அளித்துள்ளார்கள். ஆனால், நகராட்சிப் பகுதி என்பதால் உதவி கிடைக்க வாய்ப்பில்லை என்று அறிகிறேன். இதேபோன்று பல்வேறு மாவட்டங்களில் திருநங்கைகளுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டு, நகராட்சிப் பகுதி என்பதால் வீடு கட்ட வழிவகை இல்லாமல் உள்ளனர். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் பசுமை வீடுகள் திட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் திட்டத்தின் மூலமாகவோ திருநங்கைகளுக்கு வீடு கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை சமத்துவ மக்கள் கட்சித் தலைவரின் சார்பாக தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் திருநங்கைகள் இன்றைக்கு சுதந்திரமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 3,471 திருநங்கைகள்

[2013 அக்டோபர் 30

*தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டு 3,327 திருநங்கைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 963 திருநங்கைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 132 திருநங்கைகளுக்கு இலவசமாக தொகுப்பு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 1,502 திருநங்கைகளுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*முற்பகல் 10–35*

*குடும்ப அட்டைகள் என்பதைத்தான் அவர்கள் மிக மிக முக்கியமான கோரிக்கையாகத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு 1,502 திருநங்கைகளுக்குக் குடும்ப அட்டைகளை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, வழங்கப்பட்டுள்ளது. 10 திருநங்கைகளுக்குத் திறன் வளர்க்கும் பயிற்சியைப் பெற மானியம் வழங்கப்பட்டிருக்கின்றது. 320 திருநங்கைகளுக்கு சொந்தத் தொழில் துவங்குவதற்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது. 3 திருநங்கைகளுக்கு கல்வி பயிலும்வகையில் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 5 திருநங்கைகளுக்கு ஆடுகள் மற்றும் 5 திருநங்கைகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் கொண்டுவர முடியுமா எனக் கேட்டார்கள். பட்டா இருக்கின்றபட்சத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமையைப் பெற்று அவருடைய அதிகாரத்தின்கீழ் வழங்குவதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. வேலூர் மாவட்டத்திலேகூட மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமையின் அடிப்படையிலே பலருக்கு அதுபோல் பட்டா வழங்கப்பட்டு, அவர்களுக்கு வங்கியின் மூலமாகக் கடனைப் பெற்றுத் தந்து வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும் அவர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி என்று குறிப்பிட்டு அரசிடத்திலே சொல்வாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அந்தக் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கைகள், திருநம்பிகள் ஆகியோருக்கு சமுதாயத்தில் ஓர் அங்கீகாரம் கிடைக்கப் பெற வேண்டும். அந்த வகையில் அவர்களுக்கு கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் ஒரு சிறிய அளவில் இட ஒதுக்கீட்டை அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை பாலின சிறுபான்மையினர் என்று வகைப்படுத்தி, சிறுபான்மையின மக்களுக்கு என்ன கிடைக்கப் பெற வேண்டுமோ, அவர்கள் இருக்கும் கணக்கிற்கேற்ப, ஓர் இட ஒதுக்கீட்டை கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கி ஓர் அரசியல் பிரதிநிதித்துவம் வரும் அளவிற்கு அவர்களை உயர்த்துவோமேயானால், சமூகத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல பெயர் ஏற்படும். அதேநேரத்தில், அவர்களும் பிறரை நம்பி வாழ வேண்டிய சூழ்நிலை இல்லாமல், தாங்களாகவே பணியாற்றுவதற்கும், பொருள் ஈட்டுவதற்கும் ஒரு நம்பிக்கை அவர்கள் மனதில் ஏற்படும் என்பதால், இந்தச் சீர்திருத்தங்களை சட்டரீதியாகக் கொண்டுவர இயலுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கையர்கள் சாதாரணமாக வாழக்கூடிய மனிதர்களோடு இணைந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு சலுகைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கின்றார்கள் என்று நான் பட்டியலிட்டுக் காட்டினேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரிக்கச் சொல்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக இந்தத் திருநங்கைகளுக்காக, மாற்றுத்திறனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதைப்போல, முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைப்போல, ஆதரவற்றவர்களுக்கு ஓய்வூதியம்*

வழங்குவதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தியாவிலேயே ஆயிரம் ரூபாயை திருநங்கைகளுக்கு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகளை தலைமைச் செயலகத்திற்கே வரவழைத்து, அவர்களுக்கு தன்னுடைய திருக்கரங்களாலேயே ஆயிரம் ரூபாயை வழங்கினார்கள்.

2012–2013 ஆம் ஆண்டில் 40 வயதிற்கு மேற்பட்ட 500 திருநங்கைகளுக்கும், 2013–2014 ஆம் ஆண்டில் 740 திருநங்கைகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான் ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் மகிழ்ச்சியாக அவர்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டு இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**64—**

## தோட்டக்கலைக் கல்லூரி

***37323—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சங்கரன்கோவில் தொகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்க தற்போது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

*முற்பகல் 10–40*

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு. கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி. விவசாயப் பெருமக்கள் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்ற வாக்கிற்கிணங்க, நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயப் பெருமக்களுக்கு முதன்முதலாக நிவாரணம் வழங்கி, விவசாயப் பெருமக்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியானது விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதி. 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் வாழ்கின்றனர். இங்கு வாழக்கூடிய மக்கள் கடந்த ஆண்டிலே விவசாயத்திலே பெரும் நஷ்டம் ஏற்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை உணர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சங்கரன்கோவில் இடைத் தேர்தலின்போது அறிவித்ததுபோல, சங்கரன்கோவில் மக்கள் சங்கடம் இல்லாமல் வாழ சகல வசதிகளையும் செய்து கொடுப்பேன் என்ற வாக்கிற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் வறட்சிக்காக 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சங்கரன்கோவிலில் வாழக்கூடிய விவசாயப் பெருமக்கள் அழிந்துபோகாத அளவிற்கு மாற்றுத் தொழில் ஒன்றும், கோழிப் பண்ணை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்து கொடுத்து, இங்குள்ள மக்களின் நல்லதொரு விடிவெள்ளியாகத் திகழ்ந்தார்கள்.

மேலும், இங்கு வற்றல் அதிகமாக உற்பத்தியாகிறது என்பதை உணர்ந்து அதைச் சேமிப்பதற்காக குளிர்ப்பதனக் கிடங்கு ஒன்றும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை அவர்களுடைய பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 30

சங்கரன்கோவில் தொகுதியிலே 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேலும், அதிகமாக வாழை, கரும்பு, எலுமிச்சை, பூ போன்ற பொருட்கள் உற்பத்தியாகக்கூடிய பகுதி. காய்கறிகள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேபோல, எலுமிச்சை உற்பத்தியிலே, மாநிலத்திலேயே இரண்டாவது இடத்தையும், வாழை உற்பத்தியிலே மாநில அளவிலே இரண்டாவது இடத்தையும், நெல்லி உற்பத்தியிலே முதல் இடத்தையும் எங்களுடைய திருநெல்வேலி மாவட்டம் பெற்று வருகிறது.

அதேமாதிரி தோட்டக்கலையைச் சார்ந்த விவசாயப் பொருட்கள் அனைத்தும் சங்கரன்கோவில் பகுதியிலே அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏறக்குறைய 1,600 எக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சங்கரன்கோவில் தொகுதியிலே தொழில்நுட்பக் கல்லூரிகள் ஏதும் இல்லாத ஒரு சூழ்நிலையும் உள்ளது. எனவே, இதை உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அத்தொகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கோவை, பெரியகுளம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும், உதகமண்டலம், திண்டுக்கல் மாவட்டத்திலே கொடைக்கானல், தடியன்குடிசை, சேலத்திலே ஏற்காடு, கடலூரிலே பாலூர், கன்னியாகுமரி மாவட்டத்திலே தோவாளை மற்றும் பேச்சிப்பாறை ஆகிய இடங்களிலே தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இங்கு காய்கறிகள், பழ வகைகள், மருத்துவக் குணம் நிறைந்த தோட்டக்கலைப் பயிர்கள், நறுமணமூட்டும் மற்றும்



2013 அக்டோபர் 30]

மலைப் பயிர் வகைகள் ஆகியவற்றில் உயர் விளைச்சல் தரும் இரகங்கள் மற்றும் வேளாண்மை முறைகள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி முடிவுகள் தமிழகம் முழுவதும் பொருந்தக்கூடியவையாகும். இது தவிர, சங்கரன்கோவிலை உள்ளடக்கிய திருநெல்வேலிக்கு மிக அருகில் உள்ள கிள்ளிகுளத்தில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு தனியே தோட்டக்கலைத் துறையும்கூட செயல்பட்டு வருகிறது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு அருகில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளையில் மலரியல் ஆராய்ச்சி நிலையமும், பேச்சிப்பாறையில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும் இயங்கி வருவதால் சங்கரன்கோவில் பகுதி விவசாயிகள் இந்த ஆராய்ச்சி நிலையங்களை அணுகி, தொழில்நுட்ப விவரங்களைப் பெற்று பயனடையலாம். மேலும், அந்தந்தப் பகுதியில் இயங்கும் வேளாண் அறிவியல் மையங்களைக்கூட விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, சங்கரன்கோவில் தொகுதியிலே புதிய மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்க தற்போது கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

*முற்பகல் 10—45*

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கரன்கோவில் பகுதிக்குட்பட்ட விவசாயப் பெருமக்கள் எலுமிச்சையை அதிகமாக விளைவிக்கிறார்கள். அதிலும் முக்கியமாக, ஆர்கானிக் எலுமிச்சை என்ற முக்கியத்துவம் வாய்ந்த எலுமிச்சை இரகம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இது தமிழ்நாடு முழுவதும் பரவலாக எல்லோராலும் விரும்பி வாங்கப்படுகிறது. அதேபோல, நெல்லி உற்பத்தியில் மாநிலத்தில் திருநெல்வேலி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. ஆர்கானிக் எலுமிச்சையை கோடைக்காலத்தில் 'டைபாக்' என்ற நோய்

[2013 அக்டோபர் 30

தாக்குகிற ஒரு சூழ்நிலை உள்ளது. நீண்டகாலமாக 'டைபாக்' நோய்க்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், அதற்கான தீர்வு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட பகுதியில் தோட்டக்கலைத் துறை சார்பாக ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் நேர்வில் அப்பகுதி விவசாயப் பெருமக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள். இந்தக் கோரிக்கை மிகவும் முக்கியமானது. இந்தக் கோரிக்கையை முன்வைத்து அப்பகுதி விவசாய மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று சங்கரன்கோவில் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மண்டல தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி அப்பகுதியின் அருகிலே ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகள் இருப்பதனால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருந்தாலும்கூட, புதிதாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால், 100 ஏக்கர் நிலம் தேவை. மேலும் ரூ.50 கோடி நிதியும் தேவைப்படுகிறது. இவற்றையெல்லாம் மனதில்கொண்டு வருகின்ற காலகட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 30]

**65—**

## நிலத்தடி நீர் பாதுகாப்பு

***17654—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பசியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட பசியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் நிலத்தடி நீர் மாசுபடுவதாக அந்தப் பகுதி கிராமப் பொதுமக்களிடமிருந்து எந்தவித புகார் மனுக்களும், வரப்பெறவில்லை. இருப்பினும், இப்பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டபோது நிலத்தடி நீரில் இயற்கையாகவே கடினத்தன்மை இருப்பதாகவும், ஆகவே, நிலத்தடி நீரைக் காய்ச்சி உபயோகப்படுத்துவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். மேலும், ஆய்வில் இப்பகுதிகளில் சில உலர் செயல்முறை (Dry process) கொண்ட தொழிற்சாலைகள் அமைத்திருப்பதும் அவற்றால் நிலத்தடி நீர் மாசுபடவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. இருப்பினும், இத்தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

[2013 அக்டோபர் 30

கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருண்ட தமிழகத்தை ஒளியேற்ற வாருங்கள் தாயே என்று ஏங்கிக்கொண்டிருந்த தமிழக மக்களுக்கு, இன்றைக்கு விலையில்லா அரிசி தந்து, கட்டணமில்லா கல்வி தந்து, 'அம்மா திட்டம்' தந்து, 'அம்மா குடிநீர்' தந்து, 'அம்மா உணவகம்' தந்து, ஏழை மக்கள் குடியிருக்க பசுமை வீடுகள் தந்து, விலையில்லா வீட்டு உபகரணங்கள் தந்து இன்று தமிழக மக்களை வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தாயே, தங்களை மீண்டும் ஒரு முறை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

என்னுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் தாலுகாவில் இருக்கின்ற பசியாபுரம், கீழடி, பூவந்தி ஆகிய பகுதிகளில் இருக்கின்ற அகர் கம்பெனி, சோப்பு கம்பெனி, வாஷர் கம்பெனி, மார்பிள் பாலிஷ் பட்டறைகள் போன்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவுநீரால் அந்தப் பகுதியில் இருக்கின்ற நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு மக்கள் பயன்படுத்தும் குடிநீர் பயனற்றதாகவும், விவசாயம் செய்வதற்கு பயனற்ற வகையிலும் இருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற நிலையில் நிலத்தடி நீரைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட பசியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் பிளாஸ்டிக் பைப் தொழிற்சாலையும், ஒரு இரசாயனப் பொருள் சிலிகேட் தயாரிக்கும் தொழிற்சாலையும், ஒரு சிறிய இன்ஜினியரிங் தொழிற்சாலையும் மற்றும் கடல்பாசியிலிருந்து அகர் பொருட்கள், உணவுப் பொருட்கள்—food products தயாரிக்கும் இரண்டு தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இவற்றில் பிளாஸ்டிக் பைப் மற்றும் இன்ஜினியரிங் தொழிற்சாலைகளிலிருந்து எந்தவித செயல்முறைக் கழிவுநீரும் உருவாவது இல்லை. இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் செயல்முறையிலிருந்து உருவாகும் கழிவுநீர் சூரிய ஒளி வெப்பத்தின்மூலம் ஆவியாக்கப்படுகிறது.



2013 அக்டோபர் 30]

*முற்பகல் 10—50*

எனவே, எந்தத் தொழிற்சாலைகளிலும் எந்தக் கழிவுநீரும் வெளியேற்றப்படுவதில்லை. கடல் பாசியிலிருந்து அகர் பொருட்கள், உணவுப் பொருட்கள்—Food products தயாரிக்கும் தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை முறையாகச் சுத்திகரித்து பாசனத்திற்கு தங்களின் சொந்த நிலத்துக்குப் பயன்படுத்துகின்றனர். கடல்பாசி தொழிற்சாலைகள் மூலப்பொருட்களின் இருப்பைப் பொறுத்து, வருடத்தில் நான்கு முதல் ஆறு மாத காலமே செயல்படுகின்றன. இங்கு அமைந்துள்ள எல்லா தொழிற்சாலைகளும், *24—10—2013* அன்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டன. கடல்பாசி தொழிற்சாலைகள் தற்சமயம் இயக்கத்தில் இல்லை. மற்ற தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் எதுவும் வெளியேற்றப்படாததும் கண்டறியப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசியாபுரம், கீழடி, பூவந்தி ஆகிய பகுதிகளில், நிலத்தடி நீர் பாதிக்கப்படுகின்றபோது அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் அந்தத் தண்ணீரைக் குடிப்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கும் அது பயனில்லாமல் இருக்கின்றது. மேலும், அந்தப் பகுதியில் அந்தத் தண்ணீரை வைத்து வீடுகள் கட்டுகின்ற நேரத்தில், அந்த வீட்டினுடைய சுவர்கள் சில நேரத்தில் பெயர்ந்து விழக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதேபோல், அந்தப் பகுதியில் சில நோய்களும் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சில நேரங்களில் Kidney failure மற்றும் மகப்பேறின்மை போன்ற நோய்கள் வரக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறி வருகின்றார்கள். ஆகவே, இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தை முதன்மை மாநிலமாக அறிவித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு நிலத்தடி நீரைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரினால் எந்த மாசும் ஏற்படுத்தப்படவில்லை. அந்தக் கழிவுநீர் மொத்தமாக ஆவியாக்கப்படுகின்றது. மேலும், அந்தப் பகுதியின் பொதுமக்கள் நிலத்தடி நீரில் ஏற்கெனவே கடினத்தன்மை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நீரைக் காய்ச்சிதான் உபயோகித்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீண்டும் ஒரு முறை மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய Engineer–களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை பெற்று, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**66—**

### தடுப்புச் சுவர்

***36260—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு அணை முதல் செல்லூர் கண்மாய் வரை உள்ள சாத்தையாறு ஓடையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு முதல் செல்லூர் கண்மாய் வரை உள்ள ஓடையிலே தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடைபெறுமா என்ற கேள்வியை



2013 அக்டோபர் 30]

எழுப்பியுள்ளார். ஏற்கெனவே, அங்கு வேண்டிய இடங்களிலே தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இப்போது தடுப்புச் சுவர் கட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், ஏழை, எளிய மக்களுடைய வாழ்வாதாரம் உயர்வதற்கும், ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் எண்ணற்ற நல்ல திட்டங்களைத் தீட்டி, அவை நேரடியாக ஏழை மக்களுக்குச் சென்றடையும்விதமாக நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சாத்தையாறு முதல் செல்லூர் கண்மாய் வரை தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். காரணம் என்னவென்றால், சாத்தையாறு அணை நிரம்பி வரும்போது வலசை, இளவன்குளம், கீழைச்சின்னாளம்பட்டி, பெரிய ஊர், சிறிய ஊர் என்ற கிராமங்களுக்கெல்லாம் தண்ணீர் செல்லக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. தற்போது நல்ல பருவமழை இருக்கின்ற காரணத்தினால், அங்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மக்கள் வாழும் அந்தப் பகுதியில் நீர் சென்றுவிடாமல் இருப்பதற்கும், அந்தப் பகுதி மக்களுடைய அச்சத்தைப் போக்குவதற்கும், அங்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அங்கு கட்டப்பட வேண்டிய இடங்களிலெல்லாம் தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, எந்த இடங்களில் தடுப்புச் சுவர் தேவையோ, அந்த இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

*முற்பகல் 10–55*

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளம் கொண்ட மனித உயிர் காக்கும் காவல் தெய்வம். எனது சோழவந்தான் தொகுதியில் புகழ்மிக்க அலங்காநல்லூர் ஒன்றியப் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லாததால், சத்திரவெள்ளாளப்பட்டு என்ற ஊராட்சியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பொதுப் பணித் துறை அமைச்சரிடம் தீயணைப்பு நிலையம் குறித்து கேள்வி கேட்கிறீர்களே? உட்காருங்கள்.

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**67—**

### கால்நடை மருத்துவமனை

***22766—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மாதேமங்கலம் ஊராட்சி, குட்டூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குட்டூர் கிராமத்திலே கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரை, நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க இயலாது. முதலிலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் கொடுத்து, கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–க்கும் மேல் அதிகமாகும்போது கால்நடை மருந்தகமாகவும், 10,000–க்கும் மேல் அதிகமாகும்போது கால்நடை மருத்துவமனையாகவும் அமைத்துக் கொடுக்க முடியும். அந்த அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள குட்டூர் கிராமத்திலே 3,000–க்கும் அதிகமான கால்நடை அலகுகள் உள்ளன. மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் வைத்தியம் பார்க்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியத்தை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) குட்டூர் கிராமத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று, தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, செக்காரப்பட்டி கிராமத்தில் நான்கு வருடங்களுக்கு முன்பு கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்டப்பட்டது. ஆனால், கால்நடை மருத்துவர் பணியிடம் நிரப்பப்படாததால், அந்தக் கட்டடம் வீணாகும் நிலையில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செக்காரப்பட்டியில் கால்நடை மருத்துவர் பணியிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வரலாற்றிலே இல்லாத அளவுக்கு

[2013 அக்டோபர் 30

843 கால்நடை மருத்துவர்களை நியமித்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திலேகூட எங்கும் கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்தவுடனேயே 843 கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்தியது எல்லோருக்கும் தெரியும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செக்காரப்பட்டி கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்மூலம் ஆய்வு செய்து, தேவைப்படுமானால் அங்கு ஒரு கால்நடை மருத்துவரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நியமிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**68—**

## ஆயத்த ஆடை

***37271—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.



2013 அக்டோபர் 30]

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள சுந்தரபாண்டிபுரம், இராமச்சந்திராபுரம், டபிள்யு.புதுப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகள் கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இங்கு செயல்பட்டு வந்த கூட்டுறவு நூற்பாலை தற்பொழுது மூடப்பட்டுள்ளதால் இங்கே பணியாற்றிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மேலும், இங்கே படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பற்று வெளிமாநிலங்களிலும், வெளிமாவட்டங்களிலும் சென்று பணியாற்றுகின்றனர். வெளிமாவட்டங்களில் சென்று பணிபுரியும் இளம் பெண்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். தற்போது, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தனியார் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனங்களால் தயார் செய்யப்படும் சுடிதார், நைட்டி, பெட்டிகோட், பாவாடை, சட்டை, பேன்ட் போன்றவை சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறது. எனவே, இங்குள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களின் எதிர்கால நலனைக் கருதி, உள்ளூரிலேயே வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை ஒன்றினை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்கும்பொருட்டு, சர்வதேசத் தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கின்ற 71 ஜவுளிப் பூங்காக்களில் தமிழகத்தில் மட்டும் 10 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு, ரூ.1,066.45 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு வருடத்திற்கு 12,183 கோடி ரூபாய்க்கான ஜவுளி வர்த்தகமும், 1,40,000 பேருக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பும் கொடுக்கின்ற ஓர் அருமையான சூழ்நிலையும் தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும்

[2013 அக்டோபர் 30

திட்டம் அரசு மற்றும் தனியாரின் பங்களிப்புடன்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** *ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதற்காக, மத்திய அரசு 40 விழுக்காடு அல்லது 40 கோடி ரூபாய், இதில் எது குறைவோ அதை மானியமாகவும், மாநில அரசு 9 விழுக்காடு அல்லது 9 கோடி ரூபாய், இதில் எது குறைவோ அதை மானியமாகவும் வழங்குகின்றது. ஆகவே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைப்பதற்கு, அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளி மாவட்டத்தில் வேலை செய்கின்ற மக்களுக்கும், சுடிதார் போன்ற ஆடைகளைத் தயாரிக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர்களும், இளம் பெண்களும் வேலையில்லாத காரணத்தினால், அருகிலுள்ள பஞ்சாலைகளிலும், பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகிறார்கள். அந்தத் தொழில்கள் பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும் தொழில்கள். குறிப்பாக, பட்டாசுத் தொழிலில் உயிரைப் பணயம் வைத்து, தினந்தோறும் பணி செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனவே, தினந்தோறும் பணிக்குச் செல்கின்றபோது, உயிர் பயத்தோடு சென்று,*



2013 அக்டோபர் 30]

*பணியாற்றுகிற படித்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுடைய நலனைக் கருதி, அரசு, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மக்களுடைய நலன் கருதி பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் பணியாற்றுகின்ற மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை விருதுநகர் மாவட்டத்தில் செயல்படுத்தி வந்து கொண்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும்.*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மக்களது உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற அரசாங்கமாக சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையின் மூலமாக வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்காகவும், நெசவாளர்கள் நலன் கருதியும் பல்வேறு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் எடுக்கப்பட்டுள்ளன என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, வீடுகள் இல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக 260 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நெசவாளர்களுக்காக பசுமை வீடுகள் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஆறாயிரம் பெடல் தறிகள் ரூபாய் 24 கோடியில் கொடுத்தும், அதோடு கைத்தறி நெசவாளர்களுக்கு மிஷின்மூலம் அதிகமான சிட்டா நூல்கள் சுற்றுவதற்கு இருபத்தைந்தாயிரம் மின் ராட்டை கொடுத்தும் சிறப்பான முறையில் அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றியிருக்கிறார்கள். படித்த இளைஞர்களுக்கு சிறப்பான முறையில் வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக, ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பதற்கு விருதுநகர் மாவட்ட தொழில்முனைவோர்,*

[2013 அக்டோபர் 30

மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவோ அரசுக்குக் கோரிக்கை வைக்கின்றபோது, இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும். இந்தத் தொழில்மூலம் படித்தவர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நல்ல கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**69—**

## சொந்தக் கட்டடம்

*6142—**திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதியிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீரங்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் துறையூர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 1 கோடி ரூபாய் நிதி வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். துறையூர் தாலுகா, வடக்குவெளி கிராமம், சர்வே எண் 68/2—ல், மொத்த விஸ்தீரணம் 1.52 எக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டெண்டர் விடும் பணிகள் முடிந்தவுடன், மேற்படி பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி, சோதனைகளைச் சாதனைகளாக்கி, சாதனைகளைச் சரித்திரங்களாக மாற்றி, கண்ணை இமை காப்பதுபோல கழகத்தையும், ஏழையெளிய மக்களையும் கட்டிக் காத்து வரும் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த உப்பிலியாபுரம், போக்குவரத்துக் கழக கூடுதல் துணை பணிமனைக்கு ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், துறையூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்த தமிழகத்தின் தாயுருவ தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—05*

இது கட்டடம் சம்பந்தமான கேள்வி என்றாலும்கூட, எங்களுடைய தொகுதியில் அதிகப்படியான மக்கள் கோத்தகிரி மலைப் பகுதியில் வசித்து வருகிறார்கள். பிழைப்பைத் தேடிச் சென்றவர்கள் அங்கே வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்குப் போக்குவரத்து வசதியை மேம்படுத்திக் கொடுப்பதற்காக துறையூரிலிருந்து கோத்தகிரி வழியாக ஊட்டி வரை பேருந்து வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்கள் துறையின் சார்பாக ஆய்வு

செய்யப்பட்டு, பயணிகளினுடைய எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் தொடங்குவதற்கான அறிவிப்பினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் எப்போது தொடங்கப்படும் என்றும், தீபாவளி பண்டிகையையொட்டி ஆம்னி பஸ் உரிமையாளர்கள் கூடுதல் கட்டணம் வசூல் செய்யாமல் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் விரைவில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்படுமென்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





தமிழகத்தில் இருக்கின்ற சாதாரண, அடித்தட்டு மக்கள் தீபாவளிப் பண்டிகை தினங்களில் தங்களுடைய சொந்த ஊருக்கு சிறப்பாகச் சென்று வர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இதுவரை தமிழக அரசினுடைய வரலாற்றில் இல்லாத வகையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு 8,350 சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறப்புப் பேருந்துகளில் கணினிமூலம் முன்பதிவு (online reservation) செய்வதற்கான சிறப்புத் திட்டம் 2011 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் இன்று படித்தவர்கள் மத்தியில், இளைஞர்கள் மத்தியில், மக்கள் மத்தியில் மிகப் பெரிய ஒரு வரவேற்பைப் பெற்றுள்ளதற்குச் சான்றாக, 2012 ஆம் ஆண்டு தீபாவளி திருநாளில் ஒரு நாள் முன்பதிவுமூலம் பெறப்பட்ட தொகை, ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாய். 2013 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தில் ஒரு நாள் முன்பதிவுமூலம் பெறப்பட்ட தொகை, ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவோடு முன்பதிவுமூலம் பெறப்பட்டிருக்கின்ற தொகை, ஒரு கோடியே 43 இலட்சம் ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு முன்பதிவு என்பது பயணிகள் எளிதாக பயணம் செய்வதற்கான திட்டமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய இச்சீரிய திட்டம் தமிழக மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த ஆம்னி பேருந்துகளுடைய உரிமம் இரத்து செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதல் கட்டணம் குறித்து புகார் தெரிவிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு சிறப்புத் தொலைபேசி எண் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொலைபேசி

எண்ணில் புகார் தெரிவிக்கப்பட்டால், எந்தப் பேருந்தில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை ஆய்வு செய்து, அதனுடைய உரிமம் இரத்து செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**70—**

## வீட்டுமனைப் பட்டா

*__21734—திரு. அ. சவுந்தரராசன்:__

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34–வது வட்டம், கொடுங்கையூர், காமராஜர் நகர், ஜம்புலி தெரு மற்றும் திருவள்ளூர் சாலை ஆகிய பகுதிகளிலுள்ள கிராம நத்தத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். கோட்டை–தண்டையார்பேட்டை வட்டம், பெரம்பூர் தொகுதி, 34–வது வட்டம், கொடுங்கையூர், காமராஜர் நகர், ஜம்புலி தெரு மற்றும் திருவள்ளூர் சாலை ஆகிய பகுதிகளில் சர்க்கார் புறம்போக்கு கிராம நத்தம் என நிலப் பதிவேட்டில் பதிவாகியுள்ளதாகவும், மேற்படி புலங்களுக்கு நத்தம் நில வரித் திட்டத்தின்கீழே களப் பணிகள் செய்யப்பட்டு, அங்கு வசிக்கும் 629 நபர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தோராயப் பட்டாவை வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.



முற்பகல் 11–10

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பூர் தொகுதியிலே இருக்கிற திருவள்ளூர் சாலையில், கொடுங்கையூர் கால்வாய் ஓரத்தில் வசித்து வந்த மக்களில் ஒரு பகுதியினரது இடத்தை, குடிசை மாற்று வாரிய நிலம் என்று எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு வீடு தருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. அதிலேயே குடியிருக்கிற இன்னொரு பகுதியினரிடம், 'இப்போது அது collector land; அது revenue land; அது ஆற்றுப் புறம்போக்கு; ஆகவே, பட்டா கொடுக்க முடியாது' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரே தன்மையுள்ள இடத்தில் ஒரு பகுதியினருக்குக் கொடுத்து, இன்னொரு பகுதியினருக்குக் கொடுக்காமல் இருப்பது சரியல்ல. எனவே, அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும். ஒன்று; அவர்களை குடிசை மாற்று வாரிய ஏற்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் அல்லது அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

அதேபோல், 45–வது வட்டத்தில், பக்தவத்சலம் காலனி என்கிற பகுதியிலே, பர்மாவிலேயிருந்து தாயகம் திரும்பி வந்த தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது ஏற்கெனவே ஏரியாக இருந்த பகுதி. அந்தப் பகுதியில் வசித்து வந்தவர்களுக்குப் பட்டா இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பிறகு பட்டாவைக் கொடுத்துவிட்டார்கள். அங்கேயும் ஒரு பகுதியினருக்குப் பட்டா கொடுக்கப்பட்டு, இன்னொரு பகுதியினருக்குக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. தெருவிலே உள்ள இந்தப் பகுதியினருக்குப் பட்டா உண்டு; எதிர்ப் பகுதியில் இருப்பவர்களுக்குப் பட்டா இல்லை என்பது போன்று ஒரு குறை இருக்கிறது. அதை நான் ஒரு anomaly என்றுதான் சொல்வேன்; அப்படியொரு நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கும் பட்டா வழங்க வேண்டும்.

அதேபோன்று, 45–வது வட்டத்தில், புது நகரிலே, இதேபோலவே ஒரு பகுதியினருக்குக் கொடுத்து, இன்னொரு பகுதியினருக்குக் கொடுக்காத நிலை இருக்கின்றது. இவை குறித்தும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

[2013 அக்டோபர் 30

மேலும், சென்னையிலே கலெக்டருக்குச் சொந்தமான நிலம் என்று ஒரு வகை சொல்கிறார்கள். அது வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம். அப்படி பல இடங்கள் காலியாக இருக்கின்றன. எருக்கஞ்சேரியில் 'அண்ணா சாலை என்கிற பகுதியிலே இருக்கிற ஒரு நிலம் கலெக்டருக்குச் சொந்தமான நிலம். ஆகவே, அதை நீங்கள் உடனடியாகப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்; மாநகராட்சிக்குத் தர வேண்டும்; விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டும்' என்று நான் திரும்பத் திரும்பக் கேட்ட பிறகும், கலெக்டர் அலுவலகம் 'ஆய்வு செய்து எனக்கு அறிக்கை அனுப்புங்கள்' என்று தாசில்தாருக்குச் சொன்ன பிறகும், தாசில்தார் அலுவலகம் செயல்பட மறுக்கிறது. அங்கே இப்போது பெரிய அளவிற்கு ஆக்கிரமிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரம் உள்ளிட்ட பகுதிகளில் இதுபோன்று வருவாய்த் துறைக்குச் சொந்தமாக இருக்கிற நிலங்களைக் கண்டறிந்து, அவை அனைத்தையும் கையகப்படுத்தி, சுற்றுச் சுவர் அமைத்து, அவற்றை அரசினுடைய பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்களா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழ்நாட்டிலே எத்தனையோ அரசுகள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கின்றன; எத்தனையோ முதலமைச்சர்கள் தமிழகத்தை ஆண்டிருக்கிறார்கள். ஆனால், சென்னையைத் தவிர, மற்ற பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமே வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், நூறாண்டு காலமாக சென்னைப் பகுதியிலே வாழக்கூடிய மக்களுக்கு, நத்தம் நில வரிச் சட்டத்தின் மூலமாக பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலே சுமார் நூறாண்டுக் காலமாக தலைமுறையாகக் குடியிருக்கக்கூடிய மக்களுக்கு இதுவரையில் நத்தம் பட்டா வழங்கப்படாமலே இருந்த வரலாறுதான் இருந்திருக்கிறது. ஆகவே, இதுபோன்று மாநகராட்சிப் பகுதிகளிலே குடியிருக்கிற 12,650 குடும்பங்களில், இதுவரை 11,706 குடும்பங்களுக்கு தோராயப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, சென்னையிலே, மாநகராட்சிப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள், முதன்முறையாகப் பட்டாக்களை இப்போது பெற்றிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 30]

அதுபோன்று ஒரு காலத்திலே ஏரிப் பகுதியிலே குடியிருப்பவர்களுக்கு, ஆற்றுப் பகுதியிலே குடியிருப்பவர்களுக்கு ஒரு பகுதியினருக்குப் பட்டா வழங்கப்பட்டிருப்பதாகவும், மறு பகுதியில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நீர்நிலைப் பகுதிகளிலே குடியிருப்பவர்களுக்கு, ஆற்றுப் பகுதிகளிலே குடியிருப்பவர்களுக்கு, ஏரிப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் பட்டா வழங்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் சமீப காலத்திலேதான் தடை விதித்திருக்கிறது. ஆகவே, அந்தத் தடை விதிப்பதற்கு முன்பாக அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கலாம். தற்போது உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணை இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கக்கூடிய வாய்ப்பு, அவர்களுக்குப் பட்டா வழங்கக்கூடிய சூழ்நிலை அரசுக்கு இல்லாமல் இருக்கிறது. இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட பகுதிகளில் வாழக்கூடிய மக்கள், குறிப்பிட்ட வருமானத்திற்கு உட்பட்டு, தகுதியுள்ள நபர்களாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், மாற்று இடங்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, மாவட்ட ஆட்சியரது நிலம் என்று சொல்லப்படக்கூடிய அந்த நிலம் குறித்த கருத்துரு, வட்டாட்சியர்

[2013 அக்டோபர் 30

மூலமாக இன்னும் வராமல் உள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுகுறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திட்டக்குடி தொகுதியில், பெண்ணாடம் பேரூராட்சியில், அகரம் என்ற கிராமம் உள்ளது. அங்கு ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு இலவச மனைப் பட்டா கொடுப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாகியும் இதுவரை மனைப் பட்டா வழங்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை விசாரணை செய்து பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்;
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே”

என்ற புறநானூற்றுப் பாடலின்படி, தமிழ்நாட்டு நலனுக்கு தம்முடைய ஆட்சி நெறிதான் உயிர், இதனை உணர்ந்து செயல்படுவதுதான் நமது கடமை என்பதை எண்ணி, உற்சாகம்,



2013 அக்டோபர் 30]

சிரத்தை, மனோபாவம் போன்றவற்றால் புதிய அடிச்சுவட்டை ஏற்படுத்தி, இனியன, அரியன, பெரியன என்று இவ்வுலகில் எவற்றையெல்லாம் நாம் கருதுகின்றோமோ, (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றைவிட, எல்லா வகையிலும் சிறந்தவராகத் திகழ்ந்து, உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்லும் துணிவும், எப்பொழுதும் கீழ்த்தட்டில் வாழும் மக்களைப் பற்றிய சிந்தனையும், அவர்களைக் கைத்தூக்கிவிட வேண்டும் என்பதில் அவர் காட்டிவரும் உறுதியும், பொதுமக்கள் நலனுக்காக எதையும் சந்திக்கும் ஆற்றலும், அளவில்லா தியாகம், அருமைப் பண்பு, எளியோர்மீது பாசம், (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நிலையிலும் கொள்கையைக் கைவிடாத பிடிப்பு, மேடை முழக்கத்தில் தனித் தன்மை, தன்னுடைய அரசியல் வழிகளான சமகால அரசியல்வாதிகளையும் வியக்க வைத்த தன்மையும், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், (மேசையைத் தட்டும் ஒலி) நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளையும் கொண்ட எங்களின் புனிதத் தாயே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தை வழிநடத்திச் செல்பவர்கள் திறமை படைத்தவர்களாக இருந்தால் மட்டும் போதாது, அதற்கு உரம் மிக்க வல்லவர்கள் தேவை. நிலத்தினுடைய வளத்திற்குத் தக்கபடிதான் பயிர் வளர முடியும். அதுபோல, மன வளம் பெற்றவர்களால்தான் வழி நடத்திச் செல்ல முடியும். சிலருக்கு அரசியல் தெரியும், ஆனால் இலக்கியம் தெரியாது. பலருக்கு இலக்கியம் மட்டும் தெரிந்திருக்கும், அரசியல் தெரியாது. சிலரிடத்தில் அன்பு இருக்கும். ஆனால் அவர்களுக்கு அரசியலோ, இலக்கியமோ தெரியாது. ஆனால், அன்பு, பண்பு, அரண், அரசியல், (மேசையைத் தட்டும் ஒலி) இலக்கியம், பன்மொழிப் புலமை, கொடைத் தன்மை, தெய்வ பக்தி, சிறந்த ஆளுமை ஆகிய அனைத்தும் நிறைந்திருக்கின்ற எங்கள் அன்புத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) “யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை”–இது பாரதியின் மதிப்பீடு. “யாமறிந்த தலைவரிலே பேரறிஞர் அண்ணாவைப்போல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.–ஐப்போல், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவைப்போல் பூமிதனில் எங்கேயுமே கண்டதில்லை”; (மேசையைத் தட்டும் ஒலி) இது கோடானுகோடி தமிழ் மக்களின் மதிப்பீடு.

[2013 அக்டோபர் 30

மாண்புமிகு அம்மா அவர்கள் குணங்களால் உயர்ந்த வள்ளல். கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்கள்; அஞ்சாத நெஞ்சமும் அருள் உள்ளமும் கொண்ட தமிழே உனக்கு வணக்கம். தாயின் புகழே இந்த உலகில் என்றும் நிலைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் சேர நாடு என்றால் 'யானை' நினைவிற்கு வரும். பாண்டிய நாடு என்றால் 'முத்து' நினைவிற்கு வரும். சோழ நாடு என்றால் 'சோற்றுக்குப் பஞ்சம் இல்லை' என்பது நினைவிற்கு வரும். இன்று, தமிழ்நாடு என்றால், உலகத்தார்க்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டங்கள்தான் நினைவுக்கு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உணவகம், அம்மா பசுமைக் காய், கனிகள் விற்பனை நிலையங்கள், போக்குவரத்துக் கழகங்கள்மூலம் அம்மா குடிநீர்த் திட்டம், மலிவு விலையில் அரிசி, 54 புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்க உத்தரவு, பி.எட். படித்து முடித்து பணி இல்லாமல் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு எளிதில் பணி கிடைக்க சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேசிய கலைக்கூடங்களைப் புதுப்பிக்க ரூ.11 கோடி ஒதுக்கீடு, அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக ரூ.150 கோடி ஒதுக்கீடு, பல மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ.717 கோடி நிதி ஒதுக்கீடு என்று எத்தனை, எத்தனை எண்ணிலடங்காத திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில அரசு நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் மத்திய அரசு அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கக் கூடாது. அது நாட்டிற்குக் கேடானதாகும். மத்திய, மாநில அரசு உறவுகள் நாட்டின் வளர்ச்சியை மையமாகக்கொண்டு அமைய வேண்டும். மத்திய, மாநில அரசின் திட்டங்கள் எப்பொழுதும் முழுமையாக இருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்குப் பல கொடுமைகள் இலங்கையில் அரங்கேறுகின்றன. மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்பட்டு வருகின்றன. இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு விடிவுகாலம் வர வேண்டுமென்றால், பாரதப் பிரதமராக மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போதுதான் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும்.



2013 அக்டோபர் 30]

முற்பகல் 11–20

வரப்புயர நீர் உயரும், இந்திய நாட்டின் வளம் உயர தாங்கள் பாரதப் பிரதமராக உயர வேண்டுமென்று தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் தாயே! அம்மா பாரதப் பிரதமராக வந்து விட்டால், பல பேர்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்து விடும். (மேசையைத் தட்டும் ஒலி) வான்கோழி கண்டால் வருத்தப்படுமே என்று எண்ணி, தோகையை கீழே உதறிப் போட்டுவிடுமோ, கலாப மயில்? காக்கைக்கு வருத்தமாக இருக்கும் என்பதற்காகவே பச்சைக் கிளி கருப்புப் பூச்சைத் தேடிக்கொண்டிருக்குமோ? புகழைத் தேடி அம்மா அவர்கள் என்றும் சென்றதில்லை. புகழ்தான் மாண்புமிகு அம்மா அவர்களைத் தேடி வந்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

புலியை அழைத்து பூமாலையைக் கொடுக்கச் சொல்ல முடியுமா; சேற்றிலே சந்தன வாடை கிடைக்கும் என்று எண்ண முடியுமா; ருத்திராட்சம் அணிந்திருந்ததாலே பூனை போகனாகி விட முடியுமா; ஓநாயை சாதுவாக்கி ஆட்டுக்குக் காவல் வைக்க முடியுமா; அதுபோன்று அவர்களுடைய தலைமையைத்தான் இங்கே ஏற்க முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காட்டில் இரவு நேரத்தில் ஓர் ஆந்தை மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்தது. மரத்திற்குக் கீழே இரண்டு, மூன்று எலிகள் விளையாடிக் கொண்டிருந்தன. இதைப் பார்த்த அந்த ஆந்தை, "என்ன எலிகளே, ஆந்தையாகிய நான் உட்கார்ந்திருக்கும் மரத்தின்கீழே நீங்கள் பயம் இல்லாமல் விளையாடிக் கொண்டிருக்கிறீர்களே?" என்று எலிகளைப் பார்த்துக் கேட்டது. அந்த எலிகள் இரவு நேரத்திலும் நம்மைப் பார்த்து கேட்கின்ற இந்த ஆந்தைதான் மிகவும் சிறந்தது, மிகவும் புத்திசாலித்தனமானது என்று எண்ணி, காட்டில் உள்ள வலிமை குறைந்துள்ள விலங்குகளின் சங்கத்தினரிடம் போய் சொன்னது. மறுநாள் காலை அந்தச் சங்கத்தைச் சார்ந்த எல்லா விலங்குகளும், ஆந்தை உட்கார்ந்திருக்கும் மரத்திற்கு அருகே வந்தன. இரவில் பார்க்கின்ற சக்தியுடைய நீங்கள்தான் எங்கள் தலைவர் என்று கூறி மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தன. தலைவர் என்று சொன்னவுடன் பகலில் தனக்கு கண் பார்வைத் தெரியாது என்பதை மறந்த ஆந்தை, அவற்றுக்குத் தலைமையேற்று அடுத்த காட்டிற்குச் சென்றது. நண்பகல் நேரம். அந்தக் காட்டிற்கு ஒரு சாலையைக் கடந்துதான்

[2013 அக்டோபர் 30

செல்ல வேண்டும். ஆந்தை சென்ற வழியில், அனைத்து வலிமை குறைந்த விலங்குகளும் எதையும் சிந்திக்காமல் சென்றன. அப்போது அந்தச் சாலையில் சரமாரியாக வந்த விலங்குகளால், அனைத்தும் அதன் கால்களில் சிக்கி, அடிபட்டும் போய் இறந்துவிட்டன. அதைப்போலத்தான் சிலர் தலைமையேற்று இன்று தமிழகத்தில் சிதறிக் கிடக்கின்றார்கள். தகுதியில்லாமல் தலைமையேற்பதும், சிரமத்தோடு தலைமையேற்பதும் எப்போதும் ஆபத்தையே விளைவிக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் எதையுமே சாதிக்கவில்லை. மாண்புமிகு அம்மா, தாங்கள் மத்தியில் ஆட்சியில் அமர்ந்தால், சாதிப்பதே உங்கள் வேலை. ஒரு கோடி தொண்டர்கள் உங்கள் கையில். இனி பாரதத்தை ஆளப்போகும் பாரதப் பிரதமர் நீங்கள். ஐந்து விரல்களைக் காட்டியவர்கள் உண்டு. இவர்களையெல்லாம் இரண்டு விரல்களால் வென்றுவிட்ட தாயே!

எண்ணிக்கைகூட தங்களைப் பார்த்தால் தன் மதிப்பைக் குறைத்துக்கொள்கிறது தாயே! எண்ணிக்கைகூட தங்களைப் பார்த்தால் தன் மதிப்பை குறைத்துக்கொள்கிறது தாயே! 29—ல் 7ஐக் குறைத்தால் 22 அல்லவா? அதை நான் சொல்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* விசுவாசத்திற்கு உங்களிடம் பரிசு உண்டு. விவேகம் உள்ளவர்களுக்கு மட்டுமே அது புரிவது உண்டு. மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு காகத்தை, . . .*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை. *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* முதலில் நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள், மோகன்ராஜ். *(குறுக்கீடு)* முதலில் நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* அனுமதி இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடு)* நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழழகன் அவர்கள்.

**திரு. க. தமிழழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு காகத்தைக் கிளியாக்க முயன்றார்கள். அது தன்னைப் புலி என்று நினைத்துக்கொண்டு, பாவம் புல்லைத்தான் தின்று கொண்டிருக்கின்றது. உங்களிடம் உண்மை, உழைப்பு என்றும் தோற்றது இல்லை. உங்களை நம்பி



2013 அக்டோபர் 30]

வந்தவர்களை நீங்கள் கைவிட்டது இல்லை தாயே! "அதியமான் இல்லையென்றால், அவ்வை இல்லை. *(குறுக்கீடுகள்)* கவிஞர் இல்லையென்றால் சாத்தனார் இல்லை. சடையப்பர் இல்லையென்றால் கம்பன் இல்லை" என்று கூறி, நாள்தோறும் நெஞ்சில் பூக்கும் நன்றி மலர்களோடு மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப்பாதங்களை வணங்கி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* கேள்விக்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். *(குறுக்கீடு)* அந்தக் கேள்விக்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். *(குறுக்கீடு)* உறுப்பினர் கேட்ட கேள்விக்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய ஆதி திராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு வினாவை, ஒரு வேண்டுகோளை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, சேற்றிலே பிறந்த நீங்கள் இன்றைக்குச் சோலைக்கு வந்திருக்கிறீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்" என்று சொல்வார்கள். தட்டுகிற இடத்திலிருந்த நீங்கள் திட்டம் கொட்டுகிற இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு வருடம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்று சொன்னது. இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மட்டும் 4,50,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி சாதனைப் படைத்த அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே அன்போடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—25*

ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையிலே, இந்த ஓராண்டிலே மட்டும் 25 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்களை ஆதி திராவிட மக்களுக்காக வழங்கிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு பேரவைத்

[2013 அக்டோபர் 30

தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, தகுதியுள்ள இடங்கள், அந்தப் பகுதியிலே ஆதி திராவிட மக்களுக்கு இல்லாவிட்டாலும்கூட தனியார் இடங்களைப் பேச்சுவார்த்தையின் மூலமாக கையகப்படுத்துவதற்கென்றே ஆதி திராவிடர் நலத் துறைக்கு அரசு ஒரு நிதியினை ஆண்டுதோறும் ஒதுக்குகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒரு தொகையை ஒதுக்கி, அதன் மூலமாக அந்தத் தனியாரிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தி, தனியார் இடங்களைக் கையகப்படுத்தி, ஆதி திராவிட மக்களுக்கு பட்டாக்களை வழங்குகிறது என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். உங்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய அனைத்து ஆதி திராவிட மக்களுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கும்; தகுதியுள்ள பயனாளிகளுடைய பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், தகுதியுள்ள இடங்களைத் தேர்வு செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உங்களுடைய பகுதியிலே வாழக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள். அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. கேட்ட கேள்விக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**71—**

## மருத்துவமனை மேம்பாடு

*__3247—திரு. கு. நல்லதம்பி:__

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2013 அக்டோபர் 30]

எழும்பூர் தொகுதியிலுள்ள குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எழும்பூர் தாய்—சேய் நல மருத்துவமனையை மேம்படுத்தும்பொருட்டு ரூபாய் 5.6 கோடி செலவில் புதிய குடும்ப நல மையம் கட்டப்பட்டு, கடந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, இம்மருத்துவமனையை தகைசால் மையமாகத் தரமுயர்த்த ரூபாய் 56.32 கோடி செலவில், 5 மாடிகள் கொண்ட கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட உள்ளது. மேலும், இம்மருத்துவமனைக்கு ரூபாய் 10 கோடி செலவில் மருத்துவக் கருவிகள் வாங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர பணியிடங்கள் உருவாக்கப்பட உள்ளன. அதேபோன்று, அரசினர் குழந்தைகள் நல மருத்துவமனையை மேம்படுத்தும்பொருட்டு, ரூபாய் 18.47 கோடி செலவில், 300 படுக்கை வசதிகள் கொண்ட 8 மாடி கட்டடம் கட்டும் பணிகள் நிறைவு பெற்று முடியும் நிலையில் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி, இம்மருத்துவமனைக்காக ரூபாய் 12.38 கோடி செலவில் மருத்துவக் கருவிகளும், ரூபாய் 1.53 கோடி செலவில் மரச் சாமான்களும் வாங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி, ரூபாய் 20.47 கோடி செலவில் குழந்தைகளின் இருதய அறுவைச் சிகிச்சைக்கான தகைசால் மையம் உருவாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணைக்கிணங்க, இந்த மருத்துவமனையின் சிறப்பு அம்சமாக Hybrid Theatre, Cardiac Cath Lab ஆகியன விரைவில் உருவாக்கப்பட உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் தொகுதியில் குழந்தைகள் நல மருத்துவமனையிலும், மகப்பேறு மருத்துவமனையிலும் போதுமான இருக்கைகளும் இல்லை; அங்கு தேவையான மருத்துவ உபகரணங்களும் இல்லை என்பதால், சிகிச்சை பெற வரும் குழந்தைகளும் நோயாளிகளும் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவமனையை மேம்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1844 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரியமிக்க சென்னை-எழும்பூர் அரசினர் தாய்—சேய் நல மருத்துவமனை, 752 படுக்கை வசதிகள் கொண்ட மிகப் பழமையான மருத்துவமனையாகும். இங்கு சராசரியாக நாளொன்றுக்கு 400 வெளி நோயாளிகளும், 750 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களும், செவிலியர்களும் உள்ளனர். இங்குள்ள 5 பெரிய அறுவை அரங்கங்களில் ஒரே சமயத்தில் 20 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யும் வசதியும் உள்ளது. நாளொன்றுக்கு சராசரியாக 45 முதல் 50 பிரசவங்கள் நடைபெறுகின்றன. இங்கு கர்ப்பிணிப் பெண்களுக்கென வென்டிலேட்டர் வசதியுடன் கூடிய 8 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு உள்ளது. அதேபோன்று, 40 படுக்கைகள் கொண்ட பச்சிளங் குழந்தைகள் பராமரிப்புப் பிரிவு-NIC Ward உள்ளது. மேலும் X-ray பிரிவு, Ultrasound scan பிரிவு, நவீன இரத்தப் பரிசோதனைக் கூடம், இரத்த சேமிப்பு வங்கி, ventilator, incubator, baby warmer போன்ற நவீன வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. AIDS-ஆல் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கான சிறப்பு சிகிச்சை மையமும் இங்கே இயங்கி வருகிறது.



2013 அக்டோபர் 30]

முற்பகல் 11–30

அதேபோன்று, 1948 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அரசு குழந்தைகள் நல மருத்துவமனை தற்போது 537 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றது. இங்கு சராசரியாக நாளொன்றுக்கு 2,500 வெளி நோயாளிகளும், 520 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களும், செவிலியர்களும் உள்ளனர். இங்குள்ள 4 பெரிய அறுவை அரங்குகளில் ஒரே சமயத்தில் 8 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யும் வசதி உள்ளது. இந்த மருத்துவமனையில், 40 பச்சிளங் குழந்தைகளுக்கும் மற்றும் 15 குழந்தைகளுக்குமான தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் உள்ளன. மேலும், Digital X-ray பிரிவு, Ultrasound scan பிரிவு, CT scan, Echo, EEG, ventilator, incubator, baby warmer, photo therapy unit, நவீன இரத்த பரிசோதனைக் கூடம், இரத்த சேமிப்பு வங்கி போன்ற நவீன வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அரசின் தாய்—சேய் நல மருத்துவமனையில் ரூ.3.4 கோடியும், குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.7.45 கோடியும் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இந்த நிதியும் மருத்துவமனையின் மேம்பாட்டுக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மருத்துவமனையிலும், மகப்பேறு மருத்துவமனையிலும், அதற்கு அருகிலுள்ள இடங்களிலும், வெளியார்களும், தனி நபர்களும் குடிநீரை விற்பனை செய்கிறார்கள். அதைத் தடுக்க மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் மருத்துவமனையைச் சுற்றி கொட்டப்படும் கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைகளை உடனடியாக அகற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளி நபர்கள் உள்ளே வந்து தண்ணீரை விற்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அது ஆய்வு செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்படும். அதேபோன்று, உள்ளே குப்பைகள் எல்லாம் கொட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அதுபோன்ற நிகழ்வு இல்லை. அங்கு அவ்வப்போது சுத்தம் செய்யும் பணி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது என்ற செய்தியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**61—**

## துணை மின் நிலையம்

**20541—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்குத் தொகுதி, குலமங்கலத்தில் 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை கிழக்குத் தொகுதி, குலமங்கலம் பகுதிக்கு தற்போது திருப்பாலை 110/33/11 கி.வோ. 2 X 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியுடன் இயங்கிவரும் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றிகளின் உச்ச மின் பளு 20.45 எம்.வி.ஏ. மட்டுமே ஆகும். தற்போதுள்ள மின்மாற்றிகளின் மின் பளு போதுமானதாக உள்ளது. இன்னும் சொல்லப்போனால் தேவைக்கதிகமாகவே உள்ளது. எனவே, மதுரை





கிழக்குத் தொகுதி, குலமங்கலம் பகுதியில் புதியதாக 110/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

**திரு. கா. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிழக்குத் தொகுதி, திருப்பாலை அய்யர்பங்களாவில் அமைந்துள்ள துணை மின் நிலையம் குலமங்கலம் பகுதியின் கடைசியில் இருக்கின்றது. அதில் 21 ஊராட்சிகள் இருக்கின்றன. அது 20 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டது. இப்பொழுது மதுரை மாவட்டத்தில் தத்தனேரி, திருப்பாலை, கண்ணனேந்தல் ஆகிய ஊராட்சிகள்தான் இருக்கின்றன. அதில், அனைத்து அரசு ஊழியர்களும் இருக்கின்ற காரணத்தால், மாநகராட்சிப் பகுதியில் திருப்பாலை சேர்ந்துவிட்டது. நீங்கள் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன். திருப்பாலையில் 21 பெரிய ஊராட்சிகள் இருப்பதால், இந்தத் துணை மின் நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பொறுத்தவரை நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். நேற்று பேசும்போதுகூட அருமை அண்ணன் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள், 'மூன்று வெடி வாங்கினேன். மூன்றும் வெடிக்கவில்லை' என்று சொன்னார். தற்போது திட்டக்குடி எம்.எல்.ஏ. போட்ட வெடி, இப்போதாவது டெல்லிக்குக் கேட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டக்குடி எம்.எல்.ஏ. போட்ட சரவெடி என்பது இப்போதாவது ஏற்காட்டிலிருந்து டெல்லிக்குக் கேட்டிருக்கும் என்று நினைத்துக்கொண்டு, நேற்று வெடிக்காத வெடி இப்போதாவது

[2013 அக்டோபர் 30

சந்தோஷமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல மதுரை கிழக்குத் தொகுதிக்குட்பட்ட குலமங்கலம் பகுதிக்கு, திருப்பாலை 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அது சற்று தொலைவில் இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதற்காகத்தான் அருகில் இருக்கின்ற ஊமச்சிகுளத்திற்குச் செல்கின்ற அந்தத் தனி மின்னூட்டி (Feeder) மூலமாக குலமங்கலம் சுற்றுப் பகுதிகளுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்படுகிறது. குலமங்கலம் பகுதியில் உள்ள டிரான்ஸ்பார்மரின் மொத்த மின் பளு 350 கே.வி.ஏ. ஆகும். 250 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு மின் மாற்றியும், 100 கே.வி.ஏ. திறன் கொண்ட ஒரு கூடுதலான மின் மாற்றியும் குலமங்கலம் பகுதிக்கென்று தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, ஊமச்சிகுளம் மின்னூட்டி வழியாக, குலமங்கலம் பகுதியிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற 350 கே.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றிகளின் வழியாக போதுமான அளவிற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அந்தக் குலமங்கலம் பகுதிக்கு மட்டுமே மின் பளு 350 கே.வி.ஏ.தான். ஆகவே, அங்கே இருக்கின்ற மின் பளுவுக்கு போதுமான அளவுக்கு, மின்சாரப் பற்றாக்குறை இல்லாத அளவிற்கு, லோ–வோல்டேஜ் இல்லாத அளவிற்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அது வளர்ந்துவரும் மாநகராட்சிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளதால், இன்னும் வளர்ந்து வரும் பகுதி என்பதால், இனிமேல் வருகின்ற மின் பளு அதிகரிக்கும் என்பதை ஏற்றுக்கொண்டு, நிச்சயமாக மின் தேவை அதிகரித்தால், தேவைக்கு ஏற்ப அந்தப் பகுதியிலே கூடுதலாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 30]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## பட்டியல்–17

**1—**

### அனல் மின் நிலையப் பணிகள்

**வினா எண் 16083—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எண்ணூர் அனல் மின் நிலையத்தை மாற்றும் திட்டப் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம் ,மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

எண்ணூர் அனல் மின் நிலையத்தை (1 X 660 மெ.வா.) மாற்றும் திட்டப் பணியின் சாத்தியக் கூறுக்கான முந்தைய நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**2—**

### கிடங்கு மற்றும் அலுவலகம் கட்டும் பணி

**வினா எண் 17990—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆ. சங்கம்பாளையத்தில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கான கிடங்கு மற்றும் அலுவலகம் கட்டும் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புல எண். 4/5 வருவாய்த் துறை குவாரி புலத்தில் 032.5 ஹெக்டேர் (0.80) ஏக்கர் நிலம், ஆ.சங்கம்பாளையத்தில் தரைத் தளம் 10,002 சதுர அடி விஸ்தீரணத்திலும், முதல் தளம் 6,562 சதுர அடி விஸ்தீரணத்திலும் கட்டடம் கட்டப்பட்டு, தரைத் தளத்தில்

டாஸ்மாக் குடோனும், முதல் தளத்தில் அலுவலகமும், கட்டடம் அமைக்கப்பட்டுள்ள புலத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவரும் அமைக்கப்பட்டு, 24-11-2012 அன்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு 28-11-2012 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3—**

## துணை மின் நிலையம் அமைத்தல்

**வினா எண் 26438—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியே கொண்டுவர திருநெல்வேலியில் 400 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் பணி எப்போது துவங்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி அருகே அபிஷேகப்பட்டியில் 400 கி.வோ. துணை மின் நிலையம் இந்திய மின் கட்டமைப்பு கழகத்தால் 2x315 எம். வி.ஏ. மின் மாற்றியுடன் நிறுவப்பட்டு 16-3-2008 முதல் இயங்கி வருகிறது.*

**4—**

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 26439—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியே கொண்டுவர உடுமலைப்பேட்டை துணை மின் நிலையம் 3-வது 315 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைக்கும் பணி எப்போது துவங்கும்?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியே கொண்டுவர உடுமலைப்பேட்டை துணை மின் நிலையம் 3-வது 315 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைக்கும் பணி ஏற்கெனவே துவங்கப்பட்டு, 31-3-2009 முதல் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.*

**5—**

## மின் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 30598—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டு சாலைத் தெரு, பிள்ளையார்கோயில் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டு சாலைத் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களில் ஏற்கெனவே 11 குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**6—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 30600—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டுக்குட்பட்ட பட்டாங்குளம் மந்தைவெளி கொட்டமேடு மற்றும் தெற்கு விநாயகபுரம் ஆகிய பகுதிகளில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டுக்குட்பட்ட பட்டாங்குளம் மந்தைவெளியில் 1 குழல் விளக்கும், கொட்டாமேட்டில் 1 குழல் விளக்கும் மற்றும் தெற்கு விநாயகபுரத்தில் 6 குழல் விளக்குகளும் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**7—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 30603—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டுக்குட்பட்ட மேட்டுக்குடிசை குறுக்குத் தெரு மற்றும் புதிய தெருவிற்குப் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டுக்குட்பட்ட மேட்டுக்குடிசை குறுக்குத் தெரு மற்றும் புதிய தெருவில் 3 குழல் விளக்குகள், 3 கையடக்க குழல் விளக்குகள் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**8—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 30605—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டுக்குட்பட்ட பழைய ஆதி திராவிடர் குடியிருப்பு ஆதி திராவிடர் காலனி, அண்ணா நகர் புதிய ஆதி திராவிடர் குடியிருப்பு, ஏரிக்கரை ஆகிய பகுதிகளில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டுக்குட்பட்ட பழைய ஆதி திராவிடர் குடியிருப்பு, ஆதி திராவிடர் காலனி, அண்ணா நகர் புதிய ஆதி திராவிடர் குடியிருப்பு, ஏரிக்கரை ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 12 குழல் விளக்குகள் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**9—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 30607—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டு, அண்ணா நகர் புதிய ஆதி திராவிடர் குடியிருப்பு, கொட்டாமேடு மற்றும் அண்ணா நகர் முதல் தெருவில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், அத்திமலைப்பட்டு ஊராட்சி, அண்ணா நகர் புதிய ஆதி திராவிடர் குடியிருப்பு மற்றும் அண்ணா நகர் முதல் தெரு ஆகிய பகுதிகளில் 16 குழல் விளக்குகள் மற்றும் கொட்டாமேடு பகுதியில் 3 குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**10—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 30618—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், முள்ளண்டிரம் ஊராட்சி, அண்ணா நகர் மற்றும் முள்ளண்டிரம் மயானப் பாதைக்கு மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், முள்ளண்டிரம் ஊராட்சி, அண்ணா நகர் பகுதியில் 6 கையடக்க குழல் விளக்குகளும் மற்றும் மயான பாதையில் 7 கையடக்க குழல் விளக்குகளும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 30620—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, சக்தி நகர் காலனிக்குப் புதிய மின் கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, சக்தி நகர் காலனி தெருவில் ஏற்கெனவே 21 எண்ணிக்கை குழல் விளக்குகள் மற்றும் 7 எண்ணிக்கை (CFL) கையடக்க குழல் விளக்குகள் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31207—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு கண்ணகி நகரிலுள்ள சாலைத் தெரு 1, 2 மற்றும் 3-வது குறுக்குத் தெருக்களில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், முள்ளிப்பட்டு கண்ணகி நகரிலுள்ள சாலைத் தெரு 1, 2 மற்றும் 3-வது குறுக்குத் தெருக்களில் 6 குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**13—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31214—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு கஸ்தூர்பா நகர், ஆரணி போளூர் வடக்கு சாலை 9, 10 மற்றும் 11-வது தெருக்களில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு கஸ்தூர்பா நகர், ஆரணி போளூர் வடக்கு சாலை 9, 10 மற்றும் 11-வது தெருக்களில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. மேற்படி பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**14—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31221—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், வண்ணாங்குளம் குடிமிகுடிசை 1-வது தெரு மற்றும் கோவில் தெருவில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், வண்ணாங்குளம் குடிமிகுடிசை 1-வது தெருவில் ஏற்கெனவே 7 கையடக்க குழல் விளக்குகள் மற்றும் கோயில் தெருவில் 4 கையடக்க குழல் விளக்குகள் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**15—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31223—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், வண்ணாங்குளம், குன்று மேட்டுத் தெரு மற்றும் மெயின் தெருவில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, வண்ணாங்குளம் ஊராட்சி, குன்று மேட்டுத் தெருவில் 11 கையடக்க குழல் விளக்குகள் மற்றும் மெயின் தெருவில் 9 கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**16—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31225—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு கே.வி.கே. சாமி தெரு, திருவள்ளுவர் தெரு மற்றும் புத்தர் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு கே.வி.கே. சாமி தெருவில் 3 கையடக்க விளக்குகளும், திருவள்ளுவர் தெருவில் 3 கையடக்க விளக்குகளும் மற்றும் புத்தர் தெருவில் 3 கையடக்க விளக்குகளும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**17—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31235—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்பு, 2-வது தெரு மற்றும் இந்திரா குடியிருப்பு நகர் மற்றும் செல்லியம்மன் நகரில் புதிய மின் கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், முள்ளிப்பட்டு ஆதி திராவிடர் குடியிருப்பு 2-வது தெருவில் 1 கையடக்க குழல் விளக்கு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**18—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31242—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் கரிக்காந்தாங்கல் பள்ளத் தெரு, பஜனைகோவில் தெரு, வேம்புலியம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் கரிக்காந்தாங்கல் பள்ளத் தெரு, பஜனைகோவில் தெரு, வேம்புலியம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் 9 கையடக்க குழல் விளக்குகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**19—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31266—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், எஸ்.புத்தூர் கிராமம், கொட்டமேடு பகுதி, ஏரிக்கரை தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், எஸ்.புத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட கொட்டமேடு பகுதியில் 1 குழல் விளக்கும், ஏரிக்கரைத் தெருவில் 3 குழல் விளக்குகளும், பிள்ளையார் கோயில் தெருவில் 1 குழல் விளக்கும், 3 கையடக்க குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**20—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31279—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், எஸ்.புத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்பிலுள்ள மேட்டுத் தெரு, மாரியம்மன் கோயில் தெரு, நடுத் தெரு, குறுக்குத் தெரு மற்றும் சின்ன தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், எஸ். புத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்பிலுள்ள மேட்டுத் தெருவில் 2 குழல் விளக்குகளும், 1 கையடக்க குழல் விளக்கும், மாரியம்மன் கோயில் தெருவில் 1 மெர்குரி விளக்கும், 2 கையடக்க குழல் விளக்குகளும் உள்ளன. நடுத் தெரு, குறுக்குத் தெரு மற்றும் சின்ன தெருவில் 4 குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி, பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**21—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31261—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், எஸ்.புத்தூர் கிராமம், குறுக்குத் தெரு, சிலைகள் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, சாலைத் தெரு, ஒத்தவாடைத் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி மேற்கு ஒன்றியம், எஸ். புத்தூர் கிராமம், குறுக்குத் தெரு, சிலைகள் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, சாலைத் தெரு, ஒத்தவாடைத் தெரு ஆகிய தெருக்களில் ஏற்கெனவே 10 கையடக்க குழல் விளக்குகளும், 9 குழல் விளக்குகளும் மற்றும் 1 மெர்குரி விளக்கும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**22—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31447—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ஜோதிடர் காலனி, தோப்பு தெரு மற்றும் வ.உ.சி. நகர் மேற்கு தெருவில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ஜோதிடர் காலனி, தோப்புத் தெருவில் 3 குழல் விளக்குகள் மற்றும் வ.உ.சி. நகர் மேற்குத் தெருவில் 6 கையடக்க விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**23—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31449—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு கே.கே.நகர் முதல் குறுக்குத் தெரு, ச.வி.நகரம் சாலை ஆகிய பகுதிகளில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு கே.கே.நகர் முதல் குறுக்குத் தெருவில் 1 கையடக்க விளக்கும் மற்றும் ச.வி. நகரம் சாலையில் 5 கையடக்க விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**24—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31456—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ராஜீவ் நகர், ஔவையார் சாலை மற்றும் கண்ணகி சாலையில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ராஜீவ் நகரில் 5 குழல் விளக்குகளும், ஔவையார் சாலையில் 3 கையடக்க விளக்குகளும் மற்றும் கண்ணகி சாலையில் 5 கையடக்க விளக்குகளும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**25—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31458—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு துரும்பர் நகர், கிழக்குத் தெரு, மேற்கு தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு துரும்பர் நகர் கிழக்குத் தெருவில் மூன்று குழல் விளக்குகளும், மேற்கு தெருவில் இரண்டு குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**26—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31461—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு புதிய காலனி, பள்ளிக்கூடத் தெரு, மாரியம்மன் கோயில் தெரு, பழங்காமூர் ஈஸ்வரன் கோயில் தெரு மற்றும் ஜவஹர்லால் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு புதிய காலனி பள்ளிக்கூடத் தெருவில் 4 குழல் விளக்குகளும், மாரியம்மன் கோயில் தெருவில் 5 குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. பழங்காமூர் ஈஸ்வரன் கோயில் தெருவில் 10 சோலார் விளக்குகளும், 4 கையடக்க விளக்குகளும், ஜவஹர்லால் தெருவில் 2 குழல் விளக்குகளும் 1 சோடியம் வேப்பர் விளக்கும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**27—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31480—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, சாந்தவாடி தெரு, நடுத் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, பள்ளிக்கூடத் தெரு மற்றும் அரசமரத் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, சாந்தவாடி தெரு மற்றும் நடுத் தெருவில் மூன்று குழல் விளக்குகளும், பிள்ளையார் கோயில் தெரு மற்றும் பள்ளிக்கூடத் தெருவில் இரண்டு குழல் விளக்குகளும், நான்கு கையடக்க விளக்குகளும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**28—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 31490—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி எம்.ஜி.ஆர். முதல் தெரு, 2-வது தெரு, குளத்து மேட்டுத் தெரு, ஏரிக்கரை சாலை மற்றும் மயானத்தில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி எம்.ஜி.ஆர். முதல் தெரு மற்றும் 2-வது தெருவில் மூன்று குழல் விளக்குகளும், ஒரு கையடக்க விளக்கும், குளத்து மேட்டுத் தெருவில் இரண்டு குழல் விளக்குகளும், ஒரு கையடக்க விளக்கும், மயானப் பாதையில் நான்கு குழல் விளக்குகளும் மற்றும் ஏரிக்கரை சாலையில் நான்கு குழல் விளக்குகளும், நான்கு கையடக்க விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**29—**

**மின் கம்பத்தைச் சீரமைத்தல்**

**வினா எண் 31540—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழகலங்கல் பெரிய கிராமத்தில் வடக்குப் பாதையில் சாய்ந்துள்ள மின் கம்பத்தைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், கீழகலங்கல் பெரிய கிராமத்தில் வடக்குப் பாதையில் பழுதோடு சாய்ந்துள்ள மின் கம்பத்தைச் சீரமைக்க அனுமதி பெறப்பட்டு, மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது.*

**30—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32020—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் பெருமாள் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் குறுக்குத் தெரு, பஜனை கோயில் தெரு, பஜனை கோயில் குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் பெருமாள் கோயில் தெரு, பிள்ளையார்கோயில் தெரு, பிள்ளையார் கோயில் குறுக்குத் தெரு, பஜனை கோயில் தெரு, பஜனை கோயில் குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் இருபத்தி மூன்று கையடக்கக் குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி, பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**31—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32025—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் சாலை தெரு, பனையூர் காலனி குறுக்குத் தெரு, புதுத் தெரு, பெரிய தெரு, நடுத் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் சாலை தெரு, பனையூர் காலனி குறுக்குத் தெரு, புதுத் தெரு, பெரிய தெரு, நடுத் தெரு ஆகிய தெருக்களில் 12 கையடக்கக் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**32—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32032—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஒட்டந்தாங்கல் பிள்ளையார் கோயில் தெரு, சாலைத் தெரு, பாட்டை தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஒட்டந்தாங்கல் பிள்ளையார் கோயில் தெரு, சாலைத் தெரு, பாட்டை தெரு ஆகிய தெருக்களில் இரண்டு கையடக்கக் குழல்விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**33—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32035—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஒகையூர் காலனி, மாரியம்மன் கோயில் தெரு, சாலைத் தெரு, குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஒகையூர் காலனி, மாரியம்மன் கோயில் தெரு, சாலைத் தெரு, குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் ஆறு கையடக்கக் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி, பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**34—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32038—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, வடக்குமேடு அரிசி ஆலை தெரு, வடக்குமேடு சாலை, சாலைத் தெரு, புது குறுக்குத் தெரு, பஜனை கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் குறுக்கு 2-வது தெரு மற்றும் வடக்கு குறுக்குத் தெரு ஆகிய பகுதிகளில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி வடக்குமேடு அரிசி ஆலை தெரு, வடக்குமேடு சாலை, சாலைத் தெரு, புது குறுக்குத் தெரு, பஜனை கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, பிள்ளையார் கோயில் குறுக்கு 2-வது தெரு மற்றும் வடக்கு குறுக்குத் தெருக்களில் 24 கையடக்கக் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**35—**

## குழல் விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32070—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி புதிய காலனி 3—வது வடக்குத் தெருவில் கம்பத்துடன் கூடிய குழல் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி புதிய காலனி 3—வது வடக்குத் தெருவில் 4 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2013 அக்டோபர் 30

**36—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32082—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி காமராஜர் நகர், வடக்கு 2-வது தெரு, மாரியம்மன் தெரு, மாரியம்மன் கோயில் 2-வது தெரு, 3-வது மற்றும் 5-வது தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி காமராஜர் நகர், வடக்கு 2-வது தெரு, மாரியம்மன் தெரு, மாரியம்மன் கோயில் 2-வது தெரு, 3-வது மற்றும் 5-வது தெரு ஆகிய தெருக்களில் 14 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**37—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32090—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி காலனி மேற்கு தெருவில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி காலனி மேற்கு தெருவில் 4 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**38—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32122—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ஊராட்சிக்குட்பட்ட மருதேவி பிள்ளையார் கோயில் தெருவில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ஊராட்சிக்குட்பட்ட மருதேவி பிள்ளையார் கோயில் தெருவில் 5 கையடக்கக் குழல் விளக்குகளும், 2 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**39—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32123—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ஊராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகரிலுள்ள தெற்கு தெரு, மேற்கு தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு ஊராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் தெற்கு தெருவில் மூன்று குழல் விளக்குகளும், மேற்கு தெருவில் 6 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**40—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32125—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு பழைய காலனி பள்ளிக்கூடத் தெரு, பக்கிரிதக்கா ஆற்காடு சாலை, பழங்காமூர் குளத்து மேட்டுத் தெரு, பஜனைக் கோயில் தெரு, பள்ளிக்கூடத் தெரு, இருளர் தெரு, யாதவ வீதி ஆகிய தெருக்களில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு பழைய காலனி பள்ளிக்கூடத் தெருவில் 1 குழல் விளக்கும், 14 கையடக்கக் குழல் விளக்குகளும், பக்கிரிதக்கா ஆற்காடு சாலையில் 1 குழல் விளக்கும், 7 கையடக்கக் குழல் விளக்குகளும், பழங்காமூர் குளத்து மேட்டுத் தெருவில் 3 கையடக்கக் குழல் விளக்குகளும், பஜனைக் கோயில் தெருவில் 7 சோலார் விளக்குகளும், பள்ளிக்கூடத் தெருவில் 3 கையடக்கக் குழல் விளக்குகளும், இருளர் தெருவில் 2 கையடக்கக் குழல் விளக்குகளும், யாதவ வீதியில் 2 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**41—**

**சீரான மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 32447—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தஞ்சாக்கூர் ஆதி திராவிடர் காலனியில் புதிய மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தஞ்சாக்கூர் காலனிக்கு, தஞ்சாக்கூர்,* SSI 100 KVA *மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் இணைக்கப்பட்டிருக்கும் மின் பளு வரையறுக்கப்பட்ட மின் பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்த குறைபாடு இல்லாததாலும் தற்பொழுது மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

[2013 அக்டோபர் 30

42—

## பாதாளச் சாக்கடை அமைத்தல்

**வினா எண் 21357—திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், பாலாஜி நகர் விரிவாக்கம் 2-வது பகுதியில், 125 மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*அரசு ரூ.150.00 கோடி செலவில் சென்னை நகரத்தின் நீர் வழித்தடங்களில் 337 இடங்களில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலக்கும் இடங்களை அடைப்பதற்கான* (Plugging) *திட்டத்தை சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாக மேற்கொள்ள உள்ளது.*

*இதன் ஒரு பகுதியாக விட்டுப்போன தெருக்களில் கழிவுநீர் குழாய் பதித்தல் பணியின்கீழ், பாலாஜி நகர் விரிவாக்கம் 2-வது பகுதியில், பாதாளச் சாக்கடை அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்கட்டமைப்பு வசதி நிதியிலிருந்து மேற்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்ட நிலையில் மதிப்பாய்வு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பணி ஆணை வழங்கப்பட்ட பின் பணிகள் துவங்கப்படும்.*

43—

## கழிவுநீர் அடைப்பை சரிசெய்தல்

**வினா எண் 28147—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2013 அக்டோபர் 30]

*(அ) எழும்பூர் தொகுதி, 58-வது வட்டம், கந்தப்பா தெரு, ஆரணிமுத்து தெரு மற்றும் சாமிபிள்ளை தெரு ஆகிய தெருக்களில் உள்ள கழிவுநீர் அடைப்பை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 58-வது வட்டம், கந்தப்பா தெரு, ஆரணிமுத்து தெரு மற்றும் சாமிபிள்ளை தெரு ஆகிய தெருக்களில் கழிவுநீர் அடைப்பு குறித்து புகார் பெறப்பட்டவுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உடனுக்குடன் சரி செய்யப்படுகிறது. தற்பொழுது கழிவுநீர் அடைப்பு குறித்து எந்தப் புகாரும் இல்லை.*

44—

## நவீன கழிப்பிட வசதி

**வினா எண் 28699—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 12-ல் உள்ள ஆதி திராவிடர் காலனிக்கு நவீன கழிப்பிட வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சி, வார்டு எண். 12, ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் என தனித்தனியே நவீன கழிப்பிட வசதி உள்ளதால், மேலும் கழிப்பிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.*

**45—**

## இரசீது வழங்குதல்

**வினா எண் 28964—திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நகராட்சி, மாநகராட்சிகளில் மிதிவண்டிகள் நிறுத்தும் இடங்களில் நிர்ணயித்த கட்டணங்களுக்கு இரசீது வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நகர்மன்றம்/மாமன்றங்களால் கட்டணம் நிர்ணயம் செய்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி நகராட்சி/மாநகராட்சிகளில் மிதிவண்டிகள் நிறுத்துமிடங்களில் ஏலதாரரால் கட்டணம் வசூலிக்கப்பட்டு, இரசீது வழங்கப்பட்டு வருகிறது.*

**46—**

## கூடுதல் கட்டணம்

**வினா எண் 28965—திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கட்டண சிறுநீர் கழிப்பிடத்திற்கு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிப்போர்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நகராட்சி/மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கட்டண சிறுநீர் கழிப்பிடத்திற்கு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிப்போர்மீது புகார் மனு வரப்பெறின், சம்பந்தப்பட்ட நகராட்சி/மாநகராட்சி ஆணையர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**47—**

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்

**வினா எண் 32810—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள 18 செட்டில்மென்ட் மக்களுக்கு ஊராட்சியில் வாக்களிக்க வாக்குரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டத்திற்குட்பட்ட 126, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் கீழ்குறிப்பிட்டுள்ளவை செட்டில்மென்ட் பகுதிகளாக உள்ளன.*

| வ. எண் | ஊரின் பெயர் | வ. எண் | ஊரின் பெயர் |
|---|---|---|---|
| 1 | புளியம்பட்டி | 9 | கோடந்தூர் |
| 2 | திருமூர்த்திமலை | 10 | ஆட்டுமலை |
| 3 | குருமலை | 11 | குளிப்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| 4 | சோலைபரத்து | 12 | தளிஞ்சி |
| 5 | பூச்சிக்கொட்டாம்பாறை | 13 | தளஞ்சிவயல் |
| 6 | தாளமேட்டுப்பட்டி | 14 | கரட்டுப்பகுதி |
| 7 | கொட்டையார் | 15 | மூங்கில்பாளையம் |
| 8 | ஈசல்தட்டு | 16 | மஞ்சம்பட்டி |

மேற்கண்ட செட்டில்மென்ட் பகுதியில் வசித்து வரும் அனைவரும் மலைவாழ் மக்கள் ஆவார்கள். இவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு சட்டமன்ற / பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்து வருகிறார்கள். மேற்குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களில் தகுதியானவர்களை உள்ளாட்சித் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும் / வாக்களிக்கவும் மாவட்ட ஊராட்சி வளர்ச்சிப் பிரிவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**48—**

## காப்புறுதி கட்டணத் தொகை செலுத்துதல்

**வினா எண் 33912—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் புதிய திட்டங்கள், கட்டடங்கள் கட்ட விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து காப்புறுதி கட்டணமாக பெறப்பட்ட தொகையினை வங்கியில் உரிய காலத்தில் செலுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் தொகை வங்கியில் அன்றையதினமே செலுத்தப்படுகிறது.





**49—**

## இலவசப் பேருந்து சலுகைத் திட்டம்

**வினா எண் 27564—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கல்லூரிக் கல்வி இயக்ககம் மூலமாக வழங்கப்படும் இலவசப் பேருந்து சலுகைத் திட்டத்தினை அனைத்து தனியார் கல்லூரிகளுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அந்தந்த கல்லூரிகளால் தொடர்புடைய போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக இலவசப் பேருந்து பயண சலுகை அட்டை வழங்கப்படுகிறது. தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை அட்டை வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

## தடுப்பு வேலி அமைத்தல்

**வினா எண் 34875—திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மேலத்தொட்டியப்பட்டி, அரசு பெரும்பழப்பண்ணையில் காட்டு மிருகங்கள் நுழைவதைத் தடுக்க வேலி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மேலத்தொட்டியப்பட்டி, அரசு பெரும்பழப்பண்ணையையும் நாற்றங்கால் பகுதிகளையும் பாதுகாக்கும் வகையில், 5,150 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு சங்கிலி வேலி அமைத்திடும் வகையில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2012-2013-ன்கீழ் ரூ.51.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகின்றன. தலைமைப் பொறியாளர் (வேளாண் பொறியியல்) அவர்களிடமிருந்து தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்டவுடன் இணைப்பு சங்கிலி வேலி அமைப்பதற்கான பணிகள் துவங்கப்படும்.*

**51—**

### வாரிசுகளுக்கு வேலை

**வினா எண் 33485—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கருணை அடிப்படையில் வாரிசுகளுக்கு வேலை வழங்கும் திட்டம்மூலம் இறந்துபோன அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு ஓராண்டுக்குள் வேலை வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*ஒவ்வொரு துறையிலும் கருணை அடிப்படையில் பணி வேண்டும் வாரிசுதாரர்களின் பெயர், முதுநிலை பட்டியலில் வைக்கப்பட்டு, அதற்கான காலிப் பணியிடங்கள் ஏற்படும்போது, முதுநிலைப்படி வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்படுகின்றன. எனவே, முதுநிலை மற்றும் காலிப் பணியிடங்களின் நிலையைப் பொறுத்து, கருணை அடிப்படையில் வாரிசுகளுக்கு வேலை வழங்கும் திட்டம்மூலம் இறந்துபோன அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்க ஓராண்டு அல்லது அதற்கு மேலும் ஆகலாம்.*



**52—**

### கட்டடத் தொழிலாளர்களுக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 34590—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் கட்டடத் தொழிலாளர்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் 1994-ல் கட்டடத் தொழிலாளர்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட வழிவகை செய்யப்படவில்லை. மேலும், காரைக்குடியில் கட்டடத் தொழிலாளர்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**53—**

### நலத் திட்ட உதவிகள்

**வினா எண் 37917—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு உரிய சலுகைகளை மாவட்ட நல வாரிய அலுவலகத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 123, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 24-10-2008-ல் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்களின் பதிவு விண்ணப்பம் சரிபார்த்தல், பதிவு செய்தல் மற்றும் நலத் திட்ட உதவித் தொகைகள் ஒப்பளிப்பு செய்வது போன்ற பணிகளை மாவட்ட அளவில் பரவலாக்கி நலத் திட்ட உதவிகளை அந்தந்த மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டு செயல்பட்டு வருகிறது.*

**54—**

## நெல் கொள்முதல் செய்தல்

**வினா எண் 21117—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈரப்பத நெல்லினை தட்பவெப்பநிலை கருதி கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கடந்த நெல் கொள்முதல் பருவம் 2011-2012-ல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக 17% வரை ஈரப்பதம் உள்ள நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசால் அனைத்து மாவட்டங்களிலும் ஈரப்பத தளர்வு வழங்கி நெல் கொள்முதல் செய்ய மைய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டது. ஆனால், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று காவேரி பாசன மாவட்டங்களில் மட்டும் 17% முதல் 20% வரை ஈரப்பதம் உள்ள நெல்லினை தரவெட்டுடன் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. எனவே, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய காவேரி பாசன மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில்*





*17% ஈரப்பதம் வரை நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது. நடப்பு நெல் கொள்முதல் பருவம் 2012-2013-இல் தட்பவெப்ப பருவநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் அதிகம் ஈரப்பதம் உள்ள நெல் வர வாய்ப்பு இல்லை என்பதால் மத்திய அரசின் ஈரப்பத தளர்வு உத்தரவு ஏதும் இதுவரை பெறப்படவில்லை.*

**55—**

## பயோ மெட்ரிக் முறை

**வினா எண் 29245—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் அனைத்து குடும்ப அட்டைகளையும் பயோ மெட்ரிக் முறையில் வழங்க திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக குடிமக்களின் உடற்கூறு கணினி தொகுப்பினை அடிப்படையாகக் கொண்ட மின்னணு குடும்ப அட்டைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிக்கென தேசிய மக்கள் தொகை பதிவேடு அமைப்பினரிடமிருந்து குடிமக்களின் அனைத்து விவரங்களும் கொண்ட கணினி தொகுப்பு எதிர்நோக்கப்படுகிறது. தேசிய மக்கள் தொகை பதிவேடு அமைப்பினர் தற்போது தமிழகம் முழுவதும் குடிமக்களின் உடற்கூறு கணினி தொகுப்பு உள்பட அனைத்து விவரங்களையும் சிறப்பு முகாம்கள் அமைத்து சேகரித்து வருகின்றனர். இப்பணி முழுமையாக முடிவடைந்த பின்னர் முன்னோடி திட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்திலும் தொடர்ந்து இதர மாவட்டங்களாகிய அரியலூர், பெரம்பலூர், கரூர், கடலூர், திருச்சி மற்றும் ஈரோடு மாவட்டங்களிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் தேசிய மக்கள் தொகை பதிவேடு அமைப்பினர் குடிமக்களின் உடற்கூறு தொகுப்பு சேகரிக்கும் பணி அடிப்படையில் மாநிலம் முழுவதற்கும் மின்னணு குடும்ப அட்டைகளை படிப்படியாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

[2013 அக்டோபர் 30

**56—**

## நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்துதல்

**வினா எண் 13994—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நிசபா/கலிங்காறு நதியில் உள்ள நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் நிசபா/கலிங்கலாறு நதியில் உள்ள நீர்வள ஆதார அமைப்புகள் 2010 முதல் 2012 ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டுள்ளன.

**57—**

## மரங்களை வளர்த்தல்

**வினா எண் 19615—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சருகணி ஆற்றின் இரு கரைகளையும் பலப்படுத்தி, மரங்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை ஒன்றியப் பகுதியில் செல்லும் சருகணி ஆற்றின் இரு கரைகளைப் பலப்படுத்தி, கரைகளில் மரங்களை வளர்க்கும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.



2013 அக்டோபர் 30]

**58—**

## சீரமைப்புப் பணிகள் விவரம்

**வினா எண் 19785—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2010-2011ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்ட கண்மாய்களை சீரமைக்க ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள் யாவை?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2010-2011ஆம் நிதியாண்டில் சீரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | கண்மாய்களின் எண்ணிக்கை | — | 90 |
| 2. | கால்வாய்களின் எண்ணிக்கை | — | 25 |
| 3. | பராமரிப்பு செய்யப்பட்ட அணைக்கட்டுகளின் எண்ணிக்கை | — | 11 |
| 4. | மொத்த மதிப்பீட்டுத் தொகை | — | ரூ.1,534.29 இலட்சம் |
| 5. | மொத்த செலவினம் | — | ரூ.510.22 இலட்சம் |

**59—**

## கண்மாய்கள் மற்றும் பாசனப் பரப்பு விவரம்

**வினா எண் 19788—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010-2011ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்திற்கு உலக வங்கியின்மூலம் ஒதுக்கப்பட்ட நிதியில் மராமத்து செய்த கண்மாய்களின் விவரம் மற்றும் பாசனப் பரப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*சிவகங்கை மாவட்டத்தில், உலக வங்கி நிதி உதவியுடன் 2010-2011-ம் ஆண்டில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ், கோட்டக்கரையாறு உப வடிநில பகுதி (பகுதி—I) தொகுப்பு எண் 01, 03 மற்றும் 06-க்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2,028 இலட்சங்கள் ஆகும். இவற்றின்மூலம் மராமத்து செய்யப்பட்ட கண்மாய் மற்றும் கால்வாய்களின் விவரங்கள் பின்வருமாறு:—*

| | | |
|---|---|---|
| *1. கண்மாய்களின் எண்ணிக்கை* | — | *114* |
| *2. கால்வாய்களின் எண்ணிக்கை* | — | *46* |
| *3. பயன்பெற்ற மொத்த பாசனப்பரப்பு* | — | *10,079.90 ஹெக்டேர்* |

**60—**

## நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர் வாருதல்

**வினா எண் 22358—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியத்தில், சிறிய வரத்துக் கண்மாய்களின் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி சட்டமன்றத் தொகுதி, கண்ணங்குடி ஒன்றியப் பகுதியில் உள்ள 100 ஏக்கருக்கு மேல் பாசனப் பரப்பு கொண்ட பொதுப் பணித் துறை கண்மாய்களின் வரத்துக் கால்வாய்கள் மற்றும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அணைக்கட்டுகளின்மூலம் பாசனம் பெறும் சிறிய கண்மாய்களின் வரத்துக் கால்வாய்கள் யாவும் சுழற்சி முறையில் ஒவ்வொரு வருடமும் தேவைக்கேற்ப தூர் வாரப்பட்டு வருகின்றன.*



**61—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 29052—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், தளி பேரூராட்சி, புதுக்குளம் பகுதியில், பொதுப் பணித் துறையின் பயன்பாட்டில் இல்லாத இடத்தை வருவாய்த் துறைக்கு மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், தளி பேரூராட்சி, புதுக்குளம் பகுதியில், பொதுப் பணித் துறையின் பயன்பாட்டில் இல்லாததாகக் கருதப்படும் பூமிகள் தளி வாய்க்காலுக்கு வெள்ளநீர் செல்லும் வழித்தடமாக உள்ளன. நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் நீர்நிலை சார்ந்த எந்த நிலத்தையும் நில மாற்றம் செய்ய இயலாது என்பதால் இவற்றை வருவாய்த் துறைக்கு மாற்றம் செய்ய இயலாது.*

**62—**

## நீர்நிலைகள் குறித்த விழிப்புணர்வு

**வினா எண் 31119—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் நீர்நிலைகளின் அவசியம் குறித்த விழிப்புணர்வை எதிர்கால தலைமுறையினருக்கு உணர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாட்டிலுள்ள 17 ஆற்று வடிநிலங்களிலுள்ள 61 உப வடிநிலங்களில் உலக வங்கியின் நிதியுதவியுடன் நடைபெறும் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள நீர்நிலைகளின் அவசியம் மற்றும் அவற்றைப் பேணிக் காப்பதன் அவசியத்தை உணர்த்த பொதுமக்களிடையே 198 விழிப்புணர்வுக் கூட்டங்களும், பள்ளிக் குழந்தைகளுக்கு 155 விழிப்புணர்வுக் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. இவை தவிர, நீர்வள, நிலவளத் திட்டத்தைச் சாராத 3 உப வடிநிலங்களில் பொதுமக்களுக்காக 21 விழிப்புணர்வுக் கூட்டம் மற்றும் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இவ்வகையான விழிப்புணர்வுக் கூட்டங்களை இவ்வாண்டிலும் தொடர்ந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**63—**

## கால்நடைக் கிளை நிலையங்கள்

**வினா எண் 21571—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை அருகே பழுகல், மார்த்தாண்டம் அருகே நல்லூர் ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அல்லது மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) விளவங்கோடு தொகுதி, மேல்புரம் ஊராட்சி ஒன்றியம், களியக்காவிளை பழுகல் கிராமத்திற்கு அருகில் இரண்டு கால்நடை மருந்தகங்கள், ஒரு ஊரக கால்நடை மருந்தகம் மற்றும் ஒரு*



2013 அக்டோபர் 30]

*கிளை நிலையம் செயல்படுவதாலும், பழுகல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,000-க்குகீழ் இருப்பதாலும், நல்லூர் அருகில் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்படுவதாலும், நல்லூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,000-க்குகீழ் இருப்பதாலும், மேற்கண்ட பகுதிகளில் கால்நடை கிளை நிலையம் அல்லது கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

*(ஆ) கேள்வி எழாது.*

**64—**

## பங்குத் தொகை பணம் திருப்பித் தருதல்

**வினா எண் 32297—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதியில் உள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கோ-ஜெனரேஷன் மற்றும் காற்றாலை மின்சாரம் அமைக்க பெறப்பட்ட விவசாயிகளின் பங்குத் தொகை ரூ. 2.50 கோடி பணத்தினை பணி தொடங்காததால் விவசாயிகளுக்கு திருப்பித்தர ஆவன செய்யப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணை மின் உற்பத்தி மற்றும் காற்றாலை ஆகிய திட்டங்களை நிறுவுவதற்காக பெறப்பட்ட விவசாயிகளின் பங்குத் தொகை ரூ. 247.49 இலட்சத்தை மேற்படி பணிகள் தொடங்காததால் விவசாயிகளுக்கு திரும்பத் தர, அரசாணை (டி) எண் 76, தொழில் (எம்ஜசி1) துறை, நாள் 31-5-2013-ல் சர்க்கரைத் துறை இயக்குநருக்கு ஆணை வழங்கப்பட்டது. அதனடிப்படையில், ஆலை விவசாயிகளுக்கு 10-7-2013 அன்று மேற்காணும் பங்குத் தொகை வழங்கப்பட்டது.*

[2013 அக்டோபர் 30

**65—**

**நூல் விலையைக் குறைத்தல்**

**வினா எண் 32405—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நூல் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தங்கு தடையின்றி நூல் கிடைக்கின்றது. மேலும், தமிழகத்தில் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாக, செயல்படுத்தப்படும் ஆலை வாயில் விலை திட்டத்தின்கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு தேவையான சிட்டா நூல், மைய அரசின் 10 விழுக்காடு மானியத்துடனும், 2.5 விழுக்காடு கிடங்கு மானியத்துடனும், 2.5 விழுக்காடு போக்குவரத்து மானியத்துடனும் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்கு தற்சமயம் நியாயமான விலையில் நூல் கிடைத்து வருகிறது.*

*கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்கும் நூல் விலை நிர்ணயக் குழுவானது, பிரதி மாதம் கூடி பல்வேறு சந்தைகளின் நூல் விலை, சரக உதவி இயக்குநர்கள் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சிக்கழகம் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல் வகைகளுக்கு, நிர்ணயம் செய்யும் விலையில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்மூலம் நூல் விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலமும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் நூல் தங்குதடையின்றிக் கிடைத்து வருகிறது.*

**66—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 22622—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 30]

*(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி, தேவகோட்டையில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை வணிக வரி அலுவலகம் கட்டுவதற்கு முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், நடப்பு ஆண்டில், வாள்வச்சகோஷ்டம், தேவகோட்டை, சிதம்பரம், ஆற்காடு, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் இயங்கிவரும் 9 வணிக வரி அலுவலகங்களுக்கு 10 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 13-5-2013 அன்று அறிவிப்பு வெளியிட்டுள்ள நிலையிலும், தேவகோட்டையில் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்ட விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**67—**

**காலிப் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா எண் 31010—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வணிக வரித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) வணிக வரித் துறையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் நிருவாகம் மற்றும் செயலாக்கப் பிரிவுகளில் உதவி ஆணையர், வணிக வரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர், உதவியாளர்,*

இளநிலை உதவியாளர், தட்டச்சர், பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுநர் பணி நிலைகளில் மொத்தம் 136 பணியிடங்கள் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் அனைத்து பணி நிலைகளிலும் மொத்தம் 91 பணியிடங்கள் நிரப்பப்பட்டு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 45 காலிப் பணியிடங்களில், அலுவலக உதவியாளர் பணி நிலையில் துறையில் உள்ள கூடுதல் பணியிடங்களை அரசுக்கு ஒப்புவிப்பு செய்து, எஞ்சியுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

*(ஆ) 2013-2014ஆம் ஆண்டிற்குள் காலிப் பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.*

**68—**

## சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள்

**வினா எண் 30852—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில், சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வாகன நிறுத்துமிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் அருகில், ஆண்கள்/பெண்களுக்கான கழிப்பறை கட்டுவதற்காக ரூ. 36.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட தொகை 15-2-2013 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் பணிகள் முடிக்கப்படும்.*





**69—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 17084—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரையிலிருந்து சன்னதிபுதுக்குளம், செய்யாலூர் வழியாக தாயமங்கலத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சன்னதிபுதுக்குளம், செய்யாலூர் வழியாக தாயமங்கலத்திற்கு 10-4-2013 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.*

**70—**

## பேருந்து வசதி

**வினா எண் 21060—திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பூர் பகுதி 34வது வட்டம், பார்வதி நகரிலிருந்து எண்ணூர் வழியாக வேளச்சேரி டைடல் பார்க் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*பெரம்பூர் பகுதி, பார்வதி நகரிலிருந்து எண்ணூர் வழியாக வேளச்சேரி டைடல் பார்க் என்பது சுற்றுவழித் தடமாகும். என்வே, இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க சாத்தியமில்லை.*

[2013 அக்டோபர் 30

**71—**

## பேருந்து வசதி

**வினா எண் 21063—திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினத்திலிருந்து வெண்மணச்சேரி வரை இயக்கப்படும் நகரப் பேருந்து, தடம் எண் 21-ஐ, நாள் முழுவதும் தொடர்ந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம்-வெண்மணச்சேரி தடம் எண் 21 நகரப் பேருந்து பல்வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டு வருகிறது:*

| வ. எண் | வழித்தடப் பகுதி | தடம் எண் | இயக்கப்படும் நடைகள் |
|---|---|---|---|
| 1. | நாகப்பட்டினம்-வெண்மணச்சேரி | A21 | 4 |
| 2. | நாகப்பட்டினம்-திருவாரூர் | A21 | 2 |
| 3. | நாகப்பட்டினம்-இறையான்குடி (வழி) சீர்காழி | A21 | 4 |
| 4. | நாகப்பட்டினம்-புதுக்கல்லூரி | A21 | 4 |

*நாகப்பட்டினத்திலிருந்து வெண்மணச்சேரிக்கு அனைத்து நடைகளும் இயக்கப்பட்டால் தற்போது பயன்பெறும் பிற தடப்பகுதி மக்கள் பாதிப்படைவார்கள்.*

**72—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 24789—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2013 அக்டோபர் 30]

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம், கலியாந்தூர், மாங்குடி, முக்குடி, செங்குளம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது மதுரை பெரியார் நிலையத்திலிருந்து திருப்புவனத்திற்கு 260 தனி நடைகளும், கலியாந்தூருக்கு 18 தனி நடைகளும் மற்றும் மாங்குடிக்கு திருப்புவனம் வழியாக 12 தனி நடைகளும், கொந்தகை வழியாக 8 தனி நடைகளும், நெடுங்குளம், முக்குடி, செங்குளம் வழியாக எஸ். நாங்கூர், தவத்தாரேந்தல், மேலக்கள்ளங்குளம் ஆகிய இடங்களுக்கு 28 தனி நடைகளும் என போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

**73—**

## பேருந்து வசதி

**வினா எண் 25006—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்பகோணம்-நீடாமங்கலம்-வடுவூர்-ஒரத்தநாடு வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கும்பகோணம்-நீடாமங்கலம்-வடுவூர்-ஒரத்தநாடு வழித்தடத்தில் தடம் எண் 448K மூலம் 6 நடைகள் 3-10-2011 முதல் இயக்கப்பட்டு வருகிறது.*

[2013 அக்டோபர் 30

74—

## பேருந்து வசதி

**வினா எண் 25007—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மன்னார்குடி-இராயபுரம்-புள்ளவராயன்குடிக்காடு-கருப்பு முதலியார்கோட்டை-அம்மாப்பேட்டை-தஞ்சாவூர் வரை பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மன்னார்குடி-இராயபுரம்-புள்ளவராயன்குடிக்காடு-கருப்பு முதலியார்கோட்டை அம்மாப்பேட்டை-தஞ்சாவூர் சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் பகுதி, பகுதியாக கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கழக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | வழித்தடப் பகுதி | தடம் எண் | இயக்கப்படும் நடைகள் |
|---|---|---|---|
| 1. | மன்னார்குடி-செட்டிச்சத்திரம் (வழி) இராயபுரம் | 366 | 6 |
| 2. | செட்டிச்சத்திரம்-கரைமேடு (வழி) புள்ளவராயன்குடிக்காடு | 364 | 20 |
| 3. | தஞ்சாவூர்-செட்டிச்சத்திரம் (வழி) அம்மாப்பேட்டை | A2, A4 | 12 |
| 4. | தஞ்சாவூர்-புள்ளவராயன்குடிக்காடு | A2 | 8 |



2013 அக்டோபர் 30]

75—

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 25016—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மன்னார்குடியிலிருந்து கண்டிதம்பேட்டை, உள்ளிக்கோட்டை, வடசேரி வழியாக பட்டுக்கோட்டைக்கு இயங்கி வந்த தடம் எண் 20 பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மன்னார்குடியிலிருந்து கண்டிதம்பேட்டை, உள்ளிக்கோட்டை, வடசேரி வழியாக பட்டுக்கோட்டை வழித்தடத்தில், மன்னார்குடி-கண்டிதம்பேட்டை சாலை மிகவும் குறுகலாகவும், குறுகிய திருப்பங்களுடனும் இருப்பதால் பெரிய பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

76—

## நேரடி பேருந்து வசதி

**வினா எண் 25076—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மன்னார்குடியிலிருந்து அனைத்து மாவட்ட தலைநகரங்களுக்கும் நேரடி பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மன்னார்குடியிலிருந்து திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர், திருப்பூர்,

மதுரை, வேலூர், ஈரோடு, புதுச்சேரி, காஞ்சிபுரம், சென்னை நகரங்களுக்கு நேரடி பேருந்து வசதி உள்ளது. மேலும், மற்ற மாவட்டங்களுக்கு செல்ல பகுதி, பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளன.

**77—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 25081—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி-மதுக்கூர் மற்றும் மன்னார்குடி-வடசேரி பகுதிகளுக்கு காலை, மாலை நேரங்களில் கூடுதலாக பேருந்துகளை இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி-மதுக்கூர் மற்றும் மன்னார்குடி-வடசேரி வழித்தடங்களில் காலை, மாலை நேரங்களில், இப்பகுதி மக்களின் தேவைக்கேற்ப போதுமான அளவில் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:*

| | | கழகப் பேருந்து நடைகள் | | |
|---|---|---|---|---|
| வ. எண் | வழித்தடப் பகுதி | காலை 6.00 முதல் 10.00 வரை | மாலை 4.00 முதல் 7.00 வரை | தனியார் பேருந்து நடைகள் |
| 1. | மன்னார்குடி-பட்டுக் கோட்டை (வழி) வடசேரி | 10 | 10 | 7+8 |
| 2. | மன்னார்குடி-பட்டுக் கோட்டை (வழி) மதுக்கூர் | 15 | 12 | 12+9 |





**78—**

## தனிப் பேருந்து வசதி

**வினா எண் 25082—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி-புதுக்குடி, எண் A9A வழித்தடத்தில் தனிப் பேருந்து தொடர்ந்து இயக்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி-புதுக்குடி வழித்தடத்தில், தடம் எண் A9A மூலம் 12 நடைகளும் மற்றும் தடம் எண் 446E மூலம் 2 நடைகளும், இப்பகுதி மக்களின் தேவைக்கேற்ப பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

**79—**

## தனிப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 25084—திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி வழி 141 மேலநெம்மேலி, முக்குளம் சாத்தனூர், தளிக்கோட்டை, வடசேரி வழியாக பட்டுக்கோட்டைக்கு தனிப் பேருந்து தொடர்ந்து இயக்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி வழி 141 மேலநெம்மேலி, முக்குளம்-சாத்தனூர், தளிக்கோட்டை, வடசேரி வழியாக பட்டுக்கோட்டை வழித்தடத்தில் பகுதி, பகுதியாக கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கழகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன;*

| வ. எண் | வழித்தடப் பகுதி | தடம் எண் | இயக்கப்படும் நடைகள் |
|---|---|---|---|
| 1. | மன்னார்குடி-தளிக்கோட்டை (வழி) நத்தம், 141 மேலநெம்மேலி, குருவாக்குறிச்சி. | 374 | 4 |
| 2. | மன்னார்குடி-முக்குளம்-சாத்தனூர் | 374 | 8 |
| 3. | மன்னார்குடி-தளிக்கோட்டை (வழி) முக்குளம்-சாத்தனூர் | A4 | 18 |

**80—**

## பேருந்து வசதி

**வினா எண் 25100—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வெளி மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து தஞ்சாவூர் வழியாக திருவாரூர் மற்றும் வேளாங்கண்ணி செல்லும் பேருந்துகளை வடுவூர் அல்லது திருவாரூர் வழியாக மன்னார்குடிக்கும் இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் தஞ்சாவூர்-மன்னார்குடி (வழி) வடுவூர், மன்னார்குடி, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர்-வேளாங்கண்ணி (வழி) திருவாரூர் ஆகிய வழித்தடங்களில் போதுமான அளவில் இயங்கி வருகின்றன. வடுவூர் அல்லது திருவாரூர் வழித்தடம் சுற்று வழித்தடமாகும். எனவே, இவ்வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கிட வழியில்லை.*

**81—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 26517—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டையிலிருந்து வெட்டன்விடுதிக்கு நகரப் பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து வெட்டன்விடுதிக்கு அரசு நகரப் பேருந்து ஒன்று 4 நடைகளும், புதுக்கோட்டையிலிருந்து வெட்டன்விடுதி வழியாக புறநகர் பேருந்துகள் 64 நடைகளும் இயக்கப்படுகின்றன.*

**82—**

## பேருந்து வசதி

**வினா எண் 27483—திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) துறையூர் முதல் (டி.சி.டி.சி.) வாலீஸ்வரம், கலிங்கமுடையான்பட்டி, காவேரிபட்டி, தா.பேட்டை வழியாக*

நாமக்கல் வரையும் மற்றும் நாமக்கல்-துறையூர் வரையும் அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துறையூர் முதல் (டி.சி.டி.சி) வாலீஸ்வரம், கலிங்கமுடையான்பட்டி, காவேரிபட்டி, தா.பேட்டை வழித்தடம் வழியாக நாமக்கல் வரையும் மற்றும் நாமக்கல்-துறையூர் வரையும் தேவையான அளவிற்கு பகுதி, பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளன.

**83—**

## பேருந்து வசதி

**வினா எண் 27484—திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, முசிறி, தா.பேட்டை, திருமானூர் வழியாக எரகுடிக்கு அரசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளித்தலை-துறையூர் (வழி) முசிறி, தாத்தையங்கார்பேட்டை, திருமானூர், எரகுடி வழியாக புதிதாக புறநகரப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 4 நடைகள் 12-10-2012 முதல் இயக்கப்படுகின்றன.

**84—**

## பேருந்து வசதி

**வினா எண் 27487—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) புதுக்கோட்டையிலிருந்து ஆதனக்கோட்டை வழியாக கந்தர்வக்கோட்டை வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை கணபதிபுரம் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து ஆதனக்கோட்டை வழியாக கந்தர்வக்கோட்டை வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை கணபதிபுரம் வழியாக இயக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**85—**

## பேருந்து வசதி

**வினா எண் 27488—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு செல்லும் ஜி6 பேருந்தை வடக்கு தொண்டைமான் ஊருணி வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு செல்லும் ஜி6 பேருந்தை வடக்கு தொண்டைமான் ஊருணி வழியாக இயக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**86—**

## பேருந்து வசதி நீட்டிப்பு

**வினா எண் 27489—திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 30

*(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம் கணபதிபுரம், தொண்டைமான் ஊருணி வரை இயக்கப்படும் 4ஏ நகரப் பேருந்தை கணபதிபுரம் வரை நீட்டிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரம், தொண்டைமான் ஊருணி வரை இயக்கப்படும் 4ஏ நகரப் பேருந்தை கணபதிபுரம் வரை நீட்டிப்பு செய்யும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. வரும் ஆண்டுகளில் தேவை ஏற்படின் பரிசிலிக்கப்படும்.*

**87—**

## நேரக் காப்பாளர் அறை அமைத்தல்

**வினா எண் 29165—திரு. பி.ஆர். மனோகர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காவேரிப்பாக்கம் பேருந்து நிலையத்தில் நேரக் காப்பாளர் அறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், வேலூர் மண்டலத்திற்கு உட்பட்ட காவேரிப்பாக்கம் பேருந்து நிலையத்தில் நேரக் காப்பாளர் அறை அமைக்க காவேரிப்பாக்கம் தேர்வு நிலை பேரூராட்சியிடம் அறை ஒதுக்கீடு பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*



2013 அக்டோபர் 30]

**88—**

## அரசு அச்சகத்தின் துணை அலுவலகம் அமைத்தல்

**வினா எண் 32416—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசு அச்சகத்தின் துணை அலுவலகம் ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

*எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின்கீழ் சென்னையில் அரசு மைய அச்சகமும், உயர் நீதிமன்றத் தேவையினை நிறைவேற்ற அரசு கிளை அச்சகமும் செயல்பட்டு வருகின்றன. இதனைத் தவிர்த்து, வெளியூர்களில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் அரசு கிளை அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன:*

*(1) அரசு கிளை அச்சகம், மதுரை-7*

*(2) அரசு கிளை அச்சகம், சேலம்-4*

*(3) அரசு கிளை அச்சகம், திருச்சி-15*

*(4) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை*

*(5) அரசு கிளை அச்சகம், விருத்தாச்சலம்*

*(6) அரசு கிளை அச்சகம், சென்னை உயர் நீதிமன்றக் கிளை, மதுரை-23*

*இவ்வச்சகங்களின் மூலமாக அரசு சார்ந்த அனைத்து அச்சுப் பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேற்கண்ட எட்டு அச்சகங்களாலும் அரசின் அனைத்து அச்சுப் பணிகளின் தேவைகள் முழுவதும் குறைபாடின்றி நிறைவேற்றப்படுகின்ற நிலையில், ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் அரசு அச்சகத்தின் துணை அலுவலகம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் எழவில்லை.*

[2013 அக்டோபர் 30

**89—**

## உயர் ரக மரக் கன்றுகள் வழங்குதல்

**வினா எண் 30949—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வீடுகள்தோறும் இரண்டு உயர் ரக மரக் கன்றுகள் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு வனத் துறையைப் பொறுத்தவரை வீடுகள்தோறும் இரண்டு உயர் ரக மரக் கன்றுகள் இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை. இருப்பினும், தமிழ்நாட்டில் உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு உதவும் வகையில் "தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல்" திட்டத்தின்கீழ் தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல் என்ற திட்டத்தினை ஐந்தாண்டுகளில், நம் மாநிலத்தில் உள்ள சுமார் 5,000 வருவாய் கிராமங்களில் 10 கோடி மரங்களை நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டக் கிராமங்களில் உள்ள விவசாயத்திற்குப் பயன்படாத தரிசு நிலங்களில் மரக் கன்றுகள் நடப்படுகின்றன. இத்துடன் மகளிர் சுய உதவிக் குழுக்களில் பங்கேற்கும் அங்கத்தினர்களது குடும்பங்களின் நிலங்களில் மரம் வளர்க்க வழிவகை செய்து அவர்களுடைய நிலங்களிலோ அல்லது வீடுகளிலோ நடவு செய்ய ஓர் அங்கத்தினருக்கு 20 மரக் கன்றுகளுக்கு மிகாமல் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு பல்வேறு கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2011-2012ஆம் ஆண்டில், ரூ.29.77 இலட்சம் செலவில் 5.00 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2012-2013ஆம் ஆண்டில் ரூ.32.50 இலட்சம் செலவில் 5.00 லட்சம் மரக் கன்றுகள் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 2013-2014ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.47.50 இலட்சம் செலவில் 5.00 இலட்சம் மரக் கன்றுகள் இலவசமாக விநியோகம் செய்யப்பட உள்ளன. மேலும், மரப் பரப்பினை அதிகரிக்கவும் மற்றும் வனத்திற்கு வெளியே மரங்களை வளர்ப்பதனை ஊக்கப்படுத்தும் வகையிலும் இத்திட்டத்தின்கீழ் வீடுகளுக்கும் இலவசமாக மரக் கன்றுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



2013 அக்டோபர் 30]

**90—**

## சமுதாயக் கிணறுகள் மீட்பு

**வினா எண் 28213—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி வட்டங்களிலுள்ள சமுதாயக் கிணறுகளை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்தில் திருப்புவனம், இளையான்குடி மற்றும் மானாமதுரை பேரூராட்சிப் பகுதியில் சமுதாயக் கிணறுகளில் தனியார் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

**91—**

## காவல் நிலையத்திற்கு நிலம் வழங்குதல்

**வினா எண் 32259—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கணியூர் பேரூராட்சி காவல் நிலையத்திற்கு தொண்டுப்பட்டியிலுள்ள வருவாய்த் துறையின் 10 செண்டு நிலத்தைக் கொடுக்க அரசு முன்வருமா?

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கணியூர் கிராமம், கிராம சாவடி என்ற இடத்தில் காவல் நிலையம் அமைக்க பரிசீலனை செய்ததில், அங்கு காவல் நிலையம் அமைக்க நில மாற்றம் செய்ய இயலாததால், மேற்படி கணியூர் கிராமம், புல எண் 350/2 இல் 15 சென்ட் நிலத்தை காவல் நிலையத்திற்கு நில மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நில மாற்ற முன்மொழிவுகள் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் / முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையரிடமிருந்து கிடைக்கப் பெற்றவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**92—**

## உழவர் பாதுகாப்பு அட்டை

**வினா எண் 34143—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உழவர் பாதுகாப்பு அட்டை விடுபட்டவர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 265, வருவாய்த் துறை, நாள் 10-9-2011-ன்படி, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு/சிறு விவசாயிகள் (நேரடி விவசாயம் செய்பவர்) மற்றும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் மூல உறுப்பினர்களாக பதிவு பெற தகுதி உள்ளவர்கள் ஆவார்கள்.*



2013 அக்டோபர் 30]

*இவர்களுக்கு மெரூன் நிற அடையாள அட்டை வழங்கப்படும்; அவர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப நபர்கள் இத்திட்டத்தில் சார்ந்த உறுப்பினர்கள் ஆவார்கள். இவர்களுக்கு சாம்பல் நிற அடையாள அட்டை வழங்கப்படும்.*

*மேற்சொன்னவாறு தகுதியுடைய நபர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகப் பதிவு செய்ய கிராம நிருவாக அலுவலர்களால் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பணிக்காக தனிப் பதிவேடுகள் கிராம நிருவாக அலுவலர்களுக்கு மாவட்ட நிருவாகத்தால் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் 1,68,08,359 நபர்கள் மெரூன் நிற அடையாள அட்டைக்காகவும், 1,25,78,160 நபர்கள் சாம்பல் நிற அடையாள அட்டைக்காகவும், மொத்தம் 2,93,86,519 நபர்கள் ஏற்கெனவே கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். எனவே, இத்திட்டம் மாநிலம் முழுவதும் (சென்னை நீங்கலாக) செயல்படுத்தப்பட்டு வருவதால், விடுபட்ட தகுதியுடைய நபர்கள் அல்லது புதிய தகுதியுடைய நபர்கள் கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் பதிவேட்டில் பதிந்து தங்களை இத்திட்டத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம்.*

**93—**

## துணை மின் நிலையத்திற்கு இடம் வழங்குதல்

**வினா எண் 34187—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, இச்சடியில் 110 கே.வி. துணை மின் நிலையம் புதியதாக அமைக்க வருவாய்த் துறை சார்பில் இடம் வழங்க காலதாமதம் ஆவதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தாலுகா, வடவாளம் வருவாய் கிராமம் சின்னையாசத்திரம் இச்சடி கிராம புல எண் 752 தோப்புப் புறம்போக்கில் 1.41.5 எக்டேரில் 0.81.0 எக்டேர் நிலம் துணை மின்*

*நிலையம் அமைக்க மின்சார வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து புதுக்கோட்டை வருவாய்க் கோட்ட அலுவலரின் விசாரணையில் உள்ளது. புதுக்கோட்டை வருவாய்க் கோட்ட அலுவலரிடம் முன்மொழிவு பெறப்பட்டு, மேற்படி நிலம் மின் வாரியத்திற்கு நில உரிமை மாற்ற முன் நுழைவு அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**94—**

**படுக்கை வசதியை அதிகப்படுத்துதல்**

**வினா எண் 28228—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி, குழந்தைகள் நல மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கி அறையில் படுக்கை வசதியை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி குழந்தைகள் நல மருத்துவமனையைப் பொறுத்தவரையில் இரத்த வங்கியில் தற்போது 7 படுக்கை வசதி உள்ளது. இது போதுமானதாக உள்ளது. எனவே, இம்மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கி அறையில் படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.*

**95—**

**பொதுக் கழிப்பிடம் கட்டுதல்**

**வினா எண் 28817—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை அரசு பொது மருத்துவமனையில் பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் ஏற்கெனவே பொதுக் கழிப்பிடங்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றன.*

**96—**

**புதிய மின் கம்பிகள் அமைத்தல்**

**வினா எண் 28821—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, அரசு பொது மருத்துவமனையில் புதிய மின் கம்பிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டட பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.10.87 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**97—**

**பொதுக் கழிப்பிட வசதி**

**வினா எண் 29211—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள பொதுக் கழிப்பிடத்தினை உடனடியாக பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில், நோயாளிகள் மற்றும் நோயாளிகளின் உடனாட்களுக்கு ஒவ்வொரு வார்டு பகுதிகளிலும் தனித்தனியாக கழிப்பிட வசதி ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே பொதுமக்களுக்கு என பொதுக் கழிப்பிட வசதி சூப்பர் ஸ்பெஷாலிட்டி வளாகத்தில் அமைக்கப்படவில்லை.*

**98—**

**பரிசோதனைக் கூடங்கள் அமைத்தல்**

**வினா எண் 29220—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் அரசு பொது மருத்துவமனையில் அமைந்துள்ள மெடிக்கல் பிளாக்கில் தானியங்கி மின்தூக்கி அமைக்கவும், பயன்பாடின்றி இருக்கும் கட்டடங்கள் மற்றும் பரிசோதனைக் கூடங்களைத் திறக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?"*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பொது மருத்துவப் பிரிவில்* (Medical Block) *அமைக்கப்பட்டுள்ள தானியங்கி மின்தூக்கி தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும் அனைத்து மருத்துவக் கட்டடப் பகுதிகளும் பரிசோதனைக் கூடங்களும் உபயோகத்தில் உள்ளன.*



2013 அக்டோபர் 30]

**99—**

**நரிக்குறவர் இன மக்களுக்கு மாற்றுத் தொழில்**

**வினா எண் 30986—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நரிக்குறவர் இன மக்களுக்கு மாற்றுத் தொழில்களை கற்றுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நரிக்குறவர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காக "தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்" அமைக்கப்பட்டு, பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தின்மூலம் நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்கள் தனியாக தொழில் தொடங்க முழு மானியமாக ரூ.7,500/-ம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் குழுக்களாக சேர்ந்து தொழில் தொடங்குவதற்கு தனி நபர் மானியமாக ரூ.10,000/-ம் அல்லது குழுவிற்கு ரூ.1,25,000/-ம் மானியமாக பின் நிகழ்வாக* (Back Ended Subsidy) *நடைமுறையிலுள்ள விதிகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைமூலம் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல வகுப்புகளைச் சார்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு மிக்க பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்பங்களைக் கற்றுணர்ந்து, வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும், சுய வேலைவாய்ப்பு பெறுவதற்கும், பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மத்திய மற்றும் மாநில அரசு பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் பயிற்சி நிலையங்கள்மூலம் கட்டணம் ஏதுமின்றி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நரிக்குறவர் இன மக்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோர் இனத்தவராக வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இவர்கள் இத்துறைமூலம் செயல்படுத்தப்படும் மேற்காண் விவரப்படியான திறன் வளர்ப்புப் பயிற்சிகளிலும் சேர்ந்து பயனடையலாம்.*

**100—**

## தொழில் தொடங்க கடன் வழங்குதல்

**வினா எண் 32645—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டம், சோழமாதேவி, காளியூர், மடத்துக்குளம், கொமரலிங்கம், உத்திராபாளையம் பகுதிகளிலுள்ள முஸ்லிம் மக்களுக்கு டாம்கோ, டாப்செட்கோமூலம் தொழில் தொடங்குவதற்கு கடன் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம் மற்றும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சி மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் நிதி உதவிகளைப் பெற்று குறைந்த வட்டியில் கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறுபான்மையினர் இனத்தவர்களாகிய இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர் மற்றும் பார்சியர்கள் ஆகியோருக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவை முறையே இவ்விரண்டு கழகங்களின் வாயிலாக கடன் வழங்கி வருகின்றன.*

*(ஆ) முஸ்லிம் மக்களுக்கு ஏற்கெனவே இவ்விரண்டு கழகங்களின் வாயிலாக கடன் வழங்கப்பட்டு வருவதால் இவ்வினா எழாது.*





## பட்டியல்–18

**1—**

## குரும்புனல் மின்னாக்கிகள் அமைத்தல்

**வினா எண் 26467—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைமூலம் குரும்புனல் மின்னாக்கிகள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட உள்ளனவா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாட்டில் 2010-2011 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைமூலம் நவம்பர் 2012 முடிய 85 குரும்புனல் மின்னாக்கிகள் (1 கிலோ வாட் திறன்) நிறுவப்பட்டுள்ளன.*

**2—**

## ஜேக் ஹேமர் இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 29203—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதியில் திண்காரை கட்டு சாலைகளை உடைத்து மின் பழுதை நீக்க ஜேக் ஹேமர் (Jack Hammer) இயந்திரம் ஒவ்வொரு மின் அலுவலகத்திற்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை மின் பகிர்மானம் / மைய வட்டத்தில் உள்ள அனைத்து கோட்ட அலுவலகங்களுக்கும் தலா*

ஒரு Jack Hammer வீதம் மாதிரி செயல்முறைக்காக வழங்கப்பட்டுள்ளது. அது நல்ல முறையில் செயல்படும்பட்சத்தில், அனைத்து மின் அலுவலகங்களுக்கும் வழங்க ஆவன செய்யப்படும்.

**3—**

## புதிய மின் மாற்றிகளை அமைத்தல்

**வினா எண் 30644—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டத்திலுள்ள கிராமப்புறங்களில் உள்ள பழுதான மின்மாற்றிகளுக்குப் பதிலாக புதிய மின்மாற்றிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டத்திலுள்ள குஞ்சுக்காரனேந்தல் 100 கே.வி.ஏ. மின்மாற்றி மற்றும் வேலடிமடை 100 கே.வி.ஏ. மின்மாற்றிகளில் 13-4-2013 அன்று இரவு மின்மாற்றி கம்பிச் சுருள்* (Coil) *திருடப்பட்டது. இதுபற்றி விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு புதிய மின்மாற்றி குஞ்சுக்காரனேந்தல் கிராமத்தில் 16-4-2013 அன்றும், வேலடிமடை கிராமத்தில் 18-4-2013 அன்றும் அமைக்கப்பட்டுவிட்டன. மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டத்திலுள்ள வேதியரேந்தல் கிராமத்தில் 100 கே.வி.ஏ. மின்மாற்றி 16-4-2013 அன்று பழுதானது. பழுதான மின்மாற்றிக்குப் பதிலாக புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி ஒதுக்கீடு செய்யப்பட்டு 17-4-2013 அன்று வேதியரேந்தல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்து மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டத்தில் மேற்கண்ட மின்மாற்றிகள் தவிர வேறு பழுதான மின்மாற்றிகள் எதுவும் தற்போது இல்லை.*





**4—**

## பழுதடைந்த மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

**வினா எண் 30944—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதியில் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மின் பகிர்மானத்திற்குட்பட்ட குளச்சல் தொகுதியில் உள்ள பழுதடைந்த மின் கம்பங்கள் அவ்வப்போது கண்டறியப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உடனுக்குடன் மாற்றப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு மாதங்களில் குளச்சல் பகுதியில் 21 பழுதடைந்த மின் கம்பங்கள் கண்டறியப்பட்டு மாற்றப்பட்டுள்ளன.*

**5—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32046—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, அக்கூரிலுள்ள கெங்கையம்மன் கோயில் தெரு, ரேணுகாம்பாள் கோயில் தெரு, பஜனை கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களிலும் மற்றும் அக்கூர் முதல் ஆரணி சாலை வரை கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, அக்கூரிலுள்ள கெங்கையம்மன் கோயில் தெரு, ரேணுகாம்பாள் கோயில் தெரு, பஜனை கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களிலும் மற்றும் அக்கூர் முதல் ஆரணி சாலை வரையிலும் இருபத்தெட்டு கையடக்க குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி, பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**6—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32051—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஒகையூரில் பெருமாள் கோயில் தெரு, எட்டியம்மன் கோயில் தெரு, குளத்துமேட்டுத் தெரு, பிள்ளையார் கோயில் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஒகையூரில் பெருமாள் கோயில் தெரு, எட்டியம்மன் கோயில் தெரு, குளத்துமேட்டுத் தெரு, பிள்ளையார் கோயில் தெருவில் ஏற்கெனவே 13 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



**7—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32055—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஆகாசம்பட்டு முதல் ஆரணி சாலை வரை கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பனையூர் ஊராட்சி, ஆகாசம்பட்டு முதல் ஆரணி சாலை வரை பதினைந்து கையடக்க குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**8—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32060—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பையூர் சந்து தெரு, பள்ளிக் கூடத் தெரு, சுப்புராய நகர் கோரா மில் தெரு, புதிய மெயின் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பையூர் சந்து தெருவில் 2 குழல் விளக்குகளும், பள்ளிக் கூடத் தெருவில் 5 குழல் விளக்குகளும், புதிய மெயின் தெருவில் 10 கையடக்க குழல் விளக்குகளும் 10 குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**9—**

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32078—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட பூ. தேரிமேடு 1-வது தெற்கு தெரு மற்றும் 2-வது தெற்கு தெருவில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட பூ. தேரிமேடு 1-வது தெற்கு தெரு மற்றும் 2-வது தெற்கு தெருவில் 12 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



2013 அக்டோபர் 30]

**10—**

### தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 32080—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி புதிய காலனியில் கிழக்கு தெரு மற்றும் 2-வது குறுக்குத் தெருவில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி புதிய காலனியில் கிழக்கு தெரு மற்றும் 2-வது குறுக்குத் தெருவில் 9 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**11—**

### தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 32091—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சி, ஈச்சந்தாங்கல் பகுதியில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சி, ஈச்சந்தாங்கல் பகுதியில் 3 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதியில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**12—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32132—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு மின்வாரிய பின்புறம் தெரு, சாலைத் தெரு, இந்திரா நகர் ஆற்காடு சாலை பின்புறம் ஆகிய தெருக்களில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு மின்வாரிய பின்புறம் தெருவில் 6 கையடக்க குழல் விளக்குகளும், சாலைத் தெருவில் 10 குழல் விளக்குகளும், 5 கையடக்க குழல் விளக்குகளும், ஒரு சோடியம் ஆவி விளக்கும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இந்திரா நகர் ஆற்காடு சாலை பின்புறத்தில் 6 குழல் விளக்குகளும், 5 கையடக்க குழல் விளக்குகளும் ஒரு சோடியம் ஆவி விளக்கும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*



2013 அக்டோபர் 30]

**13—**

**தெரு விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32135—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சிக்குட்பட்ட சோமந்தாங்கல் வடக்கு தெருவில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி ஊராட்சிக்குட்பட்ட சோமந்தாங்கல் வடக்கு தெரு பகுதியில் 9 குழல் விளக்குகள் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**14—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32136—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், கொருக்காத்தூரில் அனைத்துத் தெருக்களுக்கும் மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், கொருக்காத்தூரில் அனைத்துத் தெருக்களுக்கும் மின் கம்பத்துடன் மொத்தம் 35 குழல் விளக்குகளும், 6 கையடக்கக் குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும், மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**15—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 32137—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், நாவல்பாக்கம் கூட்ரோட்டிலிருந்து நாவல்பாக்கம் ஊர் வரை கொருக்காத்தூர் மதுரா மலைவாடியிலிருந்து நாவல்பாக்கம் வரை புதிய மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், நாவல்பாக்கம் கூட்ரோட்டிலிருந்து நாவல்பாக்கம் ஊர் வரை கொருக்காத்தூர் மதுரா மலைவாடியிலிருந்து நாவல்பாக்கம் வரை மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*





**16—**

**மின் இணைப்புகளை மாற்றியமைத்தல்**

**வினா எண் 32369—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டத்தில் பழுதடைந்த நிலையிலுள்ள மின் இணைப்புகளை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டத்தில் மின் இணைப்புகளில் பழுது தொடர்பான புகார்கள் நுகர்வோரிடமிருந்து பெறப்பட்டவுடன் அவற்றை உடனடியாகச் சரி செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**17—**

**சீரான மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 32449—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், மூங்கில் ஊருணி மற்றும் கன்னார் தெரு பகுதிகளுக்கு புதிய மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம் மூங்கில் ஊருணி பகுதிக்கு ஆண்டிக்குளம் SSV 100 KVA மின்மாற்றியிலிருந்தும், கன்னார் தெரு பகுதிகளுக்கு ஆண்டிக்குளம் SSI 250 KVA மற்றும் வைகை SSI 200 KVA மற்றும் வைகை SSII 200 KVA மின்மாற்றியிலிருந்தும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றிகளில் குறைந்த*

[2013 அக்டோபர் 30

மின்னழுத்தக் குறைபாடின்றி சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தற்பொழுது மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**18—**

**சீரான மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 32451—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சின்னக்கண்ணனூர் ஆதி திராவிடர் காலனிக்கு புதிய மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம் சின்னக்கண்ணனூர் 16 KVA மின்மாற்றிமூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின்மாற்றியில் இணைக்கப்பட்ட மின்பளு 8 KVA சின்னக்கண்ணனூர் ஆதி திராவிடர் காலனிக்கு மேற்கண்ட மின்மாற்றி வரையறுக்கப்பட்ட மின் பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு இல்லாததாலும் தற்பொழுது மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**19—**

**சீரான மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 32452—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சி, கங்கையம்மன் குடியிருப்பில் மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சி, கங்கையம்மன் குடியிருப்பிற்கு உடைகுளம் SSI 100 KVA மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள பளுவானது வரையறுக்கப்பட்ட மின்பளுவிற்குள் இருப்பதாலும், குறைந்த மின்னழுத்தக் குறைபாடு இல்லாததாலும் தற்பொழுது மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**20—**

**மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா எண் 33915—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், உறுதிக்கோட்டை ஊராட்சி, உறுதிக்கோட்டை, திட்டுக்கோட்டை, தாஸ்புரம், நெட்டோடை, சீனமங்கலம் மற்றும் குமரவேலூர் ஆகிய கிராமங்களில் மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், உறுதிக்கோட்டை, திட்டுக்கோட்டை, தாஸ்புரம், நெட்டோடை, சீனமங்கலம் மற்றும் குமரவேலூர் ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே 65 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2013 அக்டோபர் 30

**21—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 33929—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், எழுவன்கோட்டை ஊராட்சி, பிரண்டவயல் முதல் எழுவன்கோட்டை வரை புதிய உயர் அழுத்த மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், எழுவன்கோட்டை ஊராட்சி, பிரண்டவயல் முதல் எழுவன்கோட்டை வரை ஏற்கெனவே 28 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**22—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 33930—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கல்லங்குடி ஊராட்சி, புதூர் தேவவயல், மாலைகண்டான் வயல் மற்றும் கல்லங்குடி ஆகிய பகுதிகளில் மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கல்லங்குடி ஊராட்சி, புதூர் தேவவயல், மாலைகண்டான் வயல் மற்றும் கல்லங்குடி ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 42 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**23—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 33934—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சக்கந்தி ஊராட்சி, வடக்கு இருமதி ஆஞ்சநேயர் கோயில் அருகிலும் மற்றும் தெற்கு இருமதி இரண்டு ஊருணிக்கு அருகிலும் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சக்கந்தி ஊராட்சி, வடக்கு இருமதி ஆஞ்சநேயர் கோயில் அருகிலும் மற்றும் தெற்கு இருமதி இரண்டு ஊருணிக்கு அருகிலும் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2013 அக்டோபர் 30

**24—**

## தண்ணீர் கசிவு பழுது நீக்குதல்

**வினா எண் 6922—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் சுனாமி குடியிருப்பில் கூரை மேல் தண்ணீர் கசிவு ஏற்படுவதைப் பழுது நீக்கம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம், கடலூர், தூத்துக்குடி, காஞ்சிபுரம், திருநெல்வேலி ஆகிய சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட 12,035 வீடுகளில் மேற்கூரையில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவைத் தடுக்க சுர்க்கியுடன்கூடிய தட்டோடு பதிக்க ரூ.19.25 கோடி, அரசாணை (நிலை) எண்24, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி-3) துறை, நாள் 15-3-2013-ல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு ஒப்பளிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு 7,513 வீடுகளுக்கு ரூ.12.02 கோடி, கடலூர் மாவட்டத்திற்கு 1,203 வீடுகளுக்கு ரூ.1.92 கோடி, தூத்துக்குடி மாவட்டத்திற்கு 233 வீடுகளுக்கு ரூ.0.37 கோடி, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 2,518 வீடுகளுக்கு ரூ.4.03 கோடி, திருநெல்வேலி மாவட்டத்திற்கு 568 வீடுகளுக்கு ரூ.0.91 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு அலகுத் தொகை ரூ.16,000/- ஆகும்.*



2013 அக்டோபர் 30]

**25—**

## ஆயுள் கைதிகளுக்கான பொழுதுபோக்கு ஏற்பாடு

**வினா எண் 17773—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆயுள் கைதிகள் புண்ணிய ஸ்தலங்களை பார்வையிட சுற்றுலாத் தலங்களை கண்டு களிக்க வருடம் ஒரு முறை ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**26—**

## சிறைக் கைதிகளுக்கு நூல்கள் வழங்குதல்

**வினா எண் 17774—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விவிலியம், குரான் மற்றும் பகவத் கீதை போன்ற நூல்களை சிறைக் கைதிகள் விரும்பினால், அவற்றை அவர்களுக்கு இலவசமாக அளித்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிறைச்சாலைகளில் சிறைவாசிகளின் விருப்பத்திற்கேற்ப விவிலியம், குரான் மற்றும் பகவத் கீதை போன்ற நூல்கள் வழங்கப்படுகின்றன.*

**27—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 19658—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீதித் துறை பயிற்சிக் கழகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2001 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு மாநில நீதித் துறை பயிற்சி கழகத்திற்காக, சென்னை இராஜா அண்ணாமலைபுரம், பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் உள்ள “மல்லிகை” வளாகத்தில் ரூ.4.50 கோடி செலவில் கட்டடம் கட்டப்பட்டது. இக்கட்டடத்தில் 25-7-2004 முதல் நீதித் துறை பயிற்சிக் கழகமானது செயல்பட்டு வருகின்றது.*

**28—**

**கூடுதல் நிதியை ஒதுக்குதல்**

**வினா எண் 19688—திரு. கே.பி.பி. பாஸ்கர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நாமக்கல் நகராட்சியில் குப்பைகளை அகற்ற கூடுதல் நிதியை ஒதுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*நாமக்கல் நகராட்சியில் குப்பைகளை அகற்ற 2011-2012-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ்* (Integrated Urban Development Mission-IUDM) *ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் தற்போது 2012-2013ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*



**29—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

**வினா எண் 25068—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மன்னார்குடி இரயில் நிலையம் அருகில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி இரயில் நிலையம் அருகில் பேருந்து நிலையம் அமைக்கும் அளவிற்கு நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லை. மேலும், தற்சமயம் அவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைத்திடும் திட்டம் ஏதுமில்லை.*

**30—**

**புதிய கட்டடம் கட்டுதல்**

**வினா எண் 28930—திரு. து. முருகேசன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் பணி முடிந்து பயன்பாட்டுக்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு நகராட்சி அலுவலகத்திற்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடிந்து 31-1-2013 முதல் செயல்பட்டு வருகின்றது.*

**31—**

## குப்பைகளை அகற்றுதல்

**வினா எண் 28932—திரு. து. முருகேசன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செங்கல்பட்டு நகரத்தில் போதிய இரும்புக் குப்பைத் தொட்டிகள் அமைத்து குப்பைகளை நாள்தோறும் அகற்றிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*செங்கல்பட்டு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் இரும்புக் குப்பைத் தொட்டிகள் அனைத்து வார்டுகளிலும் வைக்கப்பட்டு, குப்பைகள் நாள்தோறும் நகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு அகற்றப்பட்டு வருகின்றன.*

**32—**

## குடிநீரைக் குழாய்கள்மூலம் வழங்குதல்

**வினா எண் 29115—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி, 107-வது வட்டம் (பழைய வட்டம் 104), அவ்வைபுரம் பகுதியில் குடிநீர்த் தொட்டிகள்மூலம் வழங்கப்படும் குடிநீரைக் குழாய்கள்மூலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 107-வது வட்டம் (பழைய வட்டம் 104), அவ்வைபுரம் பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டப் பணிகள் முடிவடைந்து 6-5-2013 அன்று முதல் குழாய்கள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.*

**33—**

## நீதிபதிகள் நியமனம்

**வினா எண் 32894—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் பொது வழக்குகளுக்கும், குற்றவியல் வழக்குகளுக்கும் தனித் தனி நீதிபதிகளை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் தற்பொழுது செயல்படும் மாவட்ட உரிமையியல் இணைந்த குற்றவியல் நீதிமன்றத்தை இரண்டாகப் பிரித்து உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களை அமைப்பது குறித்த செயற்குறிப்பு சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படும்போது நிதிச் செலவினத்திற்கேற்பவும் இதர காரணங்களின் அடிப்படையிலும் அரசு பரிசீலனை செய்யும்.*

**34—**

## குமாஸ்தாக்களுக்கு உதவித் தொகை

**வினா எண் 35890—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழக நீதிமன்றங்களில் வழக்கறிஞர் குமாஸ்தாக்களுக்கு உதவித் தொகையாக ரூ.1 இலட்சம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு வழக்குரைஞர் எழுத்தர்களின் குழுமத்தின் உறுப்பினர் இறப்பின்போது தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியத்தின் உறுப்பினர்களின் வாரிசுதாரருக்கு செலுத்தும் நிதி உதவியை ரூ.50,000/-லிருந்து ரூ.2,00,000/-ஆக உயர்த்தி வழங்க தமிழக வழக்குரைஞர் எழுத்தர்களின் குழுமம் தீர்மானம் இயற்றியுள்ளது. மேற்கூறிய நிதியுதவியை உயர்த்துவதற்காக விண்ணப்பக் கட்டணத் தொகை, உறுப்பினர் சேர்க்கைக் கட்டணத் தொகை மற்றும் உறுப்பினர் கட்டணத் தொகை ஆகியவற்றை உயர்த்திட, தமிழ்நாடு வழக்கறிஞர்களின் எழுத்தர்கள் நல நிதியச் சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தம் செய்வதற்குரிய கருத்துருவினை தமிழ்நாடு வழக்கறிஞர் குழுமச் செயலாளர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**35—**

## வீடு கட்டும் கடன் வழங்குதல்

**வினா எண் 4156—திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீடு கட்டும் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் (வீட்டு வசதி) கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணைய பணியாளர்களுக்கு மட்டுமே வீடு கட்டும் கடன் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

*கூட்டுறவு வீட்டு வசதி சங்கப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் கடன் வழங்க வழிவகை ஏதும் செய்யப்படவில்லை. ஆனால், தொடர்ந்து இலாபத்தில் செயல்பட்டுவரும் சங்கங்களுக்கான பணியாளர்களுக்கு வீடு கட்டக் கடன் வழங்க சிறப்பு துணை விதியில் திருத்தங்கள் செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வருங்காலத்தில் தகுதியான சங்கங்களிலிருந்து பிரேரணை பெறப்படும்போது அவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.*

**36—**

## விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்

**வினா எண் 15990—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்மூலம் வில்லிவாக்கம், வேளச்சேரி, அம்பத்தூர், நசரத்பேட்டை, பெரும்பாக்கம் ஆகிய இடங்களுக்கான விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமது கருத்துருவில் சென்னை பெருநகரில் உள்ள ஐந்து பகுதிகளான வில்லிவாக்கம், வேளச்சேரி, அம்பத்தூர்,*

நசரத்பேட்டை மற்றும் பெரும்பாக்கம் பகுதிகளுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களின் தற்போதைய நிலை வருமாறு:—

*(1) வில்லிவாக்கம் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தின் களப் பணிகள் மற்றும் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு, விரிவாக்க வளர்ச்சி விதிகளின்கீழ் இத்திட்டம் தயாரிப்பதற்கான நோக்கத்தைத் தெரிவிக்கும் அறிவிக்கை (வரைபடம் எண் 1) நாள் 11-3-2013 அன்று நடைபெற்ற குழும கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் 5-6-2013 அன்று வெளியிடப்பட்டுள்ளது.*

*(2) வேளச்சேரி பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்திற்கான அனைத்துத் தகவல்களும் சேகரிக்கப்பட்டு, களப் பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது விரிவான வளர்ச்சித் திட்ட விதிகளின்கீழ் அட்டவணைகள் தயாரிப்பில் உள்ளன.*

*(3) நசரத்பேட்டைக்கான அடங்கல் சேகரிக்கப்பட்டு அடிப்படை வரைபடம் தயாரிப்பில் உள்ளது. மற்ற இரண்டு (அம்பத்தூர் மற்றும் பெரும்பாக்கம்) பகுதிகளுக்கும் திட்டப் பகுதிக்கான எல்லைகள் வரையறுக்கப்பட்டு, வருவாய்த் துறையிடமிருந்து அடிப்படை வரைபடம் தயாரிப்பதற்கான ஆவணங்கள், தகவல்கள் கோரப்பட்டுள்ளன.*

**37—**

## புதிய குடியிருப்புகளின் தற்போதைய நிலை

**வினா எண் 16004—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 508 புதிய குடியிருப்புகள் கட்டும் பணியின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 508 புதிய குடியிருப்புகள் கீழே கூறப்பட்டுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன:*

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வீடுகள் | திட்டச் செயலாக்கம் (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | கோவை சூலூர் | 108 | 2.57 |
| 2. | சேலம் எருமப்பாளையம் | 400 | 10.57 |
| | மொத்தம் | 508 | 13.14 |

*கோவை சூலூர் திட்டப் பகுதியில் உள்ள 108 குடியிருப்புகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 9-10-2012 அன்று திறந்து வைக்கப்பட்டன. சேலம், எருமப்பாளையம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 400 வீடுகள் கட்டும் பணிகள் தற்போது முடிவுற்றுள்ளன.*

**38—**

## போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்துதல்

**வினா எண் 16019—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நகர் ஊரமைப்பு இயக்கத்தின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் 5 நகரங்களில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நகரங்களுக்கு போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி விடுவித்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

1. குடியாத்தம்
2. கோவில்பட்டி
3. ராஜபாளையம்
4. பட்டுக்கோட்டை
5. பத்மநாபபுரம்
6. ஆரணி
7. நாமக்கல்
8. மதுராந்தகம்

**39—**

## கோட்ட அலுவலகங்கள் அமைக்கும் பணி

**வினா எண் 16041—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 2011-2012 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் கோவை, திருச்சி நகரில் கோட்ட அலுவலகங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மேற்கொள்ளப்பட உள்ளது.

(ஆ) 2011-2012 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் திருச்சி நகரில் கோட்ட அலுவலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் டிசம்பர் 2013-க்குள் முடிவுறும்.





கோவை கோட்ட அலுவலகம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**40—**

## குடியிருப்புகள் மற்றும் வணிக மனைகளை விற்றல்

**வினா எண் 16045—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2011-2012 ஆம் ஆண்டில் விற்பனை ஆகாமலுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் மற்றும் வணிக மனைகளை விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நீண்ட காலமாக விற்கப்படாமல் தேக்கத்தில் இருந்து வந்த குடியிருப்பு மனைகள்/வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் விற்பனை விலையும் மற்றும் வணிக/பள்ளி/பொது உபயோக மனைகளுக்கு ஒவ்வொரு நிதி ஆண்டும் குறும விலையும் நிர்ணயம் செய்து, குடியிருப்பு மனைகள்/வீடுகள்/அடுக்கு மாடிக் குடியிருப்புகள் குலுக்கல் மூலமாகவும், வணிக/பள்ளி/பொது உபயோக மனைகள் ஏலத்தின் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

1-4-2012 அன்று 5,026 மனைகள்/வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள் விற்பனைக்கு இருந்தன. பின்பு குலுக்கல் நடத்தப்பட்டு 1,376 மனைகள்/வீடுகள்/மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் விற்பனை செய்யப்பட்டன.

இதேபோன்று 2012-2013 ஆம் ஆண்டு 1,494 வணிக பள்ளி/பொது உபயோக மனைகளுக்கு குறும விலை நிர்ணயம் செய்யப்பட்டு 129 அலகுகள் ரூ.7,419.58 இலட்சம் மதிப்பீட்டில் பொது ஏலத்தின்மூலம் விற்பனை

[2013 அக்டோபர் 30

செய்யப்பட்டன. 2013-2014 ஆம் ஆண்டில் மீதமுள்ள அலகுகளுக்கு குறும விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**41—**

**குடியிருப்புகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 31543—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அயோத்தியா குப்பத்தில் உள்ள பழுதடைந்த குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை மற்றும் இதர நகரங்களில் பழுதடைந்துள்ள 3,500 குடியிருப்புகள் ரூ.280.00 கோடி செலவில் இடிக்கப்பட்டு புதிய குடியிருப்புகள் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 4-4-2013 அன்று தமிழக சட்டப் பேரவையில் விதி 110-ன்கீழ் அறிவித்துள்ளார்கள். இத் திட்டத்தின்கீழ் சென்னை அயோத்தியா குப்பத்தில் உள்ள 708 குடியிருப்புகளும் இடித்து கட்டப்படும். இத்திட்டப் பணிகள் 2013-2014ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

**42—**

**கையுறை தயாரிப்பு தொழிற்சாலை**

**வினா எண் 15674—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஏற்றுமதி வாய்ப்புள்ள கையுறை தயாரிப்புத் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை தொகுதியில் ஏற்றுமதி வாய்ப்புள்ள கையுறை தயாரிக்கும் தொழிற்சாலைகள் எதுவும் இல்லை. பருத்தி துணியிலான தொழிற்சாலைகளுக்கான கையுறை (Industrial Cotton Gloves) நிறுவனம் ஒன்று மானாமதுரையில், மேட்டுத் தெருவில் உள்ள பாபா மெட்ரிகுலேஷன் பள்ளி அருகில் நடத்தப்பட்டு வருகிறது. அந்நிறுவனத்திற்கு தேவைப்படும் மூலப்பொருட்களான காடாத் துணி ஈரோடு மாவட்டத்திலிருந்தும், மாட்டுத் தோல் சென்னையிலிருந்தும் பெறப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கான கையுறைகளைத் தயாரிக்கத் தேவைப்படும் மேற்காணும் மூலப்பொருட்கள் மானாமதுரை தொகுதியில் கிடைக்கப்பெறவில்லை. எனவே, இப்பகுதியில் இத்தொழிலை அரசு சார்பில் ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் மானாமதுரையில் ஏற்றுமதி வாய்ப்புள்ள கையுறை தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்கள் தகுதியின் அடிப்படையில் மானியங்கள் மற்றும் அனைத்து வழிகாட்டுதல்களையும் சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மையத்தை அணுகிப் பெறலாம்.

**43—**

**கைவினைப் பொருட்கள் தயாரித்தல்**

**வினா எண் 33894—திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்துவரும் நிலையில் உள்ள கைவினைப் பொருட்களை அரசே தயாரிக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பூம்புகார் நிறுவனம் நலிவடைந்துவரும் நிலையில் உள்ள கைவினைப் பொருட்களுக்கான பயிற்சி வகுப்புகளை அவ்வப்போது நடத்தி, அதன்மூலம் அவற்றுக்கு புத்துயிர் ஊட்டி வருகிறது. பூம்புகார் நிறுவனம் கீழ்க்கண்ட தனது உற்பத்தி நிலையங்கள்மூலம் தமிழகத்தின் சில முக்கியமான கைவினைப் பொருட்களைத் தயாரித்து வருகிறது:

| | பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் | தயாரிக்கப்படும் பொருட்கள் |
|---|---|---|
| 1. | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம், நாச்சியார் கோவில் | தமிழ்நாட்டின் பாரம்பரிய பித்தளை விளக்குகள், கை மணிகள், இந்து கோயில் மணிகள் மாதா கோயில் மணிகள் |
| 2. | பூம்புகார் பித்தளை கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம், மதுரை | பித்தளை விளக்குகள், பித்தளையினாலான சிறிய சிலைகள் |
| 3. | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம், வாகைக்குளம் | தமிழ்நாட்டின் பாரம்பரிய பித்தளை விளக்குகள் மற்றும் கேரளா மலபார் விளக்குகள் |
| 4. | பூம்புகார் கலைப்பொருட்கள் உற்பத்தி நிலையம், சுவாமிமலை | பஞ்சலோக சிற்பங்கள் |
| 5. | பூம்புகார் கலைத் தட்டு உற்பத்தி நிலையம், தஞ்சாவூர் | தஞ்சாவூர் கலைத் தட்டுகள் |
| 6. | பூம்புகார் சந்தன மரச்சிற்ப நிலையம், கள்ளக்குறிச்சி | சந்தன மர, நாட்டு மரச்சிற்பங்கள் |
| 7. | பூம்புகார் கற்சிற்ப உற்பத்தி நிலையம், மாமல்லபுரம் | கருங்கற் சிற்பங்கள் |

**44—**

## விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குதல்

**வினா எண் 30662—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கத்தரி, மிளகாய், தக்காளி, பயிர்களை தொழில்நுட்பத்துடன் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மானாமதுரை, திருப்புவனம் மற்றும் இளையான்குடி வட்டாரங்களில் கத்தரி, தக்காளி, மிளகாய், கீரை மற்றும் கொடிவகை காய்கறிகள் சாகுபடி செய்ய ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டு (2013-2014) 427 எக்டேர் பரப்பில் 50 சத மானிய விலையில் வீரிய ஒட்டு விதைகள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு, தொழில்நுட்பத்துடன் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**45—**

## ஊக்கத் தொகை வழங்குதல்

**வினா எண் 7249—திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியை மீண்டும் செயல்படுத்திடவும், பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி கடந்த 1977 ஆம் ஆண்டு முதல் நட்டத்தில் இயங்கி வந்ததால், நிதி நிலைமையில் தேக்கநிலை ஏற்பட்டிருந்த காரணத்தினால், விற்பனைக்குத் தேவையான பொருட்கள் கொள்முதல் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, அதனால் பண்டகசாலையின் விற்பனை பெருமளவு குறைந்தது. இதன் காரணமாக பண்டகசாலையின் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க இயலாமலும், வருங்கால வைப்பு நிதி மற்றும் ஈ.எஸ்.ஐ. போன்றவற்றிற்கு தொகை செலுத்த இயலாத நிலையும் இருந்து வந்தது. இந்நிலையில் செப்டம்பர்

*2008-ல் அரசின் அனுமதி பெற்று, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.75/- இலட்சமும், அக்டோபர் 2010-ல் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.50/- இலட்சமும் ஆக மொத்தம் ரூ.125/- இலட்சம் வட்டியில்லாக் கடனாக இப்பண்டகசாலைக்கு வழங்கப்பட்டது. இவைதவிர, பண்டகசாலைக்குச் சொந்தமான ஒண்டிப்புதூர் எண்ணெய் ஆலை இயந்திரங்களை விற்பனை செய்த வகையில், நிதி ஆதாரங்கள் திரட்டப்பட்டு வியாபாரம் செய்ததன் காரணமாக, தற்போது பண்டகசாலையின் அனைத்து வியாபாரப் பிரிவுகளிலும் விற்பனை அதிகம் செய்யப்பட்டு, பண்டகசாலை தற்போது இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. பண்டகசாலையில் வியாபார நடவடிக்கைகளை மேலும் பெருக்கிட ஏதுவாக புதிய மருந்துப் பிரிவுகள், பீளமேட்டில் பொருட்காட்சித் திடல் அமைக்கவும், 3 இடங்களில் பெட்ரோல் விற்பனை நிலையம் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

*(2) மேலும், கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருவதாலும், தற்போதுள்ள வியாபாரம் மேலும் அதிகரித்து, அதிகமான உபரி வருமானம் எய்தும் நிலை அடைந்தாலும், பணியாளர்களுக்கு 18 மாத ஊதியம் வழங்க வேண்டியிருந்தது. நிலுவை ஊதியம் படிப்படியாக வழங்கப்பட்டு, தற்போது 7 மாத ஊதியம் மட்டும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டி உள்ளது. இந்நிலையில் பண்டகசாலையில் உள்ள சுயசேவைப் பிரிவினை விரிவுபடுத்தி, வியாபார அபிவிருத்தி செய்ய கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.34.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு சுயசேவைப் பிரிவை விரிவுபடுத்தி, மிகப் பொலிவுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வியாபாரத்தைப் பெருக்கி அதன் இலாபத்தைக் கொண்டு நிலுவையில் உள்ள 7 மாத சம்பளத்தை வழங்கிய பின்னர் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை (Incentive) வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.*

**46—**

## புதிய கட்டடங்கள் வசதி

**வினா எண் 17288—திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*சாத்தூர் தொகுதி, சாத்தூர் ஒன்றியம், வெம்பக்கோட்டை ஒன்றியம், ராஜபாளையம் ஒன்றியம் ஆகிய பகுதிகளிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*சாத்தூர் ஒன்றியத்தில் 13 நியாய விலைக் கடைகளும், வெம்பக் கோட்டை ஒன்றியத்தில் 3 நியாய விலைக் கடைகளும், ராஜபாளையம் ஒன்றியத்தில் 60 நியாய விலைக் கடைகளும் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நியாய விலைக் கடைகளை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், ராஜபாளையத்தில் ராஜபாளையம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையும் நடத்தி வருகிறது. மேற்படி நியாய விலைக் கடைகளை நடத்தி வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நியாய விலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கான நிதி வசதி இல்லை. மேற்படி வாடகைக் கட்டடங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட மண்டல இணைப் பதிவாளர், விருதுநகர் மூலம் திட்ட இயக்குநர், விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களிடம் நிதி வசதி கோரப்பட்டுள்ளது. மேலும், மேற்படி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டடங்களில் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்ட இட ஒதுக்கீடும், நிதி ஒதுக்கீடும் பெறப்படும்பட்சத்தில், புதிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

**47—**

## வணிகர்கள் மீதான நடவடிக்கை

**வினா எண் 30434—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதியில் முத்திரையில்லா தராசு, எடைக் கற்கள் வைத்து கடை நடத்தும் வணிகர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் முத்திரையில்லா தராசு எடைக் கற்கள் வைத்து வியாபாரம் செய்யப்படுவதில்லை. அவ்வாறு முத்திரையில்லா தராசுகள் மற்றும் எடைக் கற்கள் வைத்து வியாபாரம் செய்வது கண்டறியப்பட்டால் அம்முத்திரையில்லா தராசுகள் மற்றும் எடைக் கற்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அந்த வணிகர்மீது சட்டமுறை எடையளவு சட்டம், 2009, விதி 15-ன்படி இணக்கக் கட்டண நடவடிக்கை தொடரப்படும். மேலும், பறிமுதல் செய்யப்பட்ட தராசு மற்றும் எடைக் கற்கள் தொடர்புடைய வணிகர்களிடம், உரிய தாமதக் கட்டணம் வசூலிக்கப்பட்டு, மறுபரிசீலனை செய்யப்பட்டு சான்று வழங்கப்படும். அவ்வாறு தாமதக் கட்டணம் செலுத்தி மறுபரிசீலனை சான்று பெறத் தவறும் விற்பனையாளர்களது தராசு மற்றும் எடைக் கற்கள் பொது ஏலத்தில் விற்கப்பட்டு அரசுக் கணக்கில் தொகை செலுத்தப்படும்.*

**48—**

## தொழிலாளர்களின் சம்பளம் பிடித்தல்

**வினா எண் 34750—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நவீன அரிசி ஆலைகளில் கண்டு முதல் குறைவிற்காக தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யும் பணத்தை நிறுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நவீன அரிசி ஆலை நிருவாகங்கள் சட்ட விதிகளுக்கு முரணாக தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்தால், 1936 ஆம் வருடத்திய சம்பளப் பட்டுவாடா சட்டத்தின்கீழ் மண்டல தொழிலாளர் துணை ஆணையர் முன்பு கேட்பு மனு தாக்கல் செய்து நிவாரணம் தேடிக் கொள்ளலாம்.*

**49—**

## தொகையை உயர்த்தி வழங்குதல்

**வினா எண் 37918—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நல வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் தொகையை ரூ.1,000/- உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உயர் கல்வி பயில்வதற்கான கல்வி உதவித்தொகை இந்த ஆண்டு முதல் அரசாணை (நிலை) எண் 103, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 25-3-2013-ன்மூலம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் தொகையுடன் கூடுதலாக ரூ.2,000/- உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.*

[2013 அக்டோபர் 30

**50 தொழிலாளர் நல வாரிய அட்டைகளைப் புதுப்பித்தல்**

**வினா எண் 37919—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யும் அட்டைகளைப் புதுப்பிக்கும் நடைமுறையில் உள்ள இரண்டு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் நலத் துறையின்கீழ் இயங்கும் 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்களின் பதிவை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்ற தற்போதுள்ள நடைமுறையை ஐந்து ஆண்டுகளாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**51—**

**வங்கிக் கணக்கில் வரவு**

**வினா எண் 37921—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நல வாரியங்களில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளை அவர்களுடைய வங்கிக் கணக்கிலேயே வரவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 102, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 8-11-2011-ல் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகளை மின்னணு



2013 அக்டோபர் 30]

பரிமாற்றம்மூலம் அவர்களின் வங்கிக் கணக்கிற்கே நேரடியாகச் செலுத்தும் வகையில் முன்னோடித் திட்டம் காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், திருவள்ளூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, பின்னர் இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**52—**

**இருவழிச் சாலை அமைத்தல்**

**வினா எண் 24837—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-மதுரை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பனமரத்துப்பட்டி வழியாக மங்களாபுரம் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-மதுரை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பனமரத்துப்பட்டி வழியாக மங்களாபுரம் செல்லும் சாலை கி.மீ. 0/0-8/8 வரை இருவழிச் சாலையாக உள்ளது. மீதமுள்ள சாலை போக்குவரத்துச் செறிவிற்கு ஏற்றாற்போல் இடைவழித்தடமாகவும், ஒருவழிச் சாலையாகவும் உள்ளது. போக்குவரத்துச் செறிவு அதிகரிக்கும் பட்சத்தில் இச்சாலைகளை இருவழிச் சாலையாக அகலப்படுத்த பரிசீலிக்கப்படும்.

**53—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 11329—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 30

*(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், அலப்பலச்சேரி கிராம நியாய விலைக் கடையைப் பிரித்து பொட்டிபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், அலப்பலச்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் அலப்பலச்சேரி நியாய விலைக் கடை 480 குடும்ப அட்டைகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்பலச்சேரியிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ள பொட்டிபுரம் கிராமத்தில் உள்ள 106 குடும்ப அட்டைகள் இக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன.*

*அலப்பலச்சேரி நியாய விலைக் கடையைத் தாய் கடையாகக் கொண்டு சித்திரெட்டிபட்டி கிராமத்தில் 233 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. பொட்டிபுரம் கிராமத்திற்கும் சித்திரெட்டிபட்டி பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் இடையே 2 கி.மீ. தூரம் உள்ளது.*

*மேலும், பொட்டிபுரம் கிராமத்திலிருந்து 2 கி.மீ. தூரத்திற்கு உட்பட்டு வேறு நியாய விலைக் கடைகள் இல்லை. 2 கி.மீ. தூரமுள்ள சித்திரெட்டிபட்டி, பாப்பநாயக்கன்பட்டி நியாய விலைக் கடைகளுக்கு பொட்டிபுரம் கிராம பொதுமக்கள் செல்ல விரும்பவில்லை. எனவே அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேரக் கடைக்கு இலவச கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் பொட்டிபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

*இருப்பினும், பொட்டிபுரம் கிராமத்திற்கு மதுரை மாவட்ட ஆட்சியரின் ஆணைப்படி, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் அலப்பலச்சேரி நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*



2013 அக்டோபர் 30]

**54—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 20699—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், வலையன்வயல் புதூர், கே. சிறுவனூர் மற்றும் கண்ணங்குடி பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் கண்டியூர் நியாய விலைக் கடை தற்போது 432 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது.*

*கண்டியூர் நியாய விலைக் கடையிலிருந்து வலையன்வயல், காட்டுக்குடிபுதூர் ஆகிய கிராமங்கள் 2 கி.மீ. தூரத்தில் உள்ளன. இருப்பினும் இரண்டு கிராமங்களிலும் சேர்ந்து (78+34) 113 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசாணையில் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, புதிய பகுதிநேரக் கடை துவக்க குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். குடும்ப அட்டைகளைப் பிரித்த பின் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் வலையன்வயல், காட்டுக்குடிபுதூர் கிராமங்களில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

*நாராணமங்கலம் நியாய விலைக் கடை தற்போது 662 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது. பகுதிநேரக் கடை அமைக்க கோரிய சிறுகானூர் கிராமம் நாராணமங்கலம் நியாய விலைக் கடையில் இருந்து 2.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. கே. சிறுகானூரில் 235 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய்*

நியாய விலைக் கடைக்கும் பகுதிநேரக் கடை அமைத்துத் தர கோரும் கே. சிறுகானூருக்கும் 1-½ கி. மீட்டருக்குமேல் தூரம் இருந்தாலும், கே. சிறுகானூரில் 150 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருந்தாலும், கே. சிறுகானூர் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க 235 குடும்ப அட்டைகளைப் பிரித்த பின்பு அதன் தாய்க்கடையான நாராணமங்கலம் நியாய விலைக் கடையில் 427 குடும்ப அட்டைகள் மட்டுமே எஞ்சி இருக்கும். எனவே, அரசு வகுத்துள்ள நெறிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில், கே. சிறுகானூரில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

கண்ணங்குடி நியாய விலைக் கடை 445 குடும்ப அட்டைகளுடன் தற்போது கண்ணங்குடியிலேயே செயல்பட்டு வருகின்றது. அரசு வகுத்துள்ள நெறிமுறைகளின்படி, தாய் நியாய விலைக் கடைக்கும், பகுதிநேரக் கடை அமைக்க கோரும் இடத்திற்கும் 1-1/2 கி.மீட்டருக்கு மேல் தூரம் இல்லை. எனவே கண்ணங்குடியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியம் இல்லை.

**55—**

## நியாய விலைக் கடைகளை தனித்தனியே இயக்குதல்

**வினா எண் 28266—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 107-வது வட்டம், கடை எண் சேத்துப்பட்டு-5 TC012 மற்றும் சேத்துப்பட்டு-3 TC015 ஆகிய நியாய விலைக் கடைகளைத் தனித்தனியே இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 107-வது வட்டத்தில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் நடத்தும் சேத்துப்பட்டு கடை எண் 5 (TC012) மற்றும் சேத்துப்பட்டு-3 (TC015) ஆகிய நியாயவிலைக் கடைகளின் குடும்ப அட்டைதாரர்கள் எளிதாக அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுச் செல்ல ஏதுவாக இரு கடைகளுக்கும் இடையே தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டு இரு





கடைகளுக்கும் தனித்தனியாக நுழைவு வாயில்கள் மற்றும் செயலிட முகப்புகள் (Counters) பொருத்தப்பட்டுள்ளன. எனவே, தற்போது எழும்பூர் தொகுதி, 107-வது வட்டம், சேத்துப்பட்டு கடை எண்-5 (TC012) மற்றும் சேத்துப்பட்டு-3 (TC015) ஆகிய இரு கடைகளும் ஏற்கெனவே தனித்தனியாக இயங்கி வருவதால், மீண்டும் இரு நியாய விலைக் கடைகளையும் தனித்தனியாக இயக்க வேண்டிய தேவை இல்லை.

**56—**

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 29623—திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி, பூமாத்தூரில் நியாய விலைக் கடை அமைத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தருமபுரி நல்லம்பள்ளி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி, இலளிகம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் மிட்டா தின்னஹள்ளி நியாய விலைக் கடை 502 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையிலிருந்து கொமத்தம்பட்டி முதல் பகுதிநேரக் கடை பிரிக்கப்பட்டு 490 குடும்ப அட்டைகளுடனும், 2-வது பகுதிநேரக் கடையான உத்தமன்கொட்டாய் நியாய விலைக் கடை 162 குடும்ப அட்டைகளுடனும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் கொம்மத்தப்பட்டி நியாய விலைக் கடைக்கும், 150 குடும்ப அட்டைகளைக் கொண்ட உத்தேச பகுதிநேரக் கடையான பூமாத்தூருக்கும் இடையே 1.00 கி.மீ. தொலைவே உள்ளதாலும் தாய்கடைக்கும், உத்தேச பகுதிநேரக் கடைக்கும் இடையே 1.5 கி.மீ. இருக்க வேண்டும். தாய்கடை விற்பனையாளரே பகுதிநேர நியாய விலைக் கடையை வாரத்தில் 3 நாட்கள் செயல்படுத்த வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியமையாத நிலையில் பூமாத்தூரில் 3-வது பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**57—**

## அரிசித் தட்டுப்பாட்டினைத் தடுத்தல்

**வினா எண் 30840—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடகிழக்குப் பருவ மழையின்மை, காவேரி டெல்டா நெல் விளைச்சல் பாதிப்பு ஆகியவற்றால் தமிழ்நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறைவான பருவ மழை, நீர்த்தேக்கங்களில் குறைந்த கொள்ளளவு, அண்டை மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்குத் தேவையான நீர் கிடைக்காமை, தொழிலாளர்கள் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் இருந்தாலும், தமிழக அரசின் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ், அனைத்து அரிசி குடும்ப அட்டைகளுக்கும் 20 கிலோ விலையில்லா அரிசியினை வழங்கி வருவதுடன், விலைக் கட்டுப் பாட்டு நிதியிலிருந்து ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டு, மேற்கு வங்கத்திலிருந்து (அத்தியாவசியப் பொருள் விற்பனை அங்காடி) அரிசியினை கொள்முதல் செய்து இதனைக் கூட்டுறவு அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடிகள் வாயிலாக அடக்க விலைக்கே விற்கப்பட்டு வருகிறது. இந்த அங்காடிகளில், மினி கிட் ரகம், ஒரு கிலோ ரூ.31/-க்கும், ஐ.ஆர். 36 மற்றும் சொர்ணா ரகங்கள் கிலோ ரூ.25/-க்கும் விற்கப்பட்டு வருகின்றன, நடப்பு நிதியாண்டில் விலைக் கட்டுப்பாட்டு நிதி ரூ.50 கோடியிலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தி சட்டப் பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு நெல் கொள்முதல் விலையை சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு 50 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 70 ரூபாயும் கூடுதலாக வழங்கப்படும் என அறிவித்தது. இந்த அறிவிப்பிற்கு பின் சாதாரண நெல்லுக்கு அரசு கொள்முதல் விலை ரூ.1,300/- ஆகவும், சன்ன ரக நெல்லுக்கு அரசு கொள்முதல் விலை ரூ.1,350/- ஆகவும் உயர்ந்துள்ளது. இதன்மூலம் நெல் உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளை அரசு





ஊக்குவித்து வருகிறது. கடந்த 2012-2013 பருவத்தில் 23,87,091 மெ. டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இப்பருவத்தில் பருவ மழையில்லாத காரணத்தினாலும், காவேரியில் இருந்து தண்ணீர் வராத காரணத்தினாலும், தற்சமயம் 7,07,224 மெ.டன் (15-5-2013 வரை) மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த பருவத்தைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்திய உணவுக் கழகத்திலிருந்து போதுமான அளவு அரிசி இயக்கம் செய்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

24-7-2013 அன்றைய இருப்பு நிலவரப்படி கீழ்க்கண்டவாறு அரிசி இருப்பு உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| (1) | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகள் | : | 7,18,747 மெ.டன் |
| (2) | இந்திய உணவுக் கழகக் கிடங்குகள் | : | 7,05,692 மெ.டன் |
| | மொத்தம் | | 14,24,439 மெ.டன் |

இது பொது விநியோகத் திட்டத்திற்கு 4 மாதத்திற்கும் கூடுதலான அளவு இருப்பாகும்.

மேலும், அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க 10,000 மெட்ரிக் டன் அரிசியினை வெளிச் சந்தையில் கொள்முதல் செய்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடிகள் மூலமாக மாவட்ட தலைநகரங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அவற்றின் தேவையைப் பொறுத்து அங்காடிகளில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக விலைக் கட்டுப்பாட்டு நிதியிலிருந்து ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரிசியின் வெளிச் சந்தை விலை உயர்வை நிலைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக நுகர்வோருக்கு 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்ற குறைந்த விலையில் வழங்கும் திட்டம் 17-4-2013 அன்று சென்னை, நந்தனம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கு வளாகத்தில்

நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளின்மூலம் தமிழ்நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாதவண்ணம் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**58—**

## கூடுதல் மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 32792—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை, அமராவதி வனச்சரகத்தில் வசிக்கும் சி18 செட்டில்மென்டு, மலைவாழ் மக்களுக்கு நியாய விலைக் கடை மூலமாக மண்ணெண்ணெய் 10 லிட்டர் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மாநிலங்களுக்கான பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்களின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தின் தற்போதைய பொது விநியோகத் திட்ட 100% மண்ணெண்ணெய் தேவை மாதமொன்றிற்கு 65,140 கிலோ லிட்டர் ஆகும். ஆனால் மத்திய அரசு கடந்த ஏப்ரல்-ஜூன் 2013 மற்றும் நடப்பு ஜூலை-செப்டம்பர் 2013ஆம் காலாண்டில் இம்மாநிலத்திற்கு 29,060 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் மட்டுமே மாதாந்திர ஒதுக்கீடாக வழங்கியுள்ளது. இவ்வொதுக்கீட்டினைக் கொண்டு மண்ணெண்ணெய் பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களில் குறைந்த அளவுத் தேவையினை மட்டுமே பூர்த்தி செய்ய இயலுகிறது. இந்நிலையில் மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை, அமராவதி வனச்சரகத்தில் வசிக்கும் சி18 செட்டில்மெண்டு, மலைவாழ் மக்களுக்கு நியாய விலைக் கடை மூலமாக, மாதம் தலா 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வழிவகை இல்லை.





**59—**

## துர்நாற்றம் வீசுவதைத் தடுத்தல்

**வினா எண் 15277—திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விளவங்கோடு தொகுதி, நாகர்கோவில் நகராட்சியின் வலம்புரிவிளை உரக் கிடங்கில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்து மூலம் துர்நாற்றம் வீசுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான வலம்புரிவிளை உரக் கிடங்கு 5-7-2013 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது உரக் கிடங்கில், நாகர்கோவில் நகராட்சியில் உற்பத்தியாகும் திடக் கழிவுகளை கொண்டுவந்து வகையாக சேகரித்து, மட்கும் குப்பையிலிருந்து ஒரு பகுதி உரம் தயாரிப்பதற்கு கொட்டப்படுவதும், மட்கும் குப்பை, மட்காத குப்பை என இரண்டு உபயோகப்படுத்துவதும், மட்காத குப்பையைத் தீ விபத்து ஏற்படாதவண்ணம் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதும் கண்டறியப்பட்டது. எனினும் இந்த உரக் கிடங்கில் போதிய இடம் இல்லாமையால், இதற்கான புதிய இடம் தெரிவு செய்யுமாறு நாகர்கோவில் நகராட்சி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**60—**

## குறும்படத்தினை பொது மக்களுக்குத் திரையிடுதல்

**வினா எண் 17597—திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெரியகுளம் தொகுதியில் கடந்த நிதிநிலை அறிக்கையின்படி சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்த தயாரிக்கப்பட்ட குறும்படத்தினைப் பொது மக்களுக்குத் திரையிட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) 2011-2012 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை பொது மக்கள் மற்றும் மாணாக்கர்களிடையே ஏற்படுத்த ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, சுற்றுச்சூழல் தொடர்பான 6 தலைப்புகளில் காணொளிப் படங்கள்* (Videos) *சென்னை தொலைக்காட்சி நிறுவனத்தினால்* (Doordarshan, Chennai) *தயாரிக்கப்பட்டு, அதன் பிரதிகள் எடுக்கப்பட்டு அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ளன.*

*(ஆ) இக்காணொளிப் படங்கள் முக்கியமாகப் பசுமைத் தினங்களில் பொது மக்களுக்கும், மாணவர்கட்கும் திரையிடப்படும்.*

**61—**

## கிரஷ்ஷர்களை இடம் மாற்றுதல்

**வினா எண் 19139—திரு. மு.வீ. கருப்பையா:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சோழவந்தான் தொகுதி, கச்சைகட்டி சாலையில் உள்ள புளு மெட்டல் கிரஷ்ஷர்களால் விவசாயம் பாதிப்படைவதால் கிரஷ்ஷர்களை வேறு இடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, கச்சைகட்டி சாலையில் அமைந்துள்ள கிரஷ்ஷர்கள் 6-2-2013 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டபொழுது, காற்று மாசுத் தடுப்பு சாதனங்களை சரி வர இயக்காத காரணத்தினால் எட்டு கல் உடைக்கும் தொழிற்சாலைகளுக்கு*



*காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகளின்கீழ் முகாந்திர விளக்கம் கோரப்பட்டு, அதில் ஆறு தொழிற்சாலைகள் காற்று மாசுத் தடுப்பு சாதனங்களை மேம்படுத்தியதால் அவற்றின் உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் காற்று மாசுத் தடுப்புச் சாதனங்களை முழுமையாக மேம்படுத்தாத 2 தொழிற்சாலைகள் தற்போது இயக்கத்தில் இல்லை. மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று இயங்கி வரும் கல் உடைக்கும் இத்தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருவதால், அவற்றை மாற்று இடத்திற்கு அப்புறப்படுத்த தற்போது எவ்வித அவசியமும் எழவில்லை.*

**62—**

## சுகாதாரச் சீர்கேட்டினைத் தடுத்தல்

**வினா எண் 23940—திருமதி ம. சக்தி:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் தனியார் செங்கல் சூளையால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டினைத் தடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், நெப்பத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். ராதாகிருஷ்ணன் பிரிக் ஒர்க்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெறாமல் இயங்கி வந்ததால், இந்நிறுவனத்திற்கு 19-3-2013 அன்று மூடுவதற்கான ஆணை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வழங்கப்பட்ட மின் இணைப்பு, வாரியத்தின் பரிந்துரையின்படி துண்டிக்கப்பட்டது. தற்போது இச்செங்கல் சூளை இயக்கத்தில் இல்லை என்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட வாய்ப்பில்லை.*

**63—**

## மாசு மற்றும் கழிவுகளைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 29185—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்மிடிப்பூண்டியில் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் மாசு மற்றும் கழிவுகளைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் அமைந்துள்ள சிவப்பு வகை பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் அமைத்துள்ள காற்று மாசுத் தடுப்பு சாதனங்களின் செயல்பாடு மற்றும் திறன், தொழிற்சாலையை சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் ஆகியவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகம்மூலம் ஆண்டுதோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. மேலும், இத்தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் மாதிரிகள் வாரியத்தால் சேகரிக்கப்பட்டு பகுப்பு ஆய்வு செய்யப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடு மற்றும் திறன் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகள் நிறுவியுள்ள காற்று மாசுத் தடுப்பு அமைப்பு / கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை திறம்பட இயங்குகின்றனவா எனவும், இத்தொழிற்சாலைகளின் இயக்கத்தால் எவ்வித மாசும் ஏற்படாமல் இருக்கவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.*





**64—**

## நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்துதல்

**வினா எண் 13990—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருதுநகர் மாவட்டம், நகரியாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் நகரியாறு நதியில் உள்ள நீர்வள ஆதார அமைப்புகள் 2010 முதல் 2012 ஆம் ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டுள்ளதால் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

**65—**

## நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்துதல்

**வினா எண் 13991—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி / விருதுநகர் மாவட்டம், தேவியாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் தேவியாறு நதியில் உள்ள நீர்வள ஆதார அமைப்புகள் 2010-2012 ஆம் ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டு உள்ளது.*

[2013 அக்டோபர் 30

**66—**

## நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்துதல்

**வினா எண் 14027—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், நகரியாறு நதியில் நீர் ஆதார அமைப்புகளை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் நகரியாறு நதியில் உள்ள நீர்வள ஆதார அமைப்புகள் 2010 முதல் 2012 ஆம் ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டுள்ளன.

**67—**

## தடுப்பணை கட்டுதல்

**வினா எண் 22435—திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, பச்சைமலையிலிருந்து, முருங்கப்பட்டி, நாகநல்லூர், வெள்ளாளப்பட்டி ஆகிய கிராமங்கள் வழியாகச் செல்லும் அய்யாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, பச்சைமலையிலிருந்து முருங்கப்பட்டி, நாகநல்லூர், வெள்ளாளப்பட்டி ஆகிய கிராமங்கள் வழியே செல்வது தளுகை ஆறு ஆகும். இதில், முருங்கப்பட்டியில் குடிநீர் வடிகால் வாரியத்தாலும், நாகநல்லூரில் பொதுப் பணித் துறையாலும் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், தளுகை-வெள்ளாளப்பட்டி பாலத்தின் கீழ்புறம் 50 மீட்டர் தொலைவில் தளுகை அணைக்கட்டு உள்ளது. எனவே, வெள்ளாளப்பட்டி பாலத்திற்கு மேற்புறம் மற்றும் கீழ்புறம் இரு தடுப்பணைகள் மற்றும் ஒரு அணைக்கட்டு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளதால், மேலும், ஒரு புதிய தடுப்பணை கட்ட அவசியம் எழவில்லை.

**68—**

## சிறிய அணை கட்டுதல்

**வினா எண் 22893—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், விருசுழி ஆற்றின் குறுக்கே திருமணவயல் கண்மாய்க்கு கால்வாய் பிரியும் இடத்தில் சிறிய அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், விருசுழியாற்றின் குறுக்கே திருமணவயல் கண்மாய்க்கு நீர் செல்லும் இடத்தில் அணை கட்டுவதால் பயன்-செலவு விகிதம் மிகவும் குறைவாகவே உள்ளதால், இத்திட்டமானது சிக்கனமானதாக இல்லை என்பதால் மேற்கண்ட இடத்தில் அணை கட்ட சாத்தியமில்லை.

**69—**

## ஆற்றுப் பகுதியைத் தூர் வாருதல்

**வினா எண் 30110—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டூர் அணைக்கட்டு முனியப்பன் கோயில் அருகிலுள்ள ஆற்றுப் பகுதியை தூர் வார அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*மேட்டூர் அணையின் மேல்மட்ட மற்றும் கீழ்மட்ட மதகிலிருந்து வரும் தண்ணீர் முனியப்பன் கோயில் அருகிலுள்ள வாய்க்கால் மூலம் காவேரி ஆற்றுக்கு செல்கிறது. அவ்வாய்க்காலின் அடிமட்டம் பாறையாக உள்ளது. இதில் தற்போது வளர்ந்துள்ள கோரைப் புற்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**70—**

## நீரைச் சேமித்தல்

**வினா எண் 30849—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோடைக் காலத்தில் மக்களின் குடிநீர் தேவைக்காகவும், அணை நீரில் வாழும் உயிரினங்களுக்காகவும், சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் குறைந்தபட்ச அளவு நீரைச் சேமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையில் பொதுவாக குடிநீர் தேவைக்காகவும், அணை நீரில் வாழும் உயிரினங்களுக்காகவும் 5018 மில்லியன் கன அடி அல்லது* 5.018 TMC feet *நீர் தேக்கி வைக்கப்படுகிறது.*





**71—**

## பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு காப்பீடு

**வினா எண் 10499—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் அதிக பால் கறவைத் திறன் கொண்ட பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு காப்பீடு செய்யும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*2011-2012-ல் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்ட 15 மாவட்டங்களில், கால்நடை காப்பீட்டுத் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அரசு மானியமாகவும், 50 விழுக்காடு கால்நடை வளர்ப்போரிடமிருந்து பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. மேலும், நடப்பாண்டில் 53,874 பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.*

**72—**

## கால்நடைக் கிளை மருந்தகம்

**வினா எண் 29274—திரு. சு. ரவி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஓச்சலம் ஊராட்சி, பழைய ஓச்சலம் கிராமத்தில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஓச்சலம் ஊராட்சி, பழைய ஓச்சலம் கிராமத்திற்கு அருகில் இரண்டு*

[2013 அக்டோபர் 30

கால்நடை மருந்தகங்கள், ஒரு கிளை நிலையம் மற்றும் ஒரு பார்வை கிளை நிலையம் செயல்படுவதாலும், பழைய ஓச்சலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடைகளின் அலகுகள் 3000-க்கும் குறைவாக உள்ளதாலும், பழைய ஓச்சலம் கிராமத்தில் கால்நடைக் கிளை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**73—**

## தொழில் முனைவோர் உருவாக்குதல்

**வினா எண் 30188—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் படித்த இளைஞர்கள் தொழில் துவங்க ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடனும், ஆண்டிற்கு ஏறக்குறைய ஓராயிரம் முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை உருவாக்கும் இலக்கோடும் தமிழ்நாடு அரசு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பயனாளிகள் முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாகப் பயிற்சியும், தொழில் துவங்க பல்வேறு சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.



2013 அக்டோபர் 30]

**74—**

## எத்தனால் விற்பனை

**வினா எண் 32298—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மடத்துக்குளம் தொகுதி, அமராவதி சர்க்கரை ஆலை உற்பத்தி செய்த எத்தனாலை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்தில் இயங்கி வரும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நாள் ஒன்றுக்கு 30 கிலோ லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலை அமைக்கப்பட்டு உற்பத்தி நடைபெற்று வருகிறது. இந்த வடிப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட எத்தனால் 24-6-2013 முதல் பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**75—**

## சர்க்கரை ஆலைக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 34737—திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலை 96.40 ஏக்கரில் அமைந்துள்ளது. இதில் மதில் சுவர் 2.60 கி.மீ. நீளம் கட்ட வேண்டும். இச்சுவர் கட்டுவதற்கு தோராயமாக தற்போது ரூ.2.80 கோடி தேவைப்படும்.

ஆலையின் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் கட்ட முடியவில்லை. இருப்பினும், ஆலையின் நிதிநிலை மேம்படும்போது சுற்றுச் சுவர் படிப்படியாக கட்டி முடிக்கப்படும்.

**76—**

**புதிய பணியிடங்கள் உருவாக்குதல்**

**வினா எண் 36637—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பத்திரப் பதிவு அலுவலகங்களில் புதிய பணியிடங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பத்திரப் பதிவுத் துறையில் மொத்தம் 5372 அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்கள் உள்ளன. அப்பணியிடங்களில், 1836 பணியிடங்கள் தற்காலிகமானவை. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களை நிரந்தரப் பணியிடங்களாக மாற்றம் செய்வது குறித்து 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் தற்போது தற்காலிகப் பணியிடங்களை நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு மட்டுமே அரசின் பரிசீலனையில் உள்ளது. இதைத் தவிர பதிவுத் துறையில் வேறு எந்தப் பணி நிலையிலும் புதிய பணியிடங்களை உருவாக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.*

**77—**

**தனி வட்டாட்சியர் ஆதி திராவிடர் நலன் அலுவலகம்**

**வினா எண் 13174—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தனி வட்டாட்சியர் (ஆதி திராவிடர் நலன்) அலுவலகம் திறக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தனி வட்டாட்சியர் (ஆ.தி.ந.) அலுவலகம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**78—**

**புதிய மயானம் அமைத்தல்**

**வினா எண் 28835—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ பல்லடம் தொகுதி, கோடாங்கிபாளையம் கிராம ஊராட்சி, எம்.ஜி.ஆர். நகரில் உள்ள ஆதி திராவிடர் காலனிக்கு புதிய மயானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கோடாங்கிபாளையம் கிராமம், எம்.ஜி.ஆர். நகரில் சுமார் 120 ஆதி திராவிட குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்படி மக்கள் 1 கி.மீ. தொலைவில் புல எண் 146-ல் 0.5 சென்ட் நிலத்தினை மயானமாக உபயோகித்து வருகின்றனர். அப்புலத்தினை மயானமாகப் பயன்படுத்த ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை. எனவே, எம்.ஜி.ஆர். நகர் ஆதி திராவிட மக்களுக்கு புதிய மயானம் அமைக்கும் சூழ்நிலை எழவில்லை.*

**79—**

## மயானத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 28837—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ பல்லடம் தொகுதி, குப்பாண்டம்பாளையம் ஆதி திராவிடர் மயானத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, குப்பாண்டம்பாளையத்தில் ஆதி திராவிட மக்களுக்கு தனி மயானம் ஏதுமில்லை. குப்பாண்டம்பாளையம் கிராம புல எண் 639-ல் வண்டிப்பாதை புறம்போக்கு நிலத்தை ஆதி திராவிடர் மக்கள் உட்பட அனைத்துப் பிரிவினரும் பொது மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி மயானத்திற்கு சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. பொது மயானத்தை ஆதி திராவிடர் இன மக்கள் உபயோகிக்க ஆட்சேபணை ஏதும் இல்லை.*

**80—**

## கூடுதல் பேருந்துகள் வசதி

**வினா எண் 21056—திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெரம்பூர் தொகுதியில் 7G, 37E, 170D, 121G, 29G மற்றும் 116L பேருந்துகளைக் கூடுதலாக இயக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*7G, 37E, 121G, 29G மற்றும் 116L வழித்தடங்களில் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:*





| வ. எண் | தடம் எண் | புறப்படுமிடம் | சேருமிடம் | பேருந்து எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 7G | கவியரசு கண்ணதாசன் நகர் | பிராட்வே | 10 |
| 2. | 37E | கவியரசு கண்ணதாசன் நகர் | அய்யப்பன் தாங்கல் | 1 |
| 3. | 121G | கவியரசு கண்ணதாசன் நகர் | சென்னை புறநகர்பேருந்து நிலையம் | 2 |
| 4. | 116L | கொடுங்கையூர்-பார்வதி நகர் | பிராட்வே | 1 |

*மேற்கண்ட தடம் எண் 7G-ல் இரண்டு கூடுதல் பேருந்துகள் 11-9-2012 முதல் இயக்கப்படுகின்றன.*

**81—**

## குளிர்சாதனப் பேருந்துகள் இயங்குதல்

**வினா எண் 24559—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ள நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளை இணைத்து போதிய பேருந்து வசதி உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள சுற்றுலாத் தலங்களை இணைத்து குளிர்சாதனப் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

**82—**

## போக்குவரத்து நெரிசலை சீர்செய்தல்

**வினா எண் 28155—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் ரயில் நிலையம் முன்பு ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சீர் செய்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எழும்பூர் ரயில் நிலையம் முன்பு ஏற்படும் போக்குவரத்தினை சரி செய்திட காவல் துறையால் கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:—

*1. தினசரி காலை 5-00 மணி முதல் 8-00 மணி வரை காவல் ஆய்வாளர் மற்றும் இரண்டு காவல் உதவி ஆய்வாளர்கள் போக்குவரத்து கிழக்கு மாவட்டத்திலிருந்து சுழற்சி முறையில் நியமிக்கப்பட்டு போக்குவரத்து சீராக்கப்படுகிறது.*

*2. எழும்பூர் போக்குவரத்து காவல் நிலையத்திலிருந்து தினசரி ஒரு சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் ஆகியோர் காலை 8-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரையிலும், மாலை 4-00 மணி முதல் இரவு 8-00 மணிவரை பாதசாரிகள் நடைபாதையைக் கடப்பதற்கு ஏதுவாகவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.*

*3. போக்குவரத்து அதிகமாக உள்ள நேரங்களில் அதிகப்படியான காவலர்களை நியமித்து போக்குவரத்து சீராக செல்வதற்கு காவல் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.*

*4. தினசரி (ஞாயிற்றுக்கிழமை தவிர) காலை 9-00 மணி முதல் 11-00 மணி வரையிலும், மாலை 5-00 மணி முதல் இரவு 8-00 மணி வரையிலும் பாந்தியன் சாலை, காவல் ஆணையாளர் சாலை, காந்தி இர்வின் சாலை, கென்னட் லோன், வேனல்ஸ் சாலை ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டு வாகனங்கள் செல்லக்கூடிய இடத்திற்கு விரைவாக செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*





*5. எழும்பூர் போக்குவரத்து காவல் நிலைய நான்கு சக்கர மற்றும் இரண்டு சக்கர இழுவை வாகனங்கள்மூலம் எழும்பூர் ரயில் நிலையம் அருகில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்படும் வாகனங்கள் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.*

*6. காந்தி இர்வின் சாலையில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்படும் தள்ளுவண்டி மற்றும் நடைபாதை கடைகள்மீது அவ்வப்போது (Petty cases) வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**83—**

## நியமனம் வழங்குதல்

**வினா எண் 22058—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர் நல வாரியம் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் அனைத்து மீனவர் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

ஆம். மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள மீனவர்களுக்கு கீழ்க்காணும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றன:—

[2013 அக்டோபர் 30

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | விபத்து தீர்வழி (நிவாரணம்) | |
| | (அ) விபத்தினால் மரணம் | 1,00,000 |
| | (ஆ) இரண்டு கைககள் இழப்பு | 1,00,000 |
| | (இ) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| | (ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | (உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |
| | (ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 50,000 |
| | (எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 20,000 |
| 2. | மீன் பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின்பு உடனடியாக (விபத்தின் காரணமாக அல்லாமல்) | 20,000 |
| 3. | மீன் பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 1,00,000 |
| 4. | இயற்கை மரணம் | 10,000 |
| 5. | ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |



2013 அக்டோபர் 30]

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| 6. | உறுப்பினர்களின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கி படிப்பவர்கள் | |
| | | மாணவ | மாணவியர் | மாணவ | மாணவியர் |
| | (a) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | .. | .. |
| | (b) பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | .. | .. |
| | (c) தொழிற் பயிற்சி (I.T.I.) மற்றும் பல்தொழிற்நுட்ப பயிற்சி (Polytechnic (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | (d) இளங்கலை பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | (e) முதுகலை பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | (f) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | (g) முதுகலை தொழிற் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | (அ) உறுப்பினரின் திருமண உதவி | | | 3,000 | 5,000 |
| | (ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | | | 3,000 | 5,000 |

[2013 அக்டோபர் 30

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 8. | மகப்பேறு/கருச்சிதைவு/கருக்கலைப்பு உதவித் தொகை | |
| | (i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் ஆறு மாதங்கள்) | 6,000 |
| | (ii) கருச்சிதைவு | 3,000 |
| | (iii) கருக்கலைப்பு | 3,000 |
| 9. | முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 400 |

**2012–2013 ஆம் ஆண்டில் மீனவர் நல வாரியம்மூலம் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்ட விவரம்**

| வ. எண் | திட்டத்தின் விவரம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | இயற்கை மரணத்திற்கு நிவாரணம் | 497 | 4,97,000 |
| 2. | விபத்து மரணத்திற்கு நிவாரணம் | 115 | 1,15,00,000 |
| 3. | மீன் பிடிக்கையில் (அ) அதற்கு பின்பு உடனடியாக இறத்தல் | 5 | 1,00,000 |
| 4. | மீன் பிடிக்கையில் காணாமல்போன மீனவர் நிவாரணம் | 5 | 5,00,000 |
| 5. | விபத்தில் உடல் உறுப்பு இழப்பு நிவாரணம் | 12 | 6,50,000 |
| 6. | திருமண உதவித் தொகை | 770 | 29,40,000 |
| 7. | கல்வி உதவித் தொகை | 7140 | 1,22,68,850 |
| 8. | ஈமச் சடங்கு உதவித் தொகை | 606 | 15,15,000 |
| 9. | மகப்பேறு உதவித் தொகை | 61 | 3,66,000 |
| | மொத்தம் | 9211 | 3,03,36,850 |



2013 அக்டோபர் 30]

II) **மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் மீனவர் மற்றும் அவர் சார்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்கண்ட நிவாரணத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றன**

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மீன் பிடித்தல் தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்குதல் | 2,000 |
| 2. | தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 1,200 |
| 3. | தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 1,200 |
| 4. | மீன்பிடி குறைவு காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை வழங்குதல் | 4,000 |
| 5. | மீனவர் குழு காப்புறுதி திட்டம் | |
| | (அ) விபத்தினால் மரணம் | 1,00,000 |
| | (ஆ) நிரந்தர ஊனம் | 1,00,000 |
| | (இ) பகுதி ஊனம் | 50,000 |
| | (ஈ) காணாமல் போகும் நிகழ்வில் | 1,00,000 |
| 6. | பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பங்களுக்கு தினசரி உதவித் தொகை | 250 |
| 7. | காணாமல் போகும் மீனவர் குடும்பத்திற்கு தினசரி உதவித் தொகை | 250 |

| வ. எண் | நிவாரணம் அல்லது உதவி | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 8. | இலங்கை கடற்படை தாக்குதலால் இறக்கும் மீனவர் குடும்பத்திற்கு நிதி உதவித் தொகை/இறக்கும் மீனவர் அக்குடும்பத்தில் ஒரே பொருளீட்டுபவராக இருப்பின் | 3,00,000<br>5,00,000 |
| 9. | இலங்கை கடற்படை தாக்குதலில் சிறு காயம் அடையும் நிகழ்வில் மீனவருக்கு நிவாரணத் தொகை | 20,000 |
| 10. | இலங்கை கடற்படை தாக்குதலில் படுகாயம் அடையும் நிகழ்வில் மீனவருக்கு நிவாரணத் தொகை | 50,000 |
| 11. | கடலில் மீன் பிடிக்கும்போது துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவரது பிள்ளைகள்/ காணாமல் போகும் மீனவர்களின் பிள்ளைகள் உயர் கல்வி கற்கும் பொருட்டு நிதியுதவி திட்டம் | |
| | (அ) கல்விக் கட்டணம் | தொடர்புடைய பாடப் பிரிவிற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம் |
| | (ஆ) உறைவிடக் கட்டணம் (ஆண்டொன்றுக்கு) | |
| | (1) நகர்புறப் பகுதி | 15,000 |
| | (2) பிற பகுதிகள் | 10,000 |



## 2012–2013 ஆம் ஆண்டில் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக இருக்கும் மீனவர் மற்றும் அவர் சார்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவித் தொகை விவரம்

| வ. எண் | திட்டத்தின் விவரம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மீன் பிடித்தல் தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்குதல் | 154705 | 30,94,08,000 |
| 2. | தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 203742 | 24,44,90,400* |
| 3. | தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் | 171113 | 20,53,35,600 |
| 4. | மீன்பிடி குறைவு காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை வழங்குதல் | 170000 | 68,00,00,000* |
| *குறிப்பு: நிவாரணத் தொகை பட்டுவாடா பணி நடைபெற்று வருகிறது | | | |
| 5. | மீனவர் குழு காப்புறுதித் திட்டம் | 124 | 1,16,50,000 |
| 6. | பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பங்களுக்கு தினசரி உதவித் தொகை | 5 | 5,72,000 |
| 7. | காணாமல் போகும் மீனவர் குடும்பங்களுக்கு தினசரி உதவித் தொகை | 19 | 11,93,000 |

**84—**

## நிவாரணம் வழங்குதல்

**வினா எண் 29006—திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மீன் பிடிக்கும் காலங்களில் கடலில் இயற்கைச் சீற்றத்தால் மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலையில் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பருவமழைக் காலங்களில் கடல் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், மீன்பிடி குறைவு காரணமாக வருமானமின்றி மிகவும் சிரமத்திற்குள்ளாகும்போது அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மீனவர்களிடையே ஒரு சிறிய தொகையை ஒன்பது மாதங்களுக்கு ரூ.600/- சேமித்திடவும், அவற்றுடன் மத்திய மாநில அரசுகள் தமது பங்காக ரூ.1200/- சேர்த்து, மொத்தம் ரூ.1800/-உதவித் தொகையை நிவாரணமாக ஆண்டுதோறும் அரசு வழங்கி வருகிறது.*

*மேலும், அரசால் வழங்கப்பெறும் இந்நிவாரணத் தொகை மூன்று மாதங்களுக்கு போதுமானதாக இல்லை என்பதால் அத்தொகையை உயர்த்தி 2011-2012ஆம் நிதி ஆண்டு முதல் பருவமழைக் காலங்களில் மீன்பிடி விசைப் படகுகள், இழுவலைப் படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டை வைத்துள்ள கடல் மீனவக் குடும்பங்களுக்கு அரசு சிறப்பு நிவாரணமாக ரூ.4000/-ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.*





**85—**

## மரக் கன்றுகள் நடுதல்

**வினா எண் 29289—திரு. கார்த்திக் தொண்டைமான்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வீதிகள்தோறும் மரக் கன்றுகள் நடுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வீதிகள்தோறும் மரக் கன்றுகள் நடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் வனத் துறையிடம் இல்லை. இருப்பினும், நடப்பு ஆண்டு மாபெரும் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடவு செய்ய 1,96,625 நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை நகராட்சி நிருவாகம் கோரினால் தேவையான மரக் கன்றுகள் புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வீதிகள்தோறும் நடவு செய்யப்படும்.*

**86—**

## தரிசு நிலங்களில் மரம் நடுதல்

**வினா எண் 31977—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் பசுமைப் பரப்பை உயர்த்தும் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களில் அதிக அளவில் மரம் நடுவதற்கும், அதனைப் பராமரிக்கவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பசுமைப் பரப்பை உயர்த்தும் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களில் அதிக அளவில் மரம் நடுவதற்கும் அதனைப் பராமரிக்கவும், தனியார் நிலங்களில் மரங்கள் நடவு செய்வதை தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. விரும்பி முன்வரும் விவசாயிகளுக்கு அவர்களின் நிலங்களில் வனத் துறை இலவசமாக மரம் நட்டுத் தருகிறது. 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2011-2012 ஆண்டு முடிய 3 ஆண்டுகளில் மாநில நிதியின்கீழ் 5.45 கோடி மரக் கன்றுகள் 84,099 விவசாயிகளின் நிலங்களில் நட்டுத் தரப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்தின் உட்பிரிவான தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ் 2012-2013 முதல் 2016-2017 ஆம் ஆண்டிற்குள் 5,000 கிராமங்களிலுள்ள விவசாயிகளின் நிலங்களில் 10 கோடி மரக் கன்றுகள் நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டு, 2012-2013 ஆம் ஆண்டில் 1,000 கிராமங்களிலுள்ள விவசாயிகளின் நிலங்களில் இலவசமாக ஒரு கோடி மரக் கன்றுகள் நடவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் ஆண்டில் 1,000 கிராமங்களில் 2 கோடி மரக் கன்றுகள் நட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நடவு செய்து கொடுக்கப்படும் மரக் கன்றுகள் தகுந்த முறையில் பராமரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், நீண்டகால சுழற்சி மரக் கன்றுகளுக்கும் (எக்டருக்கு 500 மரங்கள்) குறுகிய கால சுழற்சி மரக் கன்றுகளுக்கும் (எக்டருக்கு 1000 மரங்கள்) மூன்றாம் ஆண்டில் உயிர்ப்புச் செடிகளின் அடிப்படையில் எக்டருக்கு ரூ.2,500 ஊக்கத் தொகையாக வழங்கி விவசாயிகளிடம் மரம் வளர்த்தலை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**87—**

## பாதுகாப்பு வளையம் அமைத்தல்

**வினா எண் 32374—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மாவட்டம், கஞ்சமலை வனப் பகுதியில் பூங்கா அமைத்து வனப் பகுதியைச் சுற்றி பாதுகாப்பு வளையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், சேலம் வனக் கோட்டம் சேர்வராயன் தெற்கு வனச் சரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கஞ்சமலை வனப் பகுதி 1809.82 எக்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இவ்வனப் பகுதி 18-11-1890 முதல் காப்புக் காடாக அறிவிக்கை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்காப்புக் காடு சேலம் நகருக்கு அருகில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. இக்காப்புக் காட்டிற்கு தொடர்ச்சியாக மற்ற காப்புக் காடுகளோ அல்லது அரிய வகை வன உயிரினங்களோ இல்லாததால் இவ்வனப் பகுதியை சுற்றி பாதுகாப்பு வளையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

எனவே, இக்காப்புக் காட்டில் பூங்கா அமைத்துப் பராமரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. மேலும், வனப் பகுதியினை ஒட்டியுள்ள இடங்களில் வசிக்கும் பொது மக்களின் ஒத்துழைப்போடு காப்புக் காடு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**88—**

## அரசு நிவாரணம் வழங்குதல்

**வினா எண் 35157—திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம் பகுதியில் வன விலங்குகளிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டத்தில் வன உயிரினங்களினால் பயிர் சேதமடைந்தமையால் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அரசாணை (நிலை) எண் 98, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 17-8-2011-ன்படி பின்வருமாறு அரசு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது:*

| வருடம் | நிவாரணம் பெற்ற நபர்கள் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 2007-2008 | 11 | 59,500/- |
| 2008-2009 | 33 | 2,00,000/- |
| 2009-2010 | 35 | 2,50,000/- |
| 2010-2011 | 37 | 2,52,000/- |
| 2011-2012 | 37 | 6,23,490/- |
| 2012-2013 | 65 | 7,78,800/- |

*2013-2014 ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ள இனங்களுக்கு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**89—**

## காலமுறை ஊதியம் வழங்குதல்

**வினா எண் 35356—திரு. ஜே.ஜி. எபிரின்ஸ்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அடர்ந்த காடுகளில் பணிபுரியும் வேட்டைத் தடுப்பு காவலர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தை காலமுறை ஊதியமாக வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

*வனத் துறையில் பணிபுரியும் வேட்டைத் தடுப்பு காவலர்களுக்கு அரசாணை (நிலை) எண் 28, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ-2) துறை, நாள் 1-2-2013-ன்படி ரூ.4,000/- என மாதந்தோறும் தொகுப்பூதியம்* (Consolidated wage) *வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி குறைந்தபட்சக் கூலி அடிப்படையில் இவர்களது தொகுப்பூதியமானது ரூ.6,750/- என உயர்த்தி 950 நபர்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.*

**90—**

## வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 21636—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, குடுமியான்மலை ஊராட்சி, அண்ணா நகர் தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டவும், எழுமிச்சிபட்டி தொடக்கப் பள்ளிக்கு வகுப்பறை கட்டவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, குடுமியான்மலை ஊராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் மற்றும் எழுமிச்சிபட்டி ஆகிய குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளிகள் ஏதும் இல்லை. இக்குடியிருப்பில் உள்ள குழந்தைகள் குடுமியான்மலை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் பயில்கின்றனர். இப்பள்ளிக்குப் போதுமான வகுப்பறை வசதிகள் உள்ளன.*

**91—**

## மாவட்ட அருங்காட்சியகம்

**வினா எண் 32526—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்திலுள்ள மாவட்ட அருங்காட்சியகங்களைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் கரூர் மற்றும் வேலூர் ஆகிய இரண்டு மாவட்ட அருங்காட்சியகங்களை மேம்படுத்த மாவட்டத்திற்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் நிதியாண்டில் மேலும் இரண்டு மாவட்ட அரசு அருங்காட்சியகங்களை மேம்படுத்தும் பணிகளுக்கு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண் 115, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ1) துறை, நாள் 30-5-2013-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு நிதியாண்டிலும் மாவட்டத்தில் உள்ள அருங்காட்சியகங்களை மேம்படுத்த நிதி நிலைக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**92—**

## அருங்காட்சியகத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 32527—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) சென்னையிலுள்ள அருங்காட்சியகம் மற்றும் தாவரவியல் அருங்காட்சியகத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை அரசு அருங்காட்சியகத்தில் மானிடவியல் காட்சிக் கூடம் மற்றும் அமராவதி காட்சிக் கூடம், இந்து சிற்பக் கூடம் மற்றும் சமணச் சிற்பக் கூடங்கள் முழுமையாக சீரமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகத்தின் ஒரு பிரிவு தாவரவியல் கூடமாகும். இக்காட்சிக் கூடத்தில் 2011-2012 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ஆறு புதிய காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டு, நெசவு அச்சுக் கட்டைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2012-2013 ஆம் ஆண்டு வட்டார மற்றும் உள்ளூர் அருங்காட்சியகங்களை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் மைய மற்றும் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின்கீழ் தாவரவியல் பிரிவு காட்சிக் கூடத்தில் மேலும் மூன்று புதிய சுற்றுச்சூழல் காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.*

**93—**

## சிகிச்சை அளித்தல்

**வினா எண் 16884—திரு. சு. ரவி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு காஞ்சிபுரம் அரசு பொது மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகளை அனுமதித்து உரிய சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், ஆட்டுப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்ட நோயாளிகளை காஞ்சிபுரம் அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து உரிய முறையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. இது தவிர காஞ்சிபுரம் எல்லைக்குட்பட்ட பகுதியிலும் அதைச் சுற்றி அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து வரும் நோயாளிகளை அனுமதித்தும் உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

**94—**

## பொது மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 19179—திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, தென்சென்னையில் அமைப்பதாக இருக்கும் பொது மருத்துவமனையை வேளச்சேரியில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருத்துவக் கல்வி மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககங்களின் கட்டுப்பாட்டில் வேளச்சேரியில் பொது மருத்துவமனை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**95—**

## உடலியக்க மருத்துவக் குழு அமைத்தல்

**வினா எண் 19542—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2013 அக்டோபர் 30]

(அ) தமிழகத்தில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான உடலியக்க மருத்துவக் குழு அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாவட்டம் மற்றும் மாநில அளவிலான உடலியக்க மருத்துவக் குழுக்கள் சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகின்றன. அவை போதுமானவை. எனவே, தமிழகத்தில் மாநில மற்றும் மாவட்ட அளவில் புதிதாக தனியாக உடலியக்க மருத்துவக் குழு அமைத்திட தேவை எழவில்லை.

**96—**

## உடலியக்க சிகிச்சை மருத்துவமனை

**வினா எண் 19543—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் பெண் உடலியக்க நிபுணர்களால் பெண்களுக்காக மட்டும் உடலியக்க சிகிச்சையளித்திட, மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களிலும் பெண்களுக்கு மட்டுமே உடலியக்க சிகிச்சை அளித்திட மருத்துவமனை அமைப்பது என்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2013 அக்டோபர் 30

**97—**

**தோல் நோய் சிறப்பு மருத்துவர் நியமனம்**

**வினா எண் 20479—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் தோல் நோய் சிறப்பு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை 124 படுக்கை வசதிகளைக் கொண்ட வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,014 வெளிநோயாளிகள், 71 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர், முதுநிலை உதவி மருத்துவர் மற்றும் குடிமை மருத்துவர் பணியிடங்கள் 12. இதில் 11 மருத்துவப் பணியிடங்களில் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 1 பணியிடம் தோல் நோய் சிறப்பு மருத்துவர் பணியிடமாகும். இப்பணியிடம் தற்சமயம் பொது மருத்துவரால் நிரப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் பணி நியமனம் மற்றும் கலந்தாய்வின்மூலம் தோல் நோய் மருத்துவரைக் கொண்டு இப்பணியிடம் நிரப்பப்படும்.

**98—**

**மருத்துவர் பணி நியமனம்**

**வினா எண் 20480—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2013 அக்டோபர் 30]

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைக்கான மருத்துவரைப் பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு காது, மூக்கு, தொண்டை மருத்துவர் பணியிடம் ஒன்று ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போது காலியாக உள்ள இம்மருத்துவர் பணியிடம் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பணியிட மாறுதல் கலந்தாய்வுமூலம் நிரப்பப்படும்.

**99—**

**கூடுதல் மருத்துவர் நியமனம்**

**வினா எண் 22362—திருமதி. ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி ஒன்றியம், அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் மருத்துவர் நியமித்து 24 மணி நேரமும் இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் சுகாதாரப் பகுதி மாவட்டம், சங்கரி ஊராட்சி ஒன்றியத்தில் குள்ளம்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. ஆனால், குள்ளம்பட்டியில் துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு கிராம சுகாதார செவிலியர் பணியிடம் மட்டுமே அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. துணை சுகாதார

நிலையங்களுக்கு மருத்துவர் பணியிடம் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. குள்ளம்பட்டி துணை சுகாதார நிலையம், சங்கரி ஒன்றியத்தில் உள்ள அரசிராமணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்கி வருகிறது. அரசிராமணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை எண் 387, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 17-10-2007-ன்படி 24x7 மணி நேரமும், 3 செவிலியர்களுடன்கூடிய பிரசவ மருத்துவமனை சேவையாக விரிவுபடுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, குள்ளம்பட்டி துணை சுகாதார நிலையத்தில் கூடுதல் மருத்துவர் நியமிக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

**100—**

**சிறப்பு மருத்துவர்கள் பணி நியமனம்**

**வினா எண் 22379—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குளச்சல் அரசு மருத்துவமனையில் போதிய சிறப்பு மருத்துவர்களைப் பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குளச்சல் அரசு மருத்துவமனைக்கு 1 மகப்பேறு மருத்துவர், 1 குழந்தை நல மருத்துவர், 1 மயக்கவியல் மருத்துவர் மற்றும் 2 பொது மருத்துவர் என சிறப்பு மருத்துவர்கள் உட்பட மொத்தம் 5 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது 1 மகப்பேறு மருத்துவர், 2 குழந்தை நல மருத்துவர்கள் மற்றும் 2 பொது மருத்துவர்கள் என 5 மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். வெற்றுப் பணியிடம் ஏதும் இல்லை.*



**பட்டியல்–19**

**1—**

**மாற்றுப் பாதை அமைத்தல்**

**வினா எண் 6323—திரு. எம்.கே. செல்வராஜு:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் தெற்கு தொகுதி, குகை பகுதியில் உள்ள திருச்சி பிரதான சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்றுப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*சேலம் தெற்கு தொகுதி, குகை பகுதியில் உள்ள திருச்சி பிரதான சாலையானது நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையாகும். மாற்றுப் பாதை அமைக்க சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான அகலமான சாலை ஏதும் அவ்விடத்தில் இல்லை. இருப்பினும், திருமணிமுத்தாறு ஆற்றின் கரையில் பாலம் அமைத்து சாலை அமைக்கலாம். அவ்வாறு அமைக்க வேண்டுமெனில் திட்ட ஆலோசகரை நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தால் மட்டுமே மேற்கண்ட பணி செய்ய இயலும். இந்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.*

**2—**

**வணிக வளாகம் அமைத்தல்**

**வினா எண் 9009—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஸ்ரீரங்கம் பகுதியில் குளிர்பதன வசதியுடன் வணிக வளாகம் அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட 1 முதல் 6 வரையிலான வார்டு பகுதிகளுக்குள் குளிர்பதன வசதியுடன் வணிக வளாகம் அமைக்கும் பணி ஏதும் நடைபெறவில்லை.*

**3—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 10347—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், செட்டிப்பட்டி செல்லியம்மன்கோயில் தோட்டம், வீடுகளுக்கு குடிநீர் வசதி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி கிராமம், செட்டிப்பட்டி செல்லியம்மன்கோயில் தோட்டம் என்பது அரசிராமணி பேரூராட்சியின் ஒரு பகுதியாகும். இப்பகுதியின் மக்கள்தொகை 80. இப்பகுதியில் அரசிராமணி பேரூராட்சி தனிக் குடிநீர் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்டுள்ள பொதுக் குழாய் வழியாக வாரிய விதிமுறைகளுக்கேற்ப போதுமான அளவு காவேரிக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், கூடுதலாக இப்பகுதிக்கு குடிநீர் வசதி வழங்கும் அவசியம் தற்போது எழவில்லை.*



**4—**

**குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்**

**வினா எண் 16828—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 8-வது வார்டு, ஜே.பி.என். நகர் பிரதான சாலை, 12-வது வார்டு, மணியக்கார தெரு, மூகாம்பிகை கோயில் மேற்கு, 27-வது வார்டு, 7-வது தெரு பின்புறத்தில் ஆழ்துளைக் கிணறுகள், குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் 8-வது வார்டில் ஜே.பி.என். நகர் பிரதான சாலை, 12-வது வார்டில் மணியக்கார தெரு, மூகாம்பிகை கோயில் மேற்கு, 27-வது வார்டு, 7-வது தெரு பின்புறத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து கைப்பம்புகள் பொருத்தி அவை நல்ல முறையில் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ளன என்பதால் புதியதாக ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் குழாய்கள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**5—**

**ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் அமைத்தல்**

**வினா எண் 16831—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 4-வது வார்டு பிரதான சாலை ஏரி அருகில், வீட்டு எண் 256 காலி மனை*

*அருகில் 27-வது வார்டு, புதுப்பேட்டை தெருவில் ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சி, வார்டு எண் 4 பிரதான சாலை ஏரி அருகில், வீட்டு எண் 256 காலி மனை அருகில் 27-வது வார்டு, புதுப்பேட்டை தெரு பகுதியில் ஏற்கெனவே ஆழ்துளைக் குழாய்க் கிணறு மற்றும் கைப்பம்பு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதால் தற்போது ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**6—**

## தனிக் குடிநீர்த் திட்டப் பணிகள்

**வினா எண் 18275—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியில் தனிக் குடிநீர் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் தனிக் குடிநீர் திட்டத்தினை ரூ.283.09 கோடி மதிப்பீட்டில் அரசாணை எண் 258, நாள் 31-12-2009-ன்மூலம் நிலை-1-ன் பணிகள் (சிப்பம் 1 முதல் 5 முடிய) டிசம்பர் 2013-க்குள்ளும், நிலை 2-ம் பணிகள் (சிப்பம் 6,7,8) ஜனவரி 2014-க்குள்ளும் விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*





**7—**

## கழிவுநீர்க் கால்வாயைத் தூர் வாருதல்

**வினா எண் 18509—திரு. எஸ். செந்தில்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட திருச்சி மாநகராட்சி வார்டு எண் 31 திருநகர், அடைக்கல அன்னை நகர், பொன்னேரிபுரம், 30-வது வார்டு தங்கேஸ்வரி நகர், கணேஷ்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிவுநீர்க் கால்வாயைத் தூர் வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருச்சி மாநகராட்சி, பொன்மலைக்கோட்டை வார்டு எண் 30-ல் உள்ள தங்கேஸ்வரி நகர் மற்றும் கணேஷ்புரம் பகுதிகளில் உள்ள 645 மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் வாய்க்காலும் வார்டு எண் 81-ல் உள்ள பொன்னேரிபுரம், முல்லை நகர் முதல் மாவடிக்குளம் வரையில் உள்ள 360 மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் வாய்க்காலும் பொதுமக்களின் நலன் கருதி தூர் வாருவதற்கென அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1.70 இலட்சத்திற்கு தற்பொழுது தூர் வாரப்பட்டுள்ளது.*

**8—**

## புதிய வாகனங்கள் வழங்குதல்

**வினா எண் 19863—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியில் அன்றாட கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைகளைச் செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மைத் திட்ட கிடங்கிற்குக் கொண்டு செல்ல புதிய வாகனங்கள் அளிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் 60 கோட்டப் பகுதிகளில், 21 கோட்டங்களில் தனியார்மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி கோட்டங்களில் சேகரம் ஆகும் திடக்கழிவுகள் தனியார் நிறுவனத்தினரால் உரிய வாகனங்கள்மூலம் செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மைத் திட்டக் கிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மாநகராட்சியால் பராமரிக்கப்படும் 30 கோட்டப் பகுதிகளில், தற்பொழுது 46 டிராக்டர், 6 ட்ரெயிலர் டம்பர் பிளேசர் வாகனம், 6 டிப்பர் வாகனம் மற்றும் 2 ஜே.சி.பி. வாகனம் ஆக மொத்தம் 60 வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும், தற்பொழுது 2011-2012 ஆம் ஆண்டு* IUDM *திட்டத்தில் தொகை ரூ.100.00 இலட்சங்கள், மதிப்பீட்டில் ஒன்பது மெட்ரிக் டன் அளவில் காம்பாக்டர்கள் வாகனம் 2 மற்றும் பும்கார்ட் வாகனங்கள் 50 வாங்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைக்கு பயன்பாட்டில் உள்ளன. மேலும், சேலம் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்காக 2012-2013 ஆம் ஆண்டு* IUDM *திட்டத்தில் தொகை ரூ.540.40 இலட்சங்களில் ஜே.சி.பி. வாகனம் 2, ஒன்பது மெட்ரிக் டன் காம்பாக்டர் வாகனங்கள் 4, ஆறு மெட்ரிக் டன் காம்பாக்டர் வாகனங்கள் 2, எல்எம்.வி டிப்பர் வாகம் 8, டம்பர் பிளேசர் வாகனம் 6, ஆறு டன் டிப்பர் வாகனம் 2 ஆக மொத்தம் 24 வாகனங்கள் புதியதாக வாங்கிட 25-10-2012 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி வாகனங்கள் முழுமையாக வாங்கப்பட்ட பின்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்குப் போதுமானவையாக இருக்கும்.*



**9—**

## கொசு மருந்து அடித்தல்

**வினா எண் 19866—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியில் கொசுத் தொல்லையை ஒழிக்கவும், சுகாதாரத்தை மேம்படுத்தவும் வாரமிருமுறை கொசு மருந்து அடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், போர்க் கால அடிப்படையில் தினசரி கை புகை தெளிப்பான் மற்றும் வாகன புகை தெளிப்பான் ஆகியவற்றைக் கொண்டு கொசுக்களை ஒழிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தொற்று நோய்கள் பரவாவண்ணம், குறிப்பாக டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசுக்களைக் கட்டுப்படுத்திட மருத்துவ அலுவலர்களையும், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன உறுப்பினர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்களைக் கொண்டு குழுக்கள் அமைத்து அக்குழுவில் துப்பரவு ஆய்வாளர்கள், துப்பரவுப் பணி மேற்பார்வையாளர்கள், நகர சுகாதார செவிலியர்கள், மலேரியா பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு கொசுக்கள் மற்றும் கொசுப் புழுக்களை அழிக்கும் சிறப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**10—**

## மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 20935—திருமதி ர. சுபா:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 30

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், பட்டுத் துறை ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், பட்டுத்துறை ஆதி திராவிடர் காலனியில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பட்டுத்துறை புதிய அரிசன காலனியில் ஆழ்துளைக் கிணறு நீராதாரத்தைப் பயன்படுத்தி 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, கடந்த டிசம்பர் 2012-ல் ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, ஆதி திராவிடர் தெருவில் புதிய மேல்நிலைத் தொட்டி அமைக்கும் தேவை எழவில்லை.

**11—**

## பாதாளச் சாக்கடை அமைத்தல்

**வினா எண் 21353—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை வடக்கு தொகுதி, மேலமடையில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

மேலமடை பகுதியானது மதுரை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதியாகும். ஏற்கெனவே கிராமப் பஞ்சாயத்துப் பகுதியாக இருக்கும்போது மேற்கொள்ளப்பட்ட பாதாளச் சாக்கடை அமைப்பு உரிய தொழில்நுட்ப முறையில் அமைக்கப்படவில்லை. எனவே, மேற்படி பகுதியில் முறையாக



2013 அக்டோபர் 30]

பாதாளச் சாக்கடை வசதிகள் ஏற்படுத்தித் தருவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு, திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்ட பின்பு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் பகுதி-2 நிதி அல்லது நகர்ப்புற உட்கட்டமைப்பு திட்ட நிதியில் மானியமாகப் பெற்று நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**12—**

## இலவச சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 21969—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் இலவச சிறுநீர் கழிப்பிடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில், மாநகராட்சி சார்பில் கட்டணக் கழிப்பிடம் அமைக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. இருப்பினும் இலவச சிறுநீர் கழிப்பிடம் கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**13—**

## சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல்

**வினா எண் 22566—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 30

*(அ) சங்கரி தொகுதி, சங்கரி ஒன்றியம், எடங்கணசாலை பேரூராட்சி கொசவப்பட்டி மாரியம்மன் கோயில், தர்மகர்த்தா கொட்டாய், தண்டிக்காடு, பண்டிதகவுண்டனூர், ஏரியூர், தாவக்காடு, காடையாம்பட்டி செட்டியார் தெரு மற்றும் மாரியம்மன் கோயில்ஆகிய பகுதிகளில் ஆழ்துறைக் கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சங்கரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எடங்கணசாலை பேரூராட்சியில் கொசவப்பட்டி மாரியம்மன் கோயில் காடையாம்பட்டி செட்டியார் தெரு மற்றும் மாரியம்மன் கோயில் ஆகிய பகுதிகள் உள்ளன. கொசவப்பட்டி மாரியம்மன் கோயில் பகுதிக்கு இப்பகுதியில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு காவேரிக் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், இப்பகுதியில் ஒரு சிறு மின் விசைப் பம்பு திட்டமும் அமைந்துள்ளது. காடையாம்பட்டி செட்டியார் தெரு மற்றும் மாரியம்மன் கோயில் பகுதிகளுக்கு கிழக்குப் புளியம்பட்டியில் உள்ள 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக காவேரிக் குடிநீர் வழங்கப்படுகிறது. மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏகாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பண்டிதகாரனூர் (பண்டிதகவுண்டனூர்) குடியிருப்பில் உள்ள ஏனைய பகுதிகளான தர்மகர்த்தா கொட்டாய், தண்டிக்காடு ஏரியூர் மற்றும் தாவக்காடு ஆகிய பகுதிகளுக்கு இப்பகுதியில் அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டியிலிருந்து ஆழ்துளைக் கிணற்று நீரும், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு காவேரிக் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.*



2013 அக்டோபர் 30]

**14—**

## சுரங்கப் பாதையைத் திறத்தல்

**வினா எண் 22998—திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்குப் பின்புறம் அமைந்துள்ள சுரங்கப் பாதையை விரைவில் திறக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு இராஜாஜி மருத்துவமனைக்குப் பின்புறம் அமைந்துள்ள சுரங்கப் பாதை ஏற்கெனவே திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டிருந்தது. பொதுமக்கள் சுரங்கப் பாதையைப் பயன்படுத்தாத காரணத்தால், மதுரை மாநகர் போக்குவரத்து காவல் துறைமூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, சுரங்கப் பாதையைப் பயன்படுத்துவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**15—**

## சி.எப்.எல். விளக்குகள் அமைத்தல்

**வினா எண். 25223—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 3-வது வார்டு கணேஷ் நகரில் தெரு விளக்குகள் இல்லாத மின் கம்பங்களில் மின் விளக்குகள் அமைக்கவும், மையப் பகுதிகளில் ஓர் உயர் கோபுர விளக்கும் மற்றும் 17-வது வார்டிலுள்ள அனைத்து மின் கம்பங்களுக்கும் சி.எப்.எல். மின் விளக்குகள் அமைக்கவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) அரக்கோணம் நகரசாட்சி, 3-வது வார்டு, கணேஷ் நகரில் அனைத்து மின் கம்பங்களிலும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மின் சிக்கனத்தைக் கருத்தில் கொண்டு உயர் மின் கோபுர விளக்கு அமைக்க இயலாது. வார்டு 17-ல் அனைத்து மின் கம்பங்களிலும் சி.எப்.எல். மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.*

**16—**

## புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 25235—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 7-வது வார்டு, அருணாச்சலரெட்டி 2-வது தெரு மற்றும் காவனூர் ரோடு, 13-வது வார்டு மசூதி சந்து தெரு ஆகிய பகுதிகளில் ஒரு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சி, வார்டு எண் 7-ல் உள்ள அருணாசலரெட்டி 2-வது தெரு மற்றும் காவனூர் ரோடு, 13-வது வார்டு மசூதி சந்து தெரு ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து, கைப்பம்பு பொருத்தப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ளது.*





**17—**

## சிறிய குடிநீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 25238—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 9-வது வார்டுக்குட்பட்ட மோசூர் சாலையில் உள்ள காஜா ரைஸ் மில் அருகில் சிறிய குடிநீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 9, மோசூர் சாலையில் உள்ள காஜா ரைஸ் மில் அருகில் ஏற்கெனவே குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**18—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 25265—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 23-வது வார்டு, ஈ.டபிள்யூ.எஸ். இரயில்வே காலனி புதிய பேருந்து நிலையம், சோளிங்கர் ரோடு, 27-வது வார்டு, புதுப்பேட்டை சாலை ஆகிய பகுதிகளில் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 23, ஈ.டபிள்யூ.எஸ். இரயில்வே காலனி புதிய பேருந்து நிலையம், சோளிங்கர் ரோடு, 27-வது வார்டு புதுப்பேட்டை சாலை ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

**19—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 25294—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, ஓமலூர் வட்டம், தாரமங்கலம் 16-வது வார்டு, ஏரிக்கோடி காட்டுவளவு மற்றும் நத்தக்காடனூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் பேரூராட்சி 16-வது வார்டு ஏரிக்கோடி காட்டுவளவு பகுதியின் தற்போதைய மக்கள்தொகை 250 ஆகும். இப்பகுதிக்கு, காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஜலகண்டாபுரம், தாரமங்கலம், நங்கவள்ளி மற்றும் வனவாசி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 13-வது வார்டு சந்தைப்பேட்டை மேட்டுப்பகுதியில் கட்டப்பட்டுள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய்கள்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தாரமங்கலம் ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த நத்தக்காடனூர் குடியிருப்பின் தற்போதைய மக்கள்தொகை 280 ஆகும். இக்குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின் விசைத் திட்டம் மூலமும், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிகளுக்கென மேலும் ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*





**20—**

## சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 25313—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, அம்மாபாளையம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, அம்மாபாளையம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் தற்போது பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 34 ஆகும். இப்பள்ளிக்கு தேவூர் பேரூராட்சி, காவேரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து அம்மாபாளையம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் காவேரிக் குடிநீரும், பள்ளிக்கு அருகில் உள்ள சிறு மின் விசைத் திட்டத்தின்மூலம் ஆழ்துளைக் கிணற்றுக் குடிநீரும், ஏற்கெனவே பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 1000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிமூலம் போதுமான அளவு சீராக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.*

[2013 அக்டோபர் 30

**21—**

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 25451—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26-வது வார்டில் உள்ள டாக்டர் அம்பேத்கர் தெரு, எம்.ஏ. ஜெயின் பள்ளி, மசூதி தெரு, அன்னை தெரசா தெரு, அம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சி, 26-வது வார்டில் உள்ள டாக்டர் அம்பேத்கர் தெரு, எம்.ஏ. ஜெயின் பள்ளி, மசூதி தெரு, அன்னை தெரசா தெரு, அம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் உள்ள ஆழ்துளைக் கிணறுகள் நல்ல நிலையில், கைப் பம்பு பொருத்தி போதுமான அளவில் பயன்பாட்டில் உள்ளதால் தற்போது ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கும் அவசியம் எழவில்லை.*

**22—**

## புதிய குடிநீர்க் குழாய்களைப் பொருத்துதல்

**வினா எண் 25455—திரு. சு. ரவி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம் 1-வது வார்டு, கவுன்சிலர் ஜானகிராமன் தெரு, 26-வது வார்டு ஜெயின் பள்ளி, மதியழகன் தெரு மற்றும் ப.உ. சண்முகம் தெருக்களில் புதியதாக குடிநீர்க் குழாய்களை பொருத்த அரசு முன்வருமா?*



2013 அக்டோபர் 30]

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சி, 1-வது வார்டில் உள்ள கவுன்சிலர் ஜானகிராமன் தெரு, 26-வது வார்டு ஜெயின் பள்ளி, மதியழகன் தெரு மற்றும் ப.உ. சண்முகம் தெருக்களில் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன.*

**23—**

## பூங்கா பெயர் மாற்றம்

**வினா எண் 26052—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை, கதீட்ரல் சாலையிலுள்ள செம்மொழிப் பூங்காவை இலங்கைத் தமிழர்கள் நினைவுப் பூங்கா எனப் பெயர் மாற்றம் செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 573, நாள் 14-12-2001-ன் ஆணையில் நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகள், தெருக்கள், கட்டடங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றம் செய்வது போன்ற தீர்மானங்களைத் தவிர்க்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், பெயர் வைத்தல், பெயர் மாற்றம்*

போன்ற நிகழ்வுகள் யாவும் அரசு எடுக்கும் சிறப்பு கொள்கை முடிவாகும்.

**24—**

## படிப்பகம் கட்டுதல்

**வினா எண் 26373—திரு. ர.ம. பாபுமுருகவேல்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆரணி நகராட்சி, 12, 13-வது வார்டுகள், அருணகிரிசத்திரம் பகுதியிலுள்ள அரசு இடத்தில் படிப்பகம் கட்ட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆரணி நகராட்சியின் மையப் பகுதியில் அனைத்து பள்ளிக் கூடங்களும் நூலகத்தின் அருகிலிருப்பதால் மாணவ, மாணவிகள் மற்றும் நகரிலுள்ள ஏராளமானவர்கள் பயன் அடைகின்றனர். எனவே, 12 மற்றும் 13-வது வார்டுகளில் புதிதாக படிப்பகம் அமைக்கும் அவசியம் எழவில்லை.*

**25—**

## குழாய் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 27395—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 20-வது வார்டு, குழந்தைகள் சத்துணவு மையங்களுக்கு குழாய் இணைப்பு வழங்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சி, 20-வது வார்டு, குழந்தைகள் சத்துணவு மையங்களில் 22-5-2013ஆம் தேதி குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.*

**26—**

## கழிவுநீர் கால்வாயைத் தூர் வாருதல்

**வினா எண் 27397—திரு. சு. ரவி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 9-வது வார்டு, மோசூர் சாலையில் செல்லும் பெரிய கழிவு நீர்க் கால்வாயைத் தூர் வாரி சீரமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகர, 9-வது வார்டு, மோசூர் சாலையில் உள்ள பெரிய கழிவுநீர்க் கால்வாய், JCB மூலமாகவும், பணியாளர் மூலமாகவும் தூர் வாரி சீரமைக்கப்பட்டுள்ளது.*

**27—**

## குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா எண் 28142—திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 30

பெரம்பூர் தொகுதி, 45-வது வட்டம், தேசிகானந்தபுரம், 1-வது தெரு, மேல்பட்டி பொன்னப்ப தெரு, டாக்டர் அம்பேத்கர் சாலையில் மழைநீர்க் கால்வாய் அமைக்கவும் மற்றும் பி.வி. காலனி 1-வது தெருவில் குடிநீர்க் குழாய் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

மேல்பட்டி பொன்னப்ப தெருவில் இருக்கும் பழைய மழைநீர்க் கால்வாயை இடித்துவிட்டு புதிய கால்வாய் அமைக்கும் பணி 850 மீட்டர் நீளத்திற்கு ரூ.77 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுவிட்டது. டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் இருக்கும் •பழைய மழைநீர்க் கால்வாயை இடித்து விட்டு புதிய கால்வாய் அமைக்கும் பணி 450 மீட்டர் நீளத்திற்கு ரூ.54 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுவிட்டது. தேசிகானந்தபும் 1-வது தெரு குறுகலான தெருவாக இருப்பதால் மழைநீர்க் கால்வாய் அமைக்க சாத்தியம் இல்லை. எனவே, சாலையை உயர்த்தி மழைநீர் தேங்காதிருக்க ஆவன செய்யப்படும். மற்றும், பக்தவச்சலம் காலனி 1-வது தெருவில் 160 மீட்டர் நீளத்திற்கு 150 மி.மீ. விட்டமுள்ள குடிநீர்க் குழாய் புதுப்பித்தல் மற்றும் ஒன்றாவது குறுக்குத் தெருவில் 140 மீட்டர் நீளத்திற்கு 100 மி.மீ. விட்டமுள்ள புதிய குடிநீர்க் குழாய் அமைத்தல் ஆகிய இரு பணிகளுக்கு ரூ.11,54,100/-க்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிருவாக ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன், குடிநீர்க் குழாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

## கழிவுநீர் அடைப்புகளை அகற்றுதல்

**வினா எண் 28157—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 77-வது வட்டம், விளையாட்டு மைதானம்



2013 அக்டோபர் 30]

2-வது தெரு, கே.என்.எம். தெரு, சந்தியப்பா தெரு, குழந்தைவேலு தெரு ஆகிய தெருக்களில் ஏற்படும் கழிவுநீர் அடைப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

தெருக்களில் ஏற்படும் அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளையும் உடனுக்குடன் நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தெருக்களிலுள்ள கழிவுநீர் அமைப்புகளிலுள்ள கசடுகளை நீக்கும் பணி அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

**29—**

## கால்வாய்க்கு தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 28173—திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 35-வது வட்டம், டி.எச். சாலை மற்றும் சத்தியவாணிமுத்து தெருவையும் இணைக்க நடைபாலம் கட்டவும் மற்றும் டி.எச். சாலை-திருவள்ளூர் சாலை இடையே உள்ள கால்வாய்க்கு தடுப்புச் சுவர் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி 4-வது மண்டலம், கோட்டம் 35-ல் உள்ள டி.எச். சாலை மற்றும் சத்தியவாணிமுத்து தெருவையும் இணைக்க நடைபாலப் பணி சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறையின்மூலம் தொடரப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது. மேலும், டி.எச். சாலை-திருவள்ளூர் சாலை இடையே உள்ள கால்வாயில் தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**30—**

## தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 28194—திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, கேப்டன் காட்டன் கெனாலில் கான்கிரீட் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி 4-வது மண்டலம், கோட்டம் 36-க்கு உட்பட்ட பகுதியில் சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறையின்மூலம் கேப்டன் காட்டன் கால்வாயின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**31—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 28573—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணமநாய்க்கனூர், பாலப்பம்பட்டி ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணமநாய்க்கனூர், பாலப்பம்பட்டி ஜெ.ஜெ. நகர் ஆதி திராவிடர் காலனியில் தற்போதைய மக்கள்தொகை 180 ஆகும். இக்குடியிருப்புகளுக்கு தற்போது திருமூர்த்திமலை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள்மூலம் போதுமான அளவு குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட குடியிருப்புகளுக்கு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**32—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 28577—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சி, அண்ணா நகர், வேல் நகர், கோபாலபுரம் ஆகிய பகுதிகளில் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி, நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் ஊராட்சியைச் சார்ந்த அண்ணா நகர் (மக்கள்தொகை 139) வேல் நகர் (மக்கள்தொகை 360), கோபாலபுரம் (மக்கள்தொகை 145) ஆகிய குடியிருப்புகளுக்கு

திருமூர்த்திமலை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தலா 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் போதுமான அளவு குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. இது தற்போதைய மக்கள் தொகையின் விதிமுறைகளின்படி போதுமானதாக உள்ளது. எனவே, மேற்கண்ட குடியிருப்புகளுக்கு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**33—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 28893—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், அனுப்பட்டி கிராம ஊராட்சி, கள்ளிமேடு எம்.ஜி.ஆர். நகர் மற்றும் வரதராஜபுரத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், அனுப்பட்டி கிராம ஊராட்சி, கள்ளிமேடு எம்.ஜி.ஆர். நகர் குடியிருப்பின் மக்கள்தொகை 412 ஆகும். வரதராஜபுரம் குடியிருப்பின் மக்கள்தொகை 460 ஆகும். இக்குடியிருப்புகளுக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் பில்லூர் கூட்டுக் குடிநீர் முதல் திட்டம்மூலம் முறையே 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடியிருப்புக்கு தற்போது பணிகள் முன்னேற்றத்திலுள்ள பில்லூர் பகுதி 2 கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனுக்கு வரும்போது, போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு விடும். எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.





**34—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 28927—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, ஸ்ரீராம் நகரில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி, ஸ்ரீராம் நகரில் பழுதடைந்த நிலையில் இருந்த 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பதில் புதியதாக 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**35—**

## கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

**வினா எண் 29112—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 104-வது வட்டம், திடீர் நகர் பகுதியில் மழைநீர் வடிய கால்வாய் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 104-வது வட்டம், திடீர் நகர் பகுதி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ஏழை மக்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைகளைக் கொண்டதாகும். இப்பகுதியில் உள்ள தெருவில் கழிவுநீர் அமைப்பு வசதி உள்ளது. குறுகலான குறுக்கு சந்துகளில் மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கழிவுநீர் அமைப்பு வசதி ஏற்படுத்தத் தேவையான இடவசதி இச்சந்துகளில் இல்லாததால் கழிவுநீர் அமைப்பு வசதி அமைக்க இயலவில்லை.*

**36—**

**கழிவுநீர் பம்பிங் இயந்திரத்தைப் பராமரித்தல்**

**வினா எண் 29116—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எழும்பூர் தொகுதி, 104-வது வட்டம், •பிரிக் கிளின் சாலை-சண்முகராயன் தெரு சந்திப்பிலுள்ள கழிவுநீர் பம்பிங் இயந்திரத்தைப் பழுதுபார்த்து பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 104-வது வட்டம், பிரிக் கிளின் சாலை-சண்முகராயன் தெரு சந்திப்பில் உள்ள கழிவுநீர் பம்பிங் இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டு தற்பொழுது உபயோகத்தில் உள்ளது.*





**37—**

**பூங்காக்கள் அமைத்தல்**

**வினா எண் 29121—திரு. கு. நல்லதம்பி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எழும்பூர் தொகுதி, டவுட்டன் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் பூங்காக்கள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*எழும்பூர் தொகுதி, டவுட்டன் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் ரூ.3.21 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணி தொடங்கப்பட்டு தற்பொழுது முடிக்கப்பட்டுவிட்டது.*

**38—**

**பாதாளச் சாக்கடைப் பணிகள் முடித்தல்**

**வினா எண் 29428—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகரில் நடைபெறும் பாதாளச் சாக்கடைப் பணிகளைக் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் முடிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை ரூ.149.39 கோடி மதிப்பீட்டில்*

[2013 அக்டோபர் 30

செயல்படுத்த அரசாணை (பத்தாண்டு) எண் 60, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) அரசு துறை, நாள் 23-2-2006-ல் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. இதில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிக்கு ஐந்தாம் அழைப்பு 20-8-2009-ல் கோரப்பட்டு சிப்பம்-1 மற்றும் 3 ஆகிய சிப்பங்களுக்கு தொழில்நுட்ப தகுதி வாய்ந்த M/s PSVCPL-BBIPL-(JV), ஹைதராபாத் நிறுவனத்திற்கு பணி ஆணை 18-3-2010-ல் வழங்கி பணிகள் நடைபெற்று வருகின்றன. சிப்பம் 2-க்கான ஒப்பந்தப் புள்ளி 7 ஆம் அழைப்பு 24-6-2010-ல் பெறப்பட்டு M/s RAUS Construction Ltd., ஹைதராபாத் என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை 2-12-2010-ல் வழங்கப்பட்டது பணிகள் துரிதப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், கழிவுநீர்க் குழாய்கள் வழியாக சேகரிக்கப்படும் கழிவுநீர் கீழ்க்கண்டுள்ள நான்கு சுத்திகரிப்பு நிலையங்கள்மூலம் சுத்திகரிக்கப்பட்டு திருமணிமுத்தாறில் வெளியேற்றப்பட உள்ளது.

1. வெள்ளக்கோட்டை சுத்திகரிப்பு நிலையம்-13 எம்.எல்.டி.
2. வண்டிபேட்டை சுத்திகரிப்பு நிலையம்-44 எம்.எல்.டி.
3. மான்குட்டை சுத்திகரிப்பு நிலையம்-35 எம்.எல்.டி.
4. அணைமேடு சுத்திகரிப்பு நிலையம்-6 எம்.எல்.டி.

இதற்காக நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு செய்திடவும், இதனை வடிவமைத்து கட்டி இயக்கி பராமரித்து (DBOT) மாநகராட்சிக்கு வழங்கிடும் முறையில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. அனைத்துப் பணிகளும் 2013 ஆம் ஆண்டு இறுதியில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை கழிவுநீர்க் குழாய் பதிக்கவேண்டிய 421 கி.மீ. நீளத்தில், 164.74 கி.மீ. நீளம் பதிக்கப்பட்டும், கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகள் 75 சதவீதம் முடிக்கப்பட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**39—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 29880—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2013 அக்டோபர் 30]

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் கிராம ஊராட்சி, ஆர். புதுப்பாளையம் மற்றும் வேலம்பட்டிப்புதூரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் கிராம ஊராட்சி, ஆர். புதுப்பாளையம் மற்றும் வேலம்பட்டிப்புதூர் குடியிருப்புகளின் மக்கட்தொகை முறையே 800 மற்றும் 400 ஆகும். தற்போது ஆர். புதுப்பாளையம் குடியிருப்பில் 10,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள இரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், வேலம்பட்டிப்புதூர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் பயன்பாட்டில் உள்ளன. வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பில் தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளே போதுமானவை. எனவே, இக்குடியிருப்புகளுக்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**40—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 29890—திரு. கே.பி. பரமசிவம்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் கிராம ஊராட்சி, சந்தவனாயக்கன்பாளையத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் கிராம ஊராட்சி, சந்தவனாயக்கன்பாளையம் குடியிருப்பின் மக்கள்தொகை 342 ஆகும். தற்போது இக்குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடியிருப்புக்கு தற்போது பணி முன்னேற்றத்திலுள்ள பில்லூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனுக்கு வரும்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படும். வாரிய விதிமுறைகளின்படி, இக்குடியிருப்பில் தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

**41—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 29958—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடமலைப்பாளையம் கிராம ஊராட்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடமலைப்பாளையம் ஊராட்சி, வடமலைப்பாளையம்*





*குடியிருப்பின் மக்கட்தொகை 750 ஆகும். தற்போது இக்குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடியிருப்புக்கு தற்போது பணி முன்னேற்றத்திலுள்ள பில்லூர் பகுதி 2 கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனுக்கு வரும்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படும். வாரிய விதிமுறைகளின்படி, இக்குடியிருப்பிற்கு தற்போதுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியே போதுமானது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.*

**42—**

## பாதாளச் சாக்கடையை சீரமைத்தல்

**வினா எண் 30147—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை எழும்பூர் லாங்ஸ் கார்டன் சாலை-ஐயாசாமி தெரு சந்திப்பிலுள்ள பாதாளச் சாக்கடையை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 62-வது வட்டம், லாங்ஸ் கார்டன் சாலை-ஐயாசாமி தெரு சந்திப்பிலுள்ள பாதாளச் சாக்கடை அவ்வப்போது தூர் வாரப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, சீரமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்பொழுது தயாரிக்கப்படவில்லை.*

**43—**

## மலிவு விலை சிற்றுண்டி உணவகம் துவக்குதல்

**வினா எண் 30993—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னை மாநகராட்சியில் தொடங்கப்பட்டுள்ள மலிவு விலை சிற்றுண்டி உணவகம் போல இதர மாநகராட்சிகளிலும் துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சியில் தொடங்கப்பட்டுள்ள மலிவு விலை சிற்றுண்டி உணவகம்போல் இதர 9 மாநகராட்சிகளிலும் தலா 10 இடங்கள் வீதம் 90 மலிவு விலை சிற்றுண்டி உணவகங்கள், அரசாணை (நிலை) எண் 79, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் 31-5-13-ன்படி துவக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்கின்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

**44—**

## துப்புரவுப் பணியாளர்களுக்கு உபகரணங்கள்

**வினா எண் 31597—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு பாதுகாப்பான உபகரணங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களுக்கு 2008-2009, 2012-2013 ஆகிய ஆண்டுகளில் பாதுகாப்பு உபகரணங்கள் அரசு உத்தரவுப்படி வழங்கப்பட்டுள்ளன.*

**45—**

## தெரு நாய்களை ஒழித்தல்

**வினா எண் 31611—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகர் மற்றும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தெரு நாய்களைக் கட்டுப்படுத்தி தெரு நாய்களை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிப் பகுதியில் தெரு நாய்களைக் கட்டுப்படுத்த அரசு உத்தரவுப்படி திருச்சியைச் சேர்ந்த ''இண்டர்நேஷனல் அனிமல் ரெஸ்கியூ'' என்ற தொண்டு நிறுவனம்மூலம் தெரு நாய்களுக்கான குடும்ப அறுவை சிகிச்சை திட்டம் 11-3-2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாரம் தோறும் இரு மண்டலங்களில் தெரு நாய்களைப் பிடித்து குடும்ப அறுவை சிகிச்சை செய்து வெறி நாய் ரேபீஸ் தடுப்பூசி போடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக அரசில் தெரு நாய்களைப் பிடிக்கும் கூண்டு அமைக்கப்பட்ட வாகனம் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

[2013 அக்டோபர் 30

மேலும், தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள்/நகராட்சிகளில் தெரு நாய்களைப் பிடித்து குடும்ப அறுவை சிகிச்சை செய்து வெறி நாய் நோய் ரேபீஸ் தடுப்பூசி போடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**46—**

## குப்பைகள் கொட்டுவதற்கு நடவடிக்கை

**வினா எண் 32603—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியால் கிச்சிப்பாளையம் பகுதியில் கொட்டப்படும் குப்பைகளை தொலைதூரத்தில் கொட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியால் தற்போது கிச்சிப்பாளையம் பகுதியில் திடக்கழிவுகள் ஏதும் கொட்டப்படுவதில்லை. இக்கழிவுகள் தற்போது செட்டிசாவடி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள, சேலம் மாநகராட்சி ஒருங்கிணைந்த திடக்கழிவு மறுசுழற்சி மையத்தில் கொண்டு சேர்த்து, திடக்கழிவுகளை அங்கு பிரித்தெடுத்து நாள்தோறும் விஞ்ஞான முறைப்படி மறுசுழற்சிக்கு பயன்படுத்தும் விதத்தில் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

**47—**

## பாலியல் கொடுமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

**வினா எண் 29763—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:**

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டு பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் (Crimes against women) பற்றி அக்குழுவின்மூலம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், இக்குழுவின் கட்டங்களில் காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட சமூக நல அலுவலர், தொண்டு நிறுவனங்களின் செயலாளர்கள் மற்றும் காவல் துறையின் அலுவலர்கள் ஆகியோர் குழு உறுப்பினர்கள் என்ற முறையில் கலந்து கொள்கின்றனர். ஆய்வுக் கூட்டத்தின் போது பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி விவாதித்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்தும் மக்கள் குறை தீர்க்கும் நாள், கல்லூரிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு முகாம்கள், தேசிய பாதுகாப்பு சேவை (NSS) மூலம் நடத்தப்படும் முகாம்கள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் முனைப்பு கல்வி இயக்கத்தின் மூலமாகவும், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**48—**

## சமுதாயக் கல்லூரிகள் அமைத்தல்

**வினா எண் 31531—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திறந்தநிலை பல்கலைக்கழகத்தின்மூலம் சமுதாயக் கல்லூரிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைகழகத்தின்மூலம் சமுதாயக் கல்லூரிகள் அமைக்க அரசாணை எண் 163, உயர் கல்வித் (கே1) துறை, நாள் 22-5-2005 மற்றும் அரசாணை எண் 142, உயர் கல்வித் (கே1) துறை, நாள் 20-7-2012 இல் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.*

**49—**

## அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 31534—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் நாகலாபுரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், நாகலாபுரத்தில் துவக்கப்பட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாதிரி உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கட்டடம் கட்டுவதற்கு, நாகலாபுரம், கவுண்டம்பட்டி கிராம புல எண்கள்* 8/2D12, 8/2D2, *மற்றும்* 8/2 D3 *ஆகியவற்றில் மொத்த பரப்பு 7.77.0 ஹெக்டேர் நிலமானது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 135, உயர் கல்வித் துறை, நாள் 18-7-2013-ல் இக்கல்லூரிக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு மாநில அரசின் பங்களிப்புத் தொகை ரூ.2,41,66,000/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.*





**50—**

## சூரிய ஒளி மின் உற்பத்தி வசதி

**வினா எண் 31537—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக நூலகத்திற்கு சூரிய ஒளி மின் உற்பத்தி வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் சூரிய ஒளி மின் உற்பத்தி வசதி செய்வதற்கான பணிகள் அப்பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**51—**

## ஓய்வூதியம் வழங்குதல்

**வினா எண் 32862—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முந்திரி பருப்பு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் 1995-ல் நடைமுறைப்படுத்தப்பட்டதன்மூலம் இத்திட்டத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு*

நிதி நிறுவனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள்; ஒய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு ஒய்வூதியத் திட்டத்தின் பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**52—**

## மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை

**வினா எண் 37363—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள தகுதி வாய்ந்த மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் அரசு வேலை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மாநில அரசுத் துறைகளில் ஏற்படும் காலியிடங்களில் 3% இடம் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் எனவும், இந்த 3% சதவீதத்தில் 1% பார்வையற்றோருக்கும் 1% வாய் பேச இயலாத மற்றும் காது கேளாதோருக்கும் 1% உடல் உறுப்பு நலன் குன்றியோருக்கும் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் எனவும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், முன்னுரிமை உடையவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பணி காலியிடங்களுக்கு முன்னுரிமைப் பட்டியலின் வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகளும் பரிந்துரை செய்யப்படுகின்றனர். இதைத் தவிர, முன்னுரிமையற்றோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் காலியிடங்களுக்கு 20% மாற்றுத் திறனாளிகளிலும் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்படுகின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள மாற்றுத் திறனாளிகளின் கல்வித் தகுதி, வயது, இன சுழற்சி மற்றும் பதிவு மூப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு மாற்றுத் திறனாளிகள் பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றனர்.





**53—**

## பகுதிநேர நியாய விலைக் கடை துவக்குதல்

**வினா எண் 11327—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், பொன்னமங்கலத்திலுள்ள நியாய விலைக் கடையை பிரித்து, வீரம்பட்டியில் அனைத்துப் பொருட்களும் கிடைக்கும் வகையில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், பூங்கங்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பொன்னமங்கலம் நியாய விலைக் கடை 597 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையிலிருந்து 5.00 கி.மீ. தூரமுள்ள வீரம்பட்டி கிராமத்தை சேர்ந்த 68 குடும்ப அட்டைகளுடன் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அனுமதி கோரப்பட்டு மாவட்ட வழங்கல் அலுவலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், பிரிக்கப்படும் பகுதிநேர நியாய விலைக் கடையில் 68 குடும்ப அட்டைகளே உள்ளதால் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, புதிதாகப் பிரிக்கப்படும் பகுதிநேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளாவது இருக்கவேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியாகாததாலும், மேலும், வீரம்பட்டி கிராமத்திலிருந்து பொன்னமங்கலம் நியாய விலைக் கடைக்குச் செல்லும் வழியில் குறுக்கீடாக ஆறுகளோ மலைகளோ இல்லாததால் வீரம்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**54—**

## பகுதிநேர அங்காடி அமைத்தல்

**வினா எண் 24942—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், கீழக்குறிச்சி தலைமை அங்காடியிலிருந்து பிரித்து பிராம்பட்டியில் பகுதிநேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றப் பேரவை தொகுதிக்குட்பட்ட நார்த்தாமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க கட்டுப்பாட்டில் செயல்படும் HPO68 கீழக்குறிச்சி முழுநேர தாய் அங்காடி தற்போது 539 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. கீழக்குறிச்சி தாய் அங்காடியிலிருந்து ஏற்கெனவே HPO68 மெய்வழிச்சாலை பகுதிநேர அங்காடி பிரிக்கப்பட்டு 367 குடும்ப அட்டைகளுடன் மெய்வழிச்சாலையில் செயல்பட்டு வருகிறது.

அரசாணை எண் 147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (எப்.1) நாள் 24-8-2006-ன்படி வகுத்தமைக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி புதிய பகுதிநேர அங்காடி அமைப்பதற்கு உத்தேசப் பகுதிநேர அங்காடியில் குறைந்தது 150 குடும்ப அட்டைகளும், தாய் அங்காடி செயல்படும் இடத்திலிருந்து 1.5 கி.மீ. தூரத்திற்குமேல் இருக்கவேண்டும் என்பதும், பிரிக்கப்பட்ட பின்பு, தாய் அங்காடியில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பதும் அரசின் விதி ஆகும்.

பிராம்பட்டி கிராமத்தில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், உத்தேச பகுதிநேர அங்காடி பிரிக்கப்பட்டால் பிரிக்கப்பட்ட பிறகு 454 குடும்ப அட்டைகள் மட்டுமே தாய் அங்காடியில் இருக்கும். மேற்கண்ட அரசாணை நெறிமுறைகள் பொருந்தாத நிலையில் பிராம்பட்டியில் புதிய பகுதிநேர அங்காடி அமைத்திட இயலாத நிலையுள்ளது.





**55—**

## ஆவின் பால் விற்பனை மையங்கள் அமைத்தல்

**வினா எண் 17743—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதியில் வேலையில்லாத இளைஞர்களுக்கு ஆவின் பால் விற்பனை மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

மேட்டூர் பகுதியிலுள்ள வேலையில்லாத பட்டதாரி இளைஞர்கள் ஆவின் பால் விற்பனை மையங்கள் அமைக்க விண்ணப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பிக்கும் பகுதியில் பொதுமக்களின் பால் தேவையினைக் கருத்தில்கொண்டும், ஒன்றிய விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி ஆவின் பால் சில்லறை விற்பனையாளர்களை நியமனம் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**56—**

## ஆவின் பால் விற்பனை நிலையம் அமைத்தல்

**வினா எண் 21539—திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் பால் கூட்டுறவு நுகர்வோர் சங்கம் மூலமாக ஆத்தூர் பகுதி பொதுமக்களின் பால் மற்றும் பால் பொருட்கள் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. ஆத்தூர் பால் கூட்டுறவுச் சங்கம் பேருந்து நிலையத்திற்கு மிக அருகிலேயே உள்ளது. ஆத்தூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைத்து, சுடுபால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய போதுமான இடவசதியினை பெற்றுள்ளவர்கள் பாலகம் அமைக்க மனு செய்தால், அது குறித்து பரிசீலித்து, ஒன்றிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, ஆத்தூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க ஆவன செய்யப்படும்.*

**57—**

## பால் உற்பத்தி பெருக்குதல்

**வினா எண் 25644—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் விவசாயக் குடும்பங்களுக்கு கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கூடிய கடன் வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விவசாயக் குடும்பங்களுக்கு கறவை மாடுகள் பெற்று வழங்க, கீழ்க்காணும் வங்கிகளுக்கு 98 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன:*





| | |
|---|---|
| 1. பாண்டியன் கிராம வங்கி, மானாமதுரை | 15 |
| 2. பாண்டியன் கிராம வங்கி, இராஜகம்பீரம் | 10 |
| 3. கனரா வங்கி, மானாமதுரை | 17 |
| 4. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மானாமதுரை | 10 |
| 5. சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 46 |
| மொத்தம் - | 98 |

*சம்பந்தப்பட்ட வங்கிகள்மூலம் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கறவை மாட்டுக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**58—**

## பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம்

**வினா எண் 28832—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 8-ல் உள்ள பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, வார்டு எண் 8-ல் உள்ள சி.பி.டி 272, பனப்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 20-2-1990 அன்று பதிவு செய்யப்பட்டு, அன்று முதல் செயல்பட்டு வருகிறது. 224 உறுப்பினர்கள் ரூ.3490 பங்குத் தொகையுடன் உள்ளனர். மேற்படி சங்கம் 2008-2009 ஆம் ஆண்டு ரூ.179058.35, 2009-2010 ஆம் ஆண்டு ரூ.84293.50, 2010-2011 ஆம் ஆண்டு ரூ. 133614.10, லாபம் ஈட்டியுள்ளது. மேற்படி சங்கம் தினசரி சராசரியாக 830 லிட்டர் பால் கொள்முதல் செய்து 30 லிட்டர் உள்ளூர் விற்பனை போக 800*

லிட்டர் ஒன்றியத்திற்கு விற்பனை செய்து வருகிறது. 2010-2011 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி சங்க கட்டட நிதியாக ரூ.40710.35 மட்டுமே உள்ளது. சங்கத்திற்கு சொந்தமாக அடிமனை ஏதும் இல்லை. சங்கத்திற்கு சொந்தமாக அடிமனை இல்லாததாலும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு போதுமான நிதி வசதி இல்லாததாலும் கட்டடம் கட்டுவதற்கு தற்போது வாய்ப்பில்லை.

**59—**

## தீவனக் கிடங்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 29192—திரு. பி.ஆர். மனோகர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கம் பேரூராட்சி, கொண்டாபுரம் கிராமத்திலுள்ள பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு தீவனக் கிடங்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், காவேரிப்பாக்கம் பேரூராட்சி, சி. 2412, காவேரிப்பாக்கம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் விவகார எல்லையில் காவேரிப்பாக்கம் கொண்டாபுரம், துறைபெரும்பாக்கம், பெருகரும்பூர் மற்றும் ஈராளச்சேரி ஆகிய ஊர்கள் அடங்கியுள்ளன. இச்சங்கம் 23-9-1976-ல் பதிவு செய்யப்பட்டு 8-10-1976 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 2,197 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கம் தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 1,680 லிட்டர் பால் உற்பத்தி செய்து 900 லிட்டர் உள்ளூர் விற்பனைக்கும், மீதமுள்ள 780 லிட்டர் ஒன்றியத்திற்கும் அனுப்பி வருகிறது. சங்கத்திற்கு சொந்தமாக 13 சென்ட் நிலம் உள்ளது. 1994-1995 ஆம் ஆண்டு ஐ.வே.வா. திட்டத்தின்கீழ் அரசின் முழு மானியத்துடன் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.





சங்கத்தின் 2010-2011 தணிக்கை அறிக்கையின்படி சங்கத்தின் கட்டட நிதியாக ரூ.3,49,355.81 மட்டுமே உள்ளது. எனவே, சங்கத்தின் கட்டட நிதியைக் கொண்டு தற்போது தீவனக் கிடங்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்ட வாய்ப்பில்லை.

**60—**

## வீடு கட்ட கடன் வசதி செய்தல்

**வினா எண் 39077—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன் வசதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊழியர்களுக்கு, 2013-2014 ஆம் நிதி ஆண்டிலிருந்து, மற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீட்டு வசதிக் கடன் நீட்டிக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான கருத்துரு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து பெறப்பட்டு, 5-9-2013 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசாணை (நிலை) எண் 140-ல் 2013-2014-ம் நிதி ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊழியர்களுக்கு வீட்டு வசதிக் கடன் வாரிய நிதியிலிருந்து வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**61—**

## நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர் வாருதல்

**வினா எண் 22356—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியப்

பகுதியிலுள்ள சிறிய வரத்துக் கண்மாய்களின் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியப் பகுதியிலுள்ள 100 ஏக்கருக்கு மேல் பாசனப் பரப்பு கொண்ட பொதுப் பணித் துறை கண்மாய்களின் வரத்துக் கால்வாய்கள் மற்றும் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அணைக்கட்டுகளின்மூலம் பாசனம் பெறும் சிறிய கண்மாய்களின் வரத்துக் கால்வாய்கள் யாவும் சுழற்சி முறையில் ஒவ்வொரு வருடமும் தேவைக்கேற்ப தூர் வாரப்பட்டு வருகின்றன.*

**62—**

### சந்தை நிலவரப்படி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை

**வினா எண் 35252—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் பொதுப் பணித் துறையின்கீழ் செய்யப்படும் ஒப்பந்தப்பணியில் மறு ஒப்பந்தம் கோரும்போது சந்தை நிலவரப்படி ஒப்பந்தப்புள்ளியைப் பரிசீலனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பொதுப் பணித் துறையின்கீழ் செய்யப்படும் ஒப்பந்தப் பணியில் மறு ஒப்பந்தம் கோரும்போது சந்தை நிலவரப்படி ஒப்பந்தப்புள்ளியை பரிசீலனை செய்யும் திட்டம், அரசிடம் நடைமுறையில் இல்லை.*





**63—**

### கைத்தறி முத்திரைத் திட்டத்தில் சேர்த்தல்

**வினா எண் 10207—திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் 1187 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் கைத்தறி முத்திரைத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை கைத்தறி முத்திரைத் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யும்.*

*(ஆ) தமிழகத்திலுள்ள 1075, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 31-1-2013 முடிய 928 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறி முத்திரைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 147 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டம் மற்றும் இலவச சீருடைத் திட்டத்தின் கீழான உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர, தகுதியுள்ள இதர சங்கங்களை மேற்படி திட்டத்தில் சேர்க்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**64—**

### புனித பயணத்திற்கான மானியம்

**வினா எண் 36773—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக கோயில்களில் பணிபுரியும் பூசாரிகள் புனிதப் பயணம் செய்வதற்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகளுக்கு புனிதப் பயணம் செய்வதற்கு தனியாக மானியம் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை. அரசாணை (நிலை) எண் 259, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (அநி1.1) துறை நாள் 24-7-2012 இல் மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம் செல்லும் தமிழகத்தைச் சேர்ந்த இந்துக்களுக்கு (பூசாரிகள் உள்பட) தலா ரூ.40,000/-மற்றும் ரூ.10,000/- அரசு மானியம் வழங்கப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது.

**65—**

## கணினிமயமாக்குதல்

**வினா எண் 32880—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து பத்திரப் பதிவு அலுவலகங்களையும் கணினிமயமாக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பதிவுத் துறையில், 575 சார்-பதிவாளர் அலுவலகங்கள், மாவட்ட பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் ஆகிய அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு, கணினிமயமாக்கலில் பதிவுத் துறை முழுமையடையப் பெற்றுள்ளது.



**66—**

## விருப்புரிமை நிதித் திட்டம் வழங்குதல்

**வினா எண் 17266—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத் துறையின் மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதித் திட்டத்தினை கிருத்துவ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோமூலம் வழங்கப்படும் மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி மத்திய சிறப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறையின் அடிப்படையில் இந்த நிதி இந்து ஆதி திராவிடர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

**67—**

## தாட்கோமூலம் கடன் வழங்குதல்

**வினா எண் 32016—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, திற்பரப்பு பேரூராட்சியில், கைதக்கல் ஆதி திராவிடர் காலனி, ஓட்டுக் கூரை வீடுகளை திண்காரைக் கட்டு வீடுகளாக மாற்ற தாட்கோமூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஓட்டுக் கூரை வீடுகளை திண்காரைக் கட்டு வீடுகளாக மாற்ற கடன் வழங்கும் திட்டம் ஏதும் தாட்கோமூலம் செயல்படுத்தப்படவில்லை என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

**68—**

**கறவை மாடுகள் வாங்கக் கடன்**

**வினா எண் 32469—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதிக்கு உட்பட்ட பால் கூட்டுறவு நிலையங்களில் ஆதி திராவிடர்களுக்கு கறவை மாடுகள் வாங்கத் தாட்கோ மானியத்துடன் கடன் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆவின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதி திராவிடர்களுக்கு கறவை மாடுகள் வாங்க மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கப்பட்டு வருகிறது.*

**69—**

**வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

**வினா எண் 32393—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தொழில் துவங்க வட்டியில்லாக் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*இந்து ஆதி திராவிட இளைஞர்கள் சுயமாக தொழில் செய்து முன்னேறும் வகையில் 30% மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் திட்டங்கள் தாட்கோவினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தாட்கோமூலம் வட்டியில்லா கடன் வழங்க வழிவகை இல்லை.*

**70—**

**பழங்குடியினர் இனப் பட்டியலில் சேர்த்தல்**

**வினா எண் 32737—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை, அமராவதி வனச் சரகங்களில் வாழும் புலையன் இன மலைவாழ் மக்களை பழங்குடியினர் இனப் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) "புலையன்" இன மக்கள் தற்போது ஆதி திராவிடர் இனத்தில் வரிசை எண் 59-ல் உள்ளனர். •பழங்குடியினர் இனப் பட்டியலில் மேற்படி இனத்தை சேர்க்கும் பொருள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**71—**

**புகைப்படக் கலைஞர்களை ஊக்குவித்தல்**

**வினா எண் 25939—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நலிவுற்ற புகைப்படக் கலைஞர்களை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் திரையுலகத்தினரின் நலன்களுக்காக சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினர் நல வாரியம் ஒன்றினை புதிதாக உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது. (அரசாணை (நிலை) எண் 324, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (திதொ2) துறை, நாள் 28-10-2009.)

2. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் பெருமளவில் சேர்க்கப்பட்டு, வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. திரைப்படத் துறையைச் சார்ந்த புகைப்படக் கலைஞர்களின் சங்கமும் (திரைப்பட மூவி, ஸ்டில் கேமராமென்) திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உள்ளது.

3. திரைப்படத் துறையினர் நல வாரியம்மூலம் நலிவுற்ற புகைப்படக் கலைஞர்களை ஊக்குவிப்பது தொடர்பான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**72—**

## கஸ்குட்டா தாவரத்தை அழித்தல்

**வினா எண் 30832—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரங்களை அழிக்கும் மரணத் தாவரமான "கஸ்குட்டா" என்ற ஒட்டுண்ணி தாவரத்தை அழிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) "கஸ்குட்டா ரிப்ளக்ஸா" (Cuscuta reflexa) என்பது ஒரு தடித்த, மஞ்சள் நிறத்திலான, கிளைகளுடன் மிக முறுக்கிய நூலிழைகளிலான இலையில்லாத தாவரமாகும். இந்த •வெற்று ஒட்டுண்ணி, கொடிவகை; வான் வழியாக புதர்கள் மற்றும் மரங்களைத் தாக்கக் கூடிய தன்மை உடையவை. இவை சமவெளிப் பகுதிகளிலும், 1829 மீட்டர் உயரமுடைய நீலகிரி மற்றும் பழனி மலைகளிலும் காணப்படுகின்றன. இவை சத்து வழங்கும் தாவரத்தின் தண்டு திசுவின் சத்துகளை உறிஞ்சுவதற்கு ஏதுவாக ஹாஸ்டோரியாவினை தயாரிக்கின்றன. இத்தாவரம் ஃப்ளவனாய்டு, குளுக்கோசைட், ஆல்க்கலாய்ட், கஸ்குட்டின், கஸ்குட்டாலின், அமரவேல், அமர்பெலின், ஸ்டிக்மஸ்ட்ரால், கெம்ப்பெரால், டல்சிடால், க்யூயர்சிடின், ஆஸ்ட்ராகளைன், மைரசிடின், பென்ஸோபைரோன், க்ளைக்கோபைரனோசைட், ப்ரபனோமைட் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இச்சத்துகளை இத்தாவரத்திலிருந்து தனிமைப்படுத்திக் கொள்ளலாம். மேலும், "கஸ்குட்டா ரிப்ளக்ஸா" உயர் இரத்த அழுத்தம், தசை தளர்த்தி, இதயவலிமையூக்கி, வைரஸ், வலிப்பு தடுப்பி; முடி வளர்ச்சி, கண்புரை நோய், மலட்டுத்தன்மை, இரத்த அழுத்த குறைப்பு ஆகியவற்றுக்கு உதவுகிறது. மேலும், ஆயூர்வேத முறையில் அமரவேல் என்று அழைக்கப்படும் இத்தாவரம் பித்த நோய்க்கு நல்ல அருமருந்தாகும். இதன் சாறு நல்ல கிருமி நாசினியாகவும், புண் மற்றும் வீக்கங்களுக்கு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. அதன் சாற்றில் குளிப்பதால் தோல் மற்றும் அரிப்பு நோய்கள் குணமாகின்றன. மேலும், இத்தாவரம் தலைவலி, தொண்டை அழற்சி நோய் மற்றும் காய்ச்சல் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது. அதன் சாறு கல்லீரல் நோய் மற்றும் புண்களை சரிசெய்யப் பயன்படுகிறது. பழங்கள் இருமலுக்கும் மற்றும் அதன் பசை நாக்குப் புண்கள் சிகிச்சையிலும் பயன்படுகிறது. இத்தாவரத்தினை துண்டுகளாக்கி சாறு பிழிந்து, மஞ்சள்காமாலை நோயைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இத்தாவரத்தின் கூழ் போன்ற பசை கால்நடைகளின் வாய் மற்றும் கால் பகுதிகளில் ஏற்படும் நோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகிறது. எதிர்காலத்தில், இந்த அதிசய தாவரத்தின் குணாதிசயங்களை நன்கு அறிந்து, அதனை தனிமைப்படுத்தி, நவீன

முறையில் மருத்துவப் பயன்பாட்டை மேற்கொள்ள கவனம் செலுத்த வேண்டும். பாரம்பரிய சுகாதாரக் கொள்கைகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து, விலை அதிகமான மேற்கத்திய மருத்துவ முறைகளைப் பயன்படுத்த இயலாத மக்கள் மத்தியில், இத்தாவரத்தினைப் பயன்படுத்தி நல்ல இலாபம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். நம் மக்களின் நிதி ஆதாயம் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்காக நன்கு பழக்கமான இம்முறையினைப் பயன்படுத்துதல் வேண்டும். மேற்கண்ட ஆதாரங்களின் அடிப்படையில், இந்த கஸ்குட்டா ரிப்ளக்ஸா என்ற தாவர வகையினை காடுகளிலிருந்து அழிக்கவேண்டிய அவசியமில்லை எனக் கருதப்படுகிறது. மேலும் இத்தாவரம் வனப் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்படுவதால் இத்தாவரத்தினால் மற்ற செடி, மர வகைகளுக்கு ஏற்படும் பாதிப்பின் அளவு அதிகமாக இல்லை. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இனங்கள் உள்ள வனப் பகுதிக்கு வெளியே இத்தாவரத்தினால் பாதிப்பு ஏற்படுவதாக கருதினால், தனியாரே இதனை தங்களது பகுதிகளில் களைந்து கொள்ளலாம். மேற்கண்ட ஆதாரங்களின் அடிப்படையில், இவ்வகை தாவரத்தினை அழிக்க அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை.

**73—**

## தடுப்பணை கட்டி நீர் வழங்குதல்

**வினா எண் 32481—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை வனச் சரகம், அமராவதி வனச் சரகத்தில் உள்ள மலைவாழ் மக்கள் பயன்படுத்தும் நிலங்களுக்கு தடுப்பணை கட்டி நீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுவரை இதுசம்பந்தமாக மலைவாழ் மக்களிடம் இருந்து கோரிக்கை ஏதும் வரப்பெறவில்லை, அவ்வாறு கோரிக்கை வரப்பெற்றால் வனத் துறையில் நடைமுறையில் உள்ள விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





**74—**

## வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு அரசு சலுகைகள்

**வினா எண் 35604—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகப் பகுதிகளில் பணிபுரியும் வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு அரசு சலுகைகள் முறையாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு அரசு சலுகைகள் நிலுவை ஏதுமின்றி முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

**75—**

## மதிப்பீட்டு அளவீட்டினை உயர்த்தி வழங்குதல்

**வினா எண் 31567—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீயினால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு அதன் மதிப்புக்கேற்றபடி (Valuation) அளவீடு செய்து தற்போது ரூ.5,000/- என்று இருப்பதை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 190, வருவாய், நாள் 15-6-2011-ன்படி, தீ விபத்தில் முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு

[2013 அக்டோபர் 30

ரூ.5,000/-ம் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.2500/-ம் வழங்கப்பட்டு வருகிறது, இதில், குடிசை வீட்டின் மதிப்பிற்கேற்ப நிவாரணம் மதிப்பிடப்படுவதில்லை; தீயினால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு அதன் மதிப்புக்கேற்றபடி (Valuation) அளவீடு செய்து தற்போது ரூ.5,000/- என்று இருப்பதை உயர்த்தி வழங்குவது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டதாகும்.

**76—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 35018—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், காரத்தொழுவு, மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான க.ச.656/-ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், காரத்தொழுவு கிராமம், க.ச.656/-இ2, இ6-ல் மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றயத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட இடத்தில் கடந்த 25 ஆண்டுகளாக திருமதி நாச்சம்மாள் உள்ளிட்ட 22 நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருவதால், ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து நிலத்தை மீளப்பெற்று அது நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து மேற்படி 22 நபர்களுக்கு அரசாணை எண் 142 வருவாய்த் துறை, நாள் 25-8-2013-ன்படி பட்டா வழங்க, நடவடிக்கையில் உள்ளதால் ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலாத நிலை உள்ளது.

**77—**

## கூட்டுறவுச் சங்கத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

**வினா எண் 40673—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2013 அக்டோபர் 30]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலுள்ள தமிழ்நாடு பனைவெல்ல கூட்டுறவுச் சங்கத்திற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டத்தில் பனைத் தொழிலை ஊக்குவிப்பதற்கென மானாமதுரை மற்றும் காளாப்பூர் ஆகிய இடங்களில் பனை தும்பு உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பகுதியில் பனை தும்பைக் கொண்டு தூரிகைகள் தயாரிக்கும் பணி பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மானாமதுரையில் பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கென மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் கிளை ஒன்று செயல்பட்டு வருகிறது. இது தவிர, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பனை வெல்லம் கூட்டுறவு சம்மேளனம் ஒன்றும் இராமநாதபுரத்தில் செயல்பட்டு வருகிறது. பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனைப்பொருட்களை தடையின்றிக் கொள்முதல் செய்திட இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்திற்கு நடைமுறை மூலதனமாக நடப்பு ஆண்டில் ரூ.8.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியினையே சுழற்சிமுறையில் பயன்படுத்தி மூலதன நிதியினை அதிகப்படுத்திக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**78—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 7264—திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி மற்றும் பொறையார் அரசு மருத்துவமனைக்கு புதிய எக்ஸ் ரே கருவி வழங்கவும், மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

[2013 அக்டோபர் 30

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பூம்புகார் தொகுதிக்குட்பட்ட 32 படுக்கை வசதி கொண்ட தரங்கம்பாடி தாலுகா அரசு மருத்துவமனை மற்றும் 54 படுக்கை வசதி கொண்ட பொறையார் தாலுகா அரசு மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவமனைகளும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சார்ந்தவையாகும். பொறையார் அரசு மருத்துவமனைக்கு எக்ஸ்ரே பிரிவுக்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு தாலுகா மருத்துவமனைகளிலும் இன்னும் எக்ஸ் ரே கருவிகள் வழங்கப்படவில்லை. இதுசம்பந்தமாக அரசிடம் எந்த கருத்துருவும் தற்போது பரிசீலனையில் இல்லை, பொறையார் தலைமை மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்டு 3 மருத்துவர் பணியிடங்களில் தற்பொழுது 3 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். தரங்கம்பாடி தலைமை மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 3 மருத்துவர் பணியிடங்களில் தற்பொழுது 2 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். வெற்றிடமாக உள்ள 1 மருத்துவர் பணியிடத்தை கலந்தாய்வுமூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**79—**

## சி.டி. ஸ்கேன் வசதி

**வினா எண் 8318—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூர் அரசு மருத்துவமனையில் சி.டி ஸ்கேன் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அந்தியூர் அரசு மருத்துவமனை ஒரு தாலுகா மருத்துவமனையாகும். திருப்பத்தூர், பழனி, அருப்புக்கோட்டை ஆகிய தாலுகா மருத்துவமனைகளுக்கு மட்டுமே சி.டி. ஸ்கேன் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது அனைத்து மாவட்ட



2013 அக்டோபர் 30]

தலைமை மருத்துவமனைகளுக்கும் சி.டி. ஸ்கேன் வசதி படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் சி.டி. ஸ்கேன் வசதி செய்யப்பட்ட பின்னரே தாலுகா மருத்துவமனைகளுக்கு சி.டி. ஸ்கேன் வசதி செய்வது குறித்து அரசால் பரிசீலிக்கப்படும். எனவே, அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதி செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

**80—**

## சி.டி. ஸ்கேன் வசதி

**வினா எண் 8333—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் நகர் அரசு பொது மருத்துவனையில் சி.டி. ஸ்கேன் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் சி.டி. ஸ்கேன் வசதி படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. தாலுகா மருத்துவமனைகளுக்கு இக்கருவி வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. எனவே, திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் நகர் அரசு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வழங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களுக்கு சி.டி. ஸ்கேன் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும்பட்சத்தில் அவர்கள் மதுரை அருகிலுள்ள இராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

[2013 அக்டோபர் 30

**81—**

**நுண்கதிர் பிரிவைச் செயல்படுத்துதல்**

**வினா எண் 9679—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, இலுப்பூர் அரசு மருத்துவமனையிலுள்ள நுண்கதிர் பிரிவை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, இலுப்பூர் அரசு மருத்துவமனையிலுள்ள நுண்கதிர் பிரிவு செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சைகள் நல்ல முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.*

**82—**

**சர்க்கரை நோயாளிகளுக்கான மருந்துகள் கிடைத்தல்**

**வினா எண் 11313—திரு. சு. ரவி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெறும் சர்க்கரை நோயாளிகளுக்குப் போதுமான மருந்துகள் கிடைத்திட அரசு ஆவனசெய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) அரக்கோணம் அரசு மருத்துவமனையில் வரும் சர்க்கரை நோயாளிகளுக்கு தினசரி மருத்துவம் பார்க்கப்பட்டு அதற்குண்டான மருந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட மருத்துவமனைக்கு இந்த வருடம் மருந்துகள் மற்றும் அறுவைப் பொருட்கள் வழங்குவதற்காக மட்டும் ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) வழங்கப்பட்டுள்ளது. இதில் சர்க்கரை நோயாளிக்குண்டான மருந்துகளும் அடங்கும்.*



2013 அக்டோபர் 30]

*(ஆ) எழாது.*

**83—**

**சிரிஞ்சுகள் மற்றும் ஊசிகள் கூடுதலாக வழங்குதல்**

**வினா எண் 17537—திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரசு மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார மையங்களிலும் ஒரே முறை உபயோகப்படுத்தும் சிரஞ்சுகள் மற்றும் ஊசிகள் கூடுதலாக வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் ஒரே முறை உபயோகப்படுத்தும் சிரிஞ்சுகள் மற்றும் ஊசிகள் வழங்கப்பட்டு, அவை நோயாளிகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மருத்துவமனைக்கு சிரிஞ்சுகள் மற்றும் ஊசிகள் கூடுதலாகத் தேவைப்படும்பட்சத்தில் தேவைப்படும் மருத்துவமனைகளுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிரிஞ்சுகள்/ஊசிகள் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.*

**84—**

**மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 18330—திரு. சோழன் சித. பழனிச்சாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 அக்டோபர் 30

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை அரசு மருத்துவமனையில் மருத்துவர்களை நியமிக்கவும் மற்றும் மின் ஆக்கி (Generator) பழுது நீக்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவங்கை மாவட்டம், தேவகோட்டை அரசு மருத்துவமனை 86 படுக்கை வசதிக் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 441 வெளிநோயாளிகள் மற்றும் 69 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு, முதன்மை குடிமை மருத்துவர், முதுநிலை குடிமை மருத்துவர், உதவி மருத்துவர் மற்றும் குடிமை மருத்துவர் உள்ளிட்ட மொத்தம் 14 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இதில் 10 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலியாகவுள்ள 4 மருத்துவப் பணியிடங்கள் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 2013-2014 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நிதியில் மின்னாக்கியின் பழுது நீக்கம் செய்து பயன்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**85—**

## மகப்பேறு மருத்துவர் நியமனம்

**வினா எண் 20486—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிறப்பு பொது மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர், குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் மகப்பேறு மருத்துவரை நியமிக்கவும், அறுவை சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தவும், அமரர் ஊர்தி வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?



2013 அக்டோபர் 30]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை 124 படுக்கை வசதி கொண்ட வட்ட மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 93 உள்நோயாளிகளும், 1,070 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 12 உதவி மருத்துவர்/முதுநிலை மருத்துவர்/குடிமை மருத்துவர் உள்ளிட்ட பணியிடங்களில் குழந்தை நல மருத்துவர், மகப்பேறு மருத்துவர், கண் மருத்துவர் மற்றும் பொது அறுவை சிகிச்சை நிபுணர் உள்ளிட்ட அனைத்து மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். முதன்மை குடிமை மருத்துவர் மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்கள் மொத்தம் 8 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. தற்போது பொது மருத்துவர் ஒருவரும் மகப்பேறு மருத்துவர் ஒருவரும் பணிபுரிந்து வருகின்றனர். காலியாக உள்ள இதர பணியிடங்கள் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனைத்தவிர, அறுவை அரங்கில் சிறிய அறுவை சிகிச்சைகள் சராசரியாக 1450-ம் பெரிய அறுவை சிகிச்சைகள் 81-ம் நடைபெறுகின்றன. அதுமட்டுமின்றி தற்போது இம்மருத்துவமனைக்கு 28 கி.மீ. தொலைவில் திருவாரூர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடனும், வேறு திசையில் 28 கி.மீ. தொலைவில் மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டி பகுதியில் வாழும் மக்களுக்கு போதிய அளவில் மருத்துவ வசதி மேற்கண்ட மூன்று மருத்துவமனைகளின்மூலம் சிறப்பாக அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், அமரர் ஊர்தி சேவை மாநிலம் முழுவதும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**86—**

## நடமாடும் மருத்துவக் குழு அமைத்தல்

**வினா எண் 21506—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமேஸ்வரம்-மதுரை தேசிய நெடுஞ்சாலை எண் 49 சாலைப் பகுதியில் நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம்-மதுரை தேசிய நெடுஞ்சாலை எண் 49, சாலைப் பகுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் அரசு மருத்துவமனைகளும் உள்ள பகுதியாகும். ஆதலால் வட்டார அளவில் செயல்படும் நடமாடும் மருத்துவக் குழு நெடுஞ்சாலை பகுதியில் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.*

**87—**

## பிண ஆராய்வு செய்யும் நேரத்தை மாற்றுதல்

**வினா எண் 24663—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பிண ஆராய்வு செய்யும் நேரத்தை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கு காலை 7.30 மணி முதல் 12.00 மணி வரை சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்நேரங்களில் புறநோயாளிகள் அதிக அளவில் சிகிச்சைக்காக வருகின்றனர். எனவே, அப்போது அனைத்து மருத்துவர்களும், மருத்துவமனைப் பணியாளர்களும் ஒருங்கிணைந்து பணி செய்ய வேண்டிய தேவை உள்ளது. காலை 8.00 மணிக்கு பிண ஆராய்வுக்கு மருத்துவர் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களும் சென்றால் சிகிச்சைக்காக வரும் புறநோயாளிகள் பாதிக்கப்படுவார்கள். அதுமட்டுமின்றி அவசர சிகிச்சைக்காக காலை 8.00 மணிக்கு வரும் முதியவர்கள், குழந்தைகள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மேலும், ஒவ்வொரு பிரேதப் பரிசோதனைக் கூடத்திலும் 1 முதல் 2 மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். இவர்கள் பிரேதப் பரிசோதனை மட்டுமன்றி சட்ட மருத்துவ நேர்வுகள் மற்றும் கல்விப் பணியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சட்டம் சார்ந்த மருத்துவ பணியாளர்கள் வழக்கு தொடர்பான பிரேதப் பரிசோதனைக்கு மாலை 4 மணியளவில் உடல் பெறப்பட்டாலும், மருத்துவ அலுவலர்கள் தொடர்ந்து பணிபுரிய வேண்டியுள்ளது. எனவே, பிண ஆய்வு நேரத்தை காலை 8 முதல் மாலை 5 மணி வரை என மாற்ற இயலாது.*





*88—*

## மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம்

**வினா எண் 24690—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், அன்னவாசல் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அரசு மருத்துவமனை 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 23 நபர்கள் மட்டுமே*

[2013 அக்டோபர் 30

உள்நோயாளிகளாகவும், 451 நபர்கள் வெளிநோயாளிகளாகவும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 10 பெரிய அறுவை சிகிச்சைகளும், 15 பிரசவங்களும் கொண்ட செயல்பாடுகள் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் 40 கே.வி.ஏ. மற்றும் 15 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்னாக்கிகளும், குளிர்சாதன வசதியுடன்கூடிய இரண்டு அறுவை அரங்குகளும், "எக்ஸ் ரே" கருவி, "அல்ட்ரா சவுண்ட்" உபகரணங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், இம்மருத்துவமனையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்மூலம் மகப்பேறு பிரிவு, சமையல் கட்டடம், ஜெனரேட்டர் அறை, இருசக்கர வாகன நிறுத்துமிட கட்டடம், மருத்துவக் கழிவுகள் சேமிக்கும் அறை கட்டடம் ஆகிய பிரிவு கட்டடங்கள் ரூ.77.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆகவே குறைந்த மருத்துவமனை பயன்பாட்டின் அடிப்படையில் ஏற்கெனவே உபரி படுக்கை வசதி உள்ளதாலும் ஏற்கெனவே தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்மூலம் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு செயல்பட்டு வருவதாலும் மேலும் கூடுதல் கட்டடங்கள் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**89—**

## உடல் பரிசோதனைக் கருவிகள் வழங்குதல்

**வினா எண் 24929—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், அன்னவாசல் அரசு மருத்துவமனைக்கு உடல் பரிசோதனைக் கருவிகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த விராலிமலை தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், அன்னவாசல் அரசு மருத்துவமனை 30 படுக்கை வசதி கொண்ட ஒரு தாலுகா அல்லாத மருத்துவமனையாகும். இம்மருத்துவமனைக்கு ஏற்கெனவே Auto Analyzer, ECG Machine. X-Ray Machine BP Apparatus, Ultra Sound Scan, Dental Equipments, Opthalmic Equipments



2013 அக்டோபர் 30]

ஆகிய உடல் பரிசோதனைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது அனைத்துக் கருவிகளும் நன்கு இயங்கும் நிலையில் உள்ளதால் இம்மருத்துவமனைக்கு மேற்கொண்டு பரிசோதனைக் கருவிகள் வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

## சிறப்பு மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 25017—திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 12 உதவி மருத்துவர்/குடிமை மருத்துவர் பணியிடங்களில் 11 பணியிடங்களில் சிறப்பு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நிரப்பப்படாமல் உள்ள ஒரு கண் மருத்துவர் பணியிடத்தை மருத்துவர்களின் விருப்பத்தின் பேரில் பணி நியமனம் மற்றும் கலந்தாய்வின்போது நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதன்மை குடிமை மருத்துவர் மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்கள் மொத்தம் 14-ல் 7 இடங்களில் சிறப்பு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலிப் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**91—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 25117—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தற்போது கலந்தாய்வுமூலம் சுமார் 14 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. காலியாக உள்ள மேலும் 10 மருத்துவர் பணியிடங்களை மருத்துவ பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**92—**

## மருத்துவக் கழிவுப் பொருட்களை அகற்றுதல்

**வினா எண் 28227—திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவமனைகளில் தேங்கும் மருத்துவக் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் உருவாகும் மருத்துவக் கழிவுகளை அகற்றி, அழிக்கும் பணி தமிழ்நாடு சுகாதாரத் திட்ட நிருவாகத்தின்கீழ் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதன்படி மருத்துவக் கழிவுகள், மருத்துவமனைகளிலிருந்து நாள்தோறும் சேகரிக்கப்பட்டு அதற்கென்று மருத்துவமனையின் ஒதுக்குப்புறத்திலுள்ள சேமிப்பு அறையில் சேமிக்கப்பட்டு, அங்கிருந்து பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு அறிவியல் ரீதியாக அழிக்கப்படுகிறது. இதில் ஏதேனும் குறைகள் காணப்பட்டால் சம்மந்தப்பட்ட மருத்துவமனை மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படுகின்றன.



**93—**

## மருத்துவமனையைத் தரம் உயர்த்தி ஆய்வக வசதி ஏற்படுத்துதல்

**வினா எண் 28522—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நெய்யூர் பேரூராட்சியில் சேனம்விளை அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி ஊடுகதிர் படம், ஸ்கேன் மற்றும் மருத்துவ ஆய்வக வசதி ஆகியவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, நெய்யூர் பேரூராட்சியில் உள்ள சேனம்விளை அரசு மருத்துவமனை, வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் தினமும் வெளி நோயாளிகளாக 230 பேரும், உள்நோயாளிகளாக 52 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கு அருகிலுள்ள குளச்சல், கருங்கல் அரசு மருத்துவமனைகளில் ஊடுகதிர் வசதி ஸ்கேன் வசதி, மருத்துவ வசதி போன்றவை உள்ளன. அம்மருத்துவமனையில் இவ்வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம். வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் உரிய கருத்துரு பெறப்பட்டு தேவைக்கேற்ப சேனம்விளை அரசு மருத்துவமனையில் மேற்சொன்ன வசதிகளை ஏற்படுத்தவும் அரசு மருத்துவமனையை மேம்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**94—**

## பெண் மருத்துவர் நியமனம்

**வினா எண் 28779—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பூர் மாவட்டம், ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்திலுள்ள ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனை 12 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 10 உள்நோயாளிகள் மற்றும் 149 வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையின் செயல்பாட்டின் அடிப்படையில் ஒப்பளிக்கப்பட்ட இரண்டு உதவி மருத்துவர் பணியிடங்களில் ஒரு பணியிடத்தில் குழந்தை நல மருத்துவரும், காலியாக இருந்த மற்றொரு பணியிடத்தில் பெண் மருத்துவரும், தற்போது நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.*

**95—**

## கூடுதல் மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 30220—திரு. வி. முத்துக்குமார்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருத்தாசலம் அரசு தலைமை மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும், காலிப் பணியிடங்களை நிரப்பவும் அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் அரசு மருத்துவமனை 144 படுக்கை வசதிகளுடன் வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 219*





*உள்நோயாளிகளும், 1,156 வெளிநோயாளிகளும சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு, உதவி மருத்துவர், முதுநிலை குடிமை மருத்துவர் மற்றும் முதன்மை குடிமை மருத்துவர் உள்ளிட்ட 24 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அதில் 18 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலியாகவுள்ள 6 மருத்துவர் பணியிடங்கள் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பளிக்கப்பட்ட 25 நிரந்தர மற்றும் 4 ஒப்பந்த அடிப்படை செவிலியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுள்ளன. கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர் உள்ளிட்ட மூன்று அமைச்சுப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மருத்துவம் சாரா மற்றும் அடித்தள பணியாளர்கள் 46 பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அதில் 32 பணியிடங்களில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், காலியாகவுள்ள மருத்துவம் சாரா பணியாளர்கள் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**96—**

## மருத்துவர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 30282—திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்திலுள்ள பல்லடம் அரசு மருத்துவமனை 91 படுக்கை வசதி கொண்ட வட்ட மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 651 வெளிநோயாளிகளும், 50 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர், குடிமை மருத்துவர் உள்ளிட்ட 12 பணியிடங்களும் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும்,*

ஒப்பளிக்கப்பட்ட தலைமை குடிமை மருத்துவர் மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்கள் 4-ல், 2 மருத்துவர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். காலியாகவுள்ள 2 பணியிடங்களை எதிர் வரும் பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**97—**

## மருத்துவ நிபுணர் நியமனம்

**வினா எண் 31777—திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசு மருத்துவமனையில் தீக்காய சிகிச்சைக்கு மருத்துவ நிபுணரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சிவகாசி பகுதியில் அடிக்கடி நிகழும் பட்டாசு வெடி விபத்துகளினால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிறப்பான வகையில் சிகிச்சை அளிக்க மாண்புமிகு முதலமைசசர் அவர்களின் அறிவிப்பின்படி சிறப்பு வசதிகள் கொண்ட “தகைசால்” மையமாக (Centre of Excellence) சிவகாசி அரசு மருத்துவமனையிலுள்ள தீக்காய சிகிச்சைப் பிரிவு மாற்றப்பட்டு வருகிறது. இப்பிரிவுக்கென்று தனியாக ஒரு மயக்கவியல் மருத்துவர், ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் உள்ளிட்ட 5 மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். அவசர காலங்களில் கூடுதலாக பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் அருகிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து வரவழைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, விருதுநகர் மாவட்டம், சிவகாசி அரசு மருத்துவமனையில் தீக்காய சிகிச்சைக்கு மருத்துவ நிபுணரை மேலும் நியமிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.





**98—**

## மருத்துவர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 32622—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஒன்றியங்களிலுள்ள அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்திலுள்ள சேலம் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் இயங்கும் வட்டம் மற்றும் வட்டமல்லா அரசு மருத்துவமனைகளும் அவற்றுக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள், பணியில் உள்ள மற்றும் காலி பணியிடங்கள் பின்வருமாறு:

| மருத்துவமனைகள் | ஒப்பளிக்கப் பட்ட மருத்துவ பணியிடங்கள் | பணியில் உள்ளோர் | காலிப் பணி யிடங்கள் |
|---|---|---|---|
| அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, மேட்டூர் அணை | 27 | 20 | 7 |
| ஆத்தூர் வட்ட மருத்துவமனை | 25 | 21 | 4 |
| ஓமலூர் வட்ட மருத்துவமனை | 19 | 18 | 1 |
| சங்கரி வட்ட மருத்துவமனை | 12 | 11 | 1 |
| ஏற்காடு வட்ட மருத்துவமனை | 3 | 2 | 1 |
| எடப்பாடி வட்ட மருத்துவமனை | 12 | 11 | 1 |
| கெங்கவல்லி வட்ட மருத்துவமனை | 5 | 4 | 1 |
| ஜலகண்டாபுரம் வட்ட சாரா மருத்துவமனை | 4 | 4 | - |
| வேம்படிதளம் வட்ட சாரா மருத்துவமனை | 4 | 4 | - |
| மொத்தம் | 111 | 95 | 16 |

[2013 அக்டோபர் 30

இம்மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள மருத்துவர் பணியிடங்களில் 86 சதவீதம் அளவில் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள். எஞ்சியுள்ள காலி பணியிடங்களை மருத்துவர் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுமூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**99—**

## மருத்துவமனைகளில் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 33514—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் நிரப்பப்படாமலுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள் ஆகியவற்றின் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கை அடிப்படையில் அதனதன் செயல்பாட்டின் அடிப்படையிலும் மருத்துவர் சீரமைப்பின்படி போதிய மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்கள், தொடர்ந்து வரும் பணி நியமன கலந்தாய்வு மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வின்மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. காலியாக உள்ள மருத்துவம் சாரா பணியிடங்களை மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம்மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலியாகும் செவிலியர் பணியிடங்களும் அவ்வப்போது நடத்தப்படும் கலந்தாய்வு மற்றும் பணி நியமனம்மூலம் நிரப்பப்படுகின்றன. 200-க்கு குறைவான படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளுக்கு அடிப்படைப் பணியாளர்கள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாகவும், 200-க்கு மேற்பட்ட படுக்கை வசதிகள் கொண்ட அரசு மருத்துவமனைகளில் புற ஆதார முறையிலும் (Outsourcing) நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2013 அக்டோபர் 30]

**100—**

## வெளிநாடுவாழ் தமிழர்களுக்குப் பாதுகாப்பு

**வினா எண் 36601—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், தமிழ்நாட்டிலிருந்து வளைகுடா நாடுகளில் இருப்பவர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதை அரசு அறியும்.

*(ஆ)* தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளில் பணியாற்றச் சென்று உள்ளவர்களின் விவரம் குறித்து கணக்கெடுப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

[2013 அக்டோபர் 30

## 2. பாப்பான்குளத்தில் ஆதி திராவிடர் வீடுகள் இடிக்கப்பட்டது மற்றும் திருச்சியில் மாணவி பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது குறித்த முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இரண்டு விளக்கங்களைத் தர இருக்கிறார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் 28–10–2013 அன்று முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, 15–8–2013 அன்று சிவகங்கை மாவட்டத்தில் ஆதி திராவிடர்களின் வீடுகள் இடிக்கப்பட்டது குறித்துப் பேசியபோது, அந்த வீடுகளைக் கட்டவும், புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்த என்னுடைய விளக்கத்தினை இங்கே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கடந்த 8–8–2013 அன்று, ஆதி திராவிடரான சித்திரைவள்ளி என்பவர், அகமுடையாராகிய சீனிவாசன் என்பவர் தனது இடத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் அளித்த புகாரின் பேரில், 12–8–2013 அன்று காவல் துணைக் கண்காணிப்பாளர் பாப்பான்குளம் சென்று புகார் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளார். அப்போது, சந்நாசி என்பவரது தலைமையில் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த சிலர், மானாமதுரை துணைக் கண்காணிப்பாளரிடம், மயானத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி வாய்மொழியாக புகார் கூறியுள்ளனர். இது குறித்து அப்போது உடனிருந்த பஞ்சாயத்துத் தலைவரிடம் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் கூறியுள்ளார்.

முற்பகல் 11–40

14–8–2013 அன்று பஞ்சாயத்துத் தலைவர் உத்தரவின் பேரில், கிராம நிருவாக அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் ஓய்வு



2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பெற்ற நில அளவையாளர் சிவசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நில அளவை செய்யப்பட்டு, 15–8–2013 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 15–8–2013 அன்று, சிறுகுடி பஞ்சாயத்துத் தலைவரான திருமதி அம்சவள்ளியின் கணவர் திரு. தங்கராஜ், கிராம நிருவாக அதிகாரி, மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட போது எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. மீண்டும் நில அளவை செய்யப்பட்டு, 18–8–2013 அன்று மீதமுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் கிராம நிருவாக அதிகாரி மற்றும் காவல் துறையினர் சிலர் முன்னிலையில் அகற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, கடந்த 21–8–2013 அன்று பாப்பான்குளம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவர் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரைச் சந்தித்து, தங்கராஜ், பாப்பான்குளம் கிராம நிருவாக அதிகாரி மற்றும் காவல் துறையினர் ஆதி திராவிட சமுதாயத்தினரின் வீடுகளை ஆக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரில் இடித்துவிட்டதாகவும், இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரி புகார் அளித்துள்ளார். இப்புகார் குறித்து சிப்காட் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, காரைக்குடி துணைக் கண்காணிப்பாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக, சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார். இச்சம்பவம் தொடர்பாக அம்சவள்ளி மற்றும் ஆண்டி அம்பலம் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். ஆக்கிரமிப்புப் பணிகளை மேற்கொண்ட ஜேசிபி இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டது. கிராம நிருவாக அதிகாரி பாலசுப்பிரமணியன் 23–8–2013 அன்றும், சிவகங்கை வட்டாட்சியர் குருசுமுத்து மற்றும் பெரியகோட்டை வருவாய் ஆய்வாளர் சரவணன் ஆகியோர் 26–8–2013 அன்றும் மாவட்ட ஆட்சியரால் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆக்கிரமிப்பு அகற்றும் பணியின்போது, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு சிறப்பு உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமைக் காவலர் ஆகியோர் பணியிடை மாற்றம் செய்யப்பட்டதுடன், அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 30

மேலும் பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்குக் கீழ்க்கண்ட நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன:

பாதிக்கப்பட்ட 26 ஆதி திராவிட குடும்பங்களுக்கும் தலா 60,000 ரூபாய் வீதம் மொத்தமாக 15 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பிற்காக அருகில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டடத்தில் 21–8–2013 அன்று தங்க வைக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதியில் படித்து வந்த 13 ஆதி திராவிட மாணவர்கள் இனம் கண்டு உடனடியாக அருகில் உள்ள இடைக்காட்டூர் அரசு ஆதி திராவிட நல பள்ளி மாணவர் விடுதியில் 21–8–2013 அன்று சேர்க்கப்பட்டனர். இதேபோன்று ஒரு ஆதி திராவிட கல்லூரி மாணவியும், சிவகங்கை அரசு ஆதி திராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதியில் உடனடியாக சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

13 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதிய உத்தரவுகள் 31–8–2013 அன்று வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட 26 ஆதி திராவிட குடும்பங்களுக்கும் தலா 20 கிலோ அரிசி, 2 கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுத்தம் பருப்பு, ஒரு லிட்டர் பாமாயில், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மேற்படி கிராமத்தில் 3–10–2013 அன்று முதல் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

முழுவதும் இடிந்த வீடுகளில் வசித்து வந்த 7 குடும்பத்தினர் தங்குவதற்கு ஏதுவாக ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 595 ரூபாய் மதிப்பீட்டில் மின் வசதியுடன் கூடிய தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு 25–9–2013 முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மேற்படி பகுதிகளில் வசித்து வந்த 27 ஆதி திராவிடப் பெண்களுக்கு 3,500 ரூபாய் மதிப்புள்ள விலையில்லா தையல் இயந்திரங்கள் முறையே 21–8–2013 மற்றும் 31–8–2013 ஆகிய நாட்களில் வழங்கப்பட்டன. அதன் மொத்த மதிப்பு 91 ஆயிரத்து 500 ரூபாய் ஆகும்.



2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பாதிக்கப்பட்ட பகுதியில் வசித்து வந்த ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த +2 தேர்ச்சி பெற்ற மாணவி, 8–10–2013 அன்று சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதலாமாண்டு இளங்கலை பொருளியல், தமிழ்வழிக் கல்விப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். மேலும், அவர் சிவகங்கை அரசு ஆதி திராவிடர் நலக் கல்லூரி மாணவியர் விடுதியிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

பாப்பான்குளம் கிராமத்தில் இடிக்கப்பட்ட வீடுகளில் 2 கான்கிரீட் வீடுகள் முழுமையாகவும், ஒரு கான்கிரீட் வீடு அதிகம் சேதம் அடைந்ததும், 5 கான்கிரீட் வீடுகள் பகுதி சேதம் அடைந்ததும், 5 ஓட்டுக்கூரை வேய்ந்த வீடுகள் முழுமையாக சேதம் அடைந்ததும், 2 ஓட்டுக்கூரை வேய்ந்த வீடுகள் பகுதி சேதம் அடைந்ததும், 7 வீடுகளில் ஓட்டுக்கூரை வேய்ந்த தாழ்வாரங்கள் அதிக சேதம் அடைந்ததும், 4 வீடுகளில் பகுதி சேதம் அடைந்ததும் கண்டறியப்பட்டது.

முற்பகல் 11–45

மேற்கண்ட சேதமடைந்த 26 வீடுகளில், 19 வீடுகள் புனரமைக்கப்பட வேண்டும். மீதமுள்ள 7 வீடுகள் புதிதாகக் கட்டித் தரப்பட வேண்டும். குடியிருக்க இயலாத நிலையில் உள்ள 7 வீடுகளின் குடும்பத்தினர் தங்குவதற்கு தற்காலிகக் கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி, முழுமையாகச் சேதம் அடைந்த 7 வீடுகளுக்குப் பதிலாக கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு 15 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய், மீதமுள்ள 19 வீடுகளைப் புனரமைக்க 9 இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபாய் என மொத்தம் 24 இலட்சத்து 43 ஆயிரத்து 500 ரூபாயினை அனுமதித்து நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள், திருச்சியில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த தவுபிக் சுல்தானா என்ற மாணவி பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி அந்தப் பெண் கொலை செய்யப்பட்டு, அவரது உடல்

இரயில்வே இருப்புப் பாதை அருகே கண்டெடுக்கப்பட்டது என்றும், அந்த வழக்கை தமிழ்நாடு அரசு சி.பி.சி.ஐ.டி.–யிடம் ஒப்படைத்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன என்றும், விரைவிலே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். இது குறித்த எனது விளக்கத்தினை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்சி, காஜாமலைப் பகுதியைச் சேர்ந்த அக்பர் பாட்சா என்பவரின் மகள் தவுபிக் சுல்தானா மேலப்புதூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்து வந்தார். கடந்த 13–8–2013 அன்று பள்ளிக்கு சென்ற சுல்தானா மாலையில் வீடு திரும்பவில்லையென அவரது உறவினர் ஜமாலுதீன் என்பவர் 14–8–2013 அன்று அளித்த புகாரின் பேரில், பாலக்கரை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் காணாமல் போன தவுபிக் சுல்தானா ரெட்டைமடை இரயில்வே தண்டவாளத்திற்கு அருகில் இறந்து கிடப்பதாக தகவல் தெரியவந்ததையடுத்து, காவல் துறையினர், உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைக் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக திருச்சி இரயில்வே காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்னர் அவ்வழக்கு எடைமலைபட்டிபுதூர் காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

சுல்தானாவின் இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும், எதிரிகளைக் கைது செய்ய வேண்டுமெனவும் கோரி, த.மு.மு.க. உள்ளிட்ட முஸ்லிம் அமைப்பினர் கோரிக்கை விடுத்து 15–8–2013 மற்றும் 16–8–2013 ஆகிய தேதிகளில் போராட்டங்களில் ஈடுபட்டு அரசு சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர். இதுதொடர்பாக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

பின்னர், சுல்தானா குறித்து பதிவு செய்யப்பட்ட இரண்டு வழக்குகளும் 30–8–2013 அன்று மாநில குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, மாநில குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளியிலிருந்து திரும்பிய மாணவி வழக்கப்படி வீட்டிற்குச் செல்லாமல் இரயில் பாதையில் நடந்து





செல்வதைப் பல சாட்சிகள் கண்டுள்ளனர். இரயில் வண்டியில் இப்பெண் அடிபட்டதற்கான அறிகுறிகள் பிரேதப் பரிசோதனையில் காணப்பட்டுள்ளன. இது விபத்து காரணமாக ஏற்பட்டதா அல்லது தற்கொலையா அல்லது வன்முறையினால் நடைபெற்ற மரணமா என்பது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### டி.டி. மருத்துவக் கல்லூரி மாணவர்களை இதர அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–50*

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட அறிக்கைமீது விவாதம் கோருதல்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிக்குச் சென்றுவிட்டேன். *(குறுக்கீடு)* என் அனுமதியில்லாமல் திடீரென்று நீங்கள் raise பண்ண முடியாது. *(குறுக்கீடு)* அறிக்கை மேசையில் வைக்கப்பட்டுள்ளது. *(குறுக்கீடு)* விதிகளின்படி நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். *(குறுக்கீடு)* நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? *(குறுக்கீடு)* அதெல்லாம் முடியாது, நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்குப்

போய்விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால், அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லாமல் நீங்கள் இப்படியெல்லாம் பேச முடியாது. (குறுக்கீடு) நான் ஜவாஹிருல்லாவைப் பேச அழைத்துவிட்டேன். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் அறிக்கையை கிழித்துப் போடவா என்று கேட்கிறார்கள். நீங்கள் எப்படி இதை அனுமதிக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** அவைக் குறிப்பில் ஏறாது என்றாலும், அவர் சொன்னதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் செய்வது முறையில்லாத செயல். இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இதற்குமேல் நீங்கள் பேசுவதற்கு அனுமதியில்லை, உட்காருங்கள். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இன்று கடைசி நாள்தான். (குறுக்கீடு) இதுசம்பந்தமாக நீங்கள் நோட்டீஸ் கொடுங்கள், நான் பார்க்கிறேன். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருகிறீர்களா அல்லது உங்கள்மீது நடவடிக்கை எடுக்கவா? நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.



## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### டி.டி. மருத்துவக் கல்லூரி மாணவர்களை இதர அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்த்தல்—தொடர்ச்சி

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.டி. மருத்துவக் கல்லூரி மாணவர்களை இதர அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்த விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களின் மேசைமீது வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

*டி.டி. மருத்துவக் கல்லூரி ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி ஆகும். இதற்கு இந்திய மருத்துவக் குழுமம் 2010–2011 ஆம் ஆண்டு 150 மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதி அளித்தது. அதன் பிறகு 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளுக்கு இந்திய மருத்துவக் குழுமம் அனுமதி மறுத்துள்ளது. இந்திய மருத்துவக் குழுமம் அனுமதி மறுத்தபோதிலும், டி.டி. மருத்துவக் கல்லூரி சட்டத்திற்குப் புறம்பாக 2011–2012 ஆம் ஆண்டு 57 மாணவிகள் உட்பட 103 மாணவர்களையும், 2012–2013 ஆம் ஆண்டு 58 மாணவிகள் உட்பட 106 மாணவர்களையும் சேர்த்துள்ளது தெரியவந்துள்ளது.*

*இந்திய மருத்துவக் குழுமம் இக்கல்லூரிக்கான அனுமதியை மறுத்துள்ளதைத் தொடர்ந்து இம்மருத்துவக் கல்லூரிக்கு எதிராக மாணவர்கள் காவல் துறையில் புகார் மனுக்கள் அளித்துள்ளார்கள். மேலும், கல்லூரி தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தியுள்ளனர்.*

[திரு. கே.சி. வீரமணி] [2013 அக்டோபர் 30

மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, இந்த மருத்துவக் கல்லூரி நிருவாகம் தொடர்ந்து மாணவர்களை ஏமாற்றி இந்திய மருத்துவக் குழுமத்தினை வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில், இந்திய மருத்துவக் குழுமத்தின் ஆளுநர்கள் வாரியம் 9–10–2013 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மாநில அரசின் கோரிக்கையை ஏற்று டி.டி. மருத்துவக் கல்லூரியில் 2010–2011 ஆம் ஆண்டில் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்ந்த மாணவர்களை அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் கூடுதல் மருத்துவ இருக்கைகளை உருவாக்கி, அம்மாணவர்களின் தகுதி அல்லது விருப்பத்தின் அடிப்படையில் சேர்க்க ஒரு சிறப்பு நிகழ்வாக மாநில அரசுக்கு அனுமதி அளித்துள்ளது.

இந்திய மருத்துவக் குழுமம் அனுமதி அளித்துள்ளதைத் தொடர்ந்து, டி.டி. மருத்துவக் கல்லூரியில் 2010–2011 ஆம் ஆண்டு சேர்ந்த மாணவர்களை அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடங்களை ஏற்படுத்தி அவர்களை உடனடியாகச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்திய மருத்துவக் குழுமம், டி.டி. மருத்துவக் கல்லூரியில் 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மாணவர் சேர்க்கை இந்திய மருத்துவக் குழுமச் சட்டம் 1956–ன் பிரிவு 10ஏ–விற்கு முரணானதாகும் என்றும், இந்திய மருத்துவக் குழுமத்தின் அனுமதி பெறாமல் சட்டத்திற்குப் புறம்பான முறையில் நடத்தப்பட்டுள்ளது என்றும், இச்சட்டத்திற்குப் புறம்பாக மாணவர்களைச் சேர்ப்பதன் விளைவு குறித்து பிரிவு 10பி–ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இதன்படி முறையான அனுமதி பெறாமல் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படுமேயானால் அக்கல்லூரியின் எந்த மருத்துவப் படிப்பும் இந்திய மருத்துவக் குழு சட்டம், 1956–ன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும், மேற்கண்ட சட்டத்திற்குப் புறம்பான முறையில் நடத்தப்பட்ட மாணவர்களின் சேர்க்கையை ஏற்க இயலாது என்றும் தெரிவித்து, சட்டத்திற்குப் புறம்பான முறையில் மாணவர் சேர்க்கையை நடத்திய டி.டி. மருத்துவக் கல்லூரி நிருவாகத்தின்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

டி.டி. மருத்துவக் கல்லூரி மற்றும் டி.டி. மருத்துவமனைக்கு 12–7–2010–ல் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு இந்திய மருத்துவக் குழுமத்திற்கு மாநில அரசு பரிந்துரை செய்தது. இதனை ஏற்றுக்கொண்டு, மேற்கண்ட கல்லூரிக்கு 12–7–2010–ல் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தினை இந்திய மருத்துவக் குழுமம் திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளது.



2013 அக்டோபர் 30] [திரு. கே.சி. வீரமணி]

இம்மருத்துவக் கல்லூரியில் 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளில் சேர்ந்த மாணவர்களுக்கு எந்தவித சட்டபூர்வ உரிமையும் இல்லை. எனினும், மாணவர்களில் ஒரு சாரார் இந்தக் கல்லூரியை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கோரி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் முன்பாக உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் 20–9–2013 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அப்போது, இம்மருத்துவக் கல்லூரிக்கு இந்திய மருத்துவக் குழுமம் அனுமதி மறுத்துள்ள நிலையில், மாநில அரசு இதில் தலையிட முடியாது என்றும், மாணவர்கள் விரும்பினால், மாநில அரசின்கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்களில் மருத்துவம் சாரா படிப்புகளான எம்.எஸ்சி. (பயோ டெக்னாலஜி), எம்.எஸ்சி. (மைக்ரோபயாலஜி) எம்.எஸ்சி. (தகவல் தொழில்நுட்பம்) எம்.எஸ்சி. (கடல் அறிவியல் தொழில்நுட்பம்) போன்ற உயர் தொழில்நுட்பப் படிப்புகளில் அவர்களைச் சேர்ப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து அளித்திருக்கக்கூடிய விரிவான அறிக்கையை படித்துப் பார்த்தேன். அந்த அறிக்கையில் 2010–2011–லே சேர்க்கப்பட்ட மாணவர்களை வேறு அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதை வரவேற்கின்றேன்.

அதேபோன்று 2011–2012 மற்றும் 2012–2013–ல் சேர்க்கப்பட்ட மாணவர்களையும் பிற அரசு மருத்துவக் கல்லூரிகளிலே சேர்ப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். காரணம்,

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 அக்டோபர் 30

என்னவென்றால் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டதுபோல 12–7–2010–ல் இந்தக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு இந்திய மருத்துவக் குழுமத்திற்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளது. அதை ஏற்றுக்கொண்டு 12–7–2010–ல் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தை இந்திய மருத்துவக் குழுமம் திரும்பப் பெற்றுள்ளது. . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இந்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தேர்வு எழுதுவதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் அவர்கள் வேறு படிப்புகளுக்குச் செல்வது பொருந்தாது. 45 இலட்சம் ரூபாய்வரை அவர்கள் பணம் கட்டியிருக்கிறார்கள். எனவே, முதலில் 2010–2011 ஆம் ஆண்டு மாணவர்களுக்குக் கொடுத்த அதே சலுகையை இந்த மாணவர்களுக்கும் அரசு கருணையுடன் கொடுக்க வேண்டும். அரசு கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.டி. மருத்துவக் கல்லூரியில் பயிலும் 2011–2012 ஆம் ஆண்டு மாணவர்கள் தேர்வுக்குமுன் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு உத்தரவாதம் அளித்திருக்கின்றார்கள். அதில் இந்திய மருத்துவக் குழுமம் அங்கீகாரம் இதுவரை இந்த மருத்துவக் கல்லூரிக்குக் கிடைக்கவில்லை என்று நாங்கள் நன்கு அறிவோம். இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்றால்தான் இந்தத் தேர்வு மற்றும் தேர்வு முடிவுகள் எங்களுக்குப் பயன்பெறும் என்பதும் எங்களுக்கு நன்கு தெரியும் என்றும், இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாவிட்டால், நாங்கள் மாநில அரசையோ, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தையோ பொறுப்பாகக் கருத மாட்டோம் என்றும்



2013 அக்டோபர் 30] [திரு. கே.சி. வீரமணி]

எழுத்து மூலமாக உத்தரவாதம் அளித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் அப்போதைய துணை வேந்தர் இந்தத் தேர்வை நடத்தி அந்தத் தேர்வின் முடிவுகளையும் வெளியிட்டுள்ளார்கள். இதற்கு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பொதுக் குழு ஒப்புதலும் அளிக்கப்படவில்லை. இருப்பினும் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அங்கீகாரம் என்பது இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியின் விளம்பரத்தின் அடிப்படையிலோ, வருங்காலத்தில் அங்கீகாரம் பெறும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலோ மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரியில் சேரக் கூடாது, மேலும், இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரம் இல்லாத மருத்துவக் கல்வியைத் தொடர்ந்தால்கூட அவர்களுக்கு எம்.பி.பி.எஸ். பட்டம் அளிக்க இயலாது என்று திட்டவட்டமாக இந்திய மருத்துவக் குழுமம் தெளிவுபடுத்தி ஒரு பொது அறிவிப்பை எம்.சி.ஐ. வெப்சைட்மூலம்கூட வெளிப்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு."

குடிமக்களை நன்கு பாதுகாத்து, நீதி நெறி தவறாது நல்லாட்சி செய்யும் அரசினுடைய அடிகளைப் பொருந்தி இவ்வுலகம் நடக்கும் என்ற வான்புகழ் கொண்ட வள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாய், சாதிக்கு ஒரு நீதி என்றில்லாமல், சகலருக்கும் ஒரே நீதி என்ற சமதர்ம சமுதாய நெறி காத்து, இவ்வுலகத்தின் உயிர்குலத்தை தன் உயிருக்கும் மேலாக நேசித்து, போற்றி,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 30

பாதுகாத்து நீதிநெறி தவறாது இந்த நாடும், இந்த உலகமும் போற்றி வாழ்த்துகின்ற புனித ஆட்சி நடத்தி வருகின்ற எங்கள் உயிருக்கும் மேலான தெய்வத் தலைவியே, வாழும் பசும்பொன்னே, மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் சுண்டுவிரல் நீட்டி சுட்டிக்காட்டுகின்ற திசையிலே இந்த உலகம் பயணிக்கும் அந்தப் பொன்னான நாள் வெகு விரைவிலே மலரும், மலரும் என சூளுரைத்து தாயே, அம்மா, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 2013–2014 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 96–வது அறிக்கையை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013–2014 ஆம் ஆண்டின்* முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், பதிலுரையும் மற்றும் வாக்கெடுப்பும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் துணை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் எதிர்த் தரப்பில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கின்றார்கள். தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் கடைசியாகப் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றதற்காக தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

*நண்பகல் 12–00*

பொதுவாக, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் 3 கருத்துகளைக் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். முதலாவதாக

சில கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக போரூர் ஏரியிலிருந்து வெள்ள நீர் வடிவதற்கான பொதுப் பணித் துறைப் பணிகள் இன்னும் முடியவில்லை. மழைக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் அச்சத்திலே இருக்கிறார்கள். பொதுப் பணித் துறையினர் அதை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவிலே பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. அதேபோன்று, போரூர் பகுதியிலே மேம்பாலப் பணிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. போக்குவரத்து நெரிசல் மிகவும் கடுமையாக அங்கேயிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். நீண்ட காலமாக அந்தப் பணிகள் அப்படியே இருப்பதனால் எவ்வாறு பொதுப் பணித் துறையினர் விரைந்து பணியாற்றுகிறார்களோ அதேபோல நெடுஞ்சாலைத் துறையினரும் பணியாற்றி அதை முடிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை அரசினால் வழங்கப்படுகிறது என்று அறிகிறேன். ரூ.2,500/– தரப்படுவதாகவும், அது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு மட்டும் தரப்படுகிறது என்றும், ஏற்கெனவே அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த ஏழைகளுக்கும் அது தரப்பட்டதாகவும், அது இடையிலே நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் நான் அறிகிறேன். அதுபற்றி அரசு ஆய்ந்து, தக்க முடிவெடுத்து, அப்படி ஏற்கெனவே அந்தச் சலுகைகள் அனைத்துப் பிரிவினருக்கும் வழங்கப்பட்டிருந்தால் அதை அவர்களுக்கும் உரித்தாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



மேலும், அண்மையிலே ஒரு செய்தி பார்த்தேன். அனைவருக்கும் கல்வித் திட்டம் என்ற அடிப்படையில் கல்வியை வழங்குகின்ற உரிமையை சட்ட உரிமையாக ஆக்கப்படுகின்ற சூழ்நிலையில், தனியார் கல்விக் கூடங்களில் நலிவுற்ற பிரிவினருக்கு 25 சதவிகிதம் இடம் ஒதுக்க வேண்டுமென்கிற கட்டாயம் இருக்கிறது. அதன்படி 25 சதவிகிதத்தில் சேர்ந்தவர்களுக்கு அரசு செலுத்த வேண்டிய கட்டணச் சலுகைகள் இன்னும் வரவில்லை. மத்திய அரசிடத்திலேயிருந்து உரிய தொகையை மாநில அரசு இன்னும் பெறவில்லை. ஆகையினாலே அங்கு தாமதம் ஏற்படுகிறது என்றும், கடந்த ஆண்டே கிடைக்காததால் இந்த ஆண்டு அப்படிச் சேர்கின்ற ஏழை மாணவர்களிடத்திலே கல்விக் கட்டணத்தை நீங்கள் கட்டித்தான் தீர வேண்டுமென்று நிருவாகத்தினர் வற்புறுத்துவதாகவும், அதனாலே ஏழை மாணவர்கள் மிகுந்த சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றும் ஒரு செய்தி பார்த்தேன். மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதுபற்றி அக்கறை எடுத்து, அந்த ஏழை மாணவர்களுக்கு அத்தகைய இன்னல்கள் ஏற்படுமேயானால் அதைத் தவிர்ப்பதற்கு முதலிலே தமிழக அரசாவது அந்தக் கட்டணத்தைச் செலுத்திவிட்டு, பிறகு மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இரண்டாவதாக, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முதல் துணை மானியக் கோரிக்கையாக இதைத் தந்திருக்கிறார்கள். அனேகமாக இந்த ஆண்டிற்கு இதுவே இறுதித் துணை மானியக் கோரிக்கையாகக்கூட அமையலாம். ஏனென்றால், அடுத்து பெரிய பட்ஜெட்டே வரவிருக்கிறது. ஆகவே, இது முதலாவதாகவும், கடைசியாகவும் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. 5,898 கோடி ரூபாய் வேண்டுமென்று இந்த மன்றத்தின் அனுமதியைக் கேட்டிருக்கின்றார்கள். அதிலே இந்தக் கூடுதல் செலவிற்காக எந்தவகையிலேயும் வரிகளோ, கட்டணங்களோ உயர்த்தப்படமாட்டாது என்று அவர் சொல்லியிருப்பதற்காக நான் உண்மையிலேயே அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் இதைப்போல துணை மதிப்பீடுகள் வருகின்றபோது, ஏற்படுகின்ற கூடுதல் செலவுகளைச் சரிக்கட்ட கட்டணங்களை உயர்த்துவதும், வரிகளை உயர்த்துவதும்தான் வாடிக்கை. இந்திய அரசுகூட இதற்கு விதிவிலக்கு அல்ல.

பிற்பகல் *12–05*

பெட்ரோலியப் பொருட்களின் விலையை அவ்வப்போது உயர்த்துவதும், இரயில்வே கட்டணத்தை உயர்த்துவதுமாக அவர்கள் இடைக்காலத்திலே நிதிப் பற்றாக்குறையைச் சரி செய்கிறார்கள். ஆனால், அதைப்போல அல்லாமல் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எந்த வகையிலேயும் கூடுதல் சுமையை ஏற்றவில்லை என்பதைப் பார்க்கின்றபொழுது உண்மையிலேயே அது வரவேற்புக்குரியது.

ஆனால், அதே நேரத்திலே இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிகமாக வரி செலுத்துகின்ற மாநிலம் என்று நான் அறிகிறேன். அதாவது Highest Taxes, Tax Effort என்று சொல்வார்கள். ஒரு மாநிலம் தன்னுடைய நிதி வாயிலைப் பெருக்குவதற்கு வரி போடுகிறது. ஆனால், தமிழ்நாடு போடுகின்ற வரி விதிப்பு—அதாவது தனி நபர் வருமானத்தின் அடிப்படையிலே தமிழ்நாட்டு மக்கள் செலுத்துகின்ற வரி இந்தியாவிலேயே அதிகம் என்று அறிகிறேன். அதைத்தான் Tax Effort என்று சொல்வார்கள். Per capita G.D.P. எவ்வளவு என்று பார்த்து அதிலே எவ்வளவு வரி கட்டுகிறார்கள் என்று பார்க்கின்றபொழுது Tax Effort இந்தியாவிலேயே அதிகம் என்று சொல்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய நிதி நிலையை நிருவகிக்கின்றபோது பல்வேறு வகையான நிதி ஆதாரங்கள் உண்டு. மத்திய அரசிடமிருந்து நிதி கமிஷன் மூலமாக நிதி கிடைக்கிறது. திட்டக் கமிஷன் மூலமாக நிதி கிடைக்கிறது. மத்திய சர்க்காருடைய நேரடித் திட்டங்கள் மூலமாக நிதி கிடைக்கிறது. மத்திய சர்க்காருடைய திட்டங்களை மாநிலங்கள் நிறைவேற்றுகின்றபோது மத்திய சர்க்காரினுடைய உதவி கிடைக்கிறது, அதாவது, Centrally Sponsored Schemes. இந்த உதவிகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இவை நாளாவட்டத்திலே குறைந்து வருகிறது. அதனுடைய விளைவாகத்தான் இங்கே வரி போட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 100–க்கு 74 விழுக்காடு தமிழ்நாட்டினுடைய நிதி ஆதாரங்களை நாம் தமிழ்நாட்டு மக்களிடத்திலே வரி போட்டுத்தான் திரட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் அறிகிறேன். அந்தளவுக்கு இங்கே கூடுதல் வரி போட



வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது என்கின்றபோது, நியாயமாக மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, அண்மையிலே ஒரு புள்ளிவிவரத்தைப் பார்த்தேன். 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை, 5 ஆண்டுகளில் மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநிலங்களுக்கு வந்த நிதியுதவி, தனி நபர் அடிப்படையிலே கணக்கிடுகிறபோது, ஒடிசா மாநிலத்திற்கு ரூ.1,688/–, ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு ரூ.1,556/–. ஆனால் தமிழ்நாட்டுக்கு ரூ.1,029/–. எந்த அடிப்படையிலே இந்த நிதியை ஒதுக்குகிறார்கள் என்று தெரியவில்லை. அது நிதிக் குழுவானாலும் சரி, திட்டக் குழுவானாலும் சரி அல்லது வேறு வகையிலே அவர்கள் நேரடியாக ஒதுக்குகின்ற திட்ட உதவித் தொகையானாலும் சரி, அதற்கு ஒரு rationale இருக்க வேண்டும். அதற்கு ஒரு முறை இருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை. பின்தங்கிய மாநிலங்களுக்குத்தான் நிதி ஒதுக்கவேண்டும், அதற்குத்தான் நாங்கள் அதிகம் தருகிறோம் என்று அவர்கள் சொல்வார்களேயானால், ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு ரூ.1,556/– ஒதுக்கப்படுகிறது. அந்த மாநிலத்திற்கு அருகிலே இருக்கிற உத்தரப் பிரதேசம் மாநிலத்திற்கு ரூ.775/– ஒதுக்கப்படுகிறது, அதிலே பாதிதான். ஆகவே, மத்திய அரசு தன்னுடைய பொறுப்பிலே இருக்கின்ற நிதியினை விருப்பம்போல் அவர்கள் ஒதுக்குவதன் விளைவு இன்றைக்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய பல மாநிலங்களினுடைய நிலைமையைப் பார்க்கிறபோது—இந்தியாவின் சராசரி ரூ.1,423/– என்றால், அதைவிட குறைந்த நிலையிலேதான் தமிழ்நாடு பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதிலே இன்னும் ஒரு சிக்கல் வரவிருக்கிறது. அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகின்றேன். இப்போது G.S.T. என்கிற ஒரு திட்டத்தை இந்திய அரசு அறிமுகப்படுத்த விரும்புகிறது. எவ்வாறு ஏற்கெனவே மதிப்புக் கூட்டு வரி என்று அறிமுகப்படுத்தினார்களோ, அதைப்போல இப்பொழுது பொருட்கள் மற்றும் சேவை வரி என்று இந்தியா முழுவதற்கும் கொண்டுவர விரும்புகிறார்கள். அதன்மூலம் மிகப் பெரிய ஆபத்தை வருவாய் இனங்களிலே அவர்கள் கொண்டுவருவார்களேயானால் அதனுடைய விளைவாகவும்

பாதிக்கப்படுகின்ற நிலையிலே தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டின் சார்பிலே அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறோம் என்றாலும்கூட, G.S.T. என்கிற அந்தத் திட்டம் வருமேயானாலும் பாதிக்கப்படும்.

*பிற்பகல் 12–10*

இன்னொரு ஆபத்தும் மத்திய சர்க்காரிடமிருந்து நமக்குக் கிடைக்கின்ற நிதி ஆதாரங்களிலே இருக்கிறது. அது என்னவென்றால், சமீப காலமாக சில மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தாங்கள் மிக, மிகப் பின்தங்கிய மாநிலத்தவர்கள். தங்களுக்குச் சிறப்பு அந்தஸ்து வேண்டுமென்று கேட்டு, அதற்கான முயற்சியிலே ஈடுபட்டதன் விளைவாக, இன்றையதினம் ரிசர்வ் வங்கி கவர்னராக இருக்கக்கூடிய திரு. ரகுராம் ராஜன் என்பவருடைய தலைமையிலேயே ஒரு கமிட்டியைப் போட்டு, எவ்வாறு மத்திய அரசிடமிருந்து நிதியைப் பகிர்ந்து கொடுப்பது என்ற ஒரு பரிந்துரையை வழங்கினார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அந்தப் பரிந்துரையின்படி, மிகவும் விசித்திரமாக தமிழ்நாடு மிகவும் முன்னேறிய மாநிலம் என்கின்ற அடிப்படையிலே, கொள்கையை வகுத்திருக்கின்றார்கள். இதை ஏற்றுக்கொள்ள முடியாது, இது சட்டபூர்வமானது அல்ல என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். ஏன் இதையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்றால், வர வேண்டிய உதவிகள், வர வேண்டிய மானியங்கள், வர வேண்டிய சலுகைகள் முறைப்படி தமிழ்நாட்டுக்குக் கிடைக்காத காரணத்தினாலேதான், வரிகளை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, நாம் வரிகளை ஏற்றவில்லை. 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் எந்த ஒரு இனத்திலும், எந்த ஒரு பொருள்மீதும் புதிதாக வரிகள் விதிக்கப்படாத, வரியில்லாத பட்ஜெட்டைத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு



கொண்டு வந்தது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்லவில்லை. நான் குறிப்பிடுவது, Tax Effort. அதாவது, நாம் போடுகிற வரி விகிதம் இதர மாநிலங்கள் போடுகிற வரி விகிதத்தைவிட அதிகம் என்பதைத்தான். மத்திய சர்க்காரிடமிருந்து இதர மாநிலங்கள் தாராளமாக நிதியினைப் பெற்றுக்கொள்கின்றன. வரி அதனால் அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கின்றது. ஆனால், அதே நேரத்திலே பாதிக்கப்படுகின்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் செய்ய வேண்டிய செலவினை சரிக்கட்டுவதற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுகின்றபோது, அதற்காக நம்முடைய tax effort-ஐ கூட்ட வேண்டியிருக்கிறது. 14–வது நிதிக் குழுவை இப்போது போட்டிருக்கிறார்கள். 14–வது நிதிக் குழு இவற்றையெல்லாம் பற்றி ஆராயும். ஆனால், நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், மத்திய சர்க்காரிடத்திலிருந்து வருகின்ற உதவிகள் முறைப்படுத்தப்படவில்லை. ஆகவே, திட்டக் கமிஷனானாலும் சரி அல்லது மத்திய சர்க்காருடைய Central Sector Schemes ஆனாலும் சரி, Centrally Sponsored Schemes ஆனாலும் சரி, அவற்றையெல்லாம் முறைப்படுத்த வேண்டுமேயானால், ஒன்று நிதிக் குழுவோடு அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் அவர்கள் விருப்பம்போல் ஒதுக்கீடு செய்வதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டவே நான் இதை இங்கே குறிப்பிட்டேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல், இன்றைக்கு மக்களை மிரட்டிக் கொண்டிருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினை விலைவாசி உயர்வுப் பிரச்சினை. விலைவாசி உயர்வு என்பது ஏழைகளைத்தான் வெகுவாகப் பாதிக்கக்கூடியது. அவர்கள்தான் பொருளை வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். விலை உயருகிறபோது பொருளை

வைத்திருக்கிறவருக்கு இலாபம். ஆனால், பொருளை வாங்குகிறவருக்கு நஷ்டம். ஆக, விலைவாசி உயர்வு என்பது, மிகவும் அச்சம் தரக்கூடிய சூழ்நிலையில் இன்று இருக்கிறது என்பதை நேற்றையதினம் ரிசர்வ் வங்கி கவர்னர் வெளியிட்ட அறிக்கையிலே சொல்கிறார். விலைவாசி உயருகிறது. விலைவாசி குறையுமா என்றால், குறையாது என்று ரிசர்வ் வங்கி கவர்னரே சொல்கிறார். ஆனால், விலைவாசி உயர்வால் அதிகமாக யார் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள்தான். அவர்கள் குடும்பத்தினுடைய பட்ஜெட், வரவு–செலவு, விலைவாசி உயர்வால் பாதிக்கப்படுகிறது. அவர்கள் செய்ய வேண்டிய செலவுகளை எந்தக் காரணத்தினாலும் குறைத்துக்கொள்ள முடியாது. வீட்டு வாடகையோ அல்லது போக்குவரத்துச் செலவோ அல்லது பிள்ளைகளைப் படிக்க வைக்கின்ற செலவோ, வயதானவர்களின் வைத்திய செலவோ தவிர்க்க முடியாத செலவுகள். ஆகவே, இவையெல்லாம் போகத்தான் தங்களுடைய உணவுக்கோ, உடைக்கோ அவர்கள் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக வளர்ந்த நாடுகளிலேகூட வறுமையை ஒழிக்க வேண்டுமென்று நினைக்கின்றபோது, விலைவாசியைச் சீராக வைத்துக்கொள்வார்கள். 15 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகள் விலைவாசி சீராக இருக்கின்றபோது, வருமானம் அதிகரிக்கின்றபோது வறுமை குறையும். ஆக, விலைவாசி அதிகமாகிறது என்றாலே அது வறுமையை அதிகரிக்கிறது என்று பொருள். அதனாலே, ஏழை, எளிய, நடுத்தர மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் தங்களுடைய குடும்ப நிதிநிலையை சரிக்கட்டுவதற்கு வேறு வழி இல்லாமல் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கடன் வாங்கவும் முடியாது, வருமானத்தைப் பெருக்கவும் முடியாது. ஆகவே, செலவைச் சுருக்கி அவர்கள் காலத்தைக் கழிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆக, விலைவாசியைக் குறைப்பதிலே மத்திய சர்க்கார் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை.

பிற்பகல் 12–15

விலைவாசி உயர்வுக்கு மத்திய, மாநில அரசுகள், இரண்டும்தான் காரணம் என்பார்கள். அண்மையிலேகூட மத்திய அரசினுடைய அமைச்சர் அவர்கள் வெங்காய விலை உயர்வைப்பற்றிச் சொல்கிறபோது மாநில அரசுகள்தான் அதனைத் தடுக்க



வேண்டுமென்று சொல்கிறார்கள். விலைவாசியினுடைய அடிப்படையான ஏற்ற, இறக்கம் மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்திருக்கிறது. ஒரு மாநில அரசு பதுக்கலை வெளியே கொண்டு வருவதோ அல்லது விலையைக் கட்டுப்படுத்துவதோ, பொதுவான விலைவாசி ஏற்றத்தைக் குறைக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள். ஆனால், விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க மாநில அரசு தன்னால் முடிந்த அளவு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பிற மாநில அரசுகளைப்பற்றி நான் பேச வரவில்லை. தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசினால் ஏற்பட்ட வெங்காய விலை ஏற்றத்தினைச் சமாளிக்க மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கோயம்பேடு மார்க்கெட்டில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ ஒன்றுக்கு 60 ரூபாய்; சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 75 முதல் 80 ரூபாய் விலையில் விற்கப்படுகிறது; பழமுதிர் நிலையங்கள் போன்ற நவீனமயமாக்கப்பட்ட கடைகளில் பெரிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 70 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது, சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 95 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது; ஆனால், தமிழ்நாடு அரசின் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில்—தற்பொழுது சென்னையில் 30 கடைகள் இயங்கி வருகின்றன—தரமான பெரிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 50 ரூபாய் என்ற விலைக்கு விற்கப்படுகிறது, (மேசையைத் தட்டும் ஒலி) சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 60 ரூபாய் என்ற விலைக்கு விற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்த அரசைப் பொறுத்தவரையில், மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையைக் குறைப்பதற்கு தன்னால் இயன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பிற மாநிலங்களில் பெரிய வெங்காயத்தின் விலை என்னவென்றால், பெங்களூருவில் 58 ரூபாய்; ஐதராபாத்தில் 60

ரூபாய்; கேரளாவில் 70 ரூபாய்; டெல்லியில் 65 ரூபாய்; மும்பையில் 70 ரூபாய்; கொல்கத்தாவில் 70 ரூபாய்; பீகாரில் 80 ரூபாய்; அசாமில் 78 ரூபாய்.

தமிழ்நாட்டிற்குப் பெரிய வெங்காயம் மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள நாசிக், லாசல்கான், அகமத் நகர், பிம்பிள்கான் மற்றும் ஷோலாப்பூர் ஆகிய பகுதிகளிலிருந்தும், கர்நாடக மாநிலத்திலுள்ள ஹாசன், ஹுப்ளி, தேவகரே மற்றும் பெங்களூருவிலிருந்தும், ஆந்திர மாநிலத்திலுள்ள கர்னூல், ஆதோனி ஆகிய பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்திலுள்ள கர்னூலில் போராட்டம் நடைபெறுவதால், அங்கிருந்து வெங்காயம் கொண்டு வர இயலாத நிலையுள்ளது.

கோயம்பேட்டிற்கு நாளொன்றுக்கு சுமாராக 70 லாரிகளில் வெங்காயம் வந்து கொண்டிருந்தது. 24–10–2013 அன்று 55 லாரிகளும் 25–10–2013 மற்றும் 26–10–2013 ஆகிய தேதிகளில் 50 லாரிகள் மட்டுமே வந்துள்ளன. இருப்பினும், தமிழகத்தில் வெங்காயத்தின் விலை மற்ற மாநிலங்களிலுள்ள வெங்காயத்தின் விலையை ஒத்ததாகவே உள்ளது. நுகர்வோருக்கு நியாயமான விலையில் வெங்காயம் கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கையாக சென்னை பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தற்போது நாளொன்றுக்கு ஆறு டன் பெரிய வெங்காயமும், ஒரு டன் சாம்பார் வெங்காயமும் விற்பனை செய்யப்படுகிறது. 26–10–2013 முதல் எனது உத்தரவின்படி பெரிய வெங்காயம் மற்றும் சாம்பார் வெங்காயத்தின் கொள்முதல் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

காய்கறிகளின் விலையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக உடனடியாகக் கூடுதலாக 10 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளைத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா உணவகங்களைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். சாதாரணமாக ஓட்டல்களில் இட்லி, சாம்பார் சாப்பிடுவதென்றால் என்ன விலை என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால், அம்மா உணவகங்களில் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது; (மேசையைத் தட்டும் ஒலி) சாம்பார் சாதம் ஐந்து ரூபாய்க்கு வழங்கப்படுகிறது; தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இப்படி, அதிகமான அம்மா உணவகங்களை எங்கெல்லாம் துவங்க



முடியுமோ, துவங்கி, மக்களுடைய சுமையைக் குறைப்பதற்கு இந்த அரசு மேலும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சாதாரணமாக ஒரு பாட்டில் மினரல் வாட்டர் வாங்கிக் குடிக்க வேண்டுமென்றால், 20 ரூபாய் ஆகும். 20 ரூபாய்க்குக் குறைந்து வெளிச் சந்தையில் கிடைக்காது. ஆனால், போக்குவரத்துத் துறை மூலமாக அதே தரமான குடிநீரை, மினரல் வாட்டரை 10 ரூபாய்க்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி, மாநில அரசின் சக்திக்கு உட்பட்டு, மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு, விலைவாசியைக் குறைக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ எடுத்து வருகிறோம்.

பிற்பகல் 12–20

அதேசமயத்தில், மத்திய அரசு பொறுப்புடன் நடந்துகொள்ளவில்லை. நிதிநிலையைப் பற்றி, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வர வேண்டிய நிதிகளைப் பற்றி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மத்திய அரசுக்கு ஒரு நம்பகத்தன்மை இருக்க வேண்டும். அதாவது ஒரு Credibility இருக்க வேண்டும். ஒரு ஆண்டுக்கான பட்ஜெட்டை வெளியிட்டு, நிதிநிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பிறகு, ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்று அவர்கள் ஒரு திட்டம் போட்ட பிறகு, அதை மாற்றக் கூடாது. ஏனென்றால், வெவ்வேறு இனங்களில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வர வேண்டிய நிதி உள்ளது. அப்போது, அந்தத் திட்டத்தின்கீழ் என்னென்ன பணிகளை இங்கே மேற்கொள்ளலாம் என்று மாநில அரசும் திட்டம் தீட்டுகிறது. மத்திய அரசு குறிப்பிட்ட ஒரு திட்டத்தின்கீழ் இத்தனை கோடி ரூபாய் மாநில அரசுக்கு ஒதுக்கப்படும் என்று அவர்களுடைய மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த பின்னர், மாநில அரசு அதற்கேற்ப தனது திட்டங்களை வகுத்துச் செயல்பட ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு திட்டத்தின்கீழும் சில பணிகளை மேற்கொண்டு, செலவும் செய்து விடுகிறது. பல கோடி ரூபாய்களை எந்த நம்பிக்கையில் செலவு செய்கிறோம்? பின்னர் மத்திய அரசு இந்தப் பணத்தை நமக்கு அளிக்கும், நமக்கு Re-imburse செய்யும், நமக்கு வர வேண்டிய நிதி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் செலவு செய்கிறோம். ஆனால், அண்மையில், துரதிருஷ்டவசமாக

இதுவரை வரலாற்றில் இல்லாததாக, ஒரு முன்மாதிரி இல்லாத வகையில், மத்திய அரசு தன்னுடைய நம்பகத்தன்மையையே கெடுத்துக்கொண்டுள்ளது. அதாவது, ஏற்கெனவே பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு திட்டத்தின்கீழ் இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று தெரிவித்த பிறகு, நாங்கள் அதை நம்பி செலவு செய்ய ஆரம்பித்த பிறகு, 20 சதவிகிதம் அளவு வரை வெட்டு செய்திருக்கிறார்கள்; 20 சதவிகிதம் குறைத்திருக்கிறார்கள். அப்படியானால், குறிப்பிட்ட நிதி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஏற்கெனவே மாநில அரசு பல பணிகளைத் துவங்கிவிட்டதே, பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து விட்டதே, அவையெல்லாம் எங்கிருந்து வரும்? அந்தப் பணத்தை யார் மீண்டும் ஈடு செய்வார்கள்? ஆகவே, இப்படிப் பல பிரச்சினைகளுடன் போராடிக்கொண்டு, அதேநேரத்தில் மத்திய அரசு எடுக்கின்ற தவறான நடவடிக்கைகள் காரணமாக, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக சாமானிய மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, இந்த அரசு, தமிழக அரசு, தன்னால் இயன்ற அளவு மக்களின் துன்பங்களைக் குறைக்க, விலைவாசியைக் குறைக்க பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் G.S.T. பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது மாநில அரசுக்கு என்று இருக்கின்ற ஒரே வருவாய் Commercial Taxes மூலமாக வருகின்ற வருவாய்தான். வேறு எந்த வருமானமும் கிடையாது. அதிலேயும் கை வைக்க வேண்டுமென்று மத்திய அரசு விரும்புகிறது. அதற்காகத்தான Goods and Services Tax Bill–ஐ அவர்கள் கொண்டு வருகிறார்கள். அதற்காகத்தான் அதைக் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். சாதாரண எதிர்ப்பல்ல; ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல; 2011 ஆம் ஆண்டு முதல் G.S.T. Bill-ஐப் பற்றி அவர்கள் குறிப்பிடும்போதெல்லாம், கொண்டு வர வேண்டுமென்று சொல்கின்றபோதெல்லாம், மாநில அரசு, இந்த அரசு, எனது தலைமையிலான அரசு தொடர்ந்து எதிர்த்துக்கொண்டே வந்திருக்கிறது. அண்மையில் மாநில நிதி அமைச்சர்களின் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. அதில் நம்முடைய மாநிலத்தின் சார்பில் Commercial Taxes துறை அமைச்சர் கலந்து கொண்டார். அப்பொழுதும் முழுவதுமாக எதிர்த்திருக்கிறோம். அதாவது, ஒரு ஷரத்து, இரண்டு ஷரத்து என்று அல்ல, ஒரு பிரிவு, இரு பிரிவு



என்று அல்ல, ஒட்டுமொத்தமாக அந்தச் சட்டத்தையே எதிர்த்திருக்கிறோம். அதையும் மீறி, அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், பாதிப்பு அதிக நாட்கள் வரை இருக்காது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன், மத்தியிலே அரசு மாறும், ஆட்சி மாறும், எல்லாமும் மாறும்; அப்போது இந்த சட்டத்தையும் தூக்கி எறிவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உணர்வைப் புரிந்துகொண்டிருக்கிறேன். அவர்கள் சொன்ன கருத்து, விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம், விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள்தான் காரணம் என்பதாகும். அதனால் ஏற்படும் விளைவுகளை ஏழையெளிய மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மாநில அரசு தன்னால் ஆன துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், அத்தகைய பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு இலவச அரிசி கொடுப்பது ஓரளவிற்கு ஆறுதல்தான். பல திட்டங்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள். மத்திய அரசு செய்கின்ற செயல்களின் விளைவுகளை மாநில அரசுகள் சந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் இந்த விலைவாசி உயர்விற்கு என்ன காரணம்? இன்று ரூபாயின் மதிப்பு குறைகிறது என்றால் என்ன காரணம்?

*பிற்பகல் 12–25*

இந்தியாவிலே இருக்கக்கூடிய கம்பெனிகள் கிட்டத்தட்ட வெளிநாட்டிலே எவ்வளவு கோடி டாலர்களை வாங்கியிருக்கிறார்கள் என்றால், 12,090 கோடி டாலர்கள். 2003–ல் வெறும் 2,000 கோடி டாலர்கள். இப்பொழுது அவர்கள் வாங்கியிருப்பது 12,090 கோடி டாலர்கள். அந்த டாலர்களை வாங்கி முதலீடு செய்து, அதன்மூலம் வருகின்ற வருமானத்தில் வட்டியைக் கட்டி, கடனையும் திருப்பிச் செலுத்துகிறார்களா என்றால், இல்லை. வட்டிகூட அவர்கள் கட்டவில்லை. ஆகவே, டாலர்கள் இல்லை; ரூபாயின் மதிப்பு குறைகிறது. ரூபாயின்

*மதிப்பு குறைகிறபொழுது விலைவாசி ஏறுகிறது. வேதனைப்படுவது ஏழை, நடுத்தர மக்கள். இவ்வளவு பணம் வாங்குகின்ற அவர்களுக்கு உத்தரவாதம் யார் கொடுக்கிறார்கள் என்றால், மத்திய அரசுதான் உத்தரவாதம் கொடுக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், எந்த விலைவாசி உயர்வினால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்களோ, அவர்கள் வெளிநாட்டிலே உழைத்து, அந்த டாலர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் அனுப்பும்* remittances, *தான் ஓரளவிற்கு இந்த ரூபாயைக் கொஞ்சம் தூக்கிப் பிடிக்கிறது. ஏழைகள் வெளிநாட்டிலே உழைத்து, டாலர்களைச் சம்பாதித்து, இந்தியாவிற்கு அனுப்புகிறார்கள். ஆனால், இந்தியாவிலே இருக்கின்ற பெரும் தொழிலதிபர்கள், கோடீஸ்வரர்கள் இந்திய அரசினுடைய அனுமதியோடு வெளிநாட்டிலே 2 சதவிகிதம், 2½ சதவிகிதம் வட்டிக்குக் கடன் கிடைக்கிறது என்பதற்காக கோடிக்கணக்கான டாலர்களை வாங்கியதனுடைய விளைவுதான் இன்றைக்கு ரூபாயின் மதிப்பு குறைகிறது.*

*ரிசர்வ் வங்கியினுடைய கவர்னர் என்ன சொல்கிறார் என்றால், அமெரிக்கா டாலர்களை வெளியிடுவதில் இப்போது தாராளமாக இருக்கிறார்கள். அதை இறுக்கிப் பிடித்தால் நம்முடைய ரூபாயின் மதிப்பு மறுபடியும் வீழ்ந்துவிடும் என்று சொல்கிறார். அப்படி விழுமேயானால், விலைவாசி மறுபடியும் உயரும். அதோடு மட்டுமல்ல, விலைவாசி இனிமேல் அதிகமாகிக் கொண்டே போகுமென்று சொல்கிறார்.*

*இன்னொன்று நிதி பற்றாக்குறை–*Fiscal deficit. *அதற்காக ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கின்ற அதிகாரம் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறது. ரூபாய் நோட்டுகளை நிறைய அச்சடித்து விடுவார்களேயானாலும் விலைவாசி ஏறும். அந்த* Fiscal deficit *எப்படி வருகிறது? வங்கியிலே இருந்து பெரும் தொழிலதிபர்களுக்குக் கொடுத்த வராக் கடன்களின் தொகை ஒரு இலட்சத்து 92 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால், ஏழைகள் வாங்குகிற கடன்களை 99.9 சதவீதம் திரும்பச் செலுத்துகிறார்கள் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டு அறிக்கை விடுகிறார். ஆகவே,* Fiscal deficit *வருகிறதென்றால், மறுபடியும் விலைவாசி ஏறும். விலைவாசி ஏறுவதற்குக் காரணம் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாதது. இதுவும் யார்மூலம் நடக்கிறது என்றால், டெல்லியிலே இருக்கக்கூடிய மத்திய சர்க்காரால்.*



*தங்கத்தை இறக்குமதி செய்யாதீர்கள், தங்கத்தை இறக்குமதி செய்தால் ரூபாயின் மதிப்பு வீழ்ந்துவிடும் என்று சொல்கிறார்கள். தங்கத்தை யார் இறக்குமதி செய்கிறார்கள்? முத்தனும், முனியனுமா இறக்குமதி செய்கிறார்கள்? முகேஷ் அம்பானிதான் தங்கத்தை இறக்குமதி செய்கின்றார். பணக்காரர்களுக்குக் கொடுக்கக்கூடிய– கம்பெனிகளுக்காக சுமார் 5 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்குக் கொடுத்திருக்கக்கூடிய சலுகைகள்தான் வெளிநாட்டு வங்கிகளிலே டெபாசிட் செய்யப்படுகிறது. உள்நாட்டிலே பணக்காரர்களுடைய இரும்புப் பெட்டிகளிலே தூங்குகிறது. அவைதான் தங்கக் கட்டிகளாக இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளுடைய விளைவு என்ன ஆகிறதென்றால், அந்தப் பணம் புழக்கத்திலே வரவில்லை. பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெறும் 4.8 சதவிகிதம்தான் பொருளாதார வளர்ச்சி. இதனுடைய விளைவு என்னவென்றால், வளர்ச்சி இல்லாத காரணத்தாலும், விலைவாசி உயர்கிறது. ஆகவே, விலைவாசி உயர்விற்கு என்ன காரணம், யார் காரணம் என்கின்றபொழுது, உடைமையாளர்கள், கோடீஸ்வரர்கள் அவர்களுடைய நலன்களை மட்டும் கருத்தில்கொண்டு செயலாற்றக்கூடிய ஒரு பொருளாதாரக் கொள்கை இருக்கின்ற காரணத்தினாலேதான் இன்றைக்கு சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஒன்று இந்திய அரசு பொருளாதார கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், இந்திய அரசை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களை வாழ வைக்க வேண்டுமென்றால் இதைத் தவிர வேறு வழியில்லை.*

*பிற்பகல் 12–30*

*ஆகவே, இந்தச் சூழ்நிலையில் நான் சொல்ல விரும்புவது ஒன்றே ஒன்றுதான். விலைவாசி உயர்வுக்குக் காரணமானவர்கள் அவர்கள். ஆனால், அதனுடைய துயர் தணிப்புக்கு மாநில அரசு தன்னால் இயன்ற உதவியைச் செய்கிறது. விலைவாசி உயர்வால் பாதிக்கப்படுகிற மாதச் சம்பளக்காரர்களுக்கு அகவிலைப் படி கிடைக்கிறது; வசதி படைத்தவர்களுக்கு வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால், ஏழைகள் தங்கள் குடும்பச் செலவை ஈடுகட்ட வழியில்லை. குடும்பச் செலவுக்கு என்று ஒரு நிதியை, யார் இந்த விலைவாசி*

உயர்வுக்குக் காரணமானவர்களோ, அவர்கள்தான் அதைத் தர வேண்டிய கடமை இருக்கிறது; மத்திய அரசு தர வேண்டும்.

உதாரணத்திற்கு, பிரேசில் நாட்டிலே குடும்பச் செலவிற்கு, குறிப்பாக, ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், அவர்களுக்குக் குடும்ப உதவி நிதி தருகிறார்கள்; அரசாங்கமே அதைத் தருகிறது. அதைப்போல, மாநில அரசு தன்னுடைய சொந்த வருவாயிலேயிருந்து செய்வதைவிட—அதனாலே முடிந்த அளவு செய்யட்டும்; அது வேறு. அப்படிச் செய்வதைவிட, மத்திய அரசு தங்களுடைய செயல்களின் விளைவாக ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகிறபோது, எப்படி சம்பளம் வாங்குகிறவர்களுக்கு அகவிலைப் படி உயர்வு கொடுக்கிறீர்களோ, அதைப்போல, விலைவாசி உயர்வினால் அன்றாட வாழ்க்கை நடத்த முடியாத சாதாரண மக்களுக்கும், ஒரு அகவிலைப் படி அல்லது குடும்ப நிதியுதவியை மாதந்தோறும் அளிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால், அதிலே நியாயம் இருக்கிறது; அதிலே முறை இருக்கிறது. அதை வற்புறுத்த நாம் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதை நான் இந்த நேரத்திலே கூறி, என் உரையை முடிக்கின்றேன். நன்றி. *(குறுக்கீடுகள்)*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை. நீங்கள் முடிந்துபோன பிரச்சினையைப் பற்றியெல்லாம் திரும்பப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. *(குறுக்கீடுகள்)* இல்லை, முடிந்துபோன பிரச்சினையைப் பற்றி நீங்கள் திரும்பப் பேச முடியாது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* டாக்டர் க. கிருஷ்ணசாமி அனுமதி இல்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. சந்திரகுமார், உட்காருங்கள் *(குறுக்கீடுகள்)* துணைக் கேள்வியை அனுமதிப்பது என்பது தலைவருடைய தனிப்பட்ட உரிமை. *(குறுக்கீடுகள்)* இல்லை, அது தலைவருடைய தனிப்பட்ட உரிமை. இதையெல்லாம் நீங்கள் கேள்வி கேட்க முடியாது. உட்காருங்கள்.



*(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன இது? நீங்கள் இப்படி திடீரென்று எழுந்து நின்று பேசினால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடு)* மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, நீங்கள் பேசினால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடு)* இது முறையல்ல; உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*[தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் (திரு. ச. இராமச்சந்திரன், திரு. க. தமிழழகன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி, திரு. டி. சுரேஷ்குமார் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]*

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லுக்குச் சொல் சுடரேற்றி, சூளுரைத்துப் பணி முடிக்கும் தமிழ்த் தாயின் திருமகள், சூழ வரும் பகையை வேரறுத்து, தமிழர்தம் உரிமை காக்கும் தமிழினத்தின் தலைமகள் நம் அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)* எண்ணித் துணிகின்ற மதிநுட்பமும், எண்ணிய எண்ணியாங்கு எய்தும் மனத்திட்பமும், செயற்கரிய செய்து சாதனை படைக்கும் வினைத்திட்பமும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவர், பாசறை அமைத்து, பண்பாடு புகட்டி, வீரமிகு இளைய தலைமுறையை மீட்டெடுக்கும் வீரமங்கை வேலு நாச்சியாரின் மறு உருவம் நம் அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒன்றரைக் கோடி தமிழர்களின் இதயங்களில் கொலுவிருக்கும் கழகத்தின் காவல் தெய்வம் நம் அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏழு கோடி

தமிழர்களின் இல்லங்களில் கோலோச்சும் எங்கள் குல தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது வணக்க மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கோடி தமிழகத்தின் தேனி மலையடிவாரத்தில் வேளாண்மையையே தொழிலாகக் கொண்ட எளியதொரு குடும்பத்தில் பிறந்த என்மீது 'தாயினும் சாலப் பரிந்து' பேரன்பு காட்டி, நகரக் கழகத்தின் செயலாளராகவும், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராகவும், மாவட்டக் கழகத்தின் செயலாளராகவும், தேர்தல் பிரிவுச் செயலாளராகவும், கழகத்தின் பொருளாளராகவும், இயக்கத்தில் பொறுப்புகள் வழங்கி, அரசியல் முகவரி தந்து, நகர் மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், நிதி அமைச்சராகவும் ஆக்கி, ஆட்சி அடையாளம் கொடுத்து, 2013–2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்திடவும், அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்திடவும், பொன்னான வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்றும் மாறாத எனது உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, கடந்த 23–3–2013 அன்று இம்மாமன்றத்தில் 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, மணி மணியான மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, அதன்மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, அரசாணைகள் வெளியிட்டு, அத்திட்டங்களைத் திறம்பட நிறைவேற்றி வருகிறது என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று அல்லும், பகலும் அயராது பாடுபட்டு, ஏழை, எளிய மக்களின் நலனுக்காக திட்டங்கள் பல தீட்டி, தொடர்ந்து செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த பின்னரும், மேலும் பல



புதிய திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியையும், ஏற்கெனவே அறிவித்து செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களுக்குத் தேவைப்படும் கூடுதல் நிதியையும் அனுமதித்து, மக்கள் நலத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திட வழிவகுக்கும் வகையில், இந்தத் துணை மானியக் கோரிக்கை கடந்த 25–10–2013 அன்று இம்மாமன்றத்தின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் சாட்டிய செலவு 11.22 கோடி ரூபாய் நீங்கலாக, மொத்தம் 5,886.96 கோடி ரூபாய் கூடுதல் நிதிக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது. இதில் 4,823.19 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 453.43 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 610.34 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 3 நாட்களில், குறிப்பாக இன்று பேசிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் உட்பட, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் இந்தத் துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, அறிவார்ந்த கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். இந்த விவாதத்தில் ஈடுபாட்டோடு கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் மக்களின் நலத் திட்டங்களுக்காக, குறிப்பாக வறட்சி நிவாரணம், ஏழை, எளிய ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்காக, 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி, சேலைகளுக்கான கூடுதல் நிதி, மாணவர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து கட்டணச் சலுகை, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் வழங்கப்படும் இணை உணவிற்கான கூடுதல் நிதி போன்ற மக்கள் நலத் திட்டங்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்பட்டு, அவற்றுக்கான கூடுதல் நிதி ஆதாரம் கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றியதன் பலனாக, இன்று

இந்தியத் திருநாட்டிலேயே மக்கள் நலத் திட்டங்களை முன்னிலைப்படுத்தி, செயல்படுத்திவரும் முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நலத் திட்டங்கள் மட்டுமின்றி, வளர்ச்சித் திட்டங்களையும் தொய்வின்றி செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக ஆக்குவதற்குத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இந்தப் பயணத்தின் தொடர்ச்சியே இந்தத் துணை மானியக் கோரிக்கையென்றால் அது மிகையாகாது.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் பேசிய பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை இங்கே தெரிவித்தார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் பேசும்போது, பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் உள்ளது என்றும், வரி வசூல் குறைந்து வரும் நிலையில் கூடுதல் நிதியாதாரங்களை எப்படித் திரட்டி இந்தக் கூடுதல் செலவினத்தைச் சமாளிக்கப் போகிறீர்கள் என்றும் வினா எழுப்பினார்.

பொதுவாக, துணை மானியக் கோரிக்கையில், கூடுதல் நிதியாதாரத்திற்கு வரிகள் எதுவும் விதிக்கப்படுவது இல்லை. ஆனால், தேவைப்படுகின்ற கூடுதல் நிதிக்கேற்ப, வருவாய் வசூலை முடுக்கிவிட்டும், அரசின் பிற வருவாய்களைக் கவனமுடன் வசூலித்தும், தேவையற்ற செலவினங்களைக் கட்டுக்குள் கொண்டு வந்தும், கூடுதல் நிதித் தேவையை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு நிறைவு செய்யும் என்பதை நான் அன்றே தெளிவுபடுத்தினேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு கடந்த இரண்டாண்டுகளாக நிதிநிலையைத் திறம்படச் சமாளித்து, ஒரு வரலாற்றுச் சாதனையைப் புரிந்துள்ளது என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2010–2011 ஆம் ஆண்டில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2,728.69 கோடி ரூபாயாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறையைப் போக்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய திறம்பட்ட நிதி



நிருவாகத்தின் காரணமாக 2011–2012 ஆம் ஆண்டில் அதாவது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே பல திட்டங்களை நிறைவேற்றிய பின்பும் 1,364.10 கோடி ரூபாய் வருவாய் உபரி நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எட்டியது. இதைத் தொடர்ந்து 2012–2013 ஆம் ஆண்டில் 451.53 கோடி ரூபாய் வருவாய் உபரி இருக்கும் எனக் கணக்கிடப்பட்ட நிலையில் அந்த ஆண்டு இறுதியில் மாநிலக் கணக்காயரின் கணக்கீட்டின்படி, 1,760.25 கோடி ரூபாய் வருவாய் உபரி நிலையை எட்டியது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

2013–2014 ஆம் ஆண்டில் 664.06 கோடி ரூபாய் வருவாய் உபரி இருக்கும் எனக் கணக்கிட்டுள்ளோம். கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டாலும்கூட ஆண்டுதோறும் வருவாய் உபரி பெற வேண்டும் என்ற பதின்மூன்றாவது நிதிக் குழுவின் அளவுகோலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லரசு திறமையான நிதி நிருவாகத்தால் உறுதியாக எட்டும் என இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணம் பற்றி சில உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே தெரிவித்தார்கள். ஒரு சில உறுப்பினர்கள், அவர்களுடைய மாவட்டத்திற்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்ற கருத்தையும் பதிவு செய்தார்கள். மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு வறட்சி அல்லது இயற்கைச் சீற்றத்தால் இழப்பு ஏற்பட்டால் 50 சதவீதத்திற்குக் கூடுதலாக விளைச்சல் பாதிக்கப்பட்டால் மட்டுமே அந்தப் பயிரிழப்பிற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்க முடியும். எனவே, இதன் அடிப்படையில்தான் வறட்சியால் பாதிக்கப்பட்டு பயிரிழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒரு சில மாவட்டங்களில் இத்தகைய பயிரிழப்பு குறைவாக இருந்ததால், அந்த மாவட்டங்களுக்குக் குறைவான இழப்பீடே வழங்கப்பட்டது. சில மாவட்டங்களில் பயிரிழப்பு அதிக அளவில் ஏற்பட்டதால் அங்கு நிவாரணமும் கூடுதலாக வழங்கப்பட்டது. பயிர் இழப்பீடு மட்டுமல்லாமல் குடிநீர் வழங்கல், கால்நடைகளுக்குத் தீவனங்கள் வழங்கல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற பணிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டது.

பருவமழை பொய்த்ததால், மின் உற்பத்தி செய்ய முடியாமல் போனதால் ஏற்பட்ட இழப்பிற்குக்கூட தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு, 375 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–45

பயிரிழப்புக்கான நிவாரணமாக மட்டுமே டெல்டா மாவட்டங்களுக்கு 542.04 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, 524.25 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க 37.25 கோடி ரூபாயையும், கால்நடைகளுக்குத் தீவனப் பற்றாக்குறையைப் போக்க 30 கோடி ரூபாயையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கியது. டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 835.21 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு 804.24 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் டெல்டா மாவட்டங்களுக்கு 2012–2013 ஆம் ஆண்டு நிதி ஆதாரத்திலிருந்தும், டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு மேற்குறிப்பிட்ட 835.21 கோடியுடன் குடிநீர் வழங்குவதற்கு 145 கோடி ரூபாயும், கால்நடைகளுக்குத் தீவனம் போன்றவற்றை வழங்குவதற்கு 24.64 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 1,004.85 கோடி ரூபாய் இந்த நிதியாண்டில், அதாவது 2013–2014 ஆம் ஆண்டுக் கணக்கிலும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, வேலை வாய்ப்பை உருவாக்கும் பல்வேறு பணிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேற்கொண்டது. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தபோது பயிர் இழப்பிற்கான கணக்கெடுப்பு நடைபெற்று வந்ததால், அந்த நிதிநிலை அறிக்கையில் உரிய ஒதுக்கீடு தரப்படவில்லை. எனவே, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் இதற்கான நிதி கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் பேசும்போது வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு வழங்கிய நிதி பற்றிக் குறிப்பிட்டார். வறட்சி நிவாரணம் குறித்து மத்திய அரசுக்கு அளிக்கப்பட்ட கோரிக்கையில் 19,665.13 கோடி ரூபாய் கோரப்பட்டது. இதை மாநில அரசு செலவிடவில்லை என அவர் கூறினார். முக்கிய வருவாய் ஆதாரங்களான வருமான வரி, கலால் வரி தொழில் நிறுவனங்களுக்கான வருவாய் மீதான வரி, சுங்க வரி, போன்ற எல்லா வருவாய் ஆதாரங்களையும்



மாண்புமிகு அம்மா அவர்கள் சற்று நேரத்திற்கு முன்னால் சொன்னதுபோல, மத்திய அரசு தன் கைவசம் வைத்துக்கொண்டு, வணிக வரியின்மூலம் மட்டும் மாநில அரசு எந்த அளவுக்கு இத்தகைய செலவை மேற்கொள்ள இயலும் என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய அரசு நிதி உதவி செய்தால்தான் மாநில அரசு இழப்பீட்டை முழுமையாக வழங்கிட இயலும். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல, இப்போது நாம் நம்முடைய மாநிலத்தில் நடைமுறையில் இருக்கின்ற வணிக வரியின்மீதும் கை வைக்கின்ற நிலையை தற்போது மத்திய அரசு எடுத்திருக்கின்றது. வறட்சியால் சாகுபடி செய்யப்பட்ட பயிர் இழப்பின் அடிப்படையில் ஏற்பட்ட இழப்பீடு 1,376.71 கோடி ரூபாய். வறட்சியால் சாகுபடி செய்ய முடியாமல் போனதால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு 9,276.20 கோடி ரூபாய். வேலைவாய்ப்பினால் ஏற்பட்ட இழப்பு 2,224.47 கோடி ரூபாய். மழை பொய்த்துப் போன காரணத்தினால் மின் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பு 2,061.32 கோடி ரூபாய் என இன்னும் பிற இழப்புகளுடன் மொத்தமாக 19,665.13 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கோரப்பட்டது. இதில் சாகுபடி செய்த பயிர் இழப்பிற்கு 522.86 கோடி ரூபாயும், குடிநீர்ப் பணிகளுக்கு 88.30 கோடி ரூபாயும், கால்நடைகளுக்கான தீவனம் வழங்க 3.53 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 634.69 கோடி ரூபாயை மட்டுமே மத்திய அரசு வழங்கியுள்ளது. சாகுபடி செய்யப்பட்ட பயிர் இழப்பில்கூட நாம் கோரிய, செலவழித்த 1,376.71 கோடி ரூபாயில் பாதியளவுகூட மத்திய அரசு வழங்காமல், 522.86 கோடி ரூபாயை மட்டுமே அனுமதித்து, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலுங்கூட, மாநிலப் பேரழிவு பொறுப்பு நிதிக்கு மத்திய அரசு வழங்கிய தொகை போக, மீதம் 453.87 கோடி ரூபாயை மட்டுமே மத்திய அரசு விடுவித்துள்ளது.

பிற்பகல் 12–50

மாண்புமிகு அம்மா அவர்களது அரசுக்கு எதிராக எவ்வாறெல்லாம் மத்திய அரசு பாரபட்சமாக நடந்துள்ளது என்பதனைப் பட்டியலிட்டால் இங்கு நேரம் போதாது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், இது குறித்து பல்வேறு தருணங்களில் எடுத்துரைத்துள்ளார்கள். 2010–2011 ஆம் ஆண்டில் மாநில அரசின் மொத்த வருவாய் வரவு 70,187.62 கோடி ரூபாய். அதில் மத்திய அரசு வழங்கிய தொகை, அதாவது,

மத்திய வரிகளின் பங்கு மற்றும் மத்திய மானிய உதவியையும் சேர்த்து *17,753* கோடி ரூபாய் மட்டும். அதாவது மொத்த வருவாய் வரவில், மத்திய அரசின் பங்கு *25.30* சதவிகிதம். இதுவும் ஆண்டுதோறும் குறைந்துகொண்டே வருகிறது. இந்த சதவிகிதம் *2011–2012*–ல் *23.47* சதவிகிதமாகக் குறைந்து, *2012–2013*–ல் *21.27* சதவிகிதம் ஆகக் குறைந்துவிட்டது. *2013–2014* ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதி உதவி *21.71* சதவிகிதமாக மட்டுமே இருக்குமெனக் கணித்துள்ளோம். ஆனால், எவ்வளவு கிடைக்கும் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை, உத்தரவாதமும் இல்லை. மாநில அரசுக்கு நியாயமாக ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட மத்திய அரசு முறையாக விடுவிப்பது கிடையாது. அனாவசியமான காரணங்களைச் சுட்டிக்காட்டி, மாநில அரசுக்குச் சேர வேண்டிய நிதியை விடுவிக்க மத்திய அரசு மறுக்கிறது என்ற விவரங்களை இங்கே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு நான் சில உதாரணங்களை இங்கே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சர்வ சிக்ஷா அபியான் என்ற அனைவருக்கும் கல்வித் திட்டத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய ரூ.*950.44* கோடி ரூபாய் இன்னும் விடுவிக்கப்படவில்லை. *13*–வது நிதிக் குழு பரிந்துரைத்தபடி, சாலைகள், பாலங்கள் மேம்பாட்டிற்கு மத்திய அரசு அனுமதித்துள்ள மானிய நிதியைவிட மாநில அரசு கூடுதலாகச் செலவிட்டிருந்தால் ஆண்டுதோறும் சாலைகள், பாலங்கள் மேம்பாட்டிற்குக் குறிப்பிட்ட நிதியை மாநிலங்களுக்கு மத்திய அரசு விடுவிக்க வேண்டும், அதாவது *13*–வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி. ஆனால், *2012–2013* ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அளவான *667.06* கோடி ரூபாய்க்கு மாறாக *941.32* கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செலவிட்ட பின்பும், மாநில அரசுக்கான *453* கோடி ரூபாய் மத்திய அரசால் மறுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டும், அதாவது, *2013–2014* ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவான *700.41* கோடி ரூபாய்க்கு மாறாக *1,021.12* கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் அந்த *2013–2014* ஆம் ஆண்டிற்கான நிதி உதவி, *478* கோடி ரூபாயை விடுவிக்க மத்திய அரசு மறுத்து வருகிறது. மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட, இதுபோன்ற மாநிலங்களுக்கு விடுவிக்க வேண்டிய



நிதியை, மத்திய அரசு ஏதேனும் ஒரு காரணம் கூறி மறுத்து வந்தாலும், இந்தத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சாதனை நிகழ்த்தி வருகிறது. *(மேசைத் தட்டும் ஒலி)* மகத்தான சாதனை நிகழ்த்தி வருகிறது, இனியும் நிகழ்த்தும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் அமைதியான சூழல் நிலவ வேண்டுமென்றால், மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால், எவ்வித பயமுமின்றி தொழில்கள் செய்யப்பட வேண்டுமென்றால், சாதிச் சண்டைகள், மதக் கலவரங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்றால், அந்த நாட்டிலே சட்டம்–ஒழுங்கு சரியாக இருக்க வேண்டும். அதற்குக் காவல் துறையின் கரங்கள் வலுப்பெற்றிருக்க வேண்டும். அப்படி காவல் துறை வலுப்பெற்றிருக்க வேண்டுமென்றால், நாட்டின் முதலமைச்சர், நல்லவராக, வல்லவராக, அன்புள்ளம் கொண்டவராக *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* பண்புள்ளவராக, அராஜகங்களைக் கண்டு அஞ்சாதவராக, உள்ளத் தூய்மை கொண்டவராக, உறுதியுடன் நாட்டை நேசிப்பவராக, எந்தமிரட்டலுக்கும், உருட்டலுக்கும் அடிபணியாத நேர்மையானவராக, துரோகச் செயல்களை வேரோடு கிள்ளி எறிகின்ற துணிச்சல் மிக்கவராக இருக்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்தனைச் சிறப்புகளும் இன்றைய இந்தியாவில் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களைத்தவிர வேறு எவருக்கும் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அத்தனை சாதனைகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எல்லை.

பிற்பகல் *12–55*

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பு இல்லையே என்று மக்களுக்கு இருந்த பயம் போனதும், காவல் துறை கம்பீரம் ஆனதும், மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சர் ஆன பிறகுதான். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாம் முறை பொறுப்பேற்ற பிறகு, காவலர்களின் எண்ணிக்கையைக் கணிசமாக உயர்த்தியும், வாகனங்கள், நவீன ஆயுதங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் என அனைத்துத் தேவைகளையும், முன்னெப்போதும் இல்லாத வகையில்

பெருமளவில் வழங்கியும், காவலர்கள் அச்சமின்றி திறமையுடனும், நேர்மையுடனும் செயல்பட உரிய சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளார்கள்.

காவல் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்ற உரிமைகளும், சலுகைகளும் காலத்தால் மறக்க முடியாதவை. தமிழக காவல் துறைக்கு இத்தகைய சிறப்பான வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து வருவதால்தான் காவலர்கள் கடமை உணர்வோடு தம் உயிரையும் பொருட்படுத்தாது தீவிரவாதிகளையும், குற்றவாளிகளையும் கைது செய்து பொதுமக்கள் அச்சமின்றி நடமாடும் சூழ்நிலையை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

அந்தச் சாதனைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள சமீபத்திய சாதனை, சட்ட விரோத செயல் புரிந்து தலைமறைவான பக்ருதீனை தமிழ்நாடு போலீசார் கைது செய்ததும், (மேசையைத் தட்டும் ஒலி) உயிரையும் துச்சமாக நினைத்து திரைப்படங்களில் வரும் காட்சிகளையே மிஞ்சும் அளவுக்கு அதிரடியாகச் செயல்பட்டு ஆந்திர மாநிலம் புத்தூரில் பதுங்கியிருந்த தலைமறைவு எதிரிகளான பிலால் மாலிக், பன்னா இஸ்மாயில் ஆகியோரைக் கைது செய்ததும் ஆகும்.

இதற்கெல்லாம் காரணம், காவல் துறையினருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கின்ற ஊக்கம். இந்த அதிரடிச் செயலில் ஈடுபட்டு தங்கள் பங்களிப்பைத் தந்த அத்தனை பேர்களுக்கும் பரிசுகள் வழங்கி பாராட்டியது மாண்புமிகு அம்மா அவர்களின் பெருந்தன்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

தம் இன்னுயிரையும் துச்சமாக மதித்து, அந்தக் குற்றவாளிகளைக் கைது செய்யும் பணியில் படுகாயமடைந்த, சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் திரு. எஸ். லட்சுமணன் அவர்களை மருத்துவமனைக்கே சென்று நேரில் சந்தித்து, ஆறுதல் கூறிய அன்புத் தாய் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பரிசுகள் வழங்கிப் பாராட்டிய பாசத் தாய் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அவரது குழந்தைகளின் எதிர்காலத்தை 'நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று உறுதியளித்த உத்தமத் தாய் எங்கள் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்று காவல் துறை மட்டுமல்ல, தமிழக மக்கள் அனைவருமே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



இந்தத் துணை மானியக் கோரிக்கையில் 5,000 காவலர்களுக்கு கூடுதல் பணியிடம் அனுமதிக்கும் பொருட்டு கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, காவலர்களுக்கு உணவுப் படி இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், காவலர்களுக்கு இடர்ப் படி கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறை அலுவலகங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் உருவாக்கப்பட்டுள்ளன.

காவல் துறை சிறப்பாகப் பணியாற்ற செயல்படுத்தப்படும் இத்தகைய திட்டங்களுடன் காவலர்கள் தங்கள் பணிக்காலத்திலேயே சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கென மேலக்கோட்டையூரில் காவலர் வீட்டு வசதித் திட்டத்தின்மூலம் சிறப்பு முன்பணம் வழங்குவதற்கு இந்தத் துணை மானியக் கோரிக்கைமூலம் 275.49 கோடி ரூபாய்க்கான அனுமதிக்கு இப்பேரவைமுன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு திறம்பட நிறைவேற்றி வருகிறது. மத்திய அரசு டீசல் கட்டணங்களை அடிக்கடி உயர்த்தினாலும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு போக்குவரத்துக் கழகங்களின் பஸ் கட்டணங்களை உயர்த்தாமல் இருப்பதோடு, அந்தப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிருவாகம் தொய்வின்றி நடைபெற வேண்டும் என்பதற்காக 2013–2014 ஆம் ஆண்டில் 500 கோடி ரூபாயை டீசல் மானியமாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, அனுமதித்து வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–00

திருத்தியமைக்கப்பட்ட பஸ் கட்டணத்தால் மாணவ, மாணவியருக்கான பஸ் பாஸுக்கு வழங்கப்பட வேண்டிய கூடுதல் நிலுவையைக் கணக்கிட்டு அதற்கான நிதி ஒதுக்கம் செய்யும்பொருட்டு இந்தத் துணை மானியக் கோரிக்கையில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்யும் ஏழையெளிய, நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே விரிவாகச் சொல்லிவிட்டார்கள்.

சுத்தமான குடிநீர் தரும்பொருட்டு அம்மா குடிநீர்த் திட்டம் தொடங்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு சுமார் 3 இலட்சம் பாட்டில்களைத் தயாரிக்கும் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் சிறப்பாக நடைபெற்று வருவதை மாமன்ற உறுப்பினர்கள் நீங்கள் நன்கு அறிவீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்ற வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேலும் ஒரு குடிநீர் உற்பத்தி ஆலையை நிறுவ உத்தரவிட்டதன்மூலம் ஏழையெளிய, நடுத்தர மக்கள் மேலும் பயன்பெறுவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆதி திராவிட, பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. சமத்துவத்தை ஏற்படுத்தவும், சமூக நீதியை நிலைநாட்டவும் கல்வி என்ற கருவி முக்கிய பங்கு வகிக்கிறது. அதனால்தான் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்ற பிறகு சிறப்புக் கூறுகள் திட்டம், பழங்குடியினர் சிறப்புக் கூறுகள் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு உரிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் மேம்பாட்டிற்கு ஆண்டு ஒன்றிற்கு 50 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தீட்டி செயல்படுத்தி வருகிறது. ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக 2012–2013 ஆம் ஆண்டில் 10 ஆம் வகுப்பிற்கு மேல் உள்ள படிப்பிற்கு கல்வி மானியம் 323 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 397 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் இந்தத் துணை மானியக் கோரிக்கையில் 549 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்ய இந்த மாமன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய ஜீவாதார உரிமைகளான காவேரி, முல்லைப்



பெரியாறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வேதனையில் தவித்த விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு கருணாநிதி எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவர் கல்லக்குடி கொண்ட கருணாநிதி அல்ல, கல்மனம் கொண்ட கருணாநிதி. *(மேசையைத் தட்டும் ஒலி)* மத்திய காங்கிரஸ் கூட்டணியில் இருந்தபொழுது கருணாநிதியின் மிரட்டல்களுக்கு காங்கிரஸ் பயந்து நின்றபொழுது, பணிந்து நின்றபொழுது, கருணாநிதி நினைத்திருந்தால் காவேரிப் பிரச்சினையையும், முல்லைப் பெரியாறு பிரச்சினையையும் மிகச் சுலபமாகத் தீர்த்து வைத்திருக்க முடியும். ஆனால், கருணாநிதி அதைச் செய்யவில்லை. காங்கிரஸ், கருணாநிதியின் தயவில் இருந்தபொழுதுகூட இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற நினைக்கவில்லை. தமிழக விவசாயிகளுக்குத் துரோகம் செய்தவர் கருணாநிதி. இலங்கைத் தமிழர்களுக்குத் துரோகம் செய்தவர் கருணாநிதி, கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தவர், தமிழக மீனவர்களுக்குத் துரோகம் செய்தவர் கருணாநிதி, மன்னிக்கவே முடியாத மகா துரோகங்களைச் செய்தவர் கருணாநிதி. கருணாநிதி விட்டுக் கொடுத்ததையெல்லாம் மீட்டுக் கொடுக்கும் தெய்வமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதுதான், மத்தியில் அவர் கூட்டணி ஆட்சியில் இருந்தபோதுதான், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட மத்திய அரசு மறுத்தது. கருணாநிதி மத்திய அரசிடம் கேட்கவும் இல்லை, உச்ச நீதிமன்றத்தில் முறையிடவும் இல்லை. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசிடம் கேட்டார், அவர்கள் செவி மடுக்க மறுத்ததனால் உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார். தமிழகத்தின் உரிமையை மீட்டுக் கொடுப்பதற்காகப் போராடி, வாதாடி, *(மேசையைத் தட்டும் ஒலி)* காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளிவரவைத்து, வேறு யாரும் செய்ய முடியாத வரலாற்றுச் சாதனையைப் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–05*

அதேபோல, முல்லைப் பெரியாற்றில் அணையின் நீர் மட்டத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகும்கூட, கேரள அரசு அந்தத் தீர்ப்பை

மதிக்கவில்லை. அதைத் தட்டிக் கேட்க வேண்டிய கருணாநிதி, அந்த உரிமையை மீட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் இருந்த கருணாநிதி, தட்டிக் கேட்கவும் இல்லை, உரிமையை மீட்டெடுக்கும் முயற்சியிலும் ஈடுபடவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டினார், அணை ஆடவில்லை. ஆனால், கேரள அரசு ஆடிப்போனது.

மூன்றாவது முறையாக முதலமைச்சரானதும், ராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி, அதனால், இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்கிற வரலாற்றுத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் நிறைவேற்றினார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மீண்டும் ஒரு வரலாற்றுத் தீர்மானம் இந்தக் கூட்டத் தொடரிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கையிலே நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டிலே இந்தியா கலந்து கொள்ளக்கூடாது, காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கையை விலக்கி வைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிய இந்த வரலாறு போற்றும் தீர்மானத்தை நாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க.–வும் கருணாநிதியும் உதட்டளவில் ஆதரித்துவிட்டு, உள்ளத்தில் இலங்கைக்கு ஆதரவாக இருக்கிறார்கள். மத்திய அரசிடம் மறைமுக பேரம் பேசுகிறார்கள். “எடுக்கிறது எருமைச் சாணி; படுக்கிறது பஞ்சு மெத்தை” என்ற பழமொழியைப்போல தமிழினத்துக்குத் துரோகங்ளைச் செய்துவரும் கருணாநிதியின் பெயர் தமிழினத் தலைவராம்! இந்தக் கருணாநிதியின் கபட வேடதாரி அரசியலைப் பார்த்து நம் நாடே சந்தி சிரிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஒரு காலகட்டத்தில் தமிழக மக்களுக்கு யாரும் எந்த உதவியும் இலவசமாகத் தர வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது; தமிழக மக்கள் யாரிடத்திலேயும் கையை நீட்டிப் பெறுகின்ற நிலை இருக்கக்கூடாது; அந்த நிலையை எனது வாழ்நாளில் நான் காண வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது; அதுதான் என்னுடைய இலட்சியம்” என்பது இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் வைர வரிகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு அம்மா அவர்களின் அந்த இலட்சியம் நிறைவேற, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வெற்றிப் பாதையிலே வீர நடை போட்டு இரண்டு ஆண்டுகளைக் கடந்து, மூன்றாவது ஆண்டை மாபெரும் சாதனையோடு நிறைவு செய்து கொண்டிருக்கிறது. மற்ற மாநில முதல்வர்கள் எல்லாம் மலைத்துப் போகுமளவுக்கு தமிழ்நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. தீய சக்திகள் திகைத்துப் போகுமளவுக்கு தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரீட்சையிலே காப்பியடித்துப் பாஸானவர்கள் உண்டு, அரசியல் வரலாற்றிலேயே மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைக் காப்பியடித்து முதலமைச்சர் ஆனவர்களும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பரீட்சையிலே காப்பியடித்தவர்கள் வெளியே சொல்ல மாட்டார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களைக் காப்பியடித்து முதலமைச்சர் ஆனவர்கள் இது அம்மா அவர்களின் திட்டம் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்! இந்திய அரசியல் வரலாற்றில் இந்தப் பெருமை வேறு எந்த முதலமைச்சருக்கும் கிடைத்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) “ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற இலக்கை நான் கொண்டுள்ளேன்”. இதுவும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன வைர வரிகள். அம்மா, நீங்கள் அந்த இலக்கைத் தாண்டிவிட்டீர்கள் என்று மக்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயரிலே நிதியைச் சேர்த்துக் கொண்டதால் அரசுக்கு வரும் வருவாயையும் நிதியாக எண்ணி அவர்களின் குடும்பங்களுக்குச் சேர்த்துக் கொள்ள நினைத்தவர்களின் நிலையை நினைத்து இன்று மக்கள் கை கொட்டி சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். “அறுபதடிக் கம்பத்தில் ஏறி ஆடினாலும் கீழே இறங்கி வந்துதான் பிச்சை எடுக்கணும்”; இந்தப் பழமொழி அவர்களுக்குத் தெரியவில்லைபோலும். ஆட்சியில் இருந்தபோது ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டு இப்பொழுது, ஏற்காடு தொகுதியிலே வாக்குப் பிச்சை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஏற்காடு தொகுதி வாக்காளர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மகத்தான வெற்றியைக் கொடுப்போம் (மேசையைத் தட்டும் ஒலி)

என்று ஏற்கெனவே முடிவெடுத்துவிட்டார்கள். அதற்குக் காரணம் எங்கெங்கு காணினும் சக்தியடா என்று மகாகவி பாரதி பாடியதுபோல, எங்கெங்கு காணினும் மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனைகள், நலத் திட்டங்கள், நல்ல, நல்ல திட்டங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–10*

1 கோடியே 86 இலட்சம் குடும்பங்களுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி! அந்தக் குடும்பங்களிடையே மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. ஏழை, எளியோருக்கு விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள், இன்பத்தில் திளைத்துக் கொண்டிருக்கின்றது ஏழைகளின் வீடுகள். விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறிகள்; அதை வாங்கிய குடும்பங்களின் வாழ்த்துகள். ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.25,000, தாலிக்கு 4 கிராம் தங்கம், படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000, தாலிக்கு 4 கிராம் தங்கம். கொடுக்கின்ற தாயின் மனமோ, தங்கமோ தங்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

9.12 இலட்சம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகள்; மாணவர்களின் மனங்களிலே மகிழ்ச்சி மின்னல்கள். ஒவ்வொரு வீடும் 2.10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.1,359 கோடியில், சூரிய சக்தியுடன் ஆண்டுதோறும் 60 ஆயிரம் பசுமை வீடுகள், பாராட்டி எழுதுவதோ பலப் பல ஏடுகள். ஆதரவற்ற முதியோர்கள், 60 வயது பூர்த்தியான தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், இறையுணர்வோடு இருக்கும் இஸ்லாமிய உலமாக்கள் இவர்களின் ஓய்வூதியம் ரூ.1,000 ஆக உயர்வு. சுதந்திரப் போராட்ட தியாகிகளின் ஓய்வூதியம் 7 ஆயிரம் ரூபாயிலிருந்து 9 ஆயிரம் ரூபாயாக உயர்வு. ஹஜ் குழுக்களுக்கான மானியம் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்வு. இல்லாமை இல்லாத நிலை வேண்டும் இதுதான் நம் இதய தெய்வத்தின் கனவு. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த உயர்வுக்கெல்லாம் காரணம் நம் இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் உள்ளம் மிக மிக உயர்வு. வக்ஃபு வாரியத்தில் ஓய்வு பெற்ற பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க ரூபாய் 3 கோடி. திருப்பூர் சாயப் பிரச்சினை தீர சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வட்டியில்லாத கடன் ரூபாய் 200 கோடி. நாட்டிலே பிரச்சினைகளும் இருக்கக் கூடாது, பிரிவினையும் இருக்கக் கூடாது இதுதான் நம் தாயின் உள்ளம். அது வாரி, வாரிக் கொடுக்கும் தாராள உள்ளம்.



பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு ரூபாய் 16,965.30 கோடி. 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை 14 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா பேருந்து பயணச் சீட்டு தந்து, 6 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் தந்து, 13 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா புத்தகப் பைகள் தந்து, 86 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா நோட்டுப் புத்தகங்கள் தந்து, 53 இலட்சம் மாணவ, மாணவியருக்கு நான்கு சீருடைகள் தந்து, 79 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா காலணிகள் தந்து, 66 இலட்சம் மாணவ, மாணவியருக்கு கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபடங்கள் தந்து, இடைநிற்றலைக் குறைக்க 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் 18 இலட்சம் மாணவ, மாணவியருக்கு முறையே ரூபாய் 1,500, 1,500 மற்றும் 2,000 ஊக்கத்தொகை தந்து, இப்படி மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கும் சலுகைகளின் பட்டியல் இன்னும் நீளும்; அதில் கோடிக்கணக்காக குடும்பங்கள் வாழும்.

இந்தியாவிலேயே முதன் முறையாக படித்த பள்ளியிலேயே ஆன்லைன்மூலம் 12 இலட்சம் மாணவ, மாணவியர் வேலை வாய்ப்புப் பதிவு; மாண்புமிகு அம்மா அவர்களின் மனதிலே கனிவு. 1.58 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு நிதி உதவி ரூபாய் 31.64 கோடி, மீன்பிடிப்பு குறைந்த காலத்தில் இழப்பை ஈடுசெய்ய குடும்பம் ஒன்றுக்கு ரூபாய் 4,000 வீதம், 1.70 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு ரூபாய் 70 கோடி நிவாரணம். இது மாண்புமிகு அம்மா அவர்களின் கொடையுள்ளத்திற்கு ஒரு உதாரணம். 6,035 கி.மீ. சாலைகள் பராமரிப்புக்கு ரூபாய் 985.87 கோடி. 4,953 கி.மீ. சாலைகள் அகலப்படுத்த 274 பாலங்கள், சிறு பாலங்கள் புதுப்பிக்கப்பட ரூபாய் 1,730 கோடி, புதிய மின் திட்டங்களுக்காக ரூபாய் 31,000 கோடி, 110 விதியின்கீழ் அறிவிப்பில் ரூபாய் 16,530 கோடி, நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெகா வாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்துக்கு ரூபாய் 7,000 கோடி, 56 துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள் அமைக்க ரூபாய் 8,000 கோடி, 20,000 புதிய மின் மாற்றிகள் அமைக்க ரூபாய் 500 கோடி, 15,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர் அழுத்தம் மற்றும் தாழ்வழுத்த மின் வழித்தடங்கள் அமைக்க ரூபாய் 850 கோடி. இந்தத் திட்டங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் உருவான

இருளை நீக்கும், நாட்டை ஒளிமயமாக ஆக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் இதய தெய்வத்தின் சிறப்புமிக்க ஸ்ரீரங்கம் தொகுதியில் தேசிய சட்டப் பள்ளி நிறுவுவதற்கு ரூபாய் 75 கோடி, நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்காக ரூபாய் 163 கோடி. இறந்த வழக்குரைஞர்களின் சட்டமுறையிலான வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூபாய் 2 இலட்சம் ஆக இருந்தது, தற்பொழுது ரூபாய் 5.25 இலட்சம் ஆக உயர்வு. தமிழ்நாடு வழக்குரைஞர் நல நிதிக்கு ஆண்டுதோறும் மானியமாக ரூபாய் 4 கோடி வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவு, இது நீதியை நிலைநாட்ட பாடுபடுவோர்க்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் தரும் புத்துணர்வு.

பிற்பகல் 1–15

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்மூலம் 5,56,311 சுய உதவிக் குழுக்கள், மொத்தம் 85.59 இலட்சம் உறுப்பினர்கள். இவர்களின் மொத்த சேமிப்பு ரூபாய் 3,700 கோடி. இதுவரை 5 இலட்சம் மகளிருக்குக் கடன் இணைப்பாக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 19,658 கோடி. ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 15,000 வீதம், 22,214 சுய உதவிக் குழுக்களுக்கும், நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 10,000 வீதம், 20,000 சுய உதவிக் குழுக்களுக்கும், ஆக மொத்தம் 42,214 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூபாய் 53 கோடியே 21 இலட்சம் வழங்கி, வாடிக் கொண்டிருந்த மகளிர் முகங்களில் எல்லாம் கோடிப் புன்னகை மலர்வதற்காக வாரிக் கொடுத்த வள்ளல் நம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அங்கன்வாடி மையங்களின்மூலம் 6 முதல் 36 மாதங்கள்வரை உள்ள 16.60 இலட்சம் குழந்தைகளுக்கும், 6.64 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், தாய்மார்களுக்கும், 3.86 இலட்சம் வளர் இளம்



பெண்களுக்கும் இணை உணவு வழங்குவதற்காக ரூபாய் 429 கோடி, 50.15 இலட்சம் குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், 1,069 ஆதரவற்ற திருநங்கைகளுக்கு 1.20 கோடி ஓய்வூதியம், மாற்றுத் திறனாளி மாணவர்களில் பார்வையற்ற, காது கேளாத, வாய் பேச இயலாத மாணவ, மாணவியர்கள் அரசு பொதுத் தேர்வில் முதலிடம் பெறுவோருக்கு 50,000 ரூபாயும், இரண்டாம் இடம் பெறுவோருக்கு 30,000 ரூபாயும், மூன்றாம் இடம் பெறுவோருக்கு 20,000 ரூபாயும், இதைப்போல மாநில அளவில் முதல் மூன்று இடம் பெறும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு முறையே 25,000, 20,000, 15,000 ரூபாய் என ஊக்கத் தொகைக் கொடுத்து, கண்ணுக்குக் கண்ணாக இருந்து காப்பதற்கும், ஊக்கம் கொடுப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வை. மாற்றுத் திறனாளிகளுக்கும் திருமண உதவித் தொகை, 4 கிராம் தங்கம். முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் திருமண உதவித் தொகை, 4 கிராம் தங்கம். இது மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவுப் பார்வை.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை முறையாக நடத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நேர்மையாக நடத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நியாயமாக நடத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழக மக்கள் பாராட்டும்படி நடத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மக்களோடு மக்களாக, மக்களில் ஒருவராகப் பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியிருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். வெற்றி பெற்றவர்கள் ஆற்றும் பணிகளோ ஏராளம், ஏராளம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் மனமோ தாராளம், தாராளம்.

வன விலங்குகளும் நம்மைப் போன்ற உணர்வுகள் உள்ள ஜீவன்கள்தான், அவற்றுக்கு உயிரைக் கொடுத்த கடவுள், உணர்வுகளைக் கொடுத்த கடவுள், மனிதர்களைப் போல ஆறு அறிவுகளைக் கொடுக்கவில்லை. ஆனால், அதற்கும் நிகராக ஏன், அதற்கும் மேலாக அவற்றை ஆதரிப்பதற்காக நம் அம்மாவைக் கொடுத்திருக்கிறார் கடவுள். (மேசையைத் தட்டும் ஒலி) வனங்களையும், வன விலங்குகளையும் பாதுகாக்கும் பாசத் தாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். 2013–2014 ஆம் ஆண்டு திட்டங்களுக்காக வனத் துறைக்கு ஒதுக்கீடு

செய்யப்பட்டிருக்கும் தொகை ரூபாய் 880.69 கோடி. நெடுஞ்சாலைத் துறைக்கு 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூபாய் 6,452.77 கோடி. ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 2,032 கோடி, சென்னை நகரில் 4 பெரும் மேம்பாலங்கள் ரூபாய் 130 கோடியில், மதுரை மாநகரத்தில் 2 மேம்பாலங்கள். இந்த மேம்பாலங்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் போடும் அன்புக் கோலங்கள்.

அரிசி விலையைக் கட்டுப்படுத்த அமுதம் அங்காடி கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள்மூலம் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை கிலோ ஒன்றிற்கு ரூபாய் 20/– வீதம் வெளிச் சந்தையில் விற்பனை. வெளிச் சந்தையில் அதிக விலைக்கு விற்கப்படும் பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, புளி போன்ற பொருட்கள் எல்லாம் வெளிச் சந்தையைவிடக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம், கீழ்த்தட்டு மக்கள் பாராட்டுகின்ற திட்டம், நடுத்தர மக்கள் நன்றி சொல்கின்ற திட்டம். தமிழகத்துத் தாய்மார்களைத் தவிக்கவிடக் கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அற்புதத் திட்டம் இந்தத் திட்டம்.

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஆவின் நிருவாகத்திலே வேதனை. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே ஆவின் நிறுவனத்திலே சாதனை, கொள்முதலில் சாதனை, விற்பனையில் சாதனை.

நாட்டை நேசிப்பவர்களை நேசிப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழக மக்களுக்கு உதவியவர்களை மறக்காதவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதனால்தான் தேனி மாவட்டம் லோயர் கேம்ப்பில் கர்னல் திரு. ஜான் பென்னி குயிக் அவர்களுக்கு ரூபாய் 1.25 கோடி செலவில் மணிமண்டபம், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் மேம்படுத்தவும், அழகுபடுத்தவும் ரூபாய் 7.70 கோடி, பேரறிஞர் அண்ணா நினைவிடத்தை மேம்படுத்த ரூபாய் 1.20 கோடி, கிண்டியில் காந்தி மண்டப வளாகத்தைப் புதுப்பிக்க 11.61 கோடி, இது தவிர பொதுப் பணித் துறையால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நலத் திட்டங்களால் பயன்பெறும் மக்களோ கோடானுகோடி.



பிற்பகல் 1–20

தொழில் துறையிலே புரட்சி, தொழில் துறையிலே எழுச்சி ஏற்படுத்தியது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி. ரூபாய் 26,625 கோடி முதலீட்டில் 17 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 1.46 இலட்சம் பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு. 2013–2014 ஆண்டுத் திட்டங்களுக்காக தொழில் வளர்ச்சிக்காக சிப்காட் நிறுவனம்மூலம் 25,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட நில வங்கி, தூத்துக்குடியில் பொதுத் துறை தனியார் பங்கேற்புடன் புதிய கப்பல் கட்டும் தளம், ரூ.1,90,000 கோடி தொழில் முதலீட்டை ஈர்க்க மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தடம், சிறிய மற்றும் நடுத்தர கட்டமைப்புக்காகவும், திட்டங்களுக்காகவும் வரும் 3 ஆண்டுகளில் ரூ.770 கோடி முதலீட்டை உறுதிப்படுத்த தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டம் போன்றவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் துறையில் சாதனை, தொழில் துறையில் சாதனை, கைத்தறி துறையில் சாதனை, பட்டு வளர்ப்பில் சாதனை, சுற்றுலாத் துறையில் சாதனை, வணிக வரித் துறையில் சாதனை, போக்குவரத்துத் துறையிலே சாதனை, புதிய புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு சாதனை, பண்டிகைக் காலங்களில் அதிகப்படியான பேருந்துகளை இயக்கிய சாதனை, ஆதி திராவிட மாணவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கி சாதனை, தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதனை, செய்தி–மக்கள் தொடர்புத் துறையில் சாதனை, தொழிலாளர் நலத் துறையில் சாதனை, அறநிலையத் துறையிலும் சாதனை, வருவாய்த் துறையிலும் சாதனை, கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் துறையில் சாதனை, பள்ளிக் கல்வித் துறையில் சாதனை, (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறையிலே சாதனை, இளைஞர் நலத் துறையிலே சாதனை, விளையாட்டுத் துறையிலே சாதனை புரிந்து, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே வேதனையாக இருந்ததை எல்லாம் சாதனைகளாக மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய சாதனைகளை நாம் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் தீபாவளி முடிந்துதான்

நாம் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தை முடித்துச் செல்ல வேண்டும் என்கிற சூழ்நிலை இருப்பதால் நான் என்னுடைய உரையை நிறைவு செய்ய விழைகின்றேன்.

மத்தியில் ஆட்சியில் இருந்த கருணாநிதி, துறைகளைப் பற்றியும் கவலைப்படாமல், ஆட்சியைப் பற்றியும் அக்கறைப்படாமல் மாண்புமிகு அம்மா அவர்களின் செல்வாக்கைச் சிதைப்பதில், புகழை அழிப்பதில், வளர்ச்சியைத் தடுப்பதிலேயே கவனமாக இருந்தார். அதற்காக மத்திய அரசையும் மிரட்டினார். மத்திய காங்கிரஸ் கூட்டணியில் இருந்ததால், பரமசிவன் கழுத்தில் இருந்த பாம்பைப்போல சீறினார், சிரித்தார். கருணாநிதி எவ்வளவு இடையூறுகள் செய்தபோதும், சூழ்ச்சிகள் புரிந்து எகத்தாளமாகச் சிரித்தபொழுதும் மாண்புமிகு அம்மா அவர்களின் மனதில் தோன்றியது புரட்சித் தலைவர் பாடிய பாடல்தான்.

“அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு. *(மேசையைத் தட்டும் ஒலி)*
இங்கு நான் சிரிக்கும் புன்சிரிப்போ ஆனந்தச் சிரிப்பு.
நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும் நாள் வரும்போது,

இங்கு சிரிப்பவர் யார் அழுபவர் யார் தெரியும் அப்போது” *(மேசையைத் தட்டும் ஒலி)*

என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய மாதிரியே, நல்ல தீர்ப்பு வந்த பிறகு, அங்கு அழுது கொண்டிருப்பவர் யார் இங்கே சிரித்துக் கொண்டிருப்பவர் யார் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அரசியலில் எத்தனையோ பேருக்குக் குழி தோண்ட நினைத்த கருணாநிதிக்கு இப்பொழுது திரும்பிய பக்கமெல்லாம் குழி தோண்டப்படுகிறது. அதிலே பெரிய குழி 2ஜி ஸ்பெக்ட்ரம் குழி. அந்தக் குழியிலே கருணாநிதியின் குடும்பமே விழுந்து கிடக்கிறது. இப்பொழுது கருணாநிதி மனதிலும் ஒரு பாடல், அதுவும் அவரே எழுதிய பாடல் ஒலித்துக் கொண்டிருக்கும்.

“காகித ஓடம் கடல் அலை மீது
போவது போலே மூவரும் போவோம்” *(மேசையைத் தட்டும் ஒலி)*



என்ற பாடல்தான் அது. அந்த மூவர் யார் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. உங்கள் புன்முறுவலிலிருந்தே அது எனக்குத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மின் சக்தி என்றாலும், காந்த சக்தி என்றாலும், வேறு எந்த சக்தி என்றாலும், அவை எல்லாம் மக்கள் சக்திக்குப் பின்னால்தான் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை” என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வரலாற்றைப் புரட்டிப்போடும் வலிமையும், புரட்சிகள் உருவாக்கி, புதுமைகள் படைக்கின்ற வல்லமையும் கொண்ட சக்தி மக்கள் சக்தி. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னபடி, எல்லா சக்திகளுமே மக்கள் சக்திக்குப் பின்னால்தான். ஆனால், அந்த மக்கள் சக்தியே மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பின்னால் இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த மக்கள் சக்தி மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறது. மூன்றாவது முறையாக மாண்புமிகு அம்மா அவர்களைத் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக்கியது அந்த மக்கள் சக்திதான். முதன்முறையாக தமிழ்நாட்டிலிருந்து ஒரு மகா சக்தியை இந்தியாவின் பிரதமராக ஆக்கப்போவதும் அந்த மக்கள் சக்திதான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–25*

இனிமேல் இந்த நாட்டில் வெறும் கை முழம் போட முடியாது. இனிமேல் இந்த நாட்டில் வெறும் கை முழம் போட முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இந்திய மக்களின் நம்பிக்கை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த மக்கள் சக்தியின் துணையோடு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் மத்தியில் நல்லாட்சி மிக விரைவில் மலரும். உலக நாடுகள் வியக்கின்ற வல்லரசாய், நட்பு நாடுகள் போற்றுகின்ற நல்லரசாய், அண்டை நாடுகள் மதிக்கின்ற பேரரசாய், மத்திய அரசில் நம் அம்மாவின் ஆட்சி மலர்ந்தே தீரும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மத்திய அரசில் நம் அம்மாவின் நல்லாட்சி மலர்ந்தே தீரும் என்று தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்ய விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது 849 வெட்டுத் தீர்மானங்களை மாமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்துள்ளனர். இந்த வெட்டுத் தீர்மானங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, அவற்றைப் பரிசீலித்து, அவர்கள் தந்த பதில்களை நானும் பரிசீலித்தேன். இந்தத் தீர்மானங்களில் பெரும்பாலானவை வளர்ச்சிப் பணிகளுக்கான கோரிக்கைகளாக உள்ளன. இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, நிறைவேற்ற போதுமான நிதி ஒதுக்கம் இந்தத் துணை மானியக் கோரிக்கையில் தர இயலாது என்பதால், இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும், அந்தந்தத் துறைகள்மூலம் நிதிநிலைக்கேற்ப கவனமாக பரிசீலித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, உரிய முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, நான் அளித்த விளக்கங்களை ஏற்று, மாமன்ற உறுப்பினர்கள் தமது வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக் கொண்டு, துணை மானியக் கோரிக்கையில் உள்ளவாறு தேவைப்படும் நிதியான 4,823.19 கோடி ரூபாயை வருவாய்க் கணக்கிலும், 453.43 கோடி ரூபாயை மூலதனக் கணக்கிலும், 610.34 கோடி ரூபாயை கடன் கணக்கிலும், ஆக மொத்தம் 5,886.97 கோடி ரூபாயை இம்மாமன்றம் அனுமதிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியையும், பணிவான வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

28–10–2013 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.



“2013–2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 25–10–2013 ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2013–2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

## நிறைவேற்றப்பெற்ற 2013–2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 13,40 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 2,96,19 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 570,62,83 | 1 | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 87,87,34 | 2 | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 12,96,51 | 1 | .. |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 6 | 1 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 78 | 3 | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 16,90 | .. | .. |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1 | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 76,65 | 1 | .. |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 21,29 | .. | .. |
| 14 | எரிசக்தித் துறை | 3 | .. | 37,50,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 2,77,00 | 1 | .. |
| 16 | நிதித் துறை | 1 | .. | .. |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 140,11,02 | .. | 25,53,32 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | 1,78,00 | 66,25 | .. |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,11,24 | 2 | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 20 | உயர் கல்வித் துறை | 15 | 3 | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 1 | 2,91,96 | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 75,10,06 | 1 | 276,70,21 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1,51,79 | .. | 8,71,00 |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 4,52,57 | 1,00,00 | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | 1 | .. |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 3 | 1 | .. |
| 27 | தொழில் துறை | 1 | .. | 137,50,00 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 13,02,75 | 1 | .. |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 12 | 4 | .. |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 2 | 2 | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 78,99,16 | .. | .. |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 9,04 | 2 | .. |
| 33 | சட்டத் துறை | 5,34,38 | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 49,88 | 3 | 100,00,00 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 28,41 | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 1 | .. | .. |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 1 | .. | .. |
| 38 | பொதுத் துறை | 14 | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 1 | 5,00,11 | .. |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 110,18,59 | 1,00,35 | .. |
| 41 | வருவாய்த் துறை | 14,93,29 | .. | .. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 23,18,53 | 440,03,38 | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 100,57,29 | .. | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 2,00,01 | .. | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 240,23,31 | .. | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 60,03 | .. | .. |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு, மற்றும் அறநிலையங்கள் துறை) | 5,00,00 | .. | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 48 | போக்குவரத்துத் துறை | 297,60,01 | .. | 24,39,50 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 56,32,04 | .. | .. |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 2,84,74 | .. | .. |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 1,458,73,04 | .. | .. |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 4,00,10 | .. | .. |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 1,500,00,00 | .. | .. |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 1,10,52 | 2,81,06 | .. |
| | **பெருமொத்தம்** | **4,823,19,32** | **453,43,41** | **610,34,03** |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2013) மற்றும் 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2013) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2013), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ 30-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2013), மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2013)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

@ 25-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2013 அக்டோபர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவின்மீது கருத்து கூற விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக தங்கள் கருத்துகளைக் கூறும்படி கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும் இந்த வேளையில் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவிலே சில திருத்தங்கள் அவசியம் என்று கூற விரும்புகிறேன்.

காவல் துறை செயல்பாடுகள் குறித்து நம்முடைய நாட்டிலே தொடர்ந்து பல அரங்குகளிலே விவாதங்கள் நடைபெற்று, ஓய்வுபெற்ற காவல் துறை இயக்குநர்கள் இருவர் உச்ச நீதிமன்றத்திலே 1996 ஆம் ஆண்டு தொடுத்த வழக்கின்மீது 2006 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே, அரசுகள் காலத்தின் தேவையைப் புரிந்துகொண்டு ஒரு புதிய காவல் துறை சட்டத்தை நிறைவேற்ற வேண்டும், அதன்மூலம் எல்லா வகையான நிர்ப்பந்தங்களுக்கும் காவல் துறை உட்படுவது தடுக்கப்படும் என்று குறிப்பிடுகின்றது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைச் செயல்படுத்தும் நல்ல நோக்கத்திலே முதலிலே தமிழக அரசு அவசரச் சட்டமாகவும், பிறகு இக்கூட்டத் தொடரில் சட்டமுன்வடிவாகவும் தாக்கல் செய்துள்ள இந்தச் சட்டமுன்வடிவிலே நான் முன்மொழியும் திருத்தங்களை மேற்கொண்டால் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் வகுத்த நெறிமுறைகள் பெரும்பாலும் பின்பற்றப்பட்ட நிலையை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன்.

காவல் துறைக்கும், அரசு நிருவாகத்திற்கும் இடையிலான உறவுகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்ற காரணத்திற்காக இந்தச் சட்டமுன்வடிவில் காவல் துறை தலைமை இயக்குநரின் அதிகாரங்களும், பொறுப்புகளும் வரையறுக்கப்பட வேண்டும். அதாவது காவல் துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு காவல் தலைமை இயக்குநர் என்னென்ன அம்சங்களில் பொறுப்பாளராக இருப்பார், என்னென்ன அம்சங்களில் சுயேச்சையாகச் செயல்படுவார் என்பது சட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும். எனவேதான்,



2013 அக்டோபர் 30] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இந்த அம்சங்களைக்கொண்ட உட்பிரிவு இரண்டாம் அத்தியாயத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற திருத்தத்தைப் பரிந்துரைக்கிறேன்.

இதேபோல, காவல் பாதுகாப்பு ஆணையத்தினுடைய நோக்கம் இந்தச் சட்டமுன்வடிவின் மூன்றாவது அத்தியாயத்திலே குறிப்பிடப்படவில்லை. பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் காவல் துறையின்மீது அரசு நிருவாகம் தேவையற்ற செல்வாக்கு அல்லது நிர்ப்பந்தம் செலுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதே இந்த ஆணையத்தின் நோக்கம் என்று குறிப்பிடுகிறது. இந்தப் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்படுவதற்கான நோக்கம் இந்தச் சட்டமுன்வடிவிலே இணைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைக்கின்றேன்.

*பிற்பகல் 1–35*

இந்தச் சட்டத்தின் பிரிவு 5–ல் மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் அமைப்பு முறை கூறப்பட்டிருக்கிறது. "தேசிய மனித உரிமைகள் ஆணைய மாதிரி, ரிபைரோ குழு மாதிரி, சொராப்ஜி மாதிரி ஆகிய மூன்று மாதிரிகளில் ஏதேனும் ஒன்றை மாநிலங்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்" என்ற உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இந்தப் பாதுகாப்பு ஆணையத்தின் அமைப்பு முறை அமையவில்லை. குறிப்பாக, இந்த ஆணையத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினால் பரிந்துரைக்கப்படக்கூடிய உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இடம் பெற வேண்டும். அதேபோன்று, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரும், மாநில மனித உரிமை ஆணையத்தின் தலைவரும் சேர்ந்து பரிந்துரைக்கக்கூடிய, பல்வேறு பண்புகள் உடைய, பல்வேறு தளங்களில் செயல்படக்கூடிய சுயேச்சையான உறுப்பினர்கள் இந்த ஆணையத்தில் இடம் பெற வேண்டுமென்று நான் பரிந்துரைக்கின்றேன். இந்த ஆணையத்தில் தற்பொழுது மாநிலத்தினுடைய பல்வேறு ஆணையங்களுடைய தலைவர்கள் இடம் பெற்றிருக்கின்றார்கள். அவை பற்றி, இந்த மூன்று முன்மாதிரிகள் எதிலும் குறிப்பிடவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அடுத்து, இச்சட்டமுன்வடிவு, பிரிவு 8, உட்பிரிவு 6–ல், "மாநிலம், மண்டலம், சரகம், மாநகரம் மற்றும் மாவட்ட அளவிலான பணியாளர் குழுக்களின் இணைப்பாக்கம், பொறுப்புகள்,

செயற்பணிகள் மற்றும் அதிகாரங்களை அரசு வகுத்துரைக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது நீக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன். காரணம், இது உச்ச நீதிமன்றத்தால் சொல்லப்படாத அம்சமாகும். காவல் துறையில் உயர் தலைமை அதிகாரிகளை நியமித்தல், நிருவகித்தல் இரண்டும் அரசாங்கத்தின் பொறுப்பாகிறது. ஆனால், இதர துணை நிலைப் பதவிகளில் உள்ளவர்கள், அதாவது, கூடுதல் எஸ்.பி. மற்றும் அதற்குக்கீழ் நிலையிலுள்ள காவல் அலுவலர்களின் பணி சார்ந்த விஷயங்கள் துறையின் உள் விவகாரங்களாகவே இருக்க வேண்டும். நியமனங்கள், இட மாறுதல், பதவி உயர்வுகள் ஆகியவற்றில் அரசியல் தலையீடுகள் இருக்கும் நிலையில் முறையற்ற சார்பு நிலைகளைக் கட்டுப்படுத்த இந்தச் சட்டபூர்வ ஏற்பாடு தேவைப்படுகிறது என்று கருதுகிறேன்.

அடுத்து, பிரிவு 10-ஐப் பொறுத்தவரை "மாநில அளவிலான காவல் புகார்கள் அதிகார அமைப்பிற்கு ஒரு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்ற நீதிபதி தலைமை தாங்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஒரு பரிந்துரைப் பட்டியலைக் கொடுக்க வேண்டும்; அதிலிருந்து ஒருவரை மாநில அரசு புகார்கள் ஆணையத்தின் தலைவராக நியமிக்க வேண்டும். அதேபோன்று, மாவட்ட அளவிலான காவல் புகார்கள் அதிகார அமைப்பிற்குத் தலைவராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி இருக்க வேண்டும்" என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இப்பிரிவு, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாற்றமாக இருப்பதால், இந்தப் பிரிவு திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக இச்சட்டமுன்வடிவு, பிரிவு 13, உட்பிரிவு 1-ன்படி, மாவட்ட, மாநில புகார்கள் அதிகார அமைப்புகளுக்கு உள்ள ஒரே நோக்கம், மோசமான, கடுமையான நன்நடத்தையின்மை தொடர்பாக ஒரு புகாரைப் பெற்றபின், அதனை காவல் துறை புகார்கள் பிரிவின் விசாரணை அறிக்கைக்கு அனுப்புவது மட்டுமே என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உச்ச நீதிமன்றத்தின் ஆணை, இந்த அமைப்புகள் தங்கள் சொந்த விசாரணைகளை மேற்கொள்ளவும், தங்கள் சொந்த முடிவுகளுக்கு வரவும் வழிவகுக்கிறது. இந்த அமைப்பின் தலைவரும், உறுப்பினர்களும்





முழு நேரமும் செயல்பட வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தின் எதிர்பார்ப்பு. அவர்களது பணிகளுக்காக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவும் வழிவகுக்கிறது. கள விசாரணைகளுக்கும் குற்றப் புலனாய்வுத் துறை, உளவுத் துறை, கண்காணிப்புத் துறை அல்லது வேறு எந்த அமைப்பைச் சேர்ந்த ஓய்வு பெற்ற புலனாய்வாளர்களின் சேவையை இந்த அமைப்புகள் பயன்படுத்திக்கொள்ளவும் உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ளது கவனிக்கத்தக்கது. எனவே, இந்தப் புகார்களை, மாநிலக் காவல் புகார்கள் அதிகார அமைப்பு அமைக்கும் சுயேச்சையான விசாரணைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று பரிந்துரைக்கின்றேன்.

அதேபோன்று, மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பாக இருக்கட்டும் அல்லது மாநிலக் காவல் புகார்கள் அதிகார அமைப்பாக இருக்கட்டும், அவற்றுக்கென்று சில அதிகாரங்களை உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்திருக்கின்றது. அவை ஒரு முடிவிற்கு வந்த பிறகு அதை மாநில அரசுக்கு அப்படியே அனுப்பாமல், நேரடியாக விசாரிக்கக்கூடிய விஷயங்களைப் பற்றி மாநிலக் காவல் துறைத் தலைமை இயக்குநருக்கும், மாநில அரசுக்கும், பின்வரும் ஆணையுடன் அனுப்ப வேண்டுமென்று சொல்கிறது. முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தல் மற்றும் அத்தகைய முடிவுகளின் அடிப்படையில் தன்னால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை முறைப்படி காவல் துறைக்கு அனுப்பி வைத்து, துறைசார்ந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது மாவட்ட புகார்கள் அமைப்பிற்கும் பொருந்தும்.

இதேபோன்று அரசு நிருவாகத்திற்கும், டி.ஜி.பி.-க்கும் உள்ள உறவு முறை இந்த சட்டமுன்வடிவில் குறிப்பிடப்படவில்லை. அது சேர்க்கப்பட வேண்டும். காரணம், அரசியல் நிருவாகத்திற்கும், காவல் துறைத் தலைவருக்கும் இடையேயான உறவு குறித்த தெளிவான வரையறைகளை இந்த உட்பிரிவுகள் அளிக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

[2013 அக்டோபர் 30

*பிற்பகல் 1–40*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** காவல் புகார்கள் அதிகார அமைப்பிற்குப் புகார் கொடுக்கக்கூடியவர்கள் Notary Public–னுடைய அத்தாட்சியுடன் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கின்றது. சாதாரணமாக மனித உரிமை ஆணையமாக இருக்கட்டும் அல்லது வேறு எந்த குறை தீர்க்கும் பிரிவிற்கும் சாதாரணமான மக்கள் Notary Public–இடம் சென்று, பதிவு பெற்று அளிக்க வேண்டும் என்பது சாத்தியமில்லாத ஒன்று. எனவே, இந்தப் பிரிவு நீக்கப்பட்டு, அவர்கள் நேரடியாகவே புகார்களைக் கொடுக்கலாம் என்று சட்டமுன்வடிவு திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல இந்த சட்டமுன்வடிவின் 2–வது அத்தியாயத்திலே D.G.P. காவல் தலைமை இயக்குநர் அவர்களைப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதற்கான காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று, எழுத்துபூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படையின்பேரிலே அவர் விடுவிக்கப்படலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது விரிவான காரணம். எனவே, இந்தப் பிரிவு நீக்கப்பட வேண்டும்.

அதேபோல, காவல் நிலையம் மற்றும் மாவட்ட காவல் ஆணையரகத்தில் பணியிலுள்ளவர்கள் விடுவிக்கப்படுவதற்கும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது நீக்கப்பட வேண்டுமென்று பரிந்துரைக்கின்றேன். காவல் துறையைச் சீர்த்திருத்தம் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்துள்ள இந்த சட்டமுன்வடிவில் நான் குறிப்பிட்டுள்ள திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் துறையின் எதிர்கால செயல்பாடுகளை நிர்ணயிக்கின்ற இந்தப் புதிய சட்டம் ஒரு முக்கியமான சட்ட நடவடிக்கையாகும். காவல் துறையின் செயல்பாடுகளை உயர்த்திப் பிடிப்பதிலும், மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் நாட்டம் கொண்டுள்ள அரசு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு அதனைத் தேர்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இத்தகைய சட்டம் பல்வேறு தரப்பு மக்களிடையே விரிவான முறையில் விவாதிக்கப்பட்டு, பின்னர் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் சீர்திருத்தம் தொடர்பாக பிரகாஷ் சிங் வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்கான சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் இடைவிளைவான பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு இது. இந்தச் சட்டமுன்வடிவில் உச்ச நீதிமன்றத்தினுடைய கட்டளை, மாநிலப் பாதுகாப்பு ஆணையம், D.G.P. தேர்வு, பதவிக்காலம் மற்ற அதிகாரிகளின் பதவிக் காலம், காவல் துறை நிருவாக வாரியம், காவல் துறை புகார்கள் ஆணையம் போன்றவை சம்பந்தமாக விரிவாக விவாதித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் இதை Select Committee–க்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

**திரு. ஆர். ராமமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் சீர்திருத்தச் சட்டமுன்வடிவில் மூன்று அம்சங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்த விரும்புகிறேன். காவல் துறை புகார்கள் ஆணையம் சம்பந்தமாக மூன்று அம்சங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். காவல் துறை ஆணையத்தின் காவல் துறை அதிகாரிகள்மீது பொதுமக்கள் சார்பில் எழுகின்ற புகார்களை விசாரிக்கிற ஆணையத்தில் காவல் துறை உயரதிகாரிகள் அதாவது, D.G.P., A.D.G.P போன்றவர்கள் உறுப்பினர்களாக இருப்பது சரியல்ல என்று நாங்கள் கருதுகிறோம்.

அதேபோன்று கீழ்மட்ட காவல் துறை அதிகாரிகளுக்கு எதிராக வரும் புகார்களை, உயர்மட்ட காவல் துறை அதிகாரிகளே விசாரிப்பது, புகார் செய்கின்ற மக்களுக்கு நியாயம் வழங்குவதற்கு உதவாது என்று நாங்கள் கருதுகிறோம். அடுத்து, புகார் தரும் பொதுமக்கள் உறுதியளிக்கப்பட்ட பிரமாண பத்திர வடிவத்தில் Notary Public–இடமிருந்து முறையான சான்றுடன் புகார் அளிக்க வேண்டுமென்கிற அம்சம் பொருத்தமானதல்ல என்று மார்க்சிஸ்ட்

[திரு. ஆர். ராமமூர்த்தி] [2013 அக்டோபர் 30

கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது. இந்த நிபந்தனை பொதுமக்கள்மீது விதிக்கப்படுகிற தேவையற்ற நிபந்தனை மட்டுமல்ல, பொதுமக்கள் கொடுக்கிற புகார்கள் தடுக்கப்படுவதற்கும், தயக்கம் காட்டுவதற்கும்தான் இது உதவும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அடுத்து, உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்குட்பட்ட பல அம்சங்கள் இந்தச் சட்டமுன்வடிவில் இல்லாத காரணத்தால் இதை Select Committee–க்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் வாயிலாக, புதிய காவல் (சீர்திருத்தம்) சட்டம், தமிழ்நாடு காவல் அவசரச் சட்டமாக உருவாக்கப்பட்டு, தற்போது சட்டமாக்கும் விதத்தில், சட்டமன்றப் பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் இந்தப் புதிய சட்டமுன்வடிவின் நோக்கம் என்பது, நோக்க காரண விளக்கவுரையில் 10ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருந்தாலும், சட்டத்தின் உள்ளேயே அதன் நோக்கத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாநிலப் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்படும்போது அதில் சமூக ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மருத்துவர் போன்ற நபர்களை அதில் சேர்த்துக்கொண்டால் நன்மையாக இருக்குமென்று கருதுகிறேன். மேலும், Consultative Advisory Committee என்று அதில் உள்ளடக்கினால், அது மென்மேலும் பல ஆலோசனைகளை ஆணையத்திற்கு வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும்.

பிற்பகல் 1–45

அதுமட்டுமல்ல; காவல் தலைமை இயக்குநரின் தேர்வு, பணியமர்த்தம் மற்றும் காலம், காவல் தலைவர் மற்றும் பிற காவல் அலுவலர்களின் அலுவல் காலம் என்று குறிப்பிடப்பட்ட இந்தத் தலைப்புகளில் இவர்களின் குறைந்தபட்ச காலத்தை நிர்ணயம் செய்யும்போது, நிபந்தனைகளின்றி இந்தக் காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.



2013 அக்டோபர் 30] [திருமதி எஸ். விஜயதரணி]

குறிப்பாக, பிரிவு 3(3)(e)–ல், 'எழுத்துபூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படைகளின் பேரில்;' என்ற பரந்து விரிந்த அந்த clause, அந்தப் பிரிவு என்பது நீக்கப்பட வேண்டும் என்று கருதுகிறேன். அதேபோல, பிரிவு 4(2)(1)(i)–ல், 'எழுத்துபூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படைகளில் எதற்காகவும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது எனும் நேர்வுகளில். . .' என்று கூறப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பரந்து விரிந்த. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய கருத்தை இறுதியாகச் சொல்லி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இந்தப் பிரிவும் நீக்கப்பட்டால், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவது என்பது முழுமை பெறும் என்று நான் கருதுகிறேன். இந்த அளவில் எங்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, இந்தச் சட்டத்தை நிறைவேற்ற உதவுவார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, 2013 குறித்து புதிய தமிழகம் கட்சியின் சார்பாக சில முக்கியமான கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மாநில அளவில் சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமென்கின்ற ஒரு பொறுப்பை காவல் துறை ஏற்றிருக்கின்ற காரணத்தாலே, சட்டம்–ஒழுங்கு, குற்றங்கள் தடுப்பு போன்ற சம்பவங்களிலே ஈடுபடுகின்ற பொறுப்பை காவல் துறை வகிக்கின்ற காரணத்தினாலே, அந்த நேரங்களிலே பல்வேறுவிதமான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன. எனவே, காவல் துறை அமைப்பு எப்படியிருக்க வேண்டுமென்று சொன்னால், காவல் துறைக்கான சட்டம், ஆங்கிலேயர் காலத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம் என்கின்ற காரணத்தினாலே, சுதந்திர இந்தியாவில் எல்லாவிதமான மக்களுடைய கருத்துகளையும் ஏற்று, ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்; காவல் (சீர்திருத்தம்) சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற அடிப்படையில், 1996 ஆம் ஆண்டு இதுகுறித்து விவாதம் தொடங்கி, உச்ச நீதிமன்றம் கொடுத்த வழிகாட்டுதல்களின்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 அக்டோபர் 30

அடிப்படையில், இப்போது சட்டம் கொண்டுவரப்படுகிறது. ஆனால், உச்ச நீதிமன்றத்தினுடைய பெரும்பாலான வழிகாட்டுதல்கள் இந்தச் சட்டமுன்வடிவிலே இல்லை என்பதுதான் இதிலே இருக்கக்கூடிய வருத்தமான செய்தி.

குறிப்பாக, மாநிலப் பாதுகாப்பு ஆணையம், அதேபோல, காவல் துறை புகார்கள் ஆணையம், இரண்டுமே உச்ச நீதிமன்றத்தினுடைய வழிகாட்டுதல்களுக்கு நேர்மாறாக இருக்கின்றன. எனவே, இந்தச் செயல் எந்தவிதத்திலும் உச்ச நீதிமன்றத்தினுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருக்காது. எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக இதை Select Committee–க்கு அனுப்புவது மட்டுமல்ல; தமிழ்நாடெங்கும் அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும், இதுகுறித்து ஒரு விரிவான விவாதத்திற்குப் பின்பு இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றினால், இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நிறைவேறும் என்பதே புதிய தமிழகம் கட்சியின் கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது அமைதியை நிலைநாட்டுவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவதிலும் காவல் துறையின் பங்கு மகத்தானது. இப்படிப்பட்ட உன்னதத் தன்மை வாய்ந்த காவல் துறையில் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கில், 1991 ஆம் ஆண்டே அதிநவீன ஆயுதங்களையும், வாகனங்களையும், காவல் துறையினருக்குத் தேவையான கருவிகளையும் அளித்தேன். இவற்றைப் பயன்படுத்துவதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

இதுமட்டுமல்லாமல்; காவல் நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டித் தருதல், அனைத்து மாவட்டங்களையும் Digital Microwave Network மூலம் இணைத்தல் உட்பட பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. காவல் துறை தொடர்ந்து நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்தியாவிலேயே தொழில்நுட்பத் திறனுடன் வெகு சிறப்பாகச் செயல்படக்கூடிய தனித்தன்மை வாய்ந்த துறையாக தமிழ்நாடு காவல் துறை விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பிற்பகல் 1–50

காவல் சீர்திருத்தம் என்பது காவல் துறையின் ஒட்டுமொத்த செயல்கள், காவல் துறையை நவீனப்படுத்துதல், மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப காவல் துறையினரின் செயலாக்கத்தை மேம்படுத்துதல், காவல் துறையினர் சுதந்திரமாகவும், எவ்வித விருப்பு, வெறுப்பிற்கு ஆளாகாமல், நேர்மையாகவும், சட்டத்திற்கு உட்பட்டும், தங்கள் பணிகளை ஆற்ற வழிவகுத்தல் எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. இவற்றைச் செயல்படுத்தும்வகையில் தற்போதுள்ள பல்வேறு சட்டங்களை நீக்கறவு செய்யாமல், அதே சமயத்தில் சீர்திருத்தங்களை நிறைவு செய்யும் வகையில் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

1977–ல் அமைக்கப்பட்ட தேசிய காவல் ஆணையம் செய்த பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் பிரகாஷ் சிங் தொடர்ந்த வழக்கில் 2006 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பில், (1) ஒவ்வொரு மாநிலமும் புதிய காவல் சட்டம் ஒன்றினை இயற்ற வேண்டும் என்றும்; (2) புதிய காவல் சட்டம் ஒன்றினை இயற்றும் வரை ஒவ்வொரு மாநிலமும், மாநிலப் பாதுகாப்பு ஆணையம், காவல் தலைமை இயக்குநரின் நியமனம் மற்றும் குறைந்தபட்ச பதவிக் காலம், காவல் துறையில் பிற முக்கிய பதவிகளில் உள்ள அலுவலர்களின் குறைந்தபட்ச பதவிக் காலம், புலன் விசாரணைப் பிரிவைப் பிரித்தல், காவல் பணியாளர் வாரியம் மற்றும் காவல் புகார்கள் அதிகார அமைப்பு ஆகியவை குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மாநில அரசுகள் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் சட்டம், 2008 என்ற சட்டமுன்வடிவு 14–5–2008 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், 2011 ஆம் ஆண்டு மே மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்வரை இது சட்டமாக நிறைவேற்றப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்தும் வகையில் காவல் சீர்திருத்தம் குறித்து ஒரு சட்டம் இயற்ற எனது தலைமையிலான அரசு முடிவு செய்தது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறாததால் 10–9–2013 அன்று தமிழ்நாடு காவல்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 30

(சீர்திருத்தம்) அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அது 11–9–2013 அன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், 2013 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25–10–2013 அன்று என்னால் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு மாவட்ட காவல் துறை சட்டம், 1859 மற்றும் சென்னை மாநகரக் காவல் சட்டம், 1888 போன்ற சட்டங்களை இரத்து செய்யாமல், அவற்றில் குறிப்பிடப்படாததும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் வரையறுக்கப்பட்டுள்ளதுமான வழிகாட்டுதல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

காவல் தலைமை இயக்குநர் பதவியைப் பொறுத்தவரையில், தற்போதைய சட்டமுன்வடிவில் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி காவல் தலைமை இயக்குநர் மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையத்தால், அதாவது, Union Public Service Commission-ஆல் பட்டியலிடப்பட்ட, துறையில் முதலில் ஐந்து முதுநிலைகளில் உள்ள காவல் அலுவலர்களுக்குள்ளிருந்து பணியமர்த்தப்பட வேண்டும் என்றும், அவ்வாறு பணியமர்த்தப்படுபவர் அவருடைய ஓய்வு பெறும் தேதியைப் பொருட்படுத்தாமல் குறைந்தபட்சம் 2 ஆண்டு காலம் பதவியில் இருப்பார் என்றும் வகை செய்யப்பட்டுள்ளது.

காவல் நிலையம், காவல் மாவட்டம் மற்றும் காவல் ஆணையரகம் ஆகியவற்றில் தலைமை பொறுப்பில் உள்ள பதவிகள் முக்கியமானவை. எனவே, இந்த 3 பொறுப்புகளுக்கு மட்டும் குறைந்தபட்ச பதவிக் காலம் 2 ஆண்டுகள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. மற்ற பதவிகள் பெரும்பாலும் கண்காணிப்பு அல்லது மேற்பார்வையிடும் பதவிகளே ஆகும். எனவே, அவற்றுக்கு இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

பிற்பகல் 1–55

காவல் துறையின் பொதுவான கொள்கை குறித்த பணிப்புரைகள் வழங்குவதற்கு மாநில பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. உச்ச நீதிமன்றம் கூறியுள்ளவாறு, மாநிலப் பாதுகாப்பு ஆணையம் அமைக்க இந்தச் சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் இந்த ஆணையத்தின் தலைவராக இருப்பார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், தமிழ்நாடு மனித உரிமை ஆணையத்தின் தலைவர், மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர், மாநில சிறுபான்மையின ஆணையத்தின் தலைவர், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

காவல் தலைமை இயக்குநர் இதன் உறுப்பினர்–செயலராகச் செயல்படுவார். உச்ச நீதிமன்ற உத்தரவில், காவல் துறையின் அதிகாரிகளை மாற்றுவதற்கும், பதவி உயர்வு கொடுப்பதற்கும் காவல் பணியமைப்பு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

காவல் பணியமைப்பு வாரியம் என்ற பெயரில் காவல் தலைமை இயக்குநர் தலைமையில் காவல் கூடுதல் தலைமை இயக்குநர்கள், நிருவாகம், சட்டம்–ஒழுங்கு, தலைமையிடம் மற்றும் நுண்ணறிவுப் பிரிவு ஆகியோர் அடங்கிய வாரியம் அமைத்திட இந்தச் சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சட்டம்–ஒழுங்கு மற்றும் புலன் விசாரணைப் பிரிவுகள் பிரிக்கப்பட வேண்டுமென்பதும் உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரைகளில் ஒன்றாகும். இதற்கேற்ப, தற்போதைய சட்டமுன்வடிவில் பிரிவு 9–ல் புலன் விசாரணைப் பணிக்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும், தனிப் பிரிவு இயங்கும் என்றும், அனைத்து வழக்குகளிலும் புலன் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணைக்கான நடவடிக்கைகளை இப்பிரிவினர் எடுப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் மாநில மற்றும் மாவட்ட அளவில் காவல் துறைப் புகார்கள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவில் மாநிலக் காவல் புகார்கள் அதிகார அமைப்பும், மாவட்ட காவல் புகார்கள் அமைப்புகளும் இயங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்புகளின் அதிகாரங்கள், மேல் நடவடிக்கை ஆகியவை குறித்து விளக்கமாக இந்தச் சட்டமுன்வடிவில் அத்தியாயம் IV–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், காவலர்கள் மீதான புகார்களை விசாரணை செய்ய காவல் புகார்கள் பிரிவு அமைக்கப்பட்டு, அது காவல் தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டில் கூடுதல் காவல் தலைமை இயக்குனர்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 30

ஒருவரின் நிருவாக மேற்பார்வையின்கீழ் பணிபுரியும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், பணியில் இருக்கும் காவல் அலுவலர்கள் தவிர, ஓய்வு பெற்ற காவல் அலுவலர்கள் அல்லது விழிப்புணர்வுப் பணி, நுண்ணறிவுப் பிரிவு, குற்றவியல் பிரிவு அலுவலர்கள் அல்லது பிற துறைகளில் பணிபுரியும் அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்களையும் கொண்டிருக்கும்வகையில் இந்தக் காவல் புகார்கள் பிரிவு அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலும், இந்தச் சட்டமுன்வடிவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்களின் அடிப்படையிலும் சில விளக்கங்களை நான் அளிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டமுன்வடிவு, தீவிர பரிசீலனைக்குப் பின் சட்ட வல்லுநர்களின் கருத்துகள் கேட்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு மாநிலங்களில் இயற்றப்பட்ட சட்டங்களும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் கவனமாக பரிசீலிக்கப்பட்ட பின்புதான் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் சட்டமுன்வடிவு இங்கே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

காவல் தலைமை இயக்குநரைப் பதவி நீக்கம் செய்ய பிரிவு 3(3)(இ)—ல் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துபூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படையின்பேரில் என்பது நீக்கப்பட வேண்டும் என்ற திருத்தமும், இதேபோன்று பிரிவு 4(2)(ஐ)—ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தமும் ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில், பதவியிலிருந்து நீக்குவதற்கான எல்லா காரணங்களையும் முன்கூட்டியே எதிர்பார்த்து பட்டியலிட முடியாது. ஏதாவது முக்கிய அல்லது அத்தியாவசிய நிருவாகக் காரணங்களுக்காகப் பதவி நீக்கம் செய்யும் நிலைமை ஏற்பட்டால், அப்போது பயன்படுத்துவதற்காக இந்த வழிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. எழுத்துமூலமாக காரணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு இருப்பதால், இதனைத் தவறாகவோ, சரியான காரணம் இல்லாமலோ பயன்படுத்தும் வாய்ப்பு இல்லை.

இதேபோன்று, பிரிவு 3—ல் சேர்க்கப்பட வேண்டிய உட்பிரிவுகள் எனக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தேவையற்றவையாகும். ஏனெனில், சட்டப்படி அமைச்சர் தலையிட இயலாத



2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செயல்பாடுகளில் அமைச்சர் தலையிடுவதற்கு இடமில்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அல்லது விசாரணை அலுவலர் நிறைவேற்றும் பணிகளில் வேறு எவரும் தலையிட இயலாது.

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** காவல் துறை உயரதிகாரிகள்கூட ஒருவர்மீது, குற்றச்சாட்டு தாக்கல் செய்ய வேண்டுமென்றோ, அவ்வாறு தாக்கல் செய்யக்கூடாது என்றோ உத்தரவிட இயலாது. வேண்டுமென்றால் உயர் அதிகாரி, தானே விசாரணையை மேற்கொண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 36—ன்கீழ் தங்களுக்குள்ள அதிகாரத்தின்படி செயல்படலாம். இவ்வாறு சட்டத்தில் இருக்கும்போது அமைச்சரோ, வேறு அரசு அலுவலர்களோ தலையிட வாய்ப்பு இல்லை. எனவே, மேற்கூறியவாறு புதிய உட்பிரிவுகள் சேர்க்கப்பட அவசியமில்லை.

காவல் துறை ஆணையம் அமைக்கப்படுவதற்கான காரணத்தைத் தெரிவிக்கும்வகையில் பிரிவு 5 (1)—ல் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்க இயலாது. ஏனெனில், மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் பணிகளும், பொறுப்புகளும், அதிகாரங்களும் பிரிவு 6—ல் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாநில மனித உரிமை ஆணையம், மாநில மகளிர் ஆணையம் மற்றும் மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஆகியவற்றின் தலைவர்களே இருப்பார்கள். எனவே, மேற்கூறப்பட்ட திருத்தம் தேவையற்றது.

காவல் துறை ஆணையத்தின் உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரைப்படி சொராப்ஜி குழுவின் பரிந்துரையை ஒட்டி சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பிரிவு 5(2)—ல் எந்த மாற்றமும் தேவையில்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல சட்டப்படி தலையிட இயலாத

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 30

விஷயங்களில் அமைச்சரோ, அரசு அதிகாரிகளோ தலையிடுவதற்கு வாய்ப்பு கிடையாது. மேலும், காவல் துறையினரின் செயல்பாடுகள் சுயேச்சையான மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் பரிசீலனைக்கும் மறு ஆய்விற்கும் வரும் என்பதால், மேற்குறிப்பிட்ட பிரிவு 6—ல் சேர்க்கப்பட வேண்டுமென கோரியுள்ள உட்பிரிவுகளுக்கு அவசியமில்லை.

பிரிவு 8 (6) நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்பதற்கு இல்லை. ஏனெனில், மாநிலம், மண்டலம், சரகம், மாநகரம் மற்றும் மாவட்ட அளவிலான பணியாளர் குழுக்களின் பொறுப்புகள், செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் வரையறுத்துக் கூற வேண்டிய அவசியம் உள்ளது. இதன் விவரங்கள் இச்சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்படும் விதிகளில் விரிவாகக் கூறப்படும். துணை நிலைப் பதவிகளில் உள்ளவர்களின் பணிசார்ந்த விஷயங்கள், துறையின் உள் விவகாரங்களாகவே இருக்கும். இதில் அரசியல் அல்லது அரசின் தலையீடு இல்லாதவாறு விதிகள் கொண்டு வரப்படும். பிரிவு 10—ன்படி அமைக்கப்படவுள்ள மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பின் தலைவராக உயர் நீதிமன்ற/உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி இருக்க வேண்டும் என்ற திருத்தம் தேவையற்றது. தற்போது காவல் பொறுப்பில் இருக்கும் ஒரு நபர் மரணமடைந்தாலோ அல்லது காவல் பொறுப்பில் இருக்கும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாலோ, உடனடியாக குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 176 (1ஏ)ன்படி நீதிமன்ற நடுவர் விசாரணைக்கு அனுப்பப்படுகிறது. இந்த நீதிமன்ற விசாரணையின் அடிப்படையிலும், அதன் பரிந்துரையின் அடிப்படையிலும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும், காவல் கட்டுப்பாட்டில் இருக்கும்போது கொடுங்காயம் விளைவித்தல் அல்லது ஒரு எதிரியை அல்லது குற்றவாளியை சித்ரவதை செய்தல் போன்ற குற்றச்சாட்டுகள் எழும்போது அவை காவல் நிலை ஆணைகளின்படி வருவாய் கோட்டாட்சியரின் விசாரணைக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாறு பெரிய குற்றச்சாட்டுகள் குறித்து நடுநிலையான விசாரணைக்கு ஏற்கெனவே வழிமுறை இருப்பதால் ஒரு நீதிபதியின் தலைமையில், புகார்கள் அதிகார அமைப்பு இருக்கத் தேவையில்லை. இதே விளக்கம் பிரிவு 14 (2) திருத்தப்பட வேண்டுமென்பதற்கும் பொருந்தும்.



2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

காவல் துறையினர்மீது புகார்கள் தெரிவிக்கும்போது அங்கீகாரம் பெற்ற சான்று அலுவலர் ஒப்பமிட்ட பிரமாண பத்திரம் வடிவில் கொடுக்க வழிவகை செய்யும் பிரிவு 12 (1)—ஐ திருத்த வேண்டியதில்லை. ஏனெனில், இது பொய்யான புகார்கள் அளிக்கப்படுவதைத் தடுக்கும்வகையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும். காவல் துறை அலுவலர் ஒருவரின் எந்த நடவடிக்கையாலும் மனுதாரர் அல்லது எதிர் மனுதாரர், புகார்தாரர் அல்லது எதிரி ஆகியவர்களில் யாராவது ஒருவர் மனக்குறை அடைய வாய்ப்புள்ளது. தான் எதிர்பார்த்ததைச் செய்யவில்லை என்ற எண்ணத்தில் பொய்யான புகார் கொடுத்து அலுவலர்களுக்கு சிரமத்தை உருவாக்கும் நிலை எழக்கூடும் என்பதால் இவ்வாறு பிரமாண பத்திர வடிவில் புகார்கள் அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இந்த விளக்கம் பிரிவு 15 (a)—விற்கும் பொருந்தும்.

பிற்பகல் 2—05

பிரிவு 13 (1)—ல் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம் தேவையற்றதாகும். மாநில அல்லது மாவட்டப் புகார்கள் அதிகார அமைப்புகளுக்கு உள்ள ஒரே அதிகாரம் புகார்களைக் காவல் துறை புகார்கள் பிரிவில் விசாரிக்க அனுப்புவது மட்டுமே என்பது சரியில்லாத கூற்று. பிரிவு 13 (2)—ன்கீழ் மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. எனவே, பெறப்பட்ட விசாரணை அறிக்கை அடிப்படையில், பரிந்துரை செய்ய இந்த அமைப்பிற்கு அதிகாரம் உள்ளது.

அதேபோல், பிரிவு 16 (b) உட்பிரிவின்கீழ் மாவட்ட காவல் அதிகார அமைப்புக்கும் தன்னுடைய பரிந்துரைகளை உரிய நடவடிக்கைக்காக அரசுக்கு சமர்ப்பிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் புகார்களும் புகார் அமைப்பினால் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றால், தற்போது உயர் அதிகாரிகள் எடுக்கும் உடனடி நடவடிக்கைக்குத் தடை விதிப்பது போலாகும். அவ்வாறு காவல் துறை நடவடிக்கை எடுத்தால் புகார் அமைப்பு மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, நீதிமன்றங்களை அணுகி குற்றச்சாட்டிற்கு உள்ளான அலுவலர்கள் தடங்கல்கள் ஏற்படுத்த இயலும். தற்போது சிறப்பாக இயங்கிவரும் ஒழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காமல் இவற்றை மேற்பார்வை செய்யும் வகையில் சட்டமுன்வடிவில் வழிவகை

செய்யப்பட்டுள்ளது. இதே விளக்கம் பிரிவு 16(a)–க்குக் கொடுக்கப்பட்ட திருத்தத்திற்கும் பொருந்தும். 13 (2) பிரிவின்கீழ், மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கும், துறை சார்ந்த நடவடிக்கை எடுப்பதற்கும், பரிந்துரை செய்யத் தடையில்லை. எனவே, இந்தப் பிரிவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அவசியமற்றவையாகும். இதே விளக்கம், பிரிவு 16 (b)–க்குக் கொடுக்கப்பட்ட திருத்தத்திற்கும் பொருந்தும். என்னுடைய விளக்கங்கள் ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு–3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 3, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தங்களை முன்மொழியலாம்.





**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு (3) (e)–ல், 'எழுத்துபூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படைகளின் பேரில்' என்ற சொற்றொடர் நீக்கப்படுதல் வேண்டும்.

உட்பிரிவு (3)–க்குப்பின், பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும்.

" '(4) (1) அமைச்சருக்கு காவல் துறை தலைமை இயக்குநர் பின்வரும் அம்சங்களில் பொறுப்பானவராக இருப்பார்.

(a) காவல் துறையின் செயல்பாடுகளையும் பணிகளையும் மேற்கொள்ளுதல்

(b) காவல் துறையின் பொதுவான நடத்தை

(c) காவல் துறையின் பயனுள்ள செயல்திறன் உள்ள பொருளாதார சிக்கனத்துடன்கூடிய நிருவாகம்

(d) நிருவாகிகளுக்கு ஆலோசனை கூறுதல்

(e) எந்தவொரு சட்டபூர்வ ஆணையையும் செயல்படுத்துதல்

(2) பின்வரும் அம்சங்களில் அமைச்சருக்கு உட்படாமல் காவல் தலைமை இயக்குநர் சுயேச்சையாகச் செயல்படுவார்.

(a) எந்தவொரு தனி நபர் அல்லது தனி நபர்களின் குழு தொடர்பான ஆணையைப் பராமரித்தல்

(b) எந்தவொரு தனி நபர் அல்லது தனி நபர்களின் குழு தொடர்பான சட்டத்தைச் செயல்படுத்துதல்

(c) குற்றச் செயல்கள் புலன் விசாரணையும் வழக்கு தொடுத்தலும்

(d) தனிப்பட்ட காவல் துறை அதிகாரிகள் தொடர்பான முடிவுகள்.' "

என்ற திருத்தங்களை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றன.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தங்கள் தோல்வியுற்றன.

பிரிவு *3*, திருத்தங்கள் இல்லை.

பிரிவு *3*, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு–4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு *4*, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு *(2)* (i)–ல், "எழுத்துபூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படைகளில் எதற்காகவும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது எனும் நேர்வுகளில், *(1)* ஆம் உட்பிரிவின் வகைமுறைகள் பொருந்தாது" என்ற சொற்றொடர் நீக்கப்படுதல் வேண்டும்."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு *4*, திருத்தங்கள் இல்லை.

பிரிவு *4*, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு–5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு *5*, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தங்களை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 'உட்பிரிவு *(1)*–ல், "அரசு, மாநில பாதுகாப்பு ஆணையமென அறியப்படும் ஆணையமொன்றினை ஏற்படுத்த வேண்டும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "காவல் துறையின்மீது அரசு நிருவாகம் தேவையற்ற செல்வாக்கு அல்லது நிர்ப்பந்தம் செலுத்தாமல் இருப்பது உறுதிப்படும் நோக்கில் அரசு மாநில பாதுகாப்பு ஆணையமென அறியப்படும் ஆணையமொன்றினை ஏற்படுத்த வேண்டும்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும், மற்றும்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 அக்டோபர் 30

'உட்பிரிவு (2)—ல், ஆணையம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். அதாவது:—

(a) காவல் இலாகாவினைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர் அவர் தலைவராக இருத்தல் வேண்டும். பதவிவழி,

(b) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்,

(c) தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பதவிவழி,

(d) தலைவர், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம், பதவிவழி,

(e) தலைவர், மாநில மகளிர் ஆணையம், பதவிவழி,

(f) தலைவர், மாநில சிறுபான்மையினர் ஆணையம், பதவிவழி,

(g) தலைமைச் செயலாளர், பதவிவழி,

(h) உள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள செயலாளர், பதவிவழி; மற்றும்

(i) காவல் தலைமை இயக்குநர், அவர் உறுப்பினர்—செயலராக இருப்பார், பதவிவழி'

என்ற சொற்றொடர்களுக்குப் பதிலாக கீழ்க்காணும் சொற்றொடர்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

'ஆணையம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும், அதாவது:—

(a) காவல் இலாகாவினைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர் அவர் தலைவராக இருத்தல் வேண்டும், பதவிவழி,

(b) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலுள்ள எதிர்கட்சித் தலைவர், பதவிவழி,

(c) சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியால் பரிந்துரைக்கப்படும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி



2013 அக்டோபர் 30] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

(d) சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் தலைமையில் மனித உரிமைகள் ஆணையத்தின் பிரதிநிதியும் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் பிரதிநிதியும் உள்ள ஒரு குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் பல்வேறு வகைப்பட்ட நிபுணத்துவம், தொழில் சார்ந்த பயிற்சித் திறன்கள், வாழ்க்கை அனுபவங்கள், குடிமக்களின் நலன்கள் ஆகியவற்றோடு இணைந்த சுயேச்சையான உறுப்பினர்கள் ஐவர்

(e) உள் துறையை பொறுப்பில் கொண்டுள்ள செயலாளர், பதவிவழி; மற்றும்

(f) காவல் தலைமை இயக்குநர், அவர் உறுப்பினர்—செயலராக இருப்பார், பதவிவழி.' "

என்ற திருத்தங்களை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றன.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தங்கள் தோல்வியுற்றன.

பிரிவு 5, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 5, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[2013 அக்டோபர் 30

*பிற்பகல் 2–10*

## பிரிவு–6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 6, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“உட்பிரிவு (d)-க்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும்.

‘(e) பின்வரும் அரசுக் கொள்கை தொடர்பான நிகழ்வுகளில் காவல் தலைமை இயக்குநருக்கு அமைச்சர் ஆணைகள் பிறப்பிக்கலாம்.

(i) குற்றத் தடுப்பு

(ii) பொதுப் பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்கு பராமரிப்பு

(iii) காவல் துறை சேவைகள் வழங்கல்

(iv) சட்டச் செயலாக்கத்தின் பொதுவான பகுதிகள்

(f) சட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் செயல்படுத்தக் கூடாது எனக் கோரும் எந்த ஒரு ஆணையையும் காவல் தலைமை இயக்குநருக்கு அமைச்சர் பிறப்பிக்கக் கூடாது.

(g) பின்வரும் அம்சங்களில் காவல் தலைமை இயக்குநருக்கு அமைச்சர் ஆணைகள் பிறப்பிக்கக் கூடாது.

(i) குறிப்பிட்ட வழக்குகளின் பிரிவுகளிலும் குற்றவியல் சட்டத்தை செயல்படுத்துதல்.

(ii) ஒரு தனி நபர் அல்லது தனி நபர்களின் குழு தொடர்பான விஷயங்கள்

(iii) காவல் துறையின் தனி நபர்கள் தொடர்பான முடிவுகள்

(h) எந்த ஒரு ஆணை தொடர்பாகவும் அமைச்சருக்கும் காவல் தலைமை இயக்குநருக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுமானால் கருத்து வேறுபாடு ஏற்பட்ட பிறகு நடைமுறை சாத்தியமான விரைவில் அமைச்சர்,



2013 அக்டோபர் 30] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

(i) அந்த ஆணையை காவல் தலைமை இயக்குநருக்கு எழுத்துபூர்வமாக வழங்க வேண்டும்.

(ii) ஆணையின் நகலை அரசிதழில் வெளியிட வேண்டும்.

(iii) ஆணையின் நகலை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்ய வேண்டும்.”

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 6, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 6 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிரிவு–7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 7, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 7, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## பிரிவு–8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 8, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு (6)—ல், 'மாநிலம், மண்டலம், சரகம், மாநகரம் மற்றும் மாவட்ட அளவிலான பணியாளர் குழுக்களின் இணைப்பாக்கம், பொறுப்புகள், செயற்பணிகள் மற்றும் அதிகாரங்களை அரசு வகுத்துரைக்க வேண்டும்' என்ற சொற்றொடர் நீக்கப்படுதல் வேண்டும்."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 8, திருத்தங்கள் இல்லை.





பிரிவு 8, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## பிரிவு–9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 9, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 9, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

## பிரிவு–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 10, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 'அரசு மாநில அளவிலான காவல் புகார்கள் அதிகார அமைப்பொன்றினை ஏற்படுத்த வேண்டும் அதனுடைய தலைவராக, உள்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள செயலாளரைக் கொண்டிருக்கும். காவல் தலைமை இயக்குநர் மற்றும் கூடுதல் காவல் தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) ஆகியோர் மாநில காவல் புகார்கள் அமைப்பின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 அக்டோபர் 30

'அரசு மாநில அளவிலான காவல் புகார்கள் அதிகார அமைப்பொன்றினை ஏற்படுத்த வேண்டும். அதனுடைய தலைவராக தலைமை நீதிபதி முன்வைக்கும் பெயர் பட்டியலிலிருந்து மாநில அரசு தேர்ந்தெடுக்கின்ற உயர் நீதிமன்ற/உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி இருப்பார். உள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள செயலாளர், காவல் தலைமை இயக்குநர் ஆகியோர் மாநிலக் காவல் புகார்கள் அமைப்பின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். புகார்களின் எண்ணிக்கையைப் பொறுத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம். இதர உறுப்பினர்களை அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தயாரிக்கின்ற பட்டியலிலிருந்து மாநில அரசு தேர்ந்தெடுக்கும்.' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 10, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 10 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



2013 அக்டோபர் 30]

## பிரிவு–11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 11, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 11 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிரிவு–12

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 12, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு (1)–ல், 'மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு சான்றுறுதி அலுவலர் ஒருவரால் முறைப்படி சான்றொப்பமிடப்பட்ட உறுதிமொழி ஆவணமொன்றின் படிவத்தில் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட புகார் ஒன்றின் பேரில், மேற்பார்வை தர நிலைகளிலுள்ள காவல் அலுவலருக்கு எதிராக "மோசமான நன்னடத்தையின்மை" மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய வேண்டும்' " என்ற சொற்றொடருக்குப் பதிலாக

'மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட புகார் ஒன்றின் பேரில், மேற்பார்வை தர நிலைகளிலுள்ள காவல் அலுவலருக்கு எதிராக "மோசமான நன்னடத்தையின்மை" மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய வேண்டும்.' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.*

*பிரிவு 12, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 12 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

### பிரிவு–13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பிரிவு 13, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தங்களை முன்மொழியலாம்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"உட்பிரிவு (1)–ல், 'மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பினால் பெறப்பட்ட மோசமான நன்னடத்தையின்மையின் புகார் எதுவும், 12ஆம் பிரிவின் நான்காம் வரம்புரையினால் அடங்கியிராத பாதிக்கப்பட்டவரை, புகார் கொடுத்தவரை அல்லது பிற நபர் எவரையும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு*





*செய்த பிறகு தேவையானதாக இருக்கிறதென்றால் மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பால் பெறப்பட்ட மோசமான நன்னடத்தையின்மை புகார் எதுவும் விசாரணைக்காக மற்றும் அறிக்கைக்காக காவல் புகார்கள் பிரிவுக்கு சுட்டியனுப்பப்படுதல் வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக*

*'மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பினால் பெறப்பட்ட மோசமான நன்னடத்தையின்மையின் புகார் எதுவும் 12–ம் பிரிவின் நான்காம் வரம்புரையினால் அடங்கியிராத பாதிக்கப்பட்டவரை, புகார் கொடுத்தவரை அல்லது பிற நபர் எவரையும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு தேவையானதாக இருக்கிறதென்றால் மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பால் பெறப்பட்ட மோசமான நன்னடத்தையின்மை புகார் எதுவும் விசாரணைக்காக மற்றும் அறிக்கைக்காக மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு அமைக்கும் சுயேச்சையான விசாரணைக் குழுவிற்கு அனுப்பட வேண்டும்' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்." மற்றும்*

*"உட்பிரிவு (2)–ல், 'மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு அதனுடைய பரிந்துரைகளை உரிய நடவடிக்கைக்காக அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக*

*'மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு நேரடியாக விசாரணை நடத்தும் வழக்குகளில், விசாரணை முடிந்த பிறகு தனது முடிவுகளை மாநில காவல் துறை தலைமை இயக்குநருக்கும் மாநில அரசுக்கும் பின்வரும் ஆணையுடன் அனுப்பி வைக்கும்:*

*(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல் மற்றும்/அல்லது*

*(ii) அத்தகைய முடிவுகளின் அடிப்படையில் தன்னால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை முறைப்படி காவல் துறைக்கு அனுப்பி வைத்து, துறை சார்ந்த நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.*

*மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பின் இத்தகைய ஆணைகள் கட்டுப்படுத்துபவை ஆகும்.' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்."*

*என்ற திருத்தங்களை முன்மொழிகிறேன்.*

[2013 அக்டோபர் 30

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றன.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தங்கள் தோல்வியுற்றன.

பிரிவு 13, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 13 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–15

## பிரிவு–14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 14, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு (2)–ல், 'மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பு மாவட்ட ஆட்சியரை அல்லது மாவட்ட குற்றவியல் நடுவரை அதனுடைய தலைவராகக் கொண்டிருக்கவேண்டும்.



2013 அக்டோபர் 30] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

காவல் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மாவட்டக் காவல் புகார்கள் அதிகார அமைப்பின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். சென்னை அல்லாத பிற ஆணையரகங்களைப் பொறுத்த அளவில், மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆணையரகத்தின் துணை ஆணையர் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். சென்னை மாநகர ஆணையரகத்தைப் பொறுத்த அளவில், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகர காவல் ஆணையர் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக

'மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அல்லது உயர் நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியால் முன்வைக்கப்படும் பட்டியலிலிருந்து மாநில அரசு தேர்வு செய்கிற ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் தலைவராக இருப்பார். மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். புகார்களின் எண்ணிக்கையைப் பொறுத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படலாம். இதர உறுப்பினர்களை அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தயாரிக்கின்ற பட்டியலிலிருந்து மாநில அரசு தேர்ந்தெடுக்கும். சென்னை அல்லாத பிற ஆணையரகங்களைப் பொறுத்த அளவில், காவல் ஆணையாளர் உறுப்பினராக இருத்தல் வேண்டும். சென்னை மாநகர ஆணையரகத்தைப் பொறுத்த அளவில், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகர காவல் ஆணையர் உறுப்பினராக இருத்தல் வேண்டும்' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 14, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 14 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிரிவு–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 15, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு (a)–ல், 'மாவட்டக் காவல் புகார்கள் அதிகார அமைப்பு சான்றுறுதி அலுவலர் ஒருவரால் முறைப்படி சான்றொப்பமிடப்பட்ட உறுதிமொழி ஆவணமொன்றின் படிவத்திலுள்ள பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட புகார் ஒன்றின் பேரில் சார்நிலை தர நிலைகளிலுள்ள காவல் அலுவலருக்கு எதிராக "மோசமான நன்னடத்தையின்" மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்தல் வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக

'மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பு பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து பெறப்பட்ட புகார் ஒன்றின் பேரில், மேற்பார்வை தர நிலைகளிலுள்ள காவல் அலுவலருக்கு எதிராக "மோசமான நன்னடத்தையின்மை" மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய வேண்டும்' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.





**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 15, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 15 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிரிவு–16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 16, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் தம் திருத்தங்களை முன்மொழியலாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உட்பிரிவு (a)–ல், '15 ஆம் பிரிவின் நான்காம் வரம்புரையினால் உள்ளடங்காமலிருக்கும் மாவட்ட புகார்கள் அதிகார அமைப்பினால் பெறப்படும் நன்னடத்தை மற்றும் மிகவும் மோசமான நன்னடத்தையின்மையின் புகார் எதுவும் புகார் கொடுத்தவரை அல்லது பிற நபர் எவரையும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு மற்றும்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 அக்டோபர் 30

நன்னடத்தையின்மையின் அதே புகார் தொடர்பாக ஏற்கெனவே தொடங்கப்பட்டிருக்கிற ஒழுங்கு நடவடிக்கைகள் எதுவும் தொடர்புடைய ஒழுங்கு அதிகார அமைப்பிடமிருந்து நிச்சயிக்கப்பட்ட பிறகு விசாரணைக்காக மற்றும் அறிக்கைக்காக காவல் புகார்கள் பிரிவுக்கு தேவைப்படின் சுட்டியனுப்பப்படுதல் வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக

'மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பினால் பெறப்பட்ட மோசமான நன்னடத்தையின்மையின் புகார் எதுவும், 15 ஆம் பிரிவின் நான்காம் வரம்புரையினால் அடங்கியிராத பாதிக்கப்பட்டவரை, புகார் கொடுத்தவரை அல்லது பிற நபர் எவரையும் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்த பிறகு தேவையானதாக இருக்கிறதென்றால் மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பால் பெறப்பட்ட மோசமான நன்னடத்தையின்மை புகார் எதுவும் விசாரணைக்காக மற்றும் அறிக்கைக்காக மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பு அமைக்கும் சுயேச்சையான விசாரணைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்" மற்றும்

"உட்பிரிவு (b)–ல், 'மாவட்டக் காவல் புகார்கள் அதிகார அமைப்பு, அதனுடைய பரிந்துரைகளை உரிய நடவடிக்கைக்காக அரசிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக

'மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பு நேரடியாக விசாரணை நடத்தும் வழக்குகளில், விசாரணை முடிந்த பிறகு தனது முடிவுகளை மண்டல காவல் துறைத் தலைவருக்கும் மாநில அரசுக்கும் பின்வரும் ஆணையுடன் அனுப்பி வைக்கும்:

(i) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல் மற்றும்/அல்லது

(ii) அத்தகைய முடிவுகளின் அடிப்படையில் தன்னால் சேகரிக்கப்பட்ட

ஆதாரங்களை முறைப்படி காவல் துறைக்கு அனுப்பி வைத்து, துறை சார்ந்த நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.

மாவட்ட காவல் புகார்கள் அதிகார அமைப்பின் இத்தகைய ஆணைகள் கட்டுப்படுத்துபவை ஆகும்' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்."

என்ற திருத்தங்களை முன்மொழிகிறேன்.



2013 அக்டோபர் 30]

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றன.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தங்கள் தோல்வியுற்றன.

பிரிவு 16, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 16 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிரிவுகள்–17 முதல் 23 வரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவுகள் 17 முதல் 23 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 17 முதல் 23 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

*(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

### (இ) தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2013), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*





***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2013)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

*@ 28-10-2013 ஆம் நாளிட்ட தமிழநாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 30

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–20

### (ஈ) திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2013), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 30]

***மாண்புமிகு திரு.கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 28-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டமுன்வடிவு, 2013 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)





## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2013) ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2013), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

---

@ 29-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 59 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 59 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஊ) தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2013), மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு எண் 22/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன சொல்கிறீர்கள்? உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் இருக்கக்கூடிய மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில் பெரிய அளவிற்கு ஜீவ நதிகள் எதுவும் இல்லாத வேளையில் நிலத்தடி நீர் மட்டும்தான் குடிநீர் மற்றும் விவசாயத்திற்குப் பிரதானமான ஆதாரமாக விளங்கக்கூடிய

@ 25-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி][2013 அக்டோபர் 30

வேளையில் ஏற்கெனவே 2003 ஆம் ஆண்டு இதே அரசால் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு நிலத்தடி நீர் மேம்பாடு மற்றும் மேலாண்மைச் சட்டத்தினை வலுப்படுத்துவதற்குப் பதிலாக அந்தச் சட்டத்தினை இப்பொழுது நீக்கறவு செய்வதற்கு என்னுடைய கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–25

ஒரே ஒரு ஆதாரத்தை மட்டும் இந்த அவையில் வைக்கவிரும்புகிறேன். இந்தியாவினுடைய நிலத்தடி நீர் மேம்பாட்டு ஆணையத்தின் வாயிலாக வெளியிடப்பட்டிருக்கக்கூடிய வெப்சைட்டில் குறிப்பிட்டபடி 2012–க்கும் 2013–க்கும் இடையில் ஒரே ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களில் நான்கே நான்கு மாவட்டங்களில்தான் 2012–க்கும் 2013–க்கும் இடையே நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. மீதி இருக்கக்கூடிய 28 மாவட்டங்களில் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துள்ளது. எனவே, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு–இப்போது இருக்கக்கூடிய பெரிய ஆபத்தே பெரிய, பெரிய ஆழ்க்குழாய்கள்மூலமாக பெரிய, பெரிய தொழிற்சாலைகள் மற்றும் அவற்றைத் தவறுதலாக பயன்படுத்தக்கூடிய போக்கு வளர்ந்திருக்கக்கூடிய இந்தவேளையில் ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக அந்தச் சட்டத்தை நீக்கியிருப்பது எந்தவிதத்திலும் ஏற்புடையதல்ல. ஒரு வலுவான சட்டத்தை–– அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத்தை நீக்கியிருந்தால் சரியாக இருந்திருக்கும். எனவே, இந்தச் சட்டத்தை நீக்குவதைப் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் ஆட்சேபித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



2013 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடிநீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2013 அக்டோபர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (எ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2013), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

@ 28-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2013 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2013 அக்டோபர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2–30*

## (ஏ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2013)*, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2013)*@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

@ *29-10-2013* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2013 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் *2* முதல் *5* வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் *2* முதல் *5* வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு *1*, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரித் (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2013)* நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2013 அக்டோபர் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2013), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 30—10—2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2013 அக்டோபர் 30] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்][2013 அக்டோபர் 30

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராகப் பணிபுரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள் வரப்பெற்றுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய ஓர் உறுப்பினர் பதவிக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் மட்டுமே முறையான வேட்புத் தாள் அளித்துள்ளதால் அவர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். அவரது ஆட்சிக் குழு உறுப்பினர் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



2013 அக்டோபர் 30]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–34 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*40. 2012 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (பொதுக் கட்டடங்களில் கண்காணிப்பு காமராக்கள் பொருத்துதல்) விதிகளை இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறையின் 14–12–2012 ஆம் நாளிட்ட 113 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு*

*திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*41. 2013 ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (பலமாடிக் கட்டடங்களிலும் பொது கட்டடங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பு வசதிகளுக்கு வகை செய்தல்) விதிகளை இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. 1) துறையின் 1–2–2013 ஆம் நாளிட்ட 21 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008–ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*42. காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் பேரூராட்சியினை இரண்டாம் நிலை நகராட்சியென வகைப்பாடு செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. 5) துறையின் 16–5–2013 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*



*43. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தேர்வுநிலை நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியென வகைப்பாடு செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. 5) துறையின் 28–5–2013 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*44. மதுரை மாவட்டம், திருமங்கலம் இரண்டாம் நிலை நகராட்சியை முதல் நிலை நகராட்சியென வகைப்பாடு செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. 5(2)) துறையின் 21–8–2013 ஆம் நாளிட்ட 127 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*45. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் (i) 6–2–2013 ஆம் நாளிட்ட 8 ஆம் எண் அரசாணை மற்றும் (ii) 16–4–2013 ஆம் நாளிட்ட 41 ஆம் எண் அரசாணை ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*46. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

*47. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)*

*48. 2012–2013* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தணிக்கை அறிக்கை. *[1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *30/1983 80(9)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*49. 2012* ஆம் ஆண்டு மார்ச் மாதம் *31* ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (உள்ளாட்சி அமைப்புகள்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*50.* இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் *11–9–2011* அன்று பலர் உயிரிழக்கவும், காயமடையவும் வழிவகுத்த காவல் துறையின் துப்பாக்கிச் சூடு பற்றி விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. கே. சம்பத் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. *[1952* ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *60/1952) 3(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*45. 2013–2014* ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ், ஆங்கிலம்)

*46.* அரசு உறுதிமொழிக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. *(2013–2014).*

*47.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை)

*48.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை)

*49.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை)

* * * * *